I & II தெசலோனிக்கேயர்

விளக்கவுரை

"அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்;
அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின்
சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய
வருகையின் பிரசன்னத்தினாலே
நாசம்பண்ணுவார்"

(2 தெச 2:8)

Dr. P.V. தியாகராஜ்

தெசலோனிக்கேயர்

விளக்கவுரை

தெசலோனிக்கேயர்

விளக்கவுரை

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின
முதலாம், இரண்டாம் நிருபங்களின் விளக்கவுரை

Dr. P. V. தியாகராஜ்

Ephrath Publications
54/A, Lakshmi Apartments,
Sangam Colony, Kottivakkam, Chennai - 600 041.
Phone: 044 - 2492 5464, Mobile: 0-98415 85547
Email: pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com

First Edition : 2016

Printed at :
Captain Print Service,
Chennai - 600 041.
Phone: 2492 2252

Wrapper design:
Philip Graphics
9789980146

Price : Rs. 275/-

அர்ப்பணம்

தகுதியற்ற எங்களை
தமது கிருபையினால் இரட்சித்து
ஆச்சரியமாய் வழிநடத்தி, ஆசீர்வதித்து,
வேதத்தின் மகத்துவங்களை வெளிப்படுத்தி
அதைப் போதிக்கவும், எழுதவும் தகுதிப்படுத்திய
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு
இந்நூலை குடும்பமாக அர்ப்பணிக்கிறோம்.

Dr. P.V. தியாகராஜ், M.A.,
பிரிசில்லா தியாகராஜ், B.A.,

நிஷா ஜார்ஜ், M.A., M.Phil.,
ஜார்ஜ் V. K. அய்ரூர், M.A.,

T. அமல்நாத் வேதா, M.A.,
நவீனா அமல்நாத், M.C.A.,

T. பிரேம்நாத் வேதா, B.Sc., M.B.A.,
ஷீபா பிரேம்நாத், M.A.,

அபிஷேக், ஜாஷ்வா,
எரிக், பிரிஷா,
கெவின் பிரேம் வேதா

ஆசிரியரின் நூல்கள்

	விலை ரூ.
கிருபையின் மேல் கிருபை	90.00
விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்	10.00
பத்துக் கற்பனைகள்	20.00
பரிசுத்த ஆவியானவர்	100.00
உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக	25.00
1யோவான் - வேதபாடம்	45.00
மலைப்பிரசங்கம்	200.00
உலகின் ஒளி இயேசு	100.00
ரோமர் - விளக்கவுரை	350.00
வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை	350.00
எபேசியர் - விளக்கவுரை	200.00
எபிரெயர் - விளக்கவுரை	400.00
உனக்காக நான் மரித்தேன்	250.00

ஆசிரியர் உரை

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய இரண்டாவது மிஷனரி பயணத்தின்போது (அப் 15:10 - 21:19) மிகுந்த எதிர்ப்புகளின் மத்தியில் சுமார் 21 நாட்கள் தெசலோனிக்கேயா பட்டணத்தில் சீலாவுடனும் தீமோத்தேயுவுடனும் தங்கியிருந்தபோது அங்கே தேவனுடைய சபை ஸ்தாபிக்கப்படுகிறது.

கிரேக்கர்களின் ஆட்சிக்காலத்துக்கு முன்பு தெர்மா (Therma) என்று அழைக்கப்பட்ட இந்த கடற்கரைப் பட்டணம் கி.மு.315ல் கசாண்டர் (Cassander) என்ற கிரேக்க ஆளுனர் தன்னுடைய மனைவியின் தெசலோனிக்கேயா என்ற பெயரைச் சூட்டி அழைக்க ஆரம்பித்தார். இந்த ஸ்திரீ கிரேக்கப் பேரரசன் அலெக்சாந்தரின் சொந்த சகோதரி ஆவாள். பவுல் ஊழியத்தை இந்தப் பட்டணத்தில் ஆரம்பித்தபோது இரண்டு லட்சம் பேர் அங்கு குடியிருந்திருக்க-வேண்டும் என்று சொல்லப்படுகிறது. யூதர்கள், கிரேக்கர் மற்றும் ரோமர்கள் அங்கு வசித்து வந்தார்களாம்.

பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோர் ஆசியாவில் ஊழியம் செய்யத் திட்டமிட்டபோது ஆவியானவர் அதைத் தடைசெய்யும் காரியம் அப்போஸ்தலர் நடபடிகள் 16:7,8ல் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மக்கெதோனியாவில் ஊழியம் செய்யும்படியான தரிசன வெளிப்பாட்டைப் பவுல் பெறுகிறார் (அப் 16:9,10).

பிலிப்பி பட்டண ஊழியம்

தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தவர்களாய் பவுலும் சீலாவும் மக்கெதோனியாவின் பிரதான பட்டணமாகிய பிலிப்பி பட்டணத்தில் தங்களுடைய ஊழியத்தைச் செய்துகொண்டிருந்தபோது குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண் "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" (வசனம் 17) என்று சத்தமிடுகிறாள். அவளுக்குள் இருந்த அசுத்த ஆவியை பவுல் துரத்தியதினிமித்தம் ஊழியக்காரர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார்கள்.

அவர்களுடைய கால்கள் தொழுமரத்தில் மாட்டிவைக்கப்பட்ட நிலையிலும் "தேவனைத் துதித்துப் பாடினார்கள்" (அப் 16:25) என்று வாசிக்கிறோம். இதன் விளைவாக பூமி அதிர்ச்சி ஏற்பட்டு சிறையின் கதவுகள் திறவுண்டுபோகிறது. கைதிகள் தப்பி ஓடியிருக்கலாமோ என்று பயந்த சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்ய முயற்சிக்கிறான். பவுல் தடைசெய்தபோது, "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்கிறான். "அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (அப் 16:30-32). மிகவும் சுருக்கமான சுவிசேஷ அழைப்பு இதுவாகத்தான் இருக்கமுடியும்.

தெசலோனிக்கேயா ஊழியம்

பவுல் ரோமதேசத்தின் பிரஜை என்பதை அதிகாரிகள் கண்டுகொண்டதும் உடனடியாக பிலிப்பி பட்டணத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 17:1 ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து (சுமார் 100 மைல் தூரம் பிரயாணம் பண்ணி) தெசலோனிக்கேயா பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெப ஆலயம் இருந்தது". அந்தப்

பட்டணத்தில் யோசோன் என்ற சகோதரன் வீட்டில் தங்கியிருந்து ஊழியத்தைத் துவங்குகிறார்கள். “பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும், மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்” (அப் 17:2-4).

இதினிமித்தம் விசுவாசியாத யூதர்கள் யாசோனுடைய வீட்டுக்கு வந்து அவரையும் “சில சகோதரரையும் பட்டணத்து அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டுவந்து: உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான். இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்” (அப் 17:6,7) என்று முறையிட்டு கலகம் பண்ணுகிறார்கள். அதன் விளைவாக “இராத்திரி காலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்” (அப் 17:10).

பெரோயா, அத்தேனே, கொரிந்து ஊழியங்கள்

“அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்” (அப் 17:11). வேத வாக்கியங்களை வாசித்தால் மட்டும் போதாது, ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஏசாயா 34:16ல் இவ்வாறு வாசிக்கிறோம், “கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச்

சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்". வேதவசனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஜோடி வசனங்கள் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கும். இந்த இணை வசனங்களைத் தேடிக் கண்டுபிடித்து சத்தியத்தை அறிந்து விளங்கிக்கொள்ளும் முயற்சியே இந்த விளக்கவுரை.

பெரோயா பட்டணத்திலும் பவுலின் ஊழியத்துக்கு எதிர்ப்பு உண்டானதினிமித்தம் சீலாவையும், தீமோத்தேயுவையும் அங்கு இருக்கும்படிச் செய்துவிட்டு பவுல் அத்தேனே பட்டணத்தில் ஊழியம் செய்கிறார். மனந்திரும்புதலையும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பிரசங்கித்தாலும் (அப் 17:30,31) அத்தேனே பட்டணத்தார் அவரை ஏற்றுக்கொள்ளாதபடியால் அங்கிருந்து கொரிந்து பட்டணத்துக்கு வந்து சேர்கிறார்.

கொரிந்துவில் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்த ஆக்கில்லா, பிரிஸ்கில்லா ஆகியோருடன் தங்கியிருந்தபோது (அப் 18:1,2) சீலாவும், தீமோத்தேயுவும் அவரோடு வந்து இணைந்து-கொள்ளுகிறார்கள் (வ.5). அங்கிருந்தபோது "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு (அப் 18:10) என்கிறார். 11வது வசனம் சொல்கிறது, "அவன் ஒரு வருஷமும் ஆறுமாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம் பண்ணிக்கொண்டு வந்தான்". இந்தக் காலக்கட்டத்தில்தான் தெசலோனிக்கேயருக்கு நிருபங்கள் எழுதப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் புத்தகங்கள் 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் புத்தகங்கள் தான் என்பது வேத பண்டிதர்களின் முடிவு. வெளிப்படுத்தின விசேஷம், ரோமர், எபேசியர், எபிரெயர் முதலிய புத்தகங்களுக்கு ஏற்கெனவே விளக்கவுரைகள் எழுதி வெளியிட்ட நான் மொத்தமே எட்டு அதிகாரங்கள் அடங்கிய தெசலோனிக்கேயர் நிருபங்களுக்கு விளக்கவுரை எழுத அதிக விருப்பம் இல்லாமல் இருந்தேன். மற்ற நிருபங்களைப்போல சத்திய

உபதேசத்துக்கடுத்த காரியங்கள் இதில் அதிகமாக இல்லை. ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய மிஷனரி ஊழியங்களைக் குறித்தும், சபைகளில் ஊழியக்காரர்களின் மத்தியில் காணப்படும் குறைபாடுகளைக் குறித்தும், சபை ஒழுங்குமுறைகளைக் குறித்தும் இவ்விரு நிருபங்களில் அதிகமாகப் பேசுவதைப் பார்க்கிறோம்.

ஆனாலும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து அதிகமாகவும் விளக்கமாகவும் பேசும் புத்தகம் தெசலோனிக்கேயர் நிருபங்களே என்பதை அறிந்தேன். 1914 ஜனவரி துவங்கி ஆங்கிலத்தில் வெளிவந்த பல தெசலோனிக்கேயர் விளக்கவுரைகளை வாங்கி தியானித்து எழுத ஆரம்பித்தேன். இரகசிய வருகை, பகிரங்க வருகை, கர்த்தரின் நாள், அந்திக்கிறிஸ்துவின் வருகை மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றைக் குறித்து பவுல் எழுதிய காரியங்களைப் புரிந்துகொண்டு அதை சபையாருக்கு வெளிப்படுத்தும் கிருபைகளை தேவன் தந்தார். பல தெய்வீக வெளிப்பாடுகளை பரிசுத்த ஆவியானவர் வழங்கி என்னை உற்சாகப்படுத்தினார்.

இரண்டாவது வருகை

929 அதிகாரங்கள் உள்ள பழைய ஏற்பாட்டில் 1845 இடங்களிலும், 260 அதிகாரங்கள் உள்ள புதிய ஏற்பாட்டில் 318 இடங்களிலும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து வசனங்கள் காணப்படுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். சங்கீதம் 98:9 சொல்கிறது, "அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்". கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது" (செப் 1:14). "கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது" (யோவேல் 1:15). "கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது" (ஏசாயா 13:6). "இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது" (சக 14:1). "கர்த்தரின் வருகை மின்னலைப் போலிருக்கும்" (மத் 24:27).

"தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் (2பேதுரு 3:12) என்கிறார் பேதுரு.

“இதோ சீக்கிரமாய் வருகிறேன்” (வெளி 22:20) என்பதுதான் கிறிஸ்து சபைக்குக் கொடுத்த கடைசி அறிவிப்பு. யோவானுடன் இணைந்து, “ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்” என்று சொல்லுவோமா.

வருகையைக் குறித்த இரகசியங்களை சபையார் அறிந்துகொள்ளக்கூடாது என்பதில் சத்துரு மிகவும் கவனமாக இருக்கிறான் என்பதை துவக்கத்திலிருந்தே நான் அறிந்து-கொண்டேன். 1 தெசலோனிக்கேயர் 4-வது அதிகாரத்தின் இறுதியில் இரகசிய வருகையைக் குறித்த விளக்கங்களை எழுதத் துவங்கினபோது சத்துரு முகமுகமாக என்னை எதிர்த்து நிற்கிறான் என்பதைக் கண்டுகொள்ள முடிந்தது.

அக்டோபர் 2014ல் என்னுடைய சரீரம் திடீரென்று பெலவீனப்பட ஆரம்பித்தது. சிறுநீரில் இரத்தம் வெளிப்பட்டது. சிடி ஸ்கேன் எடுத்துப் பார்த்தபோது சிறுநீரகத்தில் 4.5 சென்டிமீட்டர் அளவிற்கும் பெரிய கற்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஏற்கெனவே ஆறு ஆண்டுகளுக்கு முன் மாரடைப்பு ஏற்பட்டு இருதயத்தில் இருந்த அடைப்புகளை அறுவைச் சிகிச்சை (Coronary by-pass graft surgery with aortic valve replacement) செய்து தேவ கிருபையினால் பிழைத்திருக்கும் எனக்கு 25 நவம்பர் 2014ல் Laser Lithootripsy cystoscopy என்ற சிகிச்சையின்மூலம் கற்கள் உடைக்கப்பட்டு வெளியே எடுக்கப்பட்டன.

சரீர பலவீனங்கள், சோர்வுகள், சத்துரு போராட்டங்களின் மத்தியிலும் தெசலோனிக்கேயர் நிருபங்களின் விளக்கவுரை நூல் இன்று உங்கள் கைகளில் இருக்கிறது என்றால் அது தேவ கிருபையின் செயலாற்றலே. இந்தப் புத்தகத்தின் மூலம் தேவன் மட்டுமே மகிமைப்படுவாராக.

இந்த எழுத்து ஊழியத்தை தன்னுடைய ஜெபத்தினால் தாங்கி, வசனங்களைச் சரிபார்த்து, அச்சுப்பிரதிகளை சரிபார்த்து, பிழைத்திருத்தங்கள் செய்துவரும் என் அன்பு மனைவி பிரிசில்லாவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். வருகையைக்

குறித்த இந்தப் புத்தகத்தை எழுதவேண்டும் என்று தேவ ஆலோசனை கொடுத்த சகோதரி பியூலா ஜாண் அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. சகோதரி செல்வகுமாரி பாண்டியன், மேரி அமிர்தராஜ், அனிட்டா சாமுவேல் மற்றும் வியாழக்கிழமைகளில் நான் எடுக்கும் வேதபாடங்களில் கலந்துகொண்டு, என்னை ஜெபத்தில் தாங்கிவரும் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

யோவான் சுவிசேஷத்தின் விளக்கவுரையை எழுத ஆரம்பித்திருக்கிறேன். மிகவும் ஆழமான சத்தியங்கள் அடங்கிய இந்தப் புத்தகம் சபைக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்று நிச்சயித்திருக்கிறேன். மேலோட்டமாக அனுதினமும் சில வேத-வசனங்களை வாசித்து அதில் திருப்தி அடைந்துவிடாதிருங்கள். "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங் 1:2) என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜெபியுங்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆகஸ்ட் 1, 2016

சென்னை.

P.V.தியாகராஜ்

பொருளடக்கம்

அர்ப்பணம் 3
ஆசிரியரின் நூல்கள் 4
ஆசிரியர் உரை 5

★ Dr. P.V. தியாகராஜ்

1 தெசலோனிக்கேயர்

I. தேவனை ஸ்தோத்தரிக்கும் பவுல் (1:1-4) 16
சுவிசேஷத்தின் மேன்மை (1:5-9) 31
பரலோகத்திலிருந்து வரும் கிறிஸ்து யார்? (1:10) 47

II. தெசலோனிக்கேயா ஊழியம் (2:1-12). 54
ஊழியத்தின் மேன்மை (2:13-16) 84
பவுலின் வாஞ்சை (2:17-20) 97

III. தீமோத்தேயு அனுப்பப்படுகிறார் (3:1-5). 106
தீமோத்தேயுவின் நற்செய்தி (3:6-9) 115
இரவும் பகலும் பவுல் ஜெபிக்கிறார் (3:10-13). 121

IV. தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கை (4:1-5) 134
பரிசுத்த ஜீவியம் (4:6-8) 146
சகோதர அன்பு (4:9-12) 154
இரகசிய வருகை (4:13-18) 162
a. மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள் (4:16-17) 185
b. கிறிஸ்துவின் நியாயாசனம். 196

V. பகிரங்க வருகை (5:1-4) 204
வெளிச்சத்தின் பிள்ளைகள் (5:5-7) 221
நம்முடைய பாதுகாப்பு (5:8-10) 227

பொதுவான ஆலோசனைகள் (5:11-13)................ 236
ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாயிருத்தல் (5:14-15)........ 245
கிறிஸ்தவக் கடமைகள் (5:16-18) 254
ஆவியானவரின் செயல்பாடுகள் (5:19-22) 260
வருகையின்போது காக்கப்படுதல் (5:23-25)............. 270
முடிவுரை (5:26-28) 281

2 தெசலோனிக்கேயர்

I. பவுலின் வாழ்த்துதல் (1:1-2)........................ 288

II. பவுல் ஜெபிக்கிறார்
i. பவுலின் ஸ்தோத்திர ஜெபம் (1:3-4) 290
ii. பகிரங்க வருகை குறித்த எச்சரிக்கை (1:5-10)..... 298
iii. பவுலின் வேண்டுதல் (1:11-12)................. 315

III. வருகையைக் குறித்த உபதேசம் (2:1-12)............. 322
கர்த்தருடைய நாள் (2:2) 325
பாவமனிதன் வெளிப்படுதல் (2:3-5)................... 331
அந்திக்கிறிஸ்துவைத் தடைசெய்கிறவன் யார்? (2:6-10) . 342
தேவன் அனுப்பும் கொடிய வஞ்சகம் (2:11-12)........ 361

IV. தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல் (2:13-17).......... 367
V. அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (3:1-5)
i. பவுலின் ஜெபக்குறிப்பு (3:1-2) 380
ii. உண்மையுள்ள கர்த்தர் உங்களை
நடத்துவாராக (3:3-5) 385

VI. பவுலின் எச்சரிக்கை (3:6-15)
i. சபையில் ஒழுக்கம் தேவை (3:6-13)............. 392
ii. கீழ்ப்படியாமையின் விளைவு (3:14-15) 407

VII. சபையை வாழ்த்தும் பவுல் (3:16-18)............... 412

முடிவுரை 415
★ பிரிசில்லா தியாகராஜ்

துணைசெய்த நூல்களின் பட்டியல் 417

அதிகாரம்–1

அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.

1 தெசலோனிக்கேயர் 1:10

தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல் (1:1-4)

பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: (1:1)

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் புத்தகம் தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபம். அதை எழுதியவர்கள் யார் என்பது நிருபத்தின் துவக்கத்தில் அறிவிக்கப்படுகிறது. இந்த நாட்களில் நாம் யாருக்கேனும் கடிதம் எழுதும்போது, அதை யாருக்கு எழுதுகிறோம் என்பதை கடிதத்தின் துவக்கத்தில் அறிவித்துவிட்டு, அதின் முடிவில் எழுதிய நம்முடைய பெயரைச் சொல்கிறோம். ஆனால் முதலாம் நூற்றாண்டிலோ முதலாவதாக கடிதம் எழுதுகிறவர்கள் தங்களை அறிமுகப்படுத்திவிட்டு உடனடியாக அது யாருக்கு எழுதப்படுகிறதோ அவர்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் சம்பிரதாயம் இருந்துவந்தது.

நிருபத்தின் ஆசிரியர்களாக பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூன்று நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. இந்த மூன்று ஊழியர்களும் பவுலின் இரண்டாவது ஊழியப் பயணத்தின்போது பிலிப்பி பட்டணத்தில் ஊழியத்தை நிறைவேற்றியபின் தெசலோனிக்கேயா பட்டணத்தில் மூன்று வாரங்கள் தங்கியிருந்து ஊழியத்தை நிறைவேற்றினார்கள் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகளில் இருந்து அறிந்துகொள்கிறோம் (அப் 17:1-9).

“பவுல் தன் வழக்கத்தின்படியே, அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான்

உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும், விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்" *(அப் 2:2-4)*

அங்கிருந்த யூதர்கள் இதினிமித்தம் கடுங்கோபம் கொண்டு அவர்களைக் கைதுசெய்து பட்டணத்து அதிகாரிகளிடம் கொண்டுவந்து "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" *(அப் 17:6)* என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். அதனால் அவர்களுடைய ஊழியம் பக்கத்து நகரங்களான பெரோயா மற்றும் அத்தேனே பட்டணங்களில் தொடர்கிறது *(அப் 17:10-34)*. அதைத் தொடர்ந்து கொரிந்து பட்டணத்தில் ஊழியம் செய்யும்போதுதான் கி.பி.51 அல்லது 52ல் இந்த நிருபம் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

சபை ஸ்தாபிக்கப்பட்டு ஆறுமாதங்களில் அதின் வளர்ச்சியைக் குறித்து விசாரித்து அறிந்த பவுல் அதின் வளர்ச்சியில் மிகவும் கரிசனையுள்ளவராய் *(1தெச 3:1,2, 8-11)* அவர்களில் காணப்பட்ட ஆவிக்குரிய சந்தேகங்களை நீக்கும் விதத்தில் *(1தெச 4:13-18)* சபையாருக்குத் தேவையான பொதுவான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்குகிறார் *(1தெச 5:14-22)*.

நிருபத்தை எழுதியவராக முதலாவது குறிப்பிடப்படுவது அப்போஸ்தலனாகிய பவுல். 1தெசலோனிக்கேயர் 2:18ல் பவுலின் பெயர் மட்டும் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படுவதில் இருந்து நிருபத்தின் பிரதான ஆசிரியர் பவுல்தான் என்பதைக் கண்டுகொள்கிறோம். இருந்தாலும் தன்னுடன் இணைந்து தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த சக ஊழியர்களான சில்வான் மற்றும் தீமோத்தேயுவின் பெயரையும் நிருபத்தில் இணைத்துக்கொள்வதைப் பார்க்கிறோம்.

சில்வான் (Silvanus) என்பவர் சீலா Silas என்றும் அப்போஸ்தலர் நடபடிகள் 15:22, 27, 32ல் குறிப்பிடப்படுகிறார்.

அந்தியோகியாவில் ஊழியத்தை நிறைவேற்றி முடித்தபின் பர்னபா பவுலைவிட்டுப் பிரிந்து சென்றதினிமித்தம் சீலாவை பவுல் தன்னுடைய இரண்டாவது மிஷனரி ஊழியத்தில் இணைத்துக்கொண்ட நிகழ்ச்சி அப்போஸ்தலர் நடபடிகள் *15:35-41*ல் சொல்லப்பட்டிருக்கிறது. *1*பேதுரு *5:12*ல் சில்வான் என்ற ஊழியரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும் அவர் பவுலுடன் ஊழியம் செய்த சில்வானா என்பது தெரியவில்லை.

தீமோத்தேயுவைப் பற்றி வேதத்தில் கூடுதலாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவருடைய தாயார் யூதஸ்திரீ என்றாலும் தகப்பன் கிரேக்கனாக இருந்தபடியால் "விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை" *(1*கொரி *7:19,* கலா *5:6, 6:15,* கொலோ *3:11)* என்று பிரகடனம் பண்ணிய பவுல் யூதர்களைப் பிரியப்படுத்தும் விதத்தில் விருத்தசேதனம் பண்ணுவித்த சம்பவம் அப்போஸ்தலர் நடபடிகள் *16:1-3*ல் சொல்லப்படுகிறது.

"பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயு" *(2*தீமோ *1:2)* என்று பவுல் தீமோத்தேயுவை அழைத்து, இரண்டு நிருபங்களை அவருக்கு எழுதியிருப்பதையும், தன்னுடைய சொந்தப் பிரதிநிதியாகப் பலமுறை பயன்படுத்துவதையும் வேதத்தில் பார்க்கிறோம் *(*அப் *19:22, 1*கொரி *4:17,* பிலிப் *2:19).*

இந்த மூன்று ஊழியர்களும் இணைந்து, இந்த நிருபத்தை யாருக்கு எழுதுகிறார்கள் என்பது உடனடியாகத் தெரிவிக்கப்படுகிறது. தெசலோனிக்கேயா பட்டணத்தில் இருப்பவர்கள் அத்தனைபேருக்கும் அது எழுதப்படவில்லை. அங்கு பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு ecclesia, church எழுதப்படுகிறது. **உண்மையான கிறிஸ்தவர்கள் யார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.** மெய் தேவனைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரை நம்புவது மட்டும் போதாது, அனுதினமும் அவருக்குள் ஜீவிக்கவேண்டும். அவருக்குள்

கிரியை நடத்தவேண்டும். இப்படிப்பட்டவர்களைக் குறித்துப் பவுல் சொல்கிறார், "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" *(கொலோ 3:3)*. பேதுரு சொல்கிறார், "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" *(1பேதுரு 2:9)*. கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் அறிந்து அவரை ஏற்றுக்கொண்டவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள்.

சபை என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது என்பதை 1கொரிந்தியர் 1:2 இவ்வாறு சொல்கிறது, "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபை". நாம் தியானிக்கிற வசனத்தில் பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற சபை என்று சொல்லப்படுகிறது. கர்த்தராகிய (Lord, KURIOS) இயேசு கிறிஸ்து என்று குமாரன் பிதாவுடன் இணைத்துச் சொல்லப்படுகிறார். பிலிப்பியர் 2:11 சொல்கிறது, "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". கர்த்தருடைய தூதன் யோசேப்பிடம் சொல்கிறான், "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" *(மத் 1:21)*.

கிறிஸ்துவை வெறுமனே வழிகாட்டியாக அல்ல, நன்மை செய்கிறவராக அல்ல, அதிசயம் அற்புதங்கள் செய்பவராக அல்ல, இரட்சகராக ஏற்றுக்கொள்கிறவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். எபிரெய மொழியில் யோசுவா (Joshus, Jehoshma) என்ற வார்த்தை அவர் இரட்சிப்பார் என்று பொருள்படும். பேதுரு சொல்கிறபடி, "அவராலேயன்றி

வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" *(அப் 4:12)*. கொலோசெயர் *1:14*ல் பவுல் சொல்கிறார், "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது". தொடர்ந்து 15 முதல் 18 வசனங்களை வாசித்து கிறிஸ்துவின் மேன்மையை அறிந்துகொள்ளுங்கள்.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (1:1 b)

தெசலோனிக்கேயா சபை பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிறது என்பதை வசனத்தின் முற்பகுதியில் அறிவித்த பவுல் அவர்கள் மூலமாக சபை கிருபையையும் சமாதானத்தையும் பெறும்படியாக வேண்டுதல் செய்கிறார். 5,6 வசனங்களில் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு குறிப்பிடப்பட்டாலும், மனித இரட்சிப்பில் ஆவியானவரின் பங்கு 2தெசலோனிக்கேயர் *2:13*ல் இவ்வாறு சொல்லப்படுகிறது, "நீங்கள் ஆவியினாலே ... பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்".

பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடே ஒருவனை கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கச் செய்கிறது. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" *(ரோமர் 8:9)*. "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" *(வசனம் 14)*.

பிதாவாகிய தேவனைக் குறித்து அறியாத யூதர்கள் இருக்கமுடியாது. "உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க-வேண்டாம்" *(யாத் 20:2,3)* என்ற முதலாவது கற்பனையின் அடிப்படையில் கிறிஸ்துவைக் கர்த்தராக ஏற்றுக்கொள்வதில் அவர்கள் தயக்கம் காட்டியதினால் கிறிஸ்துவின் மேன்மையை மீண்டும் மீண்டும் பவுல் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

அவரே சிருஷ்டி கர்த்தர் என்பதை *கொலோசெயர் 1:15, 16*ல் பவுல் இவ்வாறு அறிவிக்கிறார், "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்-பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவை-களுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்-களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது".

பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுமே மனித இனம் பெறக்கூடிய சகலவிதமான உலகத்துக்கடுத்த மற்றும் பரலோகத்துக்கடுத்த ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாக அமைகிறார்கள் என்பது தெளிவாகிறது. கிருபை *(Charis)* சமாதானம் *(Shalom)* என்ற ஆசீர்வாதங்கள் பிரத்யேகமாக இங்கே சொல்லப்படுகின்றன. ஏனென்றால் இவைகளே மனிதன் பெறும் சகல மேன்மைகளுக்குக் காரணம். பேதுருவும் தன்னுடைய நிருபத்தை "கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது" *(1பேதுரு 1:2)* என்று துவங்குகிறார்.

கிருபை என்ற வார்த்தையை பவுல் தன்னுடைய நிருபங்களில் சுமார் நூறு இடங்களில் குறிப்பிடுவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். கிருபையைப் பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படும் முதல் மனிதன் நோவா *(ஆதி 6:8)*. **பிதாவாகிய தேவனிடமிருந்து வெளிப்படும் கிருபையைக் கிறிஸ்து மூலமாகவே நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.** பவுல் சொல்கிறார்,

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே" *(2கொரி 8:9)*. யோவான் சொல்கிறார், "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்" *(யோவான் 1:16)*. ஆசிரியரின் 'கிருபையின் மேல் கிருபை' என்ற புத்தகம் கிருபை உபதேசத்தை விளக்கமாகப் போதிக்கிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நாம் பெறும் இரண்டாவது ஆசீர்வாதமாக சமாதானம் (Peace, Shalom) குறிப்பிடப்படுகிறது. "சமாதானப் பிரபு" *(ஏசாயா 9:6)* என்பது அவருடைய திருநாமங்களில் ஒன்று. தன்னுடைய சிலுவை மரணத்தின்மூலம் "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" *(ஏசாயா 53:5)* என்று வாசிக்கிறோம். தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாள் அவர் தன்னுடைய சீஷர்களிடம் சொல்கிறார், "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" *(யோவான் 14:27)*. கலாத்தியர் 5:22ல் ஆவியின் கனிகளில் ஒன்றாக சமாதானம் குறிப்பிடப்படுகிறது.

யாக்கோபு சொல்கிறார், "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" *(3:18)*. தேவனை ஸ்தோத்திரித்து ஜெபம் பண்ணும்போது "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" *(பிலிப் 4:7)* என்கிறார் பவுல். சமாதானம் என்ற கிரேக்க வார்த்தை சண்டை சச்சரவற்ற நிலையை மட்டும் குறிப்பிடாமல் பொருளாதாரச் செழிப்பையும் ஆசீர்வாத மேன்மையையும் உள்ளடக்கியதாகப் பொருள்படுகிறது.

தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின்

பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து (1:2)

தன்னுடைய வாசகர்களைப் பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகியோர் பிரியமான சகோதரர் என்று அழைப்பதைக் கவனியுங்கள். 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் நிருபங்களில் இருபது தடவைக்கும் மேலாக சகோதரர் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவை ஆண்டவராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் தேவனால் பிறந்து, அவருடைய பிள்ளைகளாகிவிடுவதால் கிறிஸ்தவர்களாகிய நாம் (யோவான் 1:11-13) ஒருவருக்கொருவர் சகோதரர்களாகிவிடுகிறோம்.

தெசலோனிக்கேயா சபையில் காணப்பட்ட மூன்று காரியங்கள் நிமித்தம் பவுல் தேவனை இடைவிடாமல் நினைவுகூருவதாக இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். சபையில் காணப்பட்ட குற்றங்குறைகளை நிருபத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார் என்றாலும் அவர்களில் காணப்பட்ட மூன்று நற்கிரியைகளைப் பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார்.

1. **விசுவாசத்தின் கிரியை** (Work of Faith)
   விசுவாசம் மனிதனை தேவனோடு இணைக்கிறது.

2. **அன்பின் பிரயாசம்** (Labour of Love)
   அன்பு மனிதனை சகமனிதர்களோடு இணைக்கிறது.

3. **நம்பிக்கையின் பொறுமை** (Patience of Hope)
   நம்பிக்கை மனிதனை எதிர்காலத்தோடு, முக்கியமாக கிறிஸ்துவின் வருகையோடு இணைக்கிறது.

சபையாரிடம் காணப்பட்ட விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகிய மூன்று கிறிஸ்தவ குணாதிசயங்களை பவுல் வேதத்தில்

பல இடங்களில் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். 1தெசலோனிக்கேயர் 5:8, ரோமர் 5:2-5, 1கொரிந்தியர் 13:13, கொலோசெயர் 1:3,4, எபிரேயர் 6:10,12, 10:22-24 வாசித்துப் பாருங்கள். கலாத்தியர் 5:5,6-ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்".

விசுவாசத்தின் கிரியை என்று சொல்லும்போது பவுல் எதைக் குறிப்பிடுகிறார் என்று அறிந்துகொள்ளவேண்டும். **நம்முடைய இரட்சிப்பு கிரியைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. கிருபையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.** அந்தக் கிருபையை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம் என்றாலும் அதன் விளைவாக நம்மில் நற்கிரியைகள் உண்டாகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே 2:8-10). நம்முடைய விசுவாசம் நம்முடைய நற்கிரியைகள் மூலமாக வெளிப்படவேண்டும். நாம் விசுவாசிப்பதைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் உண்டாகலாம் என்பதினால் நம்பிக்கையில் பொறுமை தேவைப்படுகிறது.

தெசலோனிக்கேயரிடமிருந்து வெளிப்பட்ட **விசுவாசத்தின் கிரியைகள்** இந்த அதிகாரத்தின் 6 முதல் 10 வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. 7வது வசனம் சொல்கிறது, "இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்".

அதுமட்டுமல்ல விக்கிரக ஆராதனைக்காரர்களாக இருந்த அவர்கள் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தேவகுமாரனாகிய கிறிஸ்து மீண்டும் வருவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் (வசனம் 10). விசுவாசத்தின் உச்சகட்டம் இதுவாகத்தான் இருக்கும்.

இரண்டாவதாக சபையாரிடம் காணப்பட்ட **அன்பின் பிரயாசத்தைப்** பவுல் பாராட்டிப் பேசுகிறார். "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1யோவான் 4:8) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்பின் மேன்மை என்ன என்பதை பவுல் 1கொரிந்தியர் 13:1-9 வசனங்களில் விளக்கமாக அறிவிக்கிறார். அன்பின் பிரயாசம் என்பது கிரியைகளில் வெளிப்படும் அன்பைக் குறிக்கும். பிதாவின் அன்பின் பிரயாசம் என்ன என்பதை யோவான் 3:16 இவ்விதமாக அறிவிக்கிறது, "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்".

1யோவான் 4:9 சொல்கிறது, "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது". **கிரியையில் வெளிப்படாத அன்பினால் யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை.** தெசலோனிக்கேயரிடமிருந்து வெளிப்பட்ட அன்பின் பிரயாசம் எவ்வளவு வல்லமையானது என்றால் அவர்கள் மூலமாக மக்கெதொனியா, அகாயாவில் உள்ள விக்கிரக ஆராதனைக்காரர்கள் மெய்தேவன் யார் என்பதைக் கண்டுகொண்டார்கள்.

மூன்றாவதாக தெசலோனிக்கேயரிடமிருந்து வெளிப்பட்ட **நம்பிக்கையின் பொறுமையைக்** குறித்துப் பவுல் பாராட்டிப் பேசுகிறார். நாம் விசுவாசிக்கிற பல காரியங்களை நாம் உடனடியாகப் பெற்றுக்கொள்வதில்லை. ஆனாலும் அதைப்

பெற்றுக்கொள்ளும்படியாகப் பொறுமையோடும், அதே சமயத்தில் நம்பிக்கையோடும் காத்திருக்கிறோம். பவுல் சொல்கிறபடி, "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன" (ரோமர் *8:24, 25*). "காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2கொரி *4;18*) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சபையில் காணப்பட்ட இந்த மூன்று மேன்மைகள் நிமித்தம் பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூன்று ஊழியக்காரர்களும் தேவ சமுகத்தில் இடைவிடாமல் நினைவுகூர்வதாக, அவர்களுக்காக ஜெபிப்பதாகப் பவுல் அறிவிக்கிறார். 4-வது வசனத்தில் அவர்களுக்காக விண்ணப்பம் பண்ணி, தேவனை எல்லா வேளைகளிலும் ஸ்தோத்திரிப்பதாகச் சொல்கிறார்.

நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து (1:3)

சபையாரிடம் காணப்பட்ட விசுவாசத்தின் கிரியை, அன்பின் பிரயாசம், நம்பிக்கையின் பொறுமை ஆகியவற்றின் நிமித்தம் தேவசமுகத்தில் நினைவுகூரும் ஊழியக்காரர்கள், அதே சமயத்தில் இத்தகைய நற்குணங்கள் அவர்களில் உருவாக அடிப்படையான காரணம் என்ன என்பதை இந்த வசனத்தில் அறிவிக்கிறார்கள். **தெசலோனிக்கேயா சபையார் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.** எதற்காக அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் என்பதை 2தெசலோனிக்கேயர் *2:13*ல் இவ்வாறு அறிவிக்கிறார், "நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்". கிறிஸ்தவர்களாகிய நம்மை தேவன் இன்று, நேற்று அல்ல, ஆதிமுதல் தெரிந்துகொண்டிருக்கிறார்.

இரட்சிப்புக்கென்று தேவன் ஆதிமுதல் சிலரைத் தெரிந்துகொண்டிருக்கிறார் (election) என்ற சத்தியம் சில வேதபண்டிதர்களைக் குழப்பமடையச் செய்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் பழைய ஏற்பாட்டு நாட்களிலே இந்தச் சத்தியம் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு காரியம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். எண்ணாகமம் 16:7ல் மோசே திட்டவட்டமாக அறிவிக்கிறார், "கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்". சங்கீதம் 135:4 சொல்கிறது, "கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்". உபாகமம் 7:7,8, 4:37,38 வாசித்துப்பாருங்கள்.

தன்னுடைய சீஷர்களிடம் இயேசு சொல்கிறார், "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" (யோவான் 15:16). எபேசியர் 1:12 சொல்கிறது, "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்". "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" (ரோமர் 8:33) என்று சவாலிட்டுப் பேசுகிறார் பவுல்.

மனித இரட்சிப்பு அவனுடைய மனவிருப்பத்தையும், ஆசைகளையும், யோசனைகளையும், முயற்சிகளையும் ஆதாரமாகக் கொண்டது அல்ல என்பதையே தெரிந்துகொள்ளப்படுதல் என்ற சத்திய உபதேசம் நிரூபிக்கிறது. நம்முடைய மனுஷீக முயற்சியினாலோ, தீர்மானத்தினாலோ நம்முடைய பாவ வாழ்க்கையைவிட்டு வெளியே வரமுடியாது. **இரட்சிப்பு துவக்க முதல் முடிவு வரை தேவனால் தெரிந்துகொள்ளப்படுவதையே ஆதாரமாகக் கொண்டது.** பவுல் சொல்லுகிறபடி "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமா-

னவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்" *(1கொரி 1:27-28)*.

மனிதனுடைய இரட்சிப்பு தேவனுடைய தெரிந்துகொள்ளுதலை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்றாலும் அதைக் கட்டிக்காத்து, தெரிந்துகொள்ளுதலில் நிலைத்திருப்பதில் மனிதனுக்குப் பொறுப்பு உண்டு என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். பேதுரு சொல்கிறார், "சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" *(2பேதுரு 1:10)*. இவைகளைச் செய்யாதிருந்தால் இடறிவிழும் ஆபத்து காத்துக்கொண்டிருக்கிறது.

தெசலோனிக்கேயா சபையார் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார் என்றாலும் இந்தச் செய்தியை எவ்வாறு அறிந்தார் என்பதை வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருந்து இது குறித்த வெளிப்பாட்டையும் பெற்றுக்கொண்டதாகவோ, அல்லது தேவதூதன் ஒருவன் எக்காளத்தோடு தன்னிடம் வந்து அறிவித்ததாகவும் சொல்லவில்லை. முந்தின வசனத்தின்படி சபையாரிடமிருந்து வெளிப்படும் விசுவாசத்தின் கிரியை, அன்பின் பிரயாசம், நம்பிக்கையில் பொறுமை ஆகியவைகளே அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

தேவனால் தெரிந்துகொள்ளப்படுவது என்பது நித்தியத்தில் நடந்த ஒரு காரியம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். எபேசியர் *1:4* சொல்கிறபடி, "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்". "ஆதியிலே தேவன் வானத்தையும்

பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி 1:1) என்று வாசிக்கிறோம். இந்த சிருஷ்டிப்புக்கு முன்பே தேவன் நம்மைத் தெரிந்து-கொண்டிருக்கிறார். நீதிமொழிகள் 8:27-31 வாசித்துப்பாருங்கள். சிருஷ்டிப்பின் கிரியையை பிதா நடப்பிக்கும்போது அவர் அருகே செல்லப்பிள்ளையாக இருந்த குமாரன் சொல்கிறார், "அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்" (வசனம் 31). நீங்களும் நானும்தான் மனுமக்கள் என்று இங்கே அழைக்கப்படுகிறோம்.

உலக சிருஷ்டிப்பிற்கு முன்பே நாம் கிறிஸ்துவுக்குள் பிதாவாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று ஊழியத்தைத் துவங்குவதற்கு முன்பே கர்த்தர் அனனியாவிடம் அவரைக்-குறித்து இவ்விதமாகச் சொல்கிறார், "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப் 9:15). இவ்வாறு தெரிந்து-கொள்ளப்பட்ட பவுல், "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி" (2தீமோ 2:10) ஊழியம் செய்கிறார்.

தெரிந்துகொள்ளப்படுதல் என்பது தேவ நீதிக்கு எதிரான ஒரு காரியம் அல்ல என்பதை ரோமர் 9:10-14ல் இவ்விதமாக விவரிக்கிறார், "ரெபெக்காள் கர்ப்பவதியானபோது, பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளு-தலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு, மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே". ஆதிநாட்க-ளில் தன்னுடைய சொந்த ஜனமாக ஆபிரகாம் மூலமாக

யூதர்களைத் தெரிந்துகொண்டதுபோல, இன்று புறஜாதியாரில் சிலரைத் தன்னுடைய சரீரமாகிய சபையில் இணைத்து, தம்முடைய பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

"தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" *(ரோமர் 11:29)* என்பதினால் **அவருடைய தெரிந்துகொள்ளுதலை அவமாக்க, மாற்றியமைக்க, அல்லது தடைசெய்ய யாராலும், எந்தச் சக்தியினாலும் முடியாது.** ரோமர் *8:28-30* அதை உறுதிப்படுத்துகிறது, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார், எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்". அவருடைய தீர்மானம் அழைப்பில் துவங்கி மகிமைப்படுத்துவதில் நிறைவடைகிறது. "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்" *(எபே 1:12)*.

எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். (1:4)

பொதுவாகத் தன்னுடைய நிருபங்களில் எல்லாம் பவுல் தன்னுடைய வாசகர்களுக்காக ஜெபித்து அவர்கள் நிமித்தம் தேவனை ஸ்தோத்திரிக்கும் பழக்கம் உள்ளவர் *(ரோமர் 1:8,*

1கொரி 1:6, கொலோ 1:5, 2தெச 1:3, 2தீமோ 1:4, பிலே 5). இந்த மூன்று ஊழியக்காரர்களும் தனிப்பட்ட விதத்தில் மட்டும் ஜெபிக்கவில்லை, மூன்று பேரும் இணைந்தும் தேவ சமுகத்தில் தங்கள் விண்ணப்பங்களை அறிவித்து, அவை தேவனிடமிருந்து பதிலைப் பெற்றுக்கொண்டதினிமித்தம் தேவனை ஸ்தோத்திரிக்கிறார்கள்.

"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்" *(2கொரி 4:15)* ரோமர் *1:8*ல் பவுல் சொல்கிறார், "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்". **தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் அவருக்கு நன்றிசொல்லும்போது அவரை ஸ்தோத்திரிக்கிறவர்களாகிறோம்.** "நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" *(பிலிப் 1:6).* தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றாலும் அவர்களுக்கும் ஜெபம் தேவைப்படுகிறது. இடைவிடாமல் என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

சுவிசேஷத்தின் மேன்மை (1:5-9)

எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடு மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது. (1:5 a)

சுவிசேஷம் (Gospel) என்றால் நற்செய்தி என்று பொருள்படும். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாக மனித இனம் பெற்றுக்கொள்ளும் இலவசமான இரட்சிப்பே சுவிசேஷம் என்று**

அழைக்கப்படுகிறது. *1நாளாகமம் 16:23ல் இவ்வாறு வாசிக்கிறோம், "பூமியின் சகலகுடிகளே, கர்த்தரைப் பாடி, நாளுக்கு நாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்". ஏசாயா மூலமாகக் கிறிஸ்து பேசுகிறார், "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" (61:1, லூக்கா 4:18). தன்னுடைய ஊழியத்தை இந்த பூமியில் துவங்கியபோது, "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:15) என்றார். "சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்படவேண்டும்" (மாற்கு 13:10) என்பது கிறிஸ்துவின் பிரதானமான கட்டளை.* **அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் யாருக்கும் இரட்சிப்பு உண்டாவதில்லை.**

"எங்கள் சுவிசேஷம்" என்று பவுல் அறிவிப்பதினால் பவுலும் அவருடைய நண்பர்களும் அறிவிக்கும் சுவிசேஷம் அந்த நாட்களில் பேதுரு, யோவான், யாக்கோபு, தீத்து முதலான ஊழியக்காரர்கள் அறிவித்த அல்லது இன்று உலகமெங்கும் தேவதாசர்கள் அறிவித்துக்கொண்டிருக்கும் சுவிசேஷத்திலிருந்து வித்தியாசமானது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அது கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றும் (மாற்கு 1:1, ரோமர் 1:16, கலா 1:7, பிலிப் 1:27, 1தெச 3:2, 2தெச 1:7), தேவனுடைய சுவிசேஷம் என்றும் (2கொரி 11:7, ரோமர் 1:1, 1தெச 2:2) அழைக்கப்பட்டாலும் கலாத்தியர் 1:11, 12ல் பவுல் சொல்கிறார், "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்".

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது அதில் வெளிப்-

படையாகக் காணப்படும் மூன்று காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

1. ***வல்லமை (Power)***
2. ***பரிசுத்த ஆவியானவர் (Holy Spirit)***
3. ***முழு நிச்சயம் (Full conviction)***

தெசலோனிக்கேயா பட்டணத்தில் மூன்று வாரகாலம் தங்கியிருந்தபோது அவர்கள் வசனமாகிய தேவனுடைய வார்த்தையை அவர்களுக்கு அறிவித்தார்கள். அதன் விளைவாக தேவனுடைய ***வல்லமை*** *அங்கே வெளிப்பட்டது. "செம்மையான வார்த்தைகளில் எவ்வளவு வல்லமை உண்டு" என்கிறார் யோபு (6:25). "வல்லமை தேவனுடையது என்பதே" (சங் 62:11) என்கிறார் தாவீது. "அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார்" (எரே 10:12). பவுல் அறிவித்த சுவிசேஷ வார்த்தையிலிருந்து வெளிப்படும் நம்பிக்கையின் விளைவாகவே அவர் சொல்கிறார், "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16).*

சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது வெளிப்படும் ***பரிசுத்த ஆவியின் செயல்பாடு*** *இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு இல்லாத நிலைமையில் சுவிசேஷம் வல்லமையோடு வெளிப்படுவதில்லை. பவுல் சொல்கிறார், "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" (1கொரி 2:5). அப்போஸ்தலர் நடபடிகள் 10:38ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்".*

தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாளில் கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" *(யோவான் 14:16)* என்கிறார். உயிர்த்த இயேசு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் தன் சீஷர்களிடம் "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" *(அப் 1:8)* என்றார்.

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அவர்மூலமாய் வெளிப்பட்ட வல்லமைக்கு மூலகாரணம் பரிசுத்த ஆவியானவரே. அவர் ஞானஸ்நானம் எடுத்தபோது, "பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர் மேல் இறங்கினார்" என்று லூக்கா 3:22ல் வாசிக்கிறோம். அதற்குப் பின்புதான் அவர் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று" *(லூக்கா 4:14)* என்று வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை முழுமையாக அங்கிகரித்து ஏற்றுக்கொள்ளாத சபைகளில் தேவவல்லமை மட்டுப்படுத்தப்படுகிறது.

முழு நிச்சயம் என்ற காரியம் மூன்றாவதாக இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. வேத வசனத்தின் வல்லமையும் பரிசுத்த ஆவியானவரும் இணைந்து செயல்படும்போது அதை ஏற்றுக்கொள்பவர்கள் தங்களுடைய இரட்சிப்பைக் குறித்த முழு நிச்சயம் உடையவர்களாகிறார்கள். அதைக் குறித்து சந்தேகப்படக்கூடிய காரியம் என்று எதுவும் இருக்கமுடியாது. "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" *(எபி 10:22)* என்று வாசிக்கிறோம்.

தன்னுடைய சபையாரைக் குறித்து பவுல் சொல்கிறார், "அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும்உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்" (*கொலோ 2:2*).

தான் பெற்றுக்கொண்ட முழுநிச்சயத்தினிமித்தம் ஊழியத்தின் பாதையில் பலவிதமான சோதனைகளையும் பாடுகளையும் போராட்டத்தையும் சந்தித்தாலும் பவுல் சொல்கிறார், "எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (*பிலிப் 3:7,8*).

நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே. (1:5 b)

தெசலோனிக்கேயாவில் பவுலும் உடன் ஊழியர்களும் இருந்த நாட்களில் அவர்கள் நடப்பித்த ஊழிய செயல்பாடுகளை பவுல் சபையாரின் நினைவுக்குக் கொண்டுவருகிறார். எல்லாரும் காணக்கூடியவிதத்தில் பகிரங்கமாக அவர்கள் ஊழியம் செய்தார்கள். ஒரு சில மாதங்களுக்கு முன்புதான் உழியம் செய்யப்பட்டது என்பதினால் அவர்கள் அதை மறந்துபோயிருக்கமுடியாது.

அவர்கள் அங்கே நடப்பித்த ஊழியம் அப்போஸ்தலர் நடபடிகள் 17:1-10ல் சொல்லப்பட்டிருப்பதை வாசித்துப்பாருங்கள். "அந்தப் பட்டணத்தில் யூதர்களின் ஜெப ஆலயம் இருந்தபடியால் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வு நாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற

இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான். அவர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்" *(அப் 17:2-4).*

யாசோன் என்பவரின் வீட்டில் தங்கியிருந்து அவர்கள் நடப்பித்த ஊழியத்திற்கு யூதர்களிடமிருந்து எதிர்ப்பு உண்டாகிறது. "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" *(வ 6)* என்று அவர்கள்மேல் குற்றம் சுமத்தப்படுகிறது. பட்டணத்து அதிகாரிகளிடம் ஜாமீன் வாங்கிக்கொண்டு பவுலும் சீலாவும் அங்கிருந்து பெரோயா பட்டணத்துக்குப் போய் ஊழியத்தைச் செய்கிறார்கள். தெசலோனிக்கேயரான யூதர்கள் அங்கும் வந்து பவுலின் ஊழியத்தைத் தடைசெய்தபடியினால் பவுல் அத்தேனே பட்டணம் சென்று "ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான்" *(அப் 17:17).*

நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி (1:6)

தெசலோனிக்கேயா சபையின் ஆவிக்குரிய முதிர்ச்சி என்ன என்பதை இந்த வசனம் அறிவிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். "நீங்கள் எங்களைப் போலவும், கர்த்தரைப் போலவும் ஆனீர்கள்" என்று பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது. அவர்கள் தங்களுடைய விக்கிரக ஆராதனையைவிட்டு விலக்கி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் அதிகமான உபத்திரவத்தைச் சந்திக்க வேண்டியதிருந்தது. ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் வழங்கும் சந்தோஷம் அவர்களோடு இருந்தபடியால் தேவனுடைய வார்த்தையாகிய திருவசனம் அவர்களுடைய இருதயத்துக்குள் பிரவேசித்தது. வசனத்தை ஏற்றுக்கொண்ட அவர்கள் இந்த மூன்று ஊழியக்காரர்களையும், கர்த்தரையும் பின்பற்றுகிறவர்கள் ஆகிறார்கள்.

சந்தோஷம் ஆவியின் கனிகள் பட்டியலில் *(கலா 5:22)* இரண்டாவதாகக் குறிப்பிடப்படுவதினால் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடு தெசலோனிக்கேயர் திருவசனத்தை ஏற்றுக்கொண்டதாகப் பவுல் அறிவிக்கிறார். முந்தின வசனத்திலும் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். அந்தியோகியா பட்டணத்தில் ஊழியத்தை நிறைவேற்றும் வேளையிலும் பல எதிர்ப்புகள் காணப்பட்டாலும் "சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்" *(அப் 13:52)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" *(ரோமர் 14:17)* என்கிறார் பவுல். தங்களுடைய உபத்திரவத்தினிமித்தம் அவர்கள் பின்மாற்றத்திற்குள் பிரவேசிக்கவில்லை. ஏனென்றால் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" *(யோவான் 16:33)* என்பது அவர்களுக்கு முன்னறிவிக்கப்பட்டிருந்தது.

*2தெசலோனிக்கேயர் 1:4*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக் குறித்து நாங்கள், தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்". "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" *(ரோமர் 5:3,4)*.

"இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே" *(1தெச 3:3)*. பேதுரு சொல்கிறார், "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்" *(1பேதுரு 4:13,14)*. நம்மில் எத்தனைபேர் இவ்விதமாகத் தேவனை

மகிமைப்படுத்த ஆயத்தமாயிருக்கிறோம். தெர்பை பட்டண ஊழியத்தின் முடிவில் அவர்கள் செய்த காரியம் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது, "அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்" (அப் 14:22).

வசனத்தின் பின்பகுதியில் சபையார், தெசலோனிக்கேயாவில் ஊழியத்தை நிறைவேற்றிய பவுல், சில்வான், தீமோத்தேயுவையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களானார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1தெசலோனிக்கேயர் 2:14ல் தேவனுடைய சபைகளைப் பின்பற்றவேண்டும் என்ற காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. பவுலும் சக ஊழியரும் எந்த அளவுக்கு நெருக்கமான முறையில் கர்த்தரைப் பின்பற்றுகிறார்கள் என்றால் அவர்களைப் பின்பற்றும் விசுவாசிகள் அத்தனைபேரும் கிறிஸ்துவையே பின்பற்றுகிறவர்களாகிறார்கள். ஊழியக்காரர்கள் தேவனாகிய கர்த்தரையே பிரதிபலிக்கிறவர்களாக இருக்கவேண்டும். **விசுவாசிகளின் கவனத்தைத் தங்களுக்கு நேராகத் திருப்பாமல் தேவனுக்கு நேராகத் திருப்புகிறவர்களே உண்மையான தேவ ஊழியர்கள்.** அப்படிப்பட்டவர்களால்தான் இவ்விதமாகப் பேசமுடியும்.

1கொரிந்தியர் 11:1ல் பவுல் சொல்கிறார் "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்". பவுலுக்கும் தேவனுக்குமிடையே இருந்த உறவு, ஐக்கியம், நேசம் எவ்வளவு மகத்துவமானதாகவும் மேன்மையானதாகவும் இருந்தது என்றால் "என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1கொரி 4:16) என்று அவரால் தைரியமாகச் சொல்லமுடிந்தது. அந்த அளவுக்குப் பவுல் தன்னுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவராக இருந்தார்.

எபிரெயர் 3:5ல் இவ்வாறு வாசிக்கிறோம், "மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்". பவுல் சொல்கிறார், "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம்" (1கொரி 4:2). நீதிமொழிகள் 28:20 சொல்கிறது, "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்".

இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலு-முள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். (1:7)

வசனத்தை ஏற்றுக்கொண்டவர்களாய், ஊழியக்காரர்களையும், தேவனாகிய கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாக தெசலோனிக்கேய சபையார் மாறியதால் உடனடியாக நடந்தது என்ன என்பதைப் பவுல் சுருக்கமாக இந்த வசனத்தில் அறிவிக்கிறார். பக்கத்து ரோம ஆட்சிக்குட்பட்ட பெரிய நாடுகளாய் இருந்த மக்கெதோனியா, அகாயாவில் உள்ளவர்கள் நற்செய்தியைக் கேட்டு இவர்களைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். **மெய்யான முறையில் தேவனைப் பின்பற்றுவோமானால் நாம் பலருக்கு மாதிரியாகக் காணப்படுவது நிச்சயம்.** பிதாவாகிய தேவன் தன்னுடைய பிரதிநிதியாக மனிதன் மீட்படையும்படியாகத் தன்னுடைய குமாரனை அனுப்புகிறார். அவர் அறிவித்த திருவசனத்தை பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே அங்கீகரித்து ஏற்றுக்கொண்டவர்கள் மூலமாகச் சுற்றியுள்ள பட்டணங்களிலும் தேவனுடைய இரட்சிப்பின் சுவிசேஷம் கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. அந்தப் பிரதேசத்திலும் பல ஆயிரக்கணக்-கானவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறார்கள்.

நாம் பெறும் இரட்சிப்பு நம்மோடு நின்றுவிடக்கூடாது. தீத்துவிடம் பவுல் சொல்லும் ஆலோசனை என்னவென்றால், "நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனு-மாயிருப்பாயாக" *(2:7,8)*.

பேதுரு சொல்கிறார், "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிற-வர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" *(1பேதுரு 5:3,4)*. இந்த மகிமையுள்ள வாடாத

கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள தெசலோனிக்கேய சபையார் நிச்சயமாகவே தகுதியுள்ளவர்கள்தான். **சத்தியத்தை அறிந்து, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொண்ட நாம் நம்முடைய பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும், நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் எந்த அளவுக்கு முன்மாதிரிகளாக இருக்கிறோம் என்பதை யோசித்துப் பாருங்கள்.** நற்செய்தியை அயலாருக்கு அறிவிக்காத சபை உயிரில்லாத சபை (லூக்கா 11:23).

எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று. (1:8)

மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தெசலோனிக்கேயா சபையார் முன்மாதிரியாக இருந்ததாக முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் இந்த வசனத்தில் அவர்களிடமிருந்து கர்த்தருடைய வசனம் அந்தச் சபைகளில் தொனித்தது என்பதை அறிவிக்கிறார். அதைக்குறித்து இந்த ஊழியக்காரர்கள் அந்தப் பட்டணங்களுக்குச் சென்று ஊழியம் எதையும் செய்யாமலிருந்தும் தேவனைக் குறித்து தெசலோனிக்கேயர் கொண்டிருந்த **விசுவாசம்** அவர்களால் அறியப்பட்டிருந்தது என்றும் சொல்லுகிறார். ஒருவகையில் தெசலோனிக்கேய சபையார் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறார்கள்.

கர்த்தருடைய வசனம் என்று இந்த இடத்தில் பவுல் சொல்லும்போது பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பவுல் குறிப்பிடுகிறார். ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் புத்தகம் தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட முதல் நிருபம் என்பதைப் பார்த்திருக்கிறோம். அதின் தொடர்ச்சியாக இந்த மூன்று ஊழியக்காரர்கள் மூலமாக தேவனுடைய வார்த்தையே சுவிசேஷமாக அறிவிக்கப்பட்டது.

முந்தின இரண்டு வசனங்களிலும் பொதுவான முறையில் சபையைப் பாராட்டிய பவுல் இந்த வசனத்தில் சபையில் அவர் கண்ட விசுவாசத்தை பிரத்தியேகமாகப் பாராட்டிப் பேசுகிறார். இவ்விதமாகப் பவுல் வேறு எந்தச் சபையையும் பாராட்டியதாகத் தெரியவில்லை. கொரிந்து சபையாரை அவர்களில் காணப்பட்ட தவறுகளினிமித்தம் அதிகமாகக் குற்றப்படுத்திப் பேசியதைப் பார்க்கிறோம் (*1கொரி 3:1-4, 6:1-8*).

தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து சொல்லுகிறார், "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (*மத் 5:14*). பவுலின் ஊழியம் அந்த நாட்களில் கிரேக்கதேசம் முழுவதிலும் பரவிச் சென்றது என்றால் அதற்கு ஒரு முக்கியமான காரணம் பவுல் ஊழியம் செய்யும்படியாகத் தேசத்தில் தெசலோனிக்கேயா போன்ற முக்கியமான துறைமுகப் பட்டணங்களைத் தெரிந்துகொண்டு அங்கு சபைகளை ஸ்தாபித்ததுதான். இவ்வாறு செய்ததின்மூலம் அந்த நாட்களில் பாலஸ்தீனா, சிரியா, ஆசியாமைனர் போன்ற பல பகுதிகளில் கிறிஸ்துவின் சுவிசேஷம் வெகுவிரைவாகப் பரவிச்சென்றது.

தெசலோனிக்கேயரில் காணப்பட்ட விசுவாசத்தை பவுல் பிரத்தியேகமாகச் சுட்டிக்காட்டுவதைக் கவனியுங்கள். விசுவாசமின்றி இரட்சிப்பு இல்லை. ரோமர் *3:30* சொல்லுகிறபடி, "விருத்தசேதனமுள்ளவர்களை **விசுவாசத்தினாலும்,** விருத்தசேதனமில்லாதவர்களை **விசுவாசத்தின் மூலமாயும்** நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே". "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோமர் *1:17*) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியரின் 'ரோமர் விளக்கவுரை', 'எபிரெயர் விளக்கவுரை' புத்தகங்களை வாசித்து விசுவாசத்தின் மேன்மையை அறிந்துகொள்ளுங்கள்.

ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும் (1:9)

அவர்கள்தாமே என்று பவுல் முந்தின வசனத்தில் குறிப்பிட்ட மக்கெதோனியா பட்டணத்து விசுவாசிகளைக் குறிப்பிடுகிறார். அந்தப் பட்டணத்துக்குள் பிரவேசித்து பவுலும் அவருடைய உடன் ஊழியக்காரர்களும் எந்த ஊழியத்தையும் நிறைவேற்றவில்லை. ஒரு பிரசங்கமும் பண்ணவில்லை. ஆனாலும் பிலிப்பி பட்டணத்தில் ஊழியம் செய்யும்போது அங்கு சுவிசேஷத்துக்கு விரோதமாக எழும்பிய யூதர்கள் அவர்களுக்கு எதிராக அதிகாரிகளிடம் குற்றஞ்சாட்டி, அவர்களை அடித்து, வஸ்திரங்களைக் கிழித்துப்-போட்டு, சிறையில் அடைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைக்கிறார்கள்.

அந்த வேளையிலும் பவுலும் சீலாவும் தேவனைத் துதித்துப் பாடியதின் விளைவாக பூமி அதிர்ச்சி ஏற்பட்டு சிறைக்கதவுகள் திறவுண்டு, கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டுப்போகிறது. கைதிகள் தப்பி ஓடிவிட்டார்கள் என்று நினைத்த சிறைச்சாலைக்காரன் தற்கொலைக்கு முயல்கிறான். அப்போது அங்கே இருக்கும் பவுலும் சீலாவும் அவனைத் தடுக்கிறார்கள். "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" (அப் 16:30) என்று அவன் கேட்டபொழுது இரட்சிப்பின் சுவிசேஷம் அவனுக்கு அறிவிக்கப்படுகிறது. அவனுடைய குடும்பம் தேவனோடு ஞானஸ்நான உடன்படிக்கை செய்துகொள்கிறது (அப் 16:12-40).

பவுலும் சீலாவும் ரோமராயிருக்கிறார்கள் என்பதை அறிந்ததும் பயந்து, அவர்களுடன் தயவாய்ப் பேசி பிலிப்பி பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப்போகப்பண்ணுகிறார்கள். அங்கிருந்து அம்பிபோலி பட்டணம் வழியாகத் தெசலோனிக்கேயா வந்த ஊழியர்கள் அங்கு யூத ஜெப ஆலயத்தில் தங்கள் ஊழியத்தை ஆரம்பிக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளைக் குறித்தே பவுல் "நாங்கள் அடைந்த பிரவேசம்" என்று இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார்.

இந்த பிரவேசத்தின் விளைவாகத் தெசலோனிக்கேயர் செய்துகொண்ட மூன்று காரியங்களைப் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

1. அவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள்.

2. தாங்கள் வணங்கிவந்த விக்கிரகங்களை விட்டுவிட்டார்கள்.

3. மெய்தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள்.

இந்த ஊழியக்காரர்கள் மக்கெதோனியா பட்டணத்துக்குள் பிரவேசித்து எந்த ஊழியமும் செய்யவில்லை என்றாலும், இந்தச் செய்திகள் வாய்மொழியாக அந்தப் பட்டணத்துக்குள் பிரவேசித்தது என்பதாகப் பவுல் அறிவிக்கிறார். அடுத்த வசனத்தில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சத்தியத்தை பவுல் அறிவித்துவிட்டு, அந்த வருகையை மிகுந்த எதிர்பார்ப்போடு தெசலோனிக்கேயர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் மெக்கெ-தோனியா சபையார் அறிந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார் (வசனம் 10).

தெசலோனிக்கேய சபையார் ஜீவனுள்ள மெய்யான தேவன் யார் என்பதை அறிந்துகொண்டார்கள் என்பது மட்டுமல்ல, அவருக்கு ஊழியஞ்செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவருடைய அடிமைகளாகத் தங்களை அவருடைய வேலையைச் செய்ய ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் தேவனுடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது. ரோமா-புரியிலுள்ள சபையாரிடம் பவுல் சொல்கிறார், "அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே, நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்-ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" (6:19).

ஒருவன் உண்மையான கிறிஸ்தவன் ஆகவேண்டுமானால், ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கவேண்டுமானால் முதலாவதாக அவனில் காணப்படும் விக்கிரக ஆராதனை நீங்கவேண்டும். பொருளாசை விக்கிரகாராதனைப் பாவமாக எபேசியர்5:5ல் குறிப்பிடப்படுகிறது. லீஸ்திரா பட்டணத்தில் ஊழியம் செய்த-போது, அவர்கள் நடப்பித்த அற்புத அடையாளங்களினிமித்தம்

யூப்பித்தருடைய ஊழியக்காரர் அவர்களை தெய்வங்களாகக் கருதித் தொழுதுகொள்ள வரும்போது அவர்கள் அதைத் தடைசெய்து சொல்கிறார்கள், *"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்" (அப் 14:15).*

விக்கிரக வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒரு மனிதன் கிறிஸ்தவனாக இருக்கவே முடியாது. **தேவன் அருவறுக்கும் பிரதானமான பாவம் விக்கிரக ஆராதனை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.** சீனாய் மலையில் மோசே மூலமாக வழங்கப்பட்ட 613 பிரமாணங்கள் மிகவும் முக்கியமானது தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகள். அதில் முதலாவது கற்பனை சொல்கிறது, *"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:3-5).*

23-வது வசனத்தில் தேவன் சொல்கிறார், "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவேண்டாம்". பாரம்பரிய சபைகளில் சிலை வடிவில் அல்லது படங்களில் திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய கிறிஸ்துவை சித்தரித்து அதைத் தொழுதுகொள்ளுவதும் இந்த வசனத்தின்படி பாவமாகக் கருதப்படவேண்டும். ஒரு அவிசுவாசி மெய் சத்தியத்தை அறிந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வது என்பது எளிதான காரியம்.

ஆனால் விக்கிரக ஆராதனை செய்துகொண்டிருக்கும் ஒருவன் மெய்தேவனைக் கண்டுகொள்வது என்பது மிகவும் கடினமான காரியம்.

மூன்றாவதாக, தெசலோனிக்கேய சபையார் செய்த காரியம் மனந்திரும்புதல். விக்கிரகங்களை விட்டால் மட்டும் போதாது, தேவனிடத்திற்கு மனந்திரும்பவேண்டும். **மனந்திரும்புதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.** புதிய ஏற்பாட்டின் முதல் ஊழியக்காரனாகிய யோவான்ஸ்நானன் "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத் 3:2, மாற்கு 1:4, லூக்கா 3:6) என்றுதான் பிரசங்கம் பண்ணினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் முதலாவதாக "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத் 4:17) என்றுதான் பிரசங்கித்தார். "பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்" (மத் 9:13, மாற்கு 2:17) என்கிறார். மனந்திரும்புதலைப் பிரசங்கிக்கும் ஊழியக்காரர்கள் இந்தக் கடைசி நாட்களில் குறைந்துவருகிறார்கள்.

"உருவ வழிபாட்டை நிறுத்திவிட்டு பரலோகத்திலிருந்து வரப்போகும் தேவனுடைய குமாரனுக்காக நீங்கள் காத்திருக்கிறீர்கள்" என்பது பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு. இந்தக் கடைசி நாட்களில் சிலைகளை உருவாக்கி பீடங்களில் நிலைநிறுத்தி நாம் ஆராதிப்பதில்லை என்பது உண்மைதான் (ஏசாயா 44:9-15). ஆனாலும் பல வேளைகளில் நமக்காக ஜெபிக்கும் தேவமனிதர்களை விக்கிரகங்களாக்கிவிடுகிறோம். நமக்குத்தெரிந்த, நாம் அதிகமாக ஐக்கியங்கொள்ளும் ஊழியக்காரர்கள் தெரிந்தோ தெரியாமலோ தங்களை விக்கிரகங்களாக விசுவாசிகளின் மனதில் நிறுத்திவிடுகிறார்கள். விசுவாசிகளின் கவனத்தைத் தேவனுக்கு நேராகத் திருப்புவதற்குப் பதிலாக, தங்களுக்கு நேராக திருப்புவதை நாம் ஏற்றுக்கொள்ளும்போது நாமும் விக்கிரக ஆராதனைக்காரர்களாக மாறிவிடக்கூடும். நீங்கள் "தேவர்களைப் போல் இருப்பீர்கள்" (ஆதி 3:5) என்ற சாத்தானின் வார்த்தையை ஏற்றுக்கொண்ட மறுநிமிடம் ஆதாமும், ஏவாளும் தங்களையே விக்கிரகங்களாக்கிவிட்டார்கள்.



மக்கெதோனியா
தெசலோனிக்கா
பெரியா
அகாயா
கொரிந்து
கருங்கடல்
ஆசியா
மத்தியதரைக்கடல்
லிபியா
எகிப்து
அரேபியா
சீரியா
சீப்புரு தீவு
பாப்போ
சாலமி
கப்பதோக்கியா

பரலோகத்திலிருந்து வரும் கிறிஸ்து யார்? (1:10)

அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிற-வருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே. (1:10)

இதுவரை தன்னுடைய நிருபத்தில் தெசலோனிக்கேயா சபையாரிடம் பொதுவான காரியத்தைக் குறித்துப் பேசிக்-கொண்டிருந்த பவுல் முதல் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் மூன்று ஆழமான கிறிஸ்துவ உபதேச சத்தியங்களை அறிவிப்பதைப் பார்க்கிறோம்.

1. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழும்பினவர்
2. கிறிஸ்து வரப்போகிற கோபாக்கினையிலிருந்து நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர்
3. இந்த இரட்சிப்பின் கிரியையை பூரணமாக்கக் கிறிஸ்து மீண்டும் வருகிறவர்

1கொரிந்தியர் 15:3-5 ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, **வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து,** கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்". கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே கிறிஸ்தவத்தின் மூல உபதேசமாகக் கருதப்படவேண்டும். அவர் பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா சொல்கிறார், "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்" *(25:8)*. பேதுரு சொல்கிறார், "இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை" *(1பேதுரு 1:4)* நமக்கு உண்டாயிருக்கிறது.

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25) என்று அறிக்கையிட்ட கிறிஸ்துவைக் குறித்துப் பவுல் சொல்கிறார், "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1கொரி 15:20). "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா" (1கொரி 15:14). "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்" (ரோமர் 8:34). "கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார் (ரோமர் 14:9).

"எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ 1:18). ரோமர் 1:5ல் இவ்வாறு வாசிக்கிறோம், "மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று **மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்**". 1பேதுரு 3:18 சொல்கிறது, "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்".

அவருடைய உயிர்த்தெழுதலே கிறிஸ்து தேவன் என்பதை நிரூபிக்கிறது. தன்னுடைய ஊழியத்தின் துவக்க நாட்களிலேயே அவர் சொல்கிறார், "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவான் 2:19). அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார் (வசனம் 21) என்றும், அவர் ஆலயம் என்று தன்னுடைய சரீரத்தைக் குறிப்பிட்டார் என விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை நாம் தியானித்த வசனங்களில் கிறிஸ்து தன்னுடைய சுயபெலத்தினாலே உயிர்த்தெழுந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவருடைய உயிர்த்தெழுதலில் பிதாவின் பங்கு என்ன என்பதை ரோமர் 10:9, அப்போஸ்தலர் நடபடிகள் 17:31, 1கொரிந்தியர் 6:14, 15:15, 2கொரிந்தியர் 4:14, ரோமர் 4:24, 6:4,

எபேசியர் *1:20-23*, 1தெசலோனிக்கேயர் *1:10*, 1பேதுரு *1:21* ஆகிய வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு என்ன என்பதை ரோமர் *8:11*, 1பேதுரு *3;18* ஆகிய வசனங்கள் அறிவிக்கின்றன. **திருத்துவ தேவன் ஒருவரோடு ஒருவர் இணைந்தும், தனித்திருந்தும் நடப்பிக்கும் செயல்பாடுகளை மனித ஞானத்தினால் விளங்கிக்கொள்ள-முடியாது.**

கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறவர் என்பது இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழும்பினதின் விளைவாகவே இனிவரும் கோபாக்கினையினின்று நாம் நீங்கலாக்கி இரட்சிக்கப்படுகிறோம். "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே *2:1*). 1தெசலோனிக்கேயர் *5:9*ல் பவுல், "தேவன் நம்மைக் கோபாக்கி-னைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்" என்கிறார். ரோமாபுரி சபையாரை பவுல் இவ்வாறு எச்சரிக்கிறார், "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளு-கிறாயே" (ரோமர் *2:5*). ரோமர் *5:9*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே". வெளிப்படுத்தின விசேஷம் *6:17* சொல்கிறது, "அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக் கூடும்?"

தேவகோபத்தைப் பற்றியும், கோபாக்கினைத் தீர்ப்பைப் பற்றியும் நூற்றுக்கணக்கான வசனங்கள் வேதத்தில் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுங்கள். இந்தக் கடைசி நாட்களில் தேவ ஊழியர்கள் தேவனுடைய அன்பையும், இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

"குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவா *3:36*)

என்று அன்பின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் யோவான் எச்சரிக்கிறார். மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமர் *9:22*, எபேசியர் *5:6*, கொலோசெயர் *3:6*, வெளிப்படுத்தின விசேஷம் *11:18, 19:15, 14:10,19* வாசித்துப் பாருங்கள். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" *(எபி 10:31)* என்கிறார் பவுல்.

இந்த பயங்கரமான கோபாக்கினையிலிருந்து நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" *(1தீமோ 1:15)*. கிறிஸ்து இந்தப் பூவுலகில் வெளிப்படுவதற்கு முன்பாகவே தேவதூதன் யோசேப்பிடம் சொல்கிறான், "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" *(மத் 1:21)*. **பாவங்கள் நீக்கப்படாத நிலையில் இரட்சிப்பு உண்டாவதில்லை.** "இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்" *(ரோமர் 11:24)* என்கிறார் பவுல். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" *(அப் 4:12)* என்கிறார் பேதுரு. "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" *(எபி 7:25)*.

முதலாவது மற்றும் இரண்டாவது தெசலோனிக்கேயர் நிருபங்களில் இந்த ஒரு வசனத்தில்தான் இயேசு பிதாவாகிய தேவனுடைய குமாரன் என்று பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படுகிறார் என்று பார்க்கிறோம். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் தன்னுடைய ஊழியர்களைத் திடப்படுத்திய இயேசு ஒலிவமலையில் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார். அந்த வேளையில் தேவதூதர்கள் அப்போஸ்தலர்களிடம் "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" *(அப் 1:11)*. இதன் விளைவாகவே இரட்சிப்பின் கிரியை பூரணமாகும்.

கிறிஸ்து மீண்டும் வருகிறவர் என்பது மூன்றாவதாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களிலேயே தன்னுடைய சீஷர்களிடம் தன்னுடைய வருகையைக் குறித்துப் பலமுறை பேசினார் என்றாலும் அதை அவர்கள் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்தார்கள். மத்தேயு 24:27ல் அவர் சொல்கிறார், "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்". 30-வது வசனத்தில் சொல்கிறார், "மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்". "மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தியவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார் (மத் 25:31). "மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்" (மத் 26:64).

தன்னுடையவர்களை மீட்டு பரலோகத்துக்குக் கொண்டு-போகும்படியாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மீண்டுமாக பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்து அவருடையவர்களை இரட்சிக்கவில்லையென்றால் அவருடைய உயிர்த்தெழுதல் பிரயோஜனமற்றதாகிவிடும்.

2தெசலோனிக்கேயரில் பவுல் கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்து சில சத்தியங்களை வெளிப்படுத்தினாலும் முதல் நிருபத்தில் ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் வருகை-யைக் குறித்த சத்தியங்களை அறிவிக்கிறார் (1தெச 1:10, 2:19, 3:13, 4:13-18, 5:23). இரகசிய வருகையைக் குறித்த சத்தியங்கள் இந்த முதலாவது நிருபத்தில் அறிவிக்கப்படுகின்றன.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்-தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் (ஆதாம்) மரணம் உண்டானபடியால், மனுஷனால் (மனுஷகுமாரனாகிய கிறிஸ்து) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. **ஆதாமுக்குள்**

எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" *(1கொரி 15:20-22)*. "கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்கிறார் யாக்கோபு *(5:8)*. பேதுரு சொல்கிறார், "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றின-வர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" *(2பேதுரு1:16)*.

தெசலோனிக்கேயாவில் குறுகிய காலமே தங்கியிருந்து பவுல் ஊழியம் செய்தார் என்றாலும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த ஆழமான சத்தியங்களை சபையாருக்கு அறிவிக்கத் தவறவில்லை. அதுமட்டுமல்ல, சபையார் அந்த வருகையைக் குறித்த காரியத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களாயிருந்தபடியினால் அதை மக்கெ-தோனியா மற்றும் அகாயாவில் உள்ளவர்களுக்கு அறிவித்திருக்கி-றார்கள். அவர்களும் கிறிஸ்து "பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே" என்று இந்த அதிகாரம் நிறைவடைகிறது.

அதிகாரம் – 2

எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்.

1 தெசலோனிக்கேயர் 2:19

தெசலோனிக்கேயா ஊழியம் (2:1-12)

சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லையென்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள். (2:1)

89 வசனங்கள் அடங்கிய இந்த முதலாம் தெசலோனிக்கேயர் நிருபத்தில் ஐந்து வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் அங்கு நடப்பித்த ஊழியச் செயல்பாடுகளை சபையார் நேரடியான முறையில் அறிந்திருப்பதாகச் சொல்கிறார் (1:5, 2:1, 2, 5:12, 4:2). சபையாரை வாழ்த்தி நிருபத்தின் முதல் அதிகாரத்தை ஆரம்பித்த பவுல் அதன் முடிவில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து எழுதியிருப்பதைப் பார்த்தோம்.

இரண்டாவது அதிகாரத்தில் முதல் 12 வசனங்களில் பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகியோர் நடப்பித்த ஊழியத்துக்கு விரோதமாக சத்துரு செயல்படும் விதத்தைப் பவுல் அறிவிக்கிறார். அவர்கள் ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள் (வசனம் 1-6), ஒரு தாயினுடைய அன்பு அவர்களிடமிருந்து வெளிப்பட்டது (வசனம் 7,8), ஒரு கரிசனையுள்ள தகப்பனைப்போல் இரவும் பகலும் வேலை செய்து, பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையாயும் நடந்து, அவர்களுக்குப் புத்தி சொல்லி, ஆற்றித் தேற்றி, அவசியப்பட்டால் எச்சரித்து நடத்திய காரியங்களை பவுல் சபையாருக்கு நினைவுபடுத்துகிறார்.

"நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது" என்று சொல்லும்போது (ஏற்கெனவே 1தெச 1:9ல் தங்களுடைய பிரவேசத்தைக் குறித்து பவுல் குறிப்பிட்டதைப் பார்த்தோம்) பிலிப்பி பட்டணத்திலிருந்து துரத்தப்பட்டவர்களால் இந்த ஊழியர்கள் தெசலோனிக்கேயா வந்த நிகழ்ச்சிகளை மட்டும் பவுல் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அங்குவந்து மூன்று வாரங்கள் நடப்பித்த சகல காரியங்களையும் இந்த வார்த்தைகள் சபையாரின் நினைவுக்குக் கொண்டுவருகிறது.

அது வீணாயிருக்கவில்லை என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை, ஏனென்றால் அதை நீங்களே அறிந்திருக்கிறீர்கள் என்கிறார்.

அவர்களுடைய முயற்சி வீணாவதில்லை. ஏனெனில் "ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்" *(மத் 10:23)* என்ற ஆண்டவரின் ஆலோசனையின்படி அவர்கள் செயல்படுகிறார்கள். தெசலோனிக்கேயா பட்டணத்திலும் யூத இனத்தவர்கள் அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டு அமளி உண்டாக்கி அவர்கள் தங்கியிருந்த யாசோனுடைய வீட்டிலிருந்து அதிகாரிகளுக்கு முன்பாக அவர்களை இழுத்துக்கொண்டுவந்து உடனடியாக அவர்களைப் பெரோயாவுக்குத் துரத்திவிடுகிறார்கள்.

தெசலோனிக்கேயா ஊழியம் தோல்வியில் முடிந்தது என்று அந்நாட்களில் யூதர்கள் பொய்ப்பிரச்சாரம் செய்துவந்தார்கள். அது உண்மை அல்ல என்பதை நீங்களே அறிவீர்கள் என்கிறார் பவுல். அதற்கான காரணம் 1தெசலோனிக்கேயர் 1:5ல் இவ்வாறு சொல்லப்பட்டதைப் பார்த்தோம். "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது". அந்த ஊழியம் வீணாயிருக்கவில்லை என்பதை நிரூபிக்கும் இன்னொரு காரியம் இதுதான், அவர்களிடமிருந்து மக்கெதோனியா, அகாயா பட்டணங்களிலும் கர்த்தருடைய வசனம் தொனித்தது. இது 1தெசலோனிக்கேயர் 1:8ல் சொல்லப்பட்டதைப் பார்த்தோம். தேவனுடைய வார்த்தை அவர்கள் மூலமாக இன்னும் பல பட்டணங்களில் உள்ள புறஜாதியார்களிடம் புறப்பட்டுச் சென்றது.

உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம். (2:2)

"உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி" என்று இந்த வசனம் துவங்குகிறது. "நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" *(1தெச 1:5)* என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். தன்னுடைய ஊழியத்தைக் குறித்த எந்தக் காரியத்தையும் பவுல் சபையாரிடமிருந்து மறைத்துவைக்க விரும்பவில்லை.

தெசலோனிக்கேயாவிலிருந்து சுமார் நூறு மைல் தூரத்திலிருந்த பிலிப்பு பட்டணத்தில் அவர்கள் ரோமப் பிரஜைகளாயிருந்தும் கைதுசெய்யப்பட்டு, குற்றவாளிகள் என்று நியாயந்தீர்க்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டவர்களாய் சிறையில் அடைக்கப்பட்டிருந்த செய்தி *(அப் 16:11-40)* தெசலோனிக்கேயருக்கு நிச்சயமாகவே தெரிந்திருக்கிறது. எனவேதான் "மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்" *(கொலோ 2:1)* என்கிறார்.

அந்தப் போராட்டத்தின் மத்தியிலும் அவர்களுடைய ஊழியம் எந்த விதத்திலும் தடைபடவில்லை. உடனடியாக தெசலோனிக்கேயா பட்டணத்துக்கு வந்து தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்க இந்த ஊழியர்கள் தைரியங் கொண்டிருந்தார்கள். 8-வது வசனத்திலும் தேவனுடைய சுவிசேஷம் என்ற வார்த்தை சொல்லப்படுகிறது (முந்தின அதிகாரம் 5-வது வசனத்தில் எங்கள் சுவிசேஷம் என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்).

சுவிசேஷம் தேவனுடையது, ஏனென்றால் அது தேவனிடத்தில் இருந்து புறப்பட்டு வருகிறது. தேவமனிதர்கள் மூலமாக மனிதர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளும்படியாக பகிரங்கமாக பாவமனிதர்களை அழைக்கிறது. அவர்கள் அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது எதிர்ப்புகள் மற்றும் போராட்டம் உருவாகிறது. "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" *(1தீமோ*

6:12) என்று தீமோத்தேயுவுக்கு ஆலோசனை சொன்ன பவுல் தன்னுடைய போராட்டத்தின் முடிவை 2தீமோத்தேயு *4:7*ல் இவ்விதமாக அறிவிக்கிறார், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்".

போராட்டத்தின் மத்தியிலும் பவுலும் சக ஊழியர்களும் தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அப்போஸ்தலர் நடபடிகள் *17:28*ல் பவுலினால் இவ்வாறு சொல்லப்படுகிறது, "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்".

2கொரிந்தியர் *4:8-11*ல் மேலும்சொல்கிறார், "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்".

"தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" *(2தீமோ 3:12)* என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. தெசலோனிக்கேயாவில் மிகுந்த போராட்டத்தோடு சுவிசேஷத்தை அறிவித்த பவுல் இத்தகைய போராட்டத்தை எதிர்கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும் என்று சபைக்கும் சொல்கிறார். பிலிப்பியர் *1:30*ல் அவர் சொல்கிறார், "நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு".

எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை. (2:3)

மிகுந்த போராட்டத்தின் மத்தியிலும் அவர்கள் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவித்தார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய போதகத்தில் மூன்று காரியங்கள் இல்லாதிருந்தது. அவை,

*1. வஞ்சகம் (*deceit, delusions, error*)*

*2. துராசை (*impurity, uncleanness*)*

*3. கபடம் (*error, guile, trickery*)*

2தீமோத்தேயு 3:13ல் பவுல் கடைசிக் காலங்களில் வெளிப்படும் போதகம் எத்தகையதாக இருக்கும் என்று எச்சரிப்பதைப் பார்க்கிறோம். பவுல் சொல்கிறார், “பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்”. இந்தக் கடைசி நாட்களில் இப்படிப்பட்ட ஊழியங்கள் பிரபலமாகிக்கொண்டு வருகின்றன. “கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்” (மத் 24:24) என்ற கிறிஸ்துவின் எச்சரிப்பு இன்றைய நாட்களில் நடந்துகொண்டிருக்கிறது.

உபத்திரவ காலத்தின் பின்பகுதியில் மிக வஞ்சனையான ஊழியம் நடக்கும் என்பதை வெளிப்படுத்தின விசேஷம் 13:11-18ல் யோவான் சபைக்கு அறிவிப்பதை வாசித்துப் பாருங்கள். இந்த வஞ்சனைக்குக் காரணம் என்ன என்பதை பவுல் 2தெசலோனிக்கேயர் 2:11,12ல் இவ்விதமாக அறிவிக்கிறார், “சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாகப்படும்படிக்கு,

அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்". தேவனே இந்த வஞ்சகத்தை அனுப்புவதினால் அந்திக்கிறிஸ்து மிகக் குறுகிய காலத்தில் பெரிய கிரியைகளை நடத்தி ஜனங்களை வஞ்சிப்பான்.

பவுல் அறிவித்த சுவிசேஷத்தில் துராசை இல்லை என்பது **இரண்டாவதாகச்** சொல்லப்படுகிறது. தனது போதனைகளில் வஞ்சனை இல்லை என்று முதலாவது அறிவித்த பவுல், இரண்டாவதாக அந்த போதனையை அவர்களுக்கு வழங்கிய ஊழியக்காரர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதை அறிவிக்கிறார். பொருளாசை, பேராசை, சுயநலனைத் தேடுதல், மாய்மாலம், கள்ளத் தீர்க்கதரிசனம் போன்ற குறைபாடுகள் இல்லை என்பதை அறிவிக்கிறார். அவர்கள் தந்திரம் செய்ய முயலவில்லை.

ஊழியக்காரர்கள் ஒருவேளை நல்ல காரியங்களையே செய்யலாம், ஆனால் அதைத் தவறான காரணங்களுக்காக செய்வார்கள் என்றால் அதைத் தேவன் அங்கிகரிப்பதில்லை. **தனக்குப் பெயர், புகழ், செல்வம் உண்டாக்கும் நோக்கத்தோடு செய்யப்படும் ஊழியங்கள் மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படலாம், ஆனால் அந்த ஊழியர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.** அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கலாம். பிசாசுகளைத் துரத்தியிருக்கலாம். அற்புதங்களைச் செய்திருக்கலாம். நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களைப் பார்த்து தேவன், "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவேன்" *(மத் 7:23)* என்று எச்சரிக்கிறார்.

பவுலின் போதகத்தில் கபடம் இல்லை என்பது **மூன்றாவதாகச்** சொல்லப்படுகிறது. மாய்மாலமான முறையில் சத்தியத்தை அறிவிப்பதை கபடமாகக் கருதப்படவேண்டும். எங்களிடம் வந்தால் போதும் உங்கள் குறைவுகள் நீங்கிவிடும்,

உங்கள் வியாதிகள் சுகமாகிவிடும், உங்கள் கவலைகள் போய்விடும் என்று சவாலிட்டுப் பேசும் ஊழியர்களின் வார்த்தைகளில் நிச்சயமாகவே கபடம் இருக்கிறது. சொல்லப்போனால், கிறிஸ்துவிடம் வரும் ஒருமனிதன் துவக்கத்தில் ஒரு போராட்டத்தையே சந்திக்கவேண்டியதாக இருக்கும்.

இயேசுவை இரட்சகராக அறிவிக்கும் பலர், அவர் நம்மை ஆளுகை செய்யும் ஆண்டவர் என்பதையும் இரட்சிக்கிறவர் என்பதையும், அவர் நம்மிடமிருந்து முழுமையான கீழ்ப்படிதலையும் எதிர்பார்க்கிறார் என்பதையும் அறிவிக்கத் தவறும் போது அங்கே கபடம் வெளிப்படுகிறது. செழிப்பின் உபதேசம் மட்டுமே சபைகளில் அறிவிக்கப்படுமானால் அங்கும் கபடம் வெளிப்படுகிறது. இன்றைய ஊழியங்களில் பிரபலப்படுத்தப்படும் பலவகையான பங்காளர் திட்டங்களில் கபடம் வெளிப்படுகிறது. குறிப்பிட்ட ஊழியத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தேன், மூன்று மாதங்களில் தேவன் ஒரு லட்சம் கிடைக்கப் பண்ணினார் என்பது போன்ற அறிவிப்புகளை இன்றைய எல்லாக் கிறிஸ்தவப் பத்திரிகைகளிலும் காணமுடியும். இது அந்த ஊழியக்காரர்களின் கபடத்தையே வெளிப்படுத்துகிறது. **நாம் யார் என்பதை உலகத்தார் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காக நாம் சுவிசேஷத்தை அறிவிப்பதில்லை. இயேசு யார் என்பதை உலகம் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காகவே சுவிசேஷத்தை அறிவிக்கிறோம்.**

சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணியபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். (2:4)

தங்களுடைய ஊழியத்தில் வஞ்சகம், துராசை, கபடம் இல்லை என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் அது

எவ்வாறு சாத்தியமாயிற்று என்பதை இங்கே வெளிப்படுத்து-கிறார். அத்தகைய மேன்மையான ஊழியத்தைச் செய்யும்-படியாக தேவனே அவர்களைத் தெரிந்துகொண்டார் என்கிறார். தேவனே தெசலோனிக்கேயாவில் அவருடைய சுவிசேஷத்தை பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூன்று ஊழியர்களிடம் ஒப்புவித்தார்.

தேவன் அந்தப் பட்டணத்தில் அவர்கள் நடப்பிக்க-வேண்டிய கிரியைகளைத் தெரிவித்திருந்தார். சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் அவர்களைத் தகுதியுள்ளவர்களாகக் கருதிய-படியால், அவர்கள் உத்தமர் என்று நம்பியபடியினால் அதை அவர்களுடைய பொறுப்பில் ஒப்புவித்தார். தீத்து *1:4*ல் பவுல் சொல்கிறார் "ஏற்றகாலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்".

*1*கொரிந்தியர் *4:1*ல் பவுல் சொல்கிறார், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்-கடவன்". "**உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்-பட்டிருக்கிறதே**" (*1*கொரி *9:17*). தனக்குச் சொந்தமில்லாத, தான் உண்மையானவன் என்று நம்பிக்கையின்பேரில் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பொருளை அந்நம்பிக்கைக்குப் பாத்திரமான வகையில் பொறுப்புடன் தன் சொந்தப்பொருளைப்போல பாதுகாத்துக்கொள்வதும், யாரிடம் எவ்வளவு கொடுக்கவேண்-டுமென்று உரிமையாளரால் ஆணையிடப்பட்டதோ அந்த ஆணையின்படியே ஏமாற்றுதலோ கபடமோ இல்லாமல் உண்மையாக நடந்துகொள்வதும் உக்கிராணக்காரனின் கடமை.

அவ்வாறான சமயங்களில் உண்டாகும் புகழுக்கு அவன் உடைமையானவன் இல்லை என்பதையும் அவன் அறிந்து அதற்குக் காரணமான உரிமையாளரைப் அறிக்கையிடுவதும் அவனுடைய கடமை ஆகிறது. தன்னுடைய பொருள் இல்லையே என்று காவல் காக்கும் பொறுப்பிலிருந்து நழுவ

அவனால் இயலாது. தன்னுடையது என்று கருதி அதன்மீது உரிமை கொண்டாடவும் முடியாது. அந்த வேலையைச் செய்வதால் உண்டாகும் புகழுக்கு தன்னால் உரிமை கொண்டாடமுடியாது. எவ்விதப் பலனும் இல்லாததால் வேலையைச் செய்யாமலோ அல்லது கபடமாகவோ செய்யவோ அவனுக்கு அனுமதி இல்லை.

இப்பேற்பட்ட "தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன்" என்ற வேலையை தனக்குக் கர்த்தரே கொடுத்ததாக பவுல் அறிவிப்பதோடு மட்டும் அல்லாமல், அந்த உக்கிராண உத்தியோகத்தை தான் எவ்வளவு செம்மையாய் நிறைவேற்றினார் என்பதை "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ!" (1கொரி 9:16) என்று தைரியமாய் அறிவிக்கிறார்.

கலாத்தியர் 1:11, 12ல் பவுல் சொல்கிறார், "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்". பவுல் திட்டமாக அறிவிக்கும் காரியம் இதுதான். எந்த மனிதனும் நற்செய்தியை எனக்கு கற்பிக்கவில்லை, உங்களிடம் அதைச் சொல்லவேண்டும் என்பதற்காகவே சுவிசேஷம் எனக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த மகத்துவமான ஊழியத்தைச் செய்ய தேவன் எங்களை உத்தமரென்று எண்ணினார் என்று ஒருவிதத் தயக்கமும் இன்றி பவுல் தைரியமாக அறிவிக்கிறார். தமஸ்கு பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டு வந்த பவுலைச் சந்தித்த இயேசு, அவர் ஞானஸ்நானம் பெற்று ஊழியத்தைத் துவங்குவதற்கு முன்பே தன்னுடைய சீஷனாகிய அனனியாவிடம் சொல்கிறார், "அவன் (பவுல்) புறஜாதிகளுக்கும்

ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" *(அப் 9:15)*.

அந்தியோகியா பட்டணத்தில் பவுல் ஊழியம் செய்து-கொண்டிருந்தபோது "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள்" *(அப் 13:2)* என்று ஆவியானவர் திருவுளம் பற்றினார் என்று பார்க்கிறோம். பர்னபாவையும் சவுலையும் உபயோகித்து அவர்களால் நடப்பிக்க விரும்பிய ஊழியத்தை அவர்கள் இருவரையும் வைத்துத்தான் தேவன் செய்வார்.

மனுஷருக்கு அல்ல, தேவனுக்குப் பிரியமுண்டாகப் பேசுகிறோம் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இந்தக் கடைசி நாட்களில் ஊழியர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் இந்த அறிக்கை வெளிப்படுமேயானால் எவ்வளவு மேன்மையாக இருக்கும். **மனிதரைப் பிரியப்படுத்துவதும், தேவனைப் பிரியப்படுத்துவதும் முற்றிலும் எதிர்மறையான காரியங்கள்** என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். மனிதர்களைப் பிரியப்படுத்தும் ஊழியங்கள் சீக்கிரத்தில் பிரபலமாகி-விடுவதால் நவீனகாலங்களில் அத்தகைய ஊழியங்களைச் செய்துவிட்டு பிறகு மனிதர்களை தேவனிடம் கொண்டுவந்து-விடலாம் என்று காரியங்களை நடப்பிப்பது ஆபத்தான காரியம். அதனால்தான் 2கொரிந்தியர் *4:5*ல் பவுல் சொல்கிறார், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்".

கலாத்தியர் *1:10*ல் சொல்கிறார், "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே". பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது, "என்னை ஏற்றுக்கொள்ளும்படி

செய்ய நான் மக்களிடம் முயற்சிசெய்கிறேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை. நான் தேவனுக்குவேண்டியவனாக இருக்க மட்டுமே முயற்சிசெய்கிறேன். **நான் மனிதர்களைத் திருப்திப்படுத்தவா முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்? அவ்வாறு நான் மனிதர்களை திருப்திப்படுத்திக்கொண்டிருந்தால் இயேசு கிறிஸ்துவின் ஊழியனாக நான் இருக்கமுடியாது**".

தேவனுடைய ஊழியக்காரர்கள் இந்தக் காரியத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்பதினால் தேவன் இருதயத்தை சோதித்து அறிகிறவர் என்று பவுல் நினைவுபடுத்துகிறார். தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கும்போதும், அது சம்பந்தமான ஊழியக் காரியங்களை நடப்பிக்கும்போதும் யாருக்காக, எதற்காக, எந்த நோக்கத்தோடு நாம் செய்கிறோம் என்பதை அவர் அறிவார். உலக எஜமான்களையும், மனிதர்களையும் நாம் ஏமாற்றிவிடலாம், உலகத்து மனிதர்களை மிக எளிதில் ஏமாற்றிவிடலாம், தேவனை ஒருபோதும் ஏமாற்ற முடியாது. அவருக்கு மறைவானது ஒன்றும் இல்லை. நம்முடைய வெளிப்படையான கிரியைகளைப் பார்த்து அவர் திருப்தி அடைகிறவர் அல்ல.

*1கொரிந்தியர் 4:4*ல் பவுல் சொல்கிறார், "**என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே**". அவர் இருதயங்களைக் சோதிக்கிறார் என்று சொல்லும்போது நம்முடைய வெளிப்படையான செயல்பாடுகளை அல்ல, நம்முடைய சிந்தனைகள், உள் உணர்ச்சிகள், இருதயத்தின் நினைவுகள், நம்முடைய செயல்பாடுகளின் உள்நோக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

"இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" *(1கொரி 4:5)*. பரிசுத்த பைபிள் சொல்கிறது, "அவர்

இருளில் மறைந்திருப்பவற்றின்மீது ஒளியை அனுப்புவார். மக்களின் மனதிலிருக்கும் இரகசியமான விஷயங்களை அவர் வெளிப்படுத்துவார். ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய கீர்த்தியை அவனவனுக்குக் கிடைக்கும்படிச் செய்வார்".

எரேமியா *17:10*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்". **ஒரு மனிதனுடைய இருதயத்தை அவரால் பார்க்கமுடியும்.** அவனிடம் என்ன இருக்கிறது என்பதை அவரால் கண்டுகொள்ளமுடியும். அவனுடைய செயல்பாடுகளின் நோக்கத்தை அவர் அறிவார். எனவே அதற்கேற்றபடி சரியான கூலியை அவரால் கொடுக்கமுடியும். எரேமியா *11:20*ல் தேவன் "உள்ளிந்திரியங்களையும், இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி" என்று அழைக்கப்படுகிறார். சங்கீதக்காரன் கூறும்பொழுது "நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்" *(7:9)* என்கிறார்.

தேவனுடைய செயல்பாடுகளின் மேன்மையை சங்கீதம் *139*ல் தாவீது விளக்கமாக அறிவிக்கிறார். வெகுதூரத்திலிருந்தே அவர் நமது நினைவுகளை அறிகிறார் *(வ 2)*. நாம் பேசப்போகிற வார்த்தைகள் நமது வாயிலிருந்து வெளிவருமுன்பே தேவன் அறிகிறார் *(வ 4)*. நாம் தப்பித்துக்கொள்ள பரலோகத்துக்கு ஏறிச்சென்றாலும் அவர் அங்கு இருக்கிறார். பாதாளத்தில் படுக்கை போட்டாலும் அங்கும் அவர் இருக்கிறார் *(வ 8)*. நம்முடைய சரீரத்தின் அவயவங்கள் வளரும் விதத்தை அவர் கவனித்து அதை அவருடைய புத்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார். அவருக்கு மறைவானவை ஒன்றும் இல்லை.

உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி. (2:5)

2வது வசனத்திலும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தோம். தெசலோனிக்கேயா பட்டணத்தில் பவுல் பகிரங்கமான முறையில், எல்லாரும் காணும் விதத்தில்தான் உடன் ஊழியர்களுடன் ஊழியத்தை நிறைவேற்றினார் என்பதினால் அந்த ஊழியத்தைக் குறித்து மூன்று காரியங்களை பட்டணத்தார் அறிந்திருந்தார்கள்.

1. *அவர்கள் இச்சகமான வசனங்களை (*flattering words*) பயன்படுத்தவில்லை - அவர்களிடம் முகஸ்துதி இல்லை*
2. *அவர்களிடம் பொருளாசை இல்லை (*coveteousness*)*
3. *அவர்கள் மாயம் பண்ணவில்லை (*put on a mask*) - அதாவது சபையாரிடமிருந்து மறைக்கத்தக்க சுயநலம் அவர்களிடம் இருந்ததில்லை.*

ஏற்கெனவே 3வது வசனத்தில் தங்களுடைய போதகத்தில் வஞ்சகம், துராசை, கபடம் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை அறிவித்த பவுல் 4வது வசனத்தில் மனுஷருக்கு அல்ல, தேவனுக்குப் பிரியமுண்டாக மட்டுமே பேசியதாக அறிவித்தார்.

இச்சகமான வசனங்களைச் சொல்லவில்லை என்று ***முதலாவதாக*** *பவுல் சொல்லும்போது அவர் மாய்மாலமான பகட்டான முறையில் சபையாரிடம் பேசி சபையாரின் கவனத்தைத் தங்களுக்கு நேராகத் திருப்பவில்லை என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம். முகஸ்துதி மூலமாக விசுவாசிகளைக் கவர்ந்துகொள்ளும் பாவம் இன்று சபைகளில் காணப்படுவதை நாம் மறுக்கமுடியாது. ஆனால் பவுலும் அவருடைய உடன் ஊழியரும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே சபையாருக்கு அறிவித்தார்கள்.*

அவர்களிடம் பொருளாசை இல்லை என்று ***இரண்டாவதாகச்*** *சொல்லப்படுகிறது. கொலோசெயர் 3:5ல் பொருளாசை விக்கிரகாராதனை பாவமாகக் குறிப்பிடப்பட்டு,*

"இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. லூக்கா *12:15*ல் கிறிஸ்து, "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்கிறார். **மற்ற பாவங்கள் நம்மில் உருவாகும் வேளையில் அவற்றை எளிதில் உணர்ந்து திருத்திக்கொள்ளலாம். ஆனால் பொருளாசை நம்மில் உருவாகி, வளர்ந்து பெருகினாலும் அதைக் குறித்த உணர்வு நம்மில் தோன்றுவதில்லை.**

பணஆசை நிறைந்த ஊழியக்காரர்கள் இன்று மட்டுமல்ல, ஆதி அப்போஸ்தல சபையின் நாட்களிலும் இருந்தபடியால் பேதுரு எச்சரிக்கிறார், "பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது" *(2பேதுரு 2:3)*. கொலை, விபசாரம், களவு, பொய்சாட்சி சொல்லுதல், இச்சை முதலிய பாவங்கள்தான் ஒருவனை நரகத்துக்குக் கொண்டுபோகிறது என்பதல்ல, பொருளாசையும் அதைச் செய்யக்கூடும்.

இந்த ஊழியக்காரர்கள் மாயம் பண்ணவில்லை என்பது **மூன்றாவது** சொல்லப்படுகிறது. "**உங்களிடம் மறைக்கத்தக்க சுயநலம் எதுவும் எங்களிடம் இருந்ததில்லை**" என்பது பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு. இந்தக் கடைசி நாட்களில் ஊழியம் செய்யும் பல ஊழியக்காரர்கள் மாயம் பண்ணும் நிர்ப்பந்தத்தில் சிக்கியிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் தங்களைக் குறித்த பல காரியங்களை அவர்கள் சபைக்கு அறிவிக்க விருப்பமில்லாதர்களாய் இருப்பதுதான். ஒரு வியாபாரி தன்னுடைய தொழிலை தேசமெங்கும் பெருகச் செய்துவிட்டு தன்னுடைய காலத்துக்குப் பின் அவனுடைய பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் விட்டுச்செல்வது போலக் கடைசிக்காலத்து ஊழியக்காரர்களும் விசுவாசிகளின் தேவபக்தியை ஆதாயத் தொழிலாக மாற்றி, தொழிலையும் அதன் பயனையும் தங்கள் வாரிசுகள் பெறக்கூடிய விதத்தில் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள் என்றால் மிகையில்லை.

"தேவனே சாட்சி" என்று பவுல் சொல்லும்போது தங்களிடம் இச்சை, பொருளாசை, மாயை இல்லை என்பதை தேவன் அறிவார் என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளவேண்டும். ரோமர் 9:2ல் பவுல் சொல்கிறார், "நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது". பிலிப்பியர் 1:8ல் சொல்கிறார், "இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி". "உங்களைப் பார்க்க நான் மிகவும் விரும்புகிறேன் என்றுதேவனுக்குத் தெரியும்" (பரிசுத்த பைபிள்).

நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர்களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை. (2:6)

அப்போஸ்தலனாகிய பவுல் பொதுவாக தன்னைக் குறித்து மேன்மை பாராட்டிப் பேசும் பழக்கமுடையவரல்ல. 2கொரிந்தியர் 12:5,6ல் சொல்கிறார், "என்னைக் குறித்து என் பலவீனங்களிலேயன்றி, வேறொன்றிலும் மேன்மை பாராட்டமாட்டேன். சத்தியமானதை நான் பேசுகிறேன்; நான் மேன்மைபாராட்ட மனதாயிருந்தாலும், நான் புத்தியீனனல்ல, ஆனாலும் ஒருவனும் என்னிடத்தில் காண்கிறதற்கும், என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அப்படிச் செய்யாதிருப்பேன்".

முந்தின வசனத்திலே தங்களிடம் பொருளாசை இல்லை என்பதை சபையாருக்கு அறிவித்த பவுல் இந்த வசனத்தில் மனிதர்களுடைய மகிமையையும் பாராட்டையும் புகழ்ச்சியையும் எதிர்பார்க்கவில்லை என்பதை அறிவிக்கிறார். 2கொரிந்தியர் 4:5ல் பவுல் சொல்கிறார், "நாங்கள் எங்களையே

பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்". அப்போஸ்தலர் நடபடிகள் *20:19*ல் சொல்கிறார், "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீ-ரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்".

"நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்" என்று சொல்லும்போது பவுல் தன்னுடன் இணைந்து ஊழியம் செய்த சில்வான், தீமோத்தேயு இருவரும் அப்போஸ்தல ஊழியத்துக்கென்று தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே என்பதை உறுதிப்படுத்துகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய ஊழியத்தின் துவக்கநாட்களில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டு, அந்த "பன்னிரெண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (மத் *10:1*) என்று பார்க்கி-றோம். யூதாஸ் கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்து தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை இழந்துபோனதினிமித்தம் சீஷர்கள் எருசலேமில் கூடிவந்து, ஜெபித்து, சீட்டுப் போட்டு மத்தியா என்பவரைத் தெரிந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலர் நட-படிகள் *1:26*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான்".

ஆனால் மத்தியா தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலன் அல்ல என்பதினால் இந்த நிகழ்ச்சிக்குப்பின் வேதத்தில் ஒருவசனம்கூட அவரைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ***12-வது அப்போஸ்தலனாக தேவன் தெரிந்துகொண்ட நபர் பவுல் என்பதை வலியுறுத்தும் விதத்தில் "அப்போஸ்தலனாகிய பவுல்" என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வதைப் பார்க்கிறோம்.*** "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்-தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனா-

யிருக்கிற பவுல்" (கலா 1:1) என்று சொல்லும்போது அவரது நியமனத்தில் பிதாவுக்கும் பங்கு உண்டு என்பது தெளிவாகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 14:14ல் பர்னபாவும், ரோமர் 16:7ல் அன்றோனீக்கை, யூனியா ஆகியோரும் அப்போஸ்தல ஊழியஞ் செய்துவந்தார்கள் என்று பார்க்கிறோம். ஆதிநாட்களில் சபைகளில் கள்ள அப்போஸ்தலர்களும் செயல்பட்டுவந்தார்கள் (வெளி 2:2). இன்றும் அவர்கள் உலகமெங்கும் காணப்படுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் என்ற முறையில் தெசலோனிக்கேய சபையாருக்கு பாரமாயிருக்கும் உரிமை தங்களுக்கு உண்டு என்பதை பவுல் அறிவிக்கிறார். எபிரெயர் 13:17ல் சொல்கிறார், "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்". 1கொரிந்தியர் 9:1ல் சொல்கிறார், "நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?" (வசனம் 4). 2கொரிந்தியர் 11:7ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்தேன்".

தெசலோனிக்கேயா சபைக்குத் தாங்கள் எந்தவிதத்திலும் பாரமாயிருக்கவில்லை என்பதை அறிவித்த பவுல், அதினிமித்தம் மனிதர்களிடமிருந்து வரக்கூடிய மகிமையையும் (glory, doxa) தேடவில்லை என்று அறிவிக்கிறார். **மனிதர்களிடமிருந்து மகிமையைத் தேடும் ஊழியங்கள் விரைவில் போலியானதாகிவிடும்.** *பவுலும் சக ஊழியர்களும் அந்தப் பட்டணத்தில் நடப்பித்த ஊழியத்தில் எந்தச் சுயநலமும் இல்லை. அந்த ஊழியத்தினிமித்தம் தங்களுக்கென்று எந்த நன்மையையும், மேன்மையையும் தேடவில்லை என்பதை பவுல் வலியுறுத்துகிறார். 2தெசலோனிக்கேயர் 3:8,9ல் சொல்கிறார், "ஒருவனிடத்-*

திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்". பவுல் சொல்லுகிற காரியம் இதுதான். நாங்கள் உங்களுக்கு முன்மாதிரியாக இருந்தோம். இதை நீங்கள் பின்பற்றவேண்டும். ஊழியக்காரர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள் அத்தனைபேரும் பின்பற்றவேண்டும்.

உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால்கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல (2:7)

தெசலோனிக்கேயாவில் பவுலும் சக ஊழியரும் இச்சகமான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், பொருளாசை இல்லாதவர்களாய், மாயம் பண்ணாமல், சபையாருக்குப் பாரமாயிராதபடி நடந்து, மனிதர்களிடமிருந்து வரும் மகிமையைத் தேடாமல் ஊழியம் செய்ததை முந்தின வசனங்களில் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் ஒரு தாய் தன்னுடைய பிள்ளைக்கு பால் கொடுத்து, போஷித்து, சகல ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றுகிறதுபோலப் பட்சமாய் நடந்துவந்ததாக சபையாருக்கு அறிவிக்கிறார். பிள்ளைக்கு பால்கொடுக்கிற ஒரு தாய் அதற்கு தன்னுடைய ஜீவனையே கொடுப்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

கொரிந்து பட்டணத்தில் தான் நடப்பித்த ஊழியத்தைக் குறித்துப் பவுல் சொல்கிறார், "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்" (2கொரி 1:24). "உங்கள் மகிழ்ச்சிக்காக உங்களோடு பணிபுரிபவர்களாக இருக்கிறோம்" (பரிசுத்த பைபிள்).

தன்னுடைய ஊழியக்காரர்களுக்குக் கிறிஸ்து கொடுத்த ஆலோசனை இதுதான், "உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" (லூக்கா 22:26). மத்தேயு 23:8-12 வாசித்துப் பாருங்கள்.

பேதுரு சொல்கிறார், "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1பேதுரு 5:3,4). 2தீமோத்தேயு 2:24ல் பவுல் சொல்கிறார், "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை-பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ள-வனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்".

கலாத்தியர் 4:19ல் "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" என்று அறிவித்த பவுல், பால் கொடுக்கிற தாயைப்போல தான் தெசலோனிக்கேயா சபையா-ரிடம் நடந்துகொண்டதாக அறிவிக்கிறார். பால் கொடுக்கிற தாய் ஒருபோதும் தன் பிள்ளையைப் பராமரிக்கும் பொறுப்பை வேறு யாரிடமும் நம்பி ஒப்புவிக்கமாட்டாள் அல்லவா! அது மட்டுமல்ல, பால் கொடுக்கிற ஒரு தாய் ஒருபோதும் தன்னுடைய அதிகாரத்தை தன்னுடைய பிள்ளையினிடத்தில் காட்டவிரும்பமாட்டாள், தன்னுடைய பிள்ளைக்காக தன் ஜீவனைக் கொடுக்கவும் ஆயத்தமாயிருப்பாள்.

நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்தது-மல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களான-படியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம். (2:8)

தெசலோனிக்கேயா சபையாரிடம் பவுல் கொண்டிருந்த அளவுகடந்த அன்பு இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. Being affectionately desirous of you என்று ஆங்கிலத்தில் வாசிக்கிறோம். பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது, "உங்களை நாங்கள் பெரிதும் நேசித்தோம். எனவே, **தேவனுடைய நற்செய்தியை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் எங்கள் வாழ்க்கையையும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைந்தோம்**".

சபையார்மீது இந்த ஊழியக்காரர்கள் கொண்டிருந்த அன்பு எவ்வளவு மகத்துவமானது என்றால் தேவனுடைய சுவிசேஷத்தை அவர்களுக்கு கொடுத்ததோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக அவர்கள் நினைக்கவில்லை. கிறிஸ்துவினுடைய அன்பு அவர்களை நெருக்கி ஏவியபடியால் (2கொரி *5:14*), 2கொரிந்தியர் *12:15*ல் பவுல் சொல்கிறார், "நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்".

சபையார்மீது பவுலும் சகஊழியர்களும் எந்த அளவுக்குப் பிரியமுள்ளவர்களாய் இருந்தார்கள் என்றால் "உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், (இரத்தத்தையும் தர ஆயத்தமாயிருத்தல்) நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன் (பிலிப் *2:17*). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோவான் *10:11*) என்று சொல்லியிருக்கிறார் அல்லவா? சொல்லியதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. கல்வாரி சிலுவையில் தன்னுடைய ஜீவனையே கொடுத்தார்.

சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும், உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள்

வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். (2:9)

சபையார்மேல் இந்த மூன்று ஊழியக்காரர்களும் எந்த அளவுக்குப் பிரியமுள்ளவர்களாக இருந்தார்கள் என்றால் தங்களுடைய ஜீவனையும் அவர்களுக்காகக் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள் என்று முந்தின வசனத்தில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அவர்களுக்காகக் கடுமையாய் உழைத்து தங்களுடைய வாழ்க்கையையே சபையாரோடு பகிர்ந்துகொள்ள ஆயத்தமாயிருந்தார்கள். அதன்விளைவாக இரவு பகல் என்று பார்க்காமல் எல்லா வேளைகளிலும் தியாக உணர்வோடு ஊழியப்பணியைச் செய்துவந்தார்கள். மேலும், தங்கள் தேவைகளுக்காக தாங்களே உழைத்து சரிக்கட்டியதோடு மட்டுமல்லாமல் எவ்விதப் பொருளாதார பாரத்தையும் சபையார்மேல் சுமத்த அவர்கள் விரும்பவில்லை.

2தெசலோனிக்கேயர் *3:8,9*லும் பவுல் சொல்கிறார், "ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்". ரோமர், கொரிந்தியர், எபேசியர், எபிரெயர் நிருபங்களில் உள்ளவற்றைப் போல, **தெசலோனிக்கேயர் நிருபங்களில் சத்திய உபதேசங்களுக்கடுத்த காரியங்களில் பவுல் அதிகமாகக் கவனம் செலுத்தாமல் ஊழியக்காரர்கள் எவ்விதமாக ஊழியம் செய்யவேண்டும் என்ற ஆலோசனைகளைக் கொடுக்கிறார்.**

தங்களுடைய பிரயாசம் எந்தவிதத்திலும் வீணாகப் போய்விடக்கூடாது என்று பவுல் விரும்புகிறபடியால் கலாத்தியர் *4:11*ல் சொல்கிறார், "நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்-

கிறேன்". **ஊழியக்காரர்களாகிய நாம் தேவனுக்காகப் பிரயாசப்பட்டால் மட்டும் போதாது, அதினிமித்தம் சபையார் நன்மை அடைகிறார்களா என்பதையும் கவனிக்கவேண்டும்.** "இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடும்" *(தீத்து 1:11)* ஊழியக்காரர்களும் இந்தக் கடைசி நாட்களில் உருவாகிவருகிறார்கள். பவுலோ "பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" *(2கொரி 11:27)* என்கிறார்.

பவுலும் சகஊழியரும் தெசலோனிக்கேயாவில் தங்கியிருந்த நாட்களில் தங்களுடைய தேவைகளைச் சந்திக்கும்படியாக யாரையும் நம்பியிராமல், இரவும் பகலும் வேலை செய்துவந்ததை பவுல் இந்த இடத்தில் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டுவருகிறார். தாங்கள் செய்த ஊழியத்தினிமித்தம் அவர்கள் சபையாரிடமிருந்து உதவிபெற்றுக்கொள்ளும் உரிமையும் அதிகாரமும் நிச்சயமாகவே அவர்களுக்கு உண்டு.

*1*கொரிந்தியர் *9:11-14*ல் பவுல் சொல்கிறார், "நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும் படுகிறோம். ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்".

15வது வசனத்தில் சொல்கிறார், "அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை".

அப்போஸ்தலர் நடபடிகள் 20:33,34ல் பவுல் சொல்கிறார், "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது".

யூதர்களின் கலாச்சாரத்தின்படி அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் தங்கள் பிள்ளைகளை ஏதேனும் தொழிலில் பயிற்சிபெறவேண்டும் என்று விருப்பமுடையவர்களாய் அதைக் கற்றுக்கொள்ளச் செய்வார்களாம். பவுல் கூடாரம் பண்ணும் தொழிலில் தேர்ச்சிபெற்றவர் என்பதால் சக ஊழியர்களுடன் கொரிந்து பட்டணத்தில் இருந்தபோது செய்த காரியம் அப்போஸ்தலர் நடபடிகள் 18:3ல் சொல்லப்பட்டிருக்கிறது, "அவர்கள் கூடாரம்பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள்; தானும் அந்தத் தொழில் செய்கிறவனானபடியினாலே அவர்களிடத்தில் தங்கி, வேலைசெய்துகொண்டு வந்தான்".

எபேசு சபைக்கு பவுல் சொல்கிறார், "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" (எபே 4:28). 1கொரிந்தியர் 6:12, 10:23ல் சொல்கிறார், "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன்".

தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்தபோது பவுல் அந்தச் சபையாருக்கு எந்தவிதத்திலும் பாரமாயிருக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்தாலும் அங்கு அவர்கள்

தங்கியிருந்த நாட்களில் பிலிப்பி பட்டணத்துச் சபையார் அவருக்கு பொருள் உதவி செய்துவந்தார்கள் என்பதை பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் *(4:16)* வெளிப்படையாக அங்கிகரிக்கிறார். "தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ? உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன். நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்" *(2கொரி 11:7-9)* என்று சொல்லுவதையும் கவனியுங்கள்.

விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி. (2:10)

முந்தின வசனத்தில் பவுல் அறிவித்தபடி தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த நாட்களில் பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் எவருக்கும் பாரமாயிராதபடிக்கு அவர்கள் வேலைசெய்துகொண்டே சுவிசேஷத்தை அறிவித்தார்கள் என்பதை மீண்டுமாக பவுல் இந்த வசனத்தில் உறுதிப்படுத்துகிறார். அவர்கள் நடப்பித்த ஊழியத்தைக் குறித்த மூன்று காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

1. அதில் பரிசுத்தம் காணப்பட்டது
   (தூய்மை - holy, hosias)

2. அது நீதி நிறைந்ததாக இருந்தது
   (righteous, dikaios)

3. அதில் குற்றங்கள் காணப்படவில்லை
   (blameless, amemptos)

பரிசுத்தம் என்ற வார்த்தை தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை நடத்துவதைக் குறிப்பிடுகிறது. லேவியராகமம் 20:7,8ல் தேவன் சொல்கிறார், "நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்". எபிரெயர் 12:14 சொல்கிறது, "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே". அவர் "பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர்" (யாத் 15:11).

தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முந்தின நாள் தன் பிதாவிடம் கிறிஸ்து ஜெபிக்கிறார், "நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவா 17:18, 19). **அவரில் காணப்படும் பரிசுத்தம் அவருடைய ஊழியத்தைச் செய்யும் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய வாஞ்சை.** *ஏனென்றால் பரிசுத்தம் தேவனுடைய பிரதானமான குணாதிசயங்களுள் ஒன்று.*

இரண்டாவதாக ஊழியக்காரர்களிடம் காணப்படவேண்டிய நீதியைக் குறித்துப் பவுல் பேசுகிறார். "கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது" (சங் 11:7). "தேவன் நீதியுள்ள நியாயாதிபதி" (சங் 7:11). "மகா நீதிபரர்" (யோபு 34:17). யோபு 37:23, சங்கீதம் 11:7, 119:137, ஏசாயா 26:7, ரோமர் 3:25 வாசித்துப்பாருங்கள். "அவருடைய நீதி என்றென்றைக்கும் நிலைநிற்கும் (சங் 111:3). "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரே 23:6, 33:16) என்பது அவருடைய நாமம். எனவே அவருக்கு ஊழியம் செய்கிறவர்கள் அவரைப்போல் நீதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். 2கொரிந்தியர் 5:21 சொல்கிறது, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்". அதன்விளைவாக தேவனுடைய நீதி நமக்குச் சொந்தமாகிறது.

பிழையின்மை என்ற வார்த்தை இந்த மூன்று ஊழியர்களைக் குறித்தும் எவ்வித எதிர்மறையான காரியங்களோ குற்றச்சாட்டுகளோ சொல்லப்படமுடியாது என்பதைக் காட்டுகிறது. அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவிதமான பரிசுத்தக் குலைச்சலும் இல்லை. தங்களின் அனுதின வாழ்க்கையில் "அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்" (தீத்து 2:12). உலகம் விரும்புகிற எந்த தீய காரியங்களும் அவர்களிடம் இல்லை.

இந்த ஊழியக்காரர்களின் நடத்தை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை நிருபிக்கும்படியாக இரண்டு சாட்சிகளை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். ஒரு காரியத்தைக் குறித்துத் தீர்மானம் பண்ண குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகள் வேண்டும் என்று வேதம் அறிவிக்கிறது. "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்" என்று மத்தேயு 18:16ல் வாசிக்கிறோம். பவுல் சொல்கிறார், "சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்" (2கொரி 13:1).

தங்களுடைய ஊழியம் பரிசுத்தமாயும், நீதியுள்ளதாயும், பிழையில்லாமலும் இருந்தது என்பதற்கு தெசலோனிக்கேய விசுவாசிகளே முதல் சாட்சி என்று பவுல் அறிவிக்கிறார். சபையைச் சேராத, சபையோடு தங்களை இணைத்துக்கொள்ளாத மனிதர்கள் அவர்கள் யாராயிருந்தாலும் தங்கள் நடத்தையைக் குறித்துச் சாட்சிசொல்லத் தகுதியற்றவர்கள் என்பதாக பவுல் பேசுகிறார்.

தங்களுடைய ஊழியம் நேர்மையானதாக இருந்தது என்பதற்கு இரண்டாவது சாட்சி தேவன் என்கிறார் பவுல். 1தெசலோனிக்கேயர் 2:5லும் தங்கள் ஊழியத்தில் பொருளாசை, மாயம் இருந்ததில்லை என்பதை அறிவித்துவிட்டு "தேவனே சாட்சி" என்று வசனத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததைப்

பார்த்தோம். **தேவனுக்கு மறைந்து எந்த ஒரு காரியத்தையும் ஒருவனாலும் செய்யமுடியாது.** அவர் சகலவற்றையும் அறிந்தவர். அவருக்கு ஊழியம் செய்கிறவர்கள் எந்த நோக்கத்தோடு அதைச் செய்கிறார்கள் என்பதை அவர் அறிவார்.

மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று (2:11)

தேவனாகிய கர்த்தர் தெசலோனிக்கேயரை தமது ராஜ்யத்திற்கும் (அதின்) மகிமைக்கும் அழைத்திருக்கிறார் என்று வசனத்தின் துவக்கத்தில் அறிவிக்கும் பவுல், அதினிமித்தம் அவர்கள் அந்த மேன்மையான அழைப்புக்குப் பாத்திரராக நடக்கும்படியான ஆலோசனையை இந்த வசனத்தில் கொடுப்பதைப் பார்க்கிறோம். **அழைப்பு என்பது தேவனுடைய தீர்மானத்தையே ஆதாரமாகக் கொண்டது.** ரோமர் *8:28*ல் பவுல் சொல்கிறபடி, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்".

அவருடைய தீர்மானத்தில் மனிதனுக்கு எந்தப் பங்கும் இல்லை என்பது மட்டுமல்ல, தேவன் நித்தியவாசியாக இருப்பதினால் அந்தத் தீர்மானம் நித்தியத்தில் துவங்கி நித்தியம் வரை நிலைத்திருப்பது. அவருடைய அழைப்பு நம்முடைய வாழ்க்கையில் ஒரு குறித்த காலத்தில் துவங்கி நம்மை அவருடைய பரிசுத்தத்துக்கு நேராக வழிநடத்துகிறது. "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" *(1தெச 4:7)*. அவருடைய அழைப்பின் நோக்கம் என்ன என்பதை 2தெசலோனிக்கேயர் *2:14*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்".

கிறிஸ்தவர்களாகிய நாம் ஏற்கெனவே அழைக்கப்பட்டு-விட்டோம். அது ஒரு நடந்துமுடிந்த கடந்தகால நிகழ்ச்சி என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அந்த அழைப்பின் விளைவாக நம்முடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாகத்தான் நடக்கும் என்பதை விசுவாசிக்கவேண்டும். நன்மையாக நடக்கும் என்று பவுல் அறிவிக்கவில்லை. அது தீமையைப்போலத் தோன்றினாலும் முடிவில் நன்மையாகவே காணப்படும், ஆசீர்வாதத்துக்கு நேராகவே நம்மை வழிநடத்தும்.

தேவனுடைய ராஜ்யத்துக்கும் மகிமைக்கும் நேராக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று இந்த வசனம் அறிவிக்கிறது. அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைக்கிறார் (1பேதுரு 2;9). கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ள அழைக்கிறார் (1கொரி 1:9). இயேசு கிறிஸ்து மூலமாய் சகல ஜாதிகளிலிருந்தும் அழைக்கிறார் (ரோமர் 1:6). சமாதான-மாயிருக்கும்படிக்கு அழைக்கிறார் (1கொரி 7:15). ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அழைக்கிறார் (1பேதுரு 3:9). நித்திய ஜீவனைப் பெறும்படியாக அழைக்கிறார் (1தீமோ 6:12).

இந்த அழைப்பைப் பெற்றும் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதவர்களின் பட்டியல் கலாத்தியர் 5:19-21ல் சொல்லப்பட்டிருக்கின்றன. "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை".

உங்களை அழைத்த தேவனுக்கு பாத்திரராய் நடக்கவேண்டும் என்ற எச்சரிக்கை வசனத்தின் முடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. "நடத்தை" என்ற வார்த்தையை

எப்பொழுதுமே நம்முடைய அன்றாட பொதுவான வாழ்க்கை-முறையைக் குறிப்பிடுவதாகப் பவுல் பயன்படுத்துவார் *(4:1)*. கொலோசெயர் *1:10*ல் பவுல் சொல்கிறார், "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்". "நீங்கள் அழைக்கப்-பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்துகொள்-ளுங்கள்" *(எபே 4:1)*, "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" *(பிலிப் 1:27)*.

தேவனுடைய அழைப்புக்குப் பாத்திரராய் நடந்துகொள்ள வேண்டுமானால் நம்மை "அழைக்கிறவர் உண்மையுள்ளவர்" *(1தெச 5:24)* என்ற நிச்சயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். "தம்முடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" *(1கொரி 1:9)*. "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" *(1தீமோ 6:12)* என்கிறார் பவுல். **நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கும் வரை அவருடைய அழைப்புக்குப் பாத்திரராக நடந்து கொண்டே இருக்கவேண்டும்.** அதுவே நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும் அனுபவம்.

தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது-போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். (2:12)

பால்கொடுக்கிற தாய் தன் பிள்ளைகளைக் காப்பாற்று-கிறதுபோல் சபையாரிடம் செயல்பட்ட விதத்தை 7வது வசனத்தில் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் ஒரு தகப்பனுடைய ஸ்தானத்தில் இருந்து மூன்று காரியங்களை நடப்பித்ததாகச் சொல்கிறார்.

*1. புத்தி சொல்லுதல் (*admonish; parakaleo*)*

*2. தேற்றுதல் (*encourage; paramutheomai*)*

*3. எச்சரித்தல் (*testify, charge, implore; marturomai*)*

"உங்களில் ஒவ்வொருவனுக்கும்" என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். அலங்காரமான ஆடம்பரமான வழிபாட்டு முறைகளை அப்போதும் நடைமுறையில் கொண்டிருந்த யூதப் பரம்பரையில் வந்திருந்தாலும் இந்த மூன்று ஊழியக்காரர்களும் இன்றைய ஊழியங்களில் காணப்படுவதுபோன்ற அலங்கார மேடைகளில் ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான திரள்கூட்டமான ஜனங்களுக்குப் பிரசங்கிப்பதுபோல் செயல்படவில்லை. அவர்களிடம் போதுமான பொருளாதார வசதி இல்லாததாலா? திரள் கூட்ட ஜனங்கள் இல்லாததாலா? இரண்டுமே இல்லை. ஆடுகள் தங்களுடைய மந்தையைவிட்டு வழிவிலகாதபடிக்கு மேய்த்தும், இயேசுவண்டை நடத்தியும், ஓநாய்கள் அவற்றைப் பீறிப்போடாதபடி காத்துகொள்ளும் கண்காணிகளின் பொறுப்பை உண்மையாய்ச் செய்ததினாலேயேதான். "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்" (1கொரி 4:3).

தனிப்பட்ட விதத்தில் சபையாரை அவர்களுடைய வீடுகளில் இந்த ஊழியர்கள் சந்தித்து அவர்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்கள். அப்போஸ்தலர் நடபடிகள் 20:20,21 ல் பவுல் இத்தகைய ஊழியத்தைக் குறித்துப் பேசுகிறார், "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்".

ஒரு நல்ல தகப்பனைப்போல தெசலோனிக்கேயருக்குப் புத்திசொல்லி, தேற்றி, அதே சமயத்தில் அவர்களில் குற்றங்குறைகள் காணப்படும்போது அவர்களைக் கண்டித்து, அவர்கள் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் தாங்கள் நிலைநிறுத்தியதை பவுல் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். இந்த நிருபத்தில் பவுல் தேவனை அறிந்திராதவர்கள் மத்தியில் சுவிசேஷ மிஷனரி ஊழியம் எப்படிச் செய்வது என்ற ஆலோசனையை கூடுதலாக வழங்குகிறார்.

ஊழியத்தின் மேன்மை (2:13-16)

ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது. (2:13)

தேவவசனம் (Word of God) என்ற வார்த்தை இந்த வசனத்தில் மூன்றுமுறை சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். தெசலோனிக்கேயா பட்டணத்துக்கு ஊழியம் செய்யும்படியாகத் தேவனால் அனுப்பப்பட்ட தேவ ஊழியர்கள் செய்த ஒரே ஒரு காரியம் இதுதான், அவர்கள் தேவனுடைய வசனத்தை (தேவன் பேசிய வார்த்தைகளை) அவர்களுக்கு அறிவித்தார்கள். அதைக் கேட்ட அவர்கள், அதை மனிதர்களுடைய வார்த்தையாகக் கருதாமல், பரிசுத்த ஆவியானவர் தங்களோடு பேசிய வார்த்தையாக அங்கிகரித்தார்கள்.

“தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” (யோவான் 4:4) என்று

கிறிஸ்து அறிவித்திருக்கிறார். பேதுரு சொல்கிறபடி, "வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" *(2பேதுரு 1:20-21).*

தேவனுடைய வார்த்தையாகிய சுவிசேஷம் தெசலோனிக்கேயரிடம் இந்த மூன்று ஊழியர்கள் மூலமாக வந்துசேர்ந்தது. "வெகுபோராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்" *(1தெச 2:2).* "தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்கமனதாயிருந்தோம்" *(1தெச 2:8).* அதினிமித்தம் "தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்" *(2:9)* என்கிறார் பவுல்.

தெசலோனிக்கேயருடைய மேன்மை இதில்தான் அடங்கியிருக்கிறது, "மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை" *(1தெச 1:6)* அவர்கள் ஏற்றுக்கொண்டு கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களானார்கள். 1கொரிந்தியர் 15:1,2ல் பவுல் சொல்கிறார், "நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய் நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே". விசுவாசம் நம்மைக் கீழ்ப்படிதலுக்குள் வழிநடத்தவேண்டும்.

தெசலோனிக்கேயர் பெற்றுக்கொண்ட உன்னதமான இரட்சிப்பு சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டதில்தான்

அடங்கியிருக்கிறது. பவுலும் சக ஊழியர்களும் அவர்களோடு பேசியதை மனிதர்கள் பேசிய வார்த்தையாக அல்ல, தேவனே பேசிய வார்த்தையாக அவர்கள் அங்கிகரித்து ஏற்றுக்கொண்டார்கள். **மனிதர்கள் பேசும் வார்த்தையின் மூலமாக ஒருவரும் ஒருபோதும் இரட்சிக்கப்படுவதில்லை.** தேவனுடைய வார்த்தையே நம்முடைய நித்தியத்தை நிர்ணயிக்கிறதாயிருக்கிறது. பரிசுத்தமான தேவனுடைய வார்த்தை அதை ஏற்றுக்கொள்கிறவர்களை உயிர்ப்பிக்கிறதாயிருக்கிறது. அவர்களுக்கு நித்திய ஜீவனை வழங்குகிறதாயிருக்கிறது.

பவுல் மூலமாக அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தைத் தவிர வேறு சுவிசேஷம் யாருக்கும் வழங்கப்படுவதில்லை என்பதால் பவுல் சொல்கிறார், "நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா 1:9). இந்த அற்புதமான சுவிசேஷத்தை பவுல் எவ்வாறு பெற்றுக்கொண்டார்? 12-வது வசனத்தில் பவுல் கூறுகிறார், "நான் அதை ஒரு மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்". தேவன் தன்னுடைய வார்த்தையை வெளிப்படுத்தாத நிலையில் இரட்சிப்பு உண்டாவதில்லை.

தெசலோனிக்கேயர், பவுல் மற்றும் உடன் ஊழியர்கள் மூலமாக வெளிப்பட்ட தேவ வசனத்தை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவர்கள் இடைவிடாமல் (continuously, adialeiptis) ஸ்தோத்திரம் செலுத்துவதாக, நன்றி சொல்லுவதாகப் பவுல் அறிவிக்கிறார். ஏனென்றால் அவர்கள் நடப்பித்த இந்த ஊழியத்தினிமித்தம் வசனத்தை அறிவித்த அவர்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

இடைவிடாமல் என்ற வார்த்தையை ரோமர் 1:9, 1தெசலோனிக்கேயர் 2:13, 5:17, ஆகிய இடங்களிலும் பவுல் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். ரோமர் 1:9ல் பவுல் சொல்கிறார், "நான் ஜெபம் பண்ணும்போதெல்லாம் இடை-

விடாமல் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறதைக் குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார்".

அவர்கள் அறிவித்தது மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதைப் பவுல் மீண்டுமாக உறுதிப்படுத்துகிறார். **தேவனுடைய வார்த்தையை அறிவிப்பது மட்டுமே தேவனுடைய ஊழியக்காரர்கள் செய்யவேண்டிய வேலை.** அதைச் செய்யும்போது சத்துரு நிச்சயமாகவே அவர்களை எதிர்த்து நிற்பான். பல தீங்குகளை அவர்கள் சந்திக்கவேண்டியதிருக்கும். அதனால்தான் பவுல் தீமோத்தேயுவிடம் இவ்விதமாகச் சொல்கிறார், "நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி" *(2தீமோ 1:8)*. தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதினிமித்தம் தீங்கு உண்டாகலாம், அதற்குப் பயந்து ஓடுகிறவர்கள் ஊழியக்காரர்களாயிருக்கமுடியாது.

எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் ஜனங்களாலே பாடுபட்டீர்கள். (2:14)

யூதேயா தேசம் என்று சொல்லும்போது பவுல் இந்த இடத்தில் இஸ்ரவேல் தேசத்தை மனதில் வைத்துப் பேசுகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் இஸ்ரவேல் தேசத்தில் மட்டுமே ஊழியம் செய்தார் என்பதை அறிவோம். தன்னுடைய பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும் அவர் ஊழியத்துக்கு அனுப்புகையில் அவர்களிடம் திட்டவட்டமாக இவ்வாறு கட்டளையிடுகிறார், "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" *(மத் 10:5,6)*.

தீரு, சீதோன் பட்டணங்களின் எல்லைகளில் ஊழியம் செய்யும்-போது ஒரு கிரேக்க ஸ்திரீ தன் மகளின் பெலவீனத்தினிமித்தம் அவரிடம் வந்தபோது "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" (மாற்கு 7:27) என்று கடினமாகப் பேசினார்.

தேவனுடைய வார்த்தை யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் வார்த்தையாகிய கிறிஸ்து (யோவான் 1:1,2) இஸ்ரவேலில் வெளிப்பட்டபோது அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறினார்கள். அவருடைய போதனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அவருக்கு விரோதமாகச் செயல்பட்டார்கள், அதுமட்டுமல்ல, கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு அவர்களே காரணமாக இருந்தார்கள்.

பெந்தெகொஸ்தே நாளில் உருவான சபை மிகுந்த உபத்திரவத்தை யூதர்கள் மூலமாய் சந்தித்தது. ஏரோது ராஜா "யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தி-னாலே கொலைசெய்தான்" (அப் 12:2). ஸ்தேவானை அவர் செய்த ஊழியத்தினிமித்தம் ஆலோசனைச் சங்கத்தில் குற்றப்படுத்திக் கல்லெறிந்து கொன்றார்கள் (அப் 7:59). பேதுரு சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார்.

ஸ்தேவானின் மரணத்துக்குக் காரணமாயிருந்த பவுல் (அப் 8:1), "வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான்" என்று அப்போஸ்தலர் நடபடிகள் 8:3ல் வாசிக்கிறோம். தான் சபைக்கு எதிராகச் செய்த காரியங்களை கலாத்தியர் 1:13,14ல் வெளிப்படையாக அறிவிக்கிறார். "தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி, என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறின-வனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்".

யூத இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் யூதராலே நாங்கள் பாடுபட்டோம் என்பதை அறிவித்த பவுல் புறஜாதியாராயிருந்த தெசலோனிக்கேய சபையாரும் கிறிஸ்துவினிமித்தம் பாடுகளை அனுமதிக்கவேண்டியதாயிருந்தது என்கிறார். "**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு**" *(யோவான் 16:33)* என்ற திட்டவட்டமான அறிவிப்பு கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பட்டிருக்கிறது. யோவான் *15:20*ல் கிறிஸ்து சீஷர்களிடம் சொல்கிறார், "என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்". "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" *(2தீமோ 3:12)* என்கிறார் பவுல்.

தெசலோனிக்கேய சபையார் தாங்கள் சந்திக்கும் பாடுகள், உபத்திரவங்களினிமித்தம் சோர்வடைந்து பின்மாற்றமடையக்கூடாது என்று பவுல் இந்த அறிவுரையைக் கொடுக்கிறார். "உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்" என்ற அறிவிப்பு ஏதேன் தோட்டத்திலே சர்ப்பத்திடம் கொடுக்கப்பட்டாயிற்று. தேவனே இந்தப் பகையை உண்டாக்குகிறார். இந்தப் பகையினால் சபை நிச்சயமாகவே பாடுகளைச் சந்திக்கவேண்டியதிருக்கும் என்பதுதான் உண்மை.

அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலைசெய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து (2:15)

யூதேயா தேசத்தில் ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் யூதர்களினால் மிகுந்த உபத்திரவத்தைச் சந்திக்கவேண்டியி-

ருந்தது என்று முந்தின வசனத்தில் பொதுவாக பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். தன்னுடைய நிருபங்களில் பல இடங்களில் யூதர்களின் செயல்பாட்டைக் குற்றப்படுத்திப் பேசுகிறார் என்றாலும், இந்த வசனத்தில் அவர்கள் முந்தின நாட்களில் கர்த்தராகிய இயேசுவையும், தேவனால் அவர்க-ளுக்கு சத்தியத்தை அறிவிக்கும்படியாக தேவன் அனுப்பிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தார்கள் என்பதை திட்டவட்டமான முறையில் அறிவிக்கிறார். கர்த்தராகிய இயேசு என்ற வார்த்தையை 1தெசலோனிக்கேயர் 1:1லும் பவுல் பயன்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவே கர்த்தர் என்பதில் பவுலுக்கு சந்தேகமே இருந்ததில்லை.

பெந்தெகொஸ்தே நாளில் தன்னுடைய முதல் பிரசங்கத்-திலேயே பேதுரு சொல்கிறார், "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படி-யேயும், ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" (அப் 2:23).

36-வது வசனத்தில் சொல்கிறார், "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்". **கிறிஸ்துவை சிலுயில் அறைந்தது புறஜாதி மனிதனாகிய பிலாத்து அல்ல, ரோமப் போர்வீரர்கள் அல்ல, யூத இனத்தைச் சேர்ந்தவர்களே என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்படுகிறது**. பிலாத்துவிடம் அவர்கள் சொல்கிறார்கள், "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத் 27:25).

புதிய ஏற்பாட்டின் முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தினரால் நியாயம் விசாரிக்கப்படும்போது அவர்கள் நடப்பித்த பாதகம் என்ன என்பதை திட்டவட்டமாக இவ்வாறு அறிவிக்கிறார், "தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்-

தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள்" (அப் 7:52).

தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக யூதர்கள் செயல்பட்ட விதத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களிலும் பலமுறை வெளிப்படையாக அறிவிக்கிறார். மத்தேயு 23:29-31ல் அவர் சொல்கிறார், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து: எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப் பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள். ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக்குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்".

34வது வசனத்தில் இயேசு சொல்கிறார், "இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்". 37வது வசனத்தில் சொல்கிறார், "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று".

தன்னுடைய சிலுவை மரணத்துக்குப் பின்பும் தன்னிமித்தம் யூத இனத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து அவருடைய ஊழியர்கள் பாடுகளை சந்திக்கவேண்டியதிருக்கும் என்று கிறிஸ்து தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாளில் இவ்விதமாக அறிவிக்கிறார், "அவர்கள் உங்களை ஜெப

ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்" *(யோவான் 16:2).*

இவ்வாறு கிறிஸ்துவையும், அவருடைய தீர்க்கதரிசிகளையும் கொலைசெய்த இந்த யூதர்கள் இப்பொழுது பவுலையும் அவருடைய சக ஊழியரையும் துன்பப்படுத்துகிறார்கள் என்றால் அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. அவர்களைக் குறித்த இரண்டு காரியங்களைப் பவுல் அறிவிக்கிறார்.

1. அவர்கள் தேவனுக்கேற்காதவர்கள்
(தேவன் அவர்களுடன் மகிழ்ச்சியாயில்லை)

2. அவர்கள் மனுஷர் யாவருக்கும் விரோதிகள்
(மக்கள் அனைவருக்கும் எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள்)

அவர்கள் தேவனுக்கேற்காதவர்கள் என்று சொல்லும்போது அவர்கள் "தேவனுக்குப் பிரியமாயிருக்க" (1தெச 4:1)வில்லை என்பது தெளிவாகிறது. "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்" (ரோமர் 8:8) என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்களின் பெலவீனம் என்ன என்பது ரோமர் 10:2ல் சொல்லப்பட்டிருக்கிறது. "தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சிசொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல".

யூதர்களை நேரிடையாகக் குற்றப்படுத்தி கிறிஸ்து பேசும் காரியங்கள் மத்தேயு 23:13-38ல் சொல்லப்பட்டிருக்கின்றன. அதேவிதத்தில் ரோமர் 2:17-23ல் பவுலும் பேசுகிறார், "நீ யூதனென்று பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்து, தேவனைக் குறித்து மேன்மை பாராட்டி, நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தீமை இன்னதென்று

வகையறுக்கிறாயே. நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும், பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், நியாயப்பிரமாணத்தின் அறிவையும் சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே, இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா? விபசாரம்செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா?"

இவ்வாறு தங்களுடைய ஊழியத்தைத் தடைசெய்யும் மனிதர்கள் உண்மையில் தங்களுடைய விரோதிகள் மட்டும் அல்ல, மனிதர் யாவருக்கும் விரோதிகளாயிருக்கிறார்கள் என்கிறார் பவுல். புறஜாதியார் உண்மையான சத்தியத்தை ஏற்றுக்கொள்வதை அவர்களால் அங்கிகரித்துக்கொள்ள முடியவில்லை. நியாயப்பிரமாணம் யூத இனத்தைச் சேர்ந்த தங்களுக்கு மட்டுமே சீனாய் மலையில் மோசே மூலமாக தேவனால் வழங்கப்பட்டது என்ற நம்பிக்கை உடைய அவர்களால் சுவிசேஷம் புறஜாதியாரிடம் அறிவிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. *"அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" (ரோமர் 10:3,4).* நியாயப்பிரமாணம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாயிற்று. **கிறிஸ்துவின்மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசமே நம்முடைய நித்தியத்தை நிர்ணயம் செய்கிறது.**

யோவான் 5:45-47ல் கிறிஸ்து யூதர்களைக் குற்றப்படுத்திப் பேசுவதை வாசித்துப் பாருங்கள், *"பிதாவினிடத்தில் நான்*

உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான். **நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்;** அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்". மத்தேயு 21:43ல் இயேசு திட்டவட்டமாக அறிவிக்கிறார், "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்". "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" *(யோவான் 15:8).*

புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடை பண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள்மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது. (2:16)

எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள் என்று பவுல் எழுதியிருப்பதை யூதர்கள் தாங்கள் முன்னரே செய்துவந்த பாவங்களோடு மேலும் மேலும் பாவம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். அதன் விளைவு என்ன என்பது தொடர்ச்சியாகச் சொல்லப்படுகிறது - தேவனுடைய கோபம் முழுமையாக அவர்கள்மீது வந்துள்ளது என்கிறார் பவுல். அவர்கள் செய்துகொண்டிருக்கும் பாவம் என்ன என்பது வசனத்தின் துவக்கத்திலேயே சொல்லப்படுகிறது. பவுலும் அவருடைய ஊழியக்காரர்களும் புறஜாதியாரிடம் இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிப்பதை அவர்கள் தடை செய்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் யூத இனத்தைச் சேர்ந்தவர் என்பது மட்டுமல்ல, யூதர்களை அதிகமாக நேசித்தவர்

என்பதைப் பல வேதவசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. இஸ்ரவேலரின் மேன்மையைக் குறித்து அவர் சொல்கிறார், "புத்திர சுவிகாரமும், மகிமையும், உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே; பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே" (ரோமர் 9:4,5). ரோமர் 9:3ல் சொல்கிறார், "மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே". ரோமர் 10:1ல் சொல்கிறார், "இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது".

தமஸ்குவுக்குப் போகும்வழியில் பவுலைச் சந்தித்து அவருக்கு ஊழிய அழைப்பைக் கொடுத்த இயேசு கிறிஸ்து (அப் 9:1-6) அனனியா என்ற சீஷனின் மூலமாக அவருடைய அழைப்பை உறுதிப்படுத்திச் சொல்கிறார், "**அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்**" (அப் 9:15). ஊழியத்தினிமித்தம் புதிய பட்டணங்களுக்குள் பிரவேசிக்கும்போதெல்லாம் முதலாவது அங்குள்ள யூத ஜெப ஆலயங்களில் பிரவேசித்து சுவிசேஷத்தை அறிவிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் பவுல். கொரிந்து பட்டணத்தில் யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமல் தூஷித்தபோது பவுல், "தன் வஸ்திரங்களை உதறி: உங்கள் இரத்தப்பழி உங்கள் தலையின்மேல் இருக்கும்; நான் சுத்தமாயிருக்கிறேன்; இதுமுதல் புறஜாதியாரிடத்திற்குப் போகிறேன்" (அப் 18:6) என்று சொல்லி, அங்கிருந்து புறப்பட்டு சிரியா, எபேசு, கலாத்தியா முதலிய பட்டணங்களில் தன்னுடைய ஊழியங்களைத் தொடங்கினார்.

இவ்விதமாகச் சுவிசேஷம் அறிவிக்கப்படுவது யூதர்களால் தடைசெய்யப்படும் என்பதை அறிந்தவராய்க் கிறிஸ்து மத்தேயு

*23:13*ல் சொல்கிறார், “மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை”. ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தினரால் நியாயம் விசாரிக்கப்பட்டாலும் யூதர்களின் இந்த மனப்பாங்கைக் குறித்து இவ்விதமாக வெளிப்படையாகச் சொல்கிறார், “தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள்” (அப் 7:52).

இதினிமித்தம் தேவனுடைய கோபாக்கினை யூதர்கள்மேல் பூரணமாக வந்திருக்கிறது என்ற அறிவிப்புடன் இந்த வசனம் நிறைவடைகிறது. ஏற்கெனவே தேவகோபாக்கினை யூதர்மேல் வந்துவிட்டதைப்போல பவுல் குறிப்பிடுகிறார். “தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்” (மத் 21:43) என்ற கிறிஸ்துவின் எச்சரிப்பை நினைவுக்குக் கொண்டு-வாருங்கள்.

மத்தேயு 23:38ல் கிறிஸ்து திட்டவட்டமாக அறிவிக்கிறார், “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்”. தீத்து ராயனின் எண்பதாயிரம் ரோமப்போர்வீரர்கள் கி.பி.70ல் எருசலேம் பட்டணத்தை முற்றுகையிட்டு பத்துலட்சத்துக்கு மேற்பட்ட யூதர்களைக் கொன்று குவித்தார்கள். எருசலேம் தேவாலயத்தைச் சூறையாடி தீவைத்துக் கொளுத்தினார்கள். பட்டணம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. பாழாக்கப்பட்டது. இலட்சக்கணக்கான யூதர்கள் அடிமைகளாக ரோமாபுரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். உலகமெங்கும் சிதறடிக்கப்-பட்டார்கள்.

இஸ்ரவேலருக்கு எதிராக தேவகோபாக்கினை செயல்-படுவது இது முதலாவது நிகழ்ச்சி அல்ல. செனகெரிப்

தலைமையில் அசிரியர்களால் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரங்களும் கி.மு. 738-ல் சிறைப்பிடிக்கப்பட்டார்கள் என்பதை அறிவோம். அது நடந்து 152 ஆண்டுகளுக்குப்பின் பென்யமின் மற்றும் யூத கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் கி.மு.586ல் நெபுகாத்நேச்சார் தலைமையில் பாபிலோனியர்களால் 70 ஆண்டுகள் சிறைபிடிக்கப்பட்ட நிகழ்ச்சியையும் வேதம் அறிவிக்கிறது (தானி 9:2, 24).

பவுலின் வாஞ்சை (2:17-20)

சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி, கொஞ்சக்காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம். (2:17)

இந்த வசனத்திலிருந்து பவுல் நிருபத்தின் இரண்டாவது பகுதியைத் துவங்குகிறார். சகோதரரே என்று பாசமாக தெசலோனிக்கேய சபையாரை அழைத்து அதிகாரத்தின் முடிவுவரை அவர்களை இந்த மூன்று ஊழியக்காரர்களும் எவ்வளவு அதிகமாக நேசிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறார். தங்களுடைய சரீரத்தினால் அவர்களைவிட்டுப் பிரிக்கப்பட்டவிதம் அப்போஸ்தலர் நடபடிகள் 17:10ல் சொல்லப்பட்டிருக்கிறது. யாசோன் என்பவருடைய வீட்டில் தங்கியிருந்த அவர்கள்மேல் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" (வ 6) என்று குற்றஞ்சுமத்தி பட்டணத்து அதிகாரிகள்மூலம் இரவோடு இரவாக அங்கிருந்து அகற்றப்பட்டு பெரோயா பட்டணத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கே அவர்களுடைய ஊழியம் தொடர்கிறது என்றாலும் இந்த ஊழியக்காரர்கள் விசுவாசிகளைப் புறக்கணித்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று குற்றம் சுமத்திவந்ததினிமித்தம் பவுல் சபையாரிடம் இந்தக் காரியங்களை அறிவிக்கிறார்.

சபையார்மேல் கொண்டிருந்த அன்பினிமித்தம் பால்கொடுக்கும் தாயைப்போலவும் (வ 2), பிள்ளைகளுக்குப் புத்திசொல்லித் தேற்றி எச்சரிக்கும் தகப்பனைப்போலவும் (வ 2:12) நடந்ததை பவுல் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் பார்த்தோம். சரீர ரீதியாகப் பிரிந்திருந்தாலும் சபையார்மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பில் எவ்வித மாற்றமும் இல்லை.

கொலோசெயர் சபையாரிடம் பவுல் சொல்கிறார், "சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனேகூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்" (2;5). நாங்கள் சரீரத்தில் உங்களோடு இல்லை என்றாலும் எங்கள் நினைவுகள் எல்லா வேளைகளிலும் உங்களோடு இருந்தன என்று சற்று உணர்ச்சிவசப்பட்டவராய்ப் பவுல் பேசுகிறார். அவர்களை விட்டுப் பிரிந்து சில மாதங்களே ஆகியிருக்கின்றன என்றாலும், ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை அவர்களிடம்வர தான் பிரயத்தனம் பண்ணியதை அவர்களுக்குஅறிவிக்கிறார்.

ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான். (2:18)

தெசலோனியரை சந்திக்கவேண்டும் என்று பலமுறை கடுமையாய் முயன்றும் இந்த ஊழியர்கள் தோல்வியையே சந்திக்கநேர்ந்தது என்று பவுல் வேதனையோடு அறிவிக்கிறார். "பவுலாகிய நானே வர விரும்பினேன்" என்று பவுல் சொல்கிறார். பொதுவாக இந்த நிருபத்தில் "நாங்கள்" என்று பன்மையில் பேசும் பவுல் இங்கே "நானே" என்று சொல்வது சபையார்மேல் பவுல் கொண்டிருந்த தனிப்பட்ட அன்பை வெளிப்படுத்துகிறது. "நான்" என்ற வார்த்தையை பவுல் தன் நிருபங்களில் மிகவும் குறைவான இடங்களிலேதான்

பயன்படுத்துகிறார் (2கொரி 10:1, கலா 5:2, கொலோ 1:23, எபே 3:1, பிலே 19).

"சாத்தான் எங்களைத் தடைபண்ணினான்" என்ற பவுலின் அறிக்கையினிமித்தம் நாம் கலக்கமடையவேண்டியதில்லை. தேவன் தெரிந்துகொண்ட ஒருவனுக்கு, தேவனுக்குள் அனு-தினமும் தன் வாழ்வை நடத்துகிறவனுக்கு தேவனே எஜமான். அப்படிப்பட்ட ஒருவனுடைய வாழ்க்கையில் **தேவனுடைய அனுமதியின்றி ஒரு காரியத்தையும் சாத்தானால் நடப்பிக்க-முடியாது.** சாத்தான் இந்த ஊழியக்காரர்களை எவ்வாறு தடைசெய்தான் என்பதை பவுல் இந்த இடத்தில் சொல்லவில்லை.

கலாத்தியர் 5:7 ல் பவுல் சொல்கிறார், "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?" ரோமாபுரி சபையாருக்கும் பவுல் சொல்கிறார், உங்களிடத்தில் வருகிறதற்கு இதினாலே அநேகந்தரம் தடைபட்டேன்" (15:22). ரோமர் 1:13ல் சொல்கிறார், "உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று". எபேசியர் 6:12ல் பவுல் சொல்கிறார், "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதி-பதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிக-ளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு".

சாத்தான் ஊழியக்காரர்கள் மற்றும் விசுவாசிகளின் செயல்பாடுகளில் தடைபண்ணுகிறான் என்பது உண்மைதான் என்றாலும் தேவனுடைய அனுமதி இல்லாமல் நம்முடைய வாழ்க்கையில் அவனால் எதுவுமே செய்யமுடியாது என்று பார்த்தோம். யோபு 1:6-12 வாசித்துப் பாருங்கள். 12வது வசனத்தில் தேவன் கட்டளையிடுகிறார், "அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன் மேல்மாத்திரம் உன் கையை நீட்டாதே". அதற்குப்பின்புதான் யோபுவுக்கு வாதைகள் துவங்குகின்றன. பிரதான ஆசாரிய-

னாகிய யோசுவாவுக்கு விரோதமாகச் செயல்பட சாத்தான் முயன்றபோது கர்த்தர் சாத்தானை நோக்கி, "சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக" (சக 3:2) என்று கட்டளையிட்டு அவனுடைய முயற்சியைத் தடைசெய்கிறார்.

பவுல் தன்னுடைய பிரமாண்டமான ஊழியத்தினிமித்தம் தன்னை உயர்த்தாதபடிக்கு அவரைக் குட்டும் சாத்தானுடைய தூதன் அவருடைய மாம்சத்தில் செயல்பட அனுமதிக்கப்பட்டி-ருந்ததை 2கொரிந்தியர் 12:7,8ல் அறிவிக்கிறார். தெசலோனிக்-கேயா பட்டணத்து யூதர்களை பவுலுக்கும் சக ஊழியர்களுக்கும் எதிராகச் செயல்படவைத்து அங்கிருந்து வெளியேற்றிய சாத்தான், அவர்கள் அங்கு திரும்பி வருவதையும் தடைசெய்கிறான் என்றாலும் அவையெல்லாமே தேவனுடைய சித்தத்துக்கு உட்பட்டதாகவே இருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

இன்னும் பல தேசங்களுக்குத் தேவன் அவரை அழைத்துச் சென்று வல்லமையான ஊழியத்தை நிறைவேற்றச்செய்ய-வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். தேவசித்தத்துக்கு எதிராகப் பவுல் தன் சுயவிருப்பத்தின்படி விரும்பியபோது தெசலோனிக்கேயாவுக்குப் போகமுடியாதிருந்தது என்றாலும் அவருடைய இரண்டாவது மிஷனரி பயணத்தில் பவுல் அங்கே போக அனுமதிக்கப்படுகிறார்.

எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும் மகிழ்ச்-சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்த-ராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதா-னத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள். (2:19)

தெசலோனிக்கேய சபையாரைக் குறித்த மூன்று காரியங்களை வசனத்தின் துவக்கத்தில் பவுல் அறிவிக்கிறார். இது அவர் சபையார்மேல் கொண்டிருந்த அன்பைக்

காட்டுகிறது. அதற்குப்பின் தன்னுடைய வழக்கத்தின்படி இது இந்த அதிகாரத்தின் கடைசி வசனமாக இருப்பதால் கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பேசுகிறார்.

1. சபையாரே இந்த ஊழியக்காரர்களின் நம்பிக்கை (hope)

2. சபையாரே அவர்களுடைய சந்தோஷம் (joy)

3. சபையாரே அவர்களுடைய மகிழ்ச்சியின் கிரீடம் (crown of rejoicing)

இந்த இடத்தில் "நம்பிக்கை" என்ற வார்த்தை தேவனுடைய தீர்க்கதரிசன வெளிப்பாடுகளின் அடிப்படையில் இந்த ஊழியக்காரர்களின் இருதயத்தில் சபையாரைக் குறித்துக் கொண்டிருந்த அசைக்கமுடியாத எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகிறது. நடந்து முடிந்த ஒரு காரியத்தைக் குறித்து யாரும் நம்பிக்கை கொண்டிருப்பதில்லை. அதற்குத் தேவையும் இல்லை. **இனி நடக்கவிருக்கும் ஒரு காரியம் இப்படித்தான் நடக்கும் என்று எதிர்பார்ப்பதே நம்பிக்கை.** தாவீது சொல்கிறார், "நான் நம்புகிறது அவராலே வரும்" (சங் 62:5). எபிரெயர் 11:1 சொல்கிறது, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது".

"சந்தோஷம்" என்ற வார்த்தை தெசலோனிக்கேய சபையாரின்மேல் ஊழியக்காரர்கள் கொண்டிருந்த நம்பிக்கையினிமித்தம் அவர்கள் பெறும் மனமகிழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக்கா 15:7) என்கிறார் இயேசு. "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்ற பவுலின் ஆலோசனை 1தெசலோனிக்கேயர் 5:16லும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தெசலோனிக்கேய சபையார் தங்களுடைய மகிழ்ச்சியின் கிரீடமாயிருப்பவர்கள் (crown, stephanos) என்பதை மூன்றாவதாகப் பவுல் அறிவிக்கிறார். கிரீடம் என்ற வார்த்தை இந்த

இடத்தில் ராஜாக்கள் அணிந்திருக்கும் பொன்னாலும் வைரங்களாலும் விலையேறப்பெற்ற இரத்தினக்கற்களாலும் அலங்கரிக்கப்பட்ட கிரீடங்களைக் குறிப்பிடாமல் அந்த நாட்களில் விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு அவர்களைக் கனம்பண்ணும்விதத்தில் கொடுக்கப்படும் மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட கிரீடங்களைக் குறிப்பிடுகிறது. அதனால்தான் பவுல் அதை மகிழ்ச்சியின் கிரீடம் என்று குறிப்பிடுகிறார்.

யோவான் தரிசித்த பரலோகக் காட்சியில் இருபத்து நான்கு மூப்பர்களுக்கு கிரீடங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அதைத் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக வைத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்று பார்க்கிறோம் (வெளி *4:10*). **கிறிஸ்துவின் சிலுவை மரணமே கிரீடத்தைப் பெற்றுக்கொள்ளும் தகுதியை நம்மில் உண்டாக்குகிறது.** கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் மட்டுமே நம்மில் உண்மையான ஆவிக்குரிய நம்பிக்கையும் ஆவிக்குரிய சந்தோஷமும் உண்டாகிறது. "எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்"(பிலிப் *4:1*)என்கிறார் பவுல்.

விசுவாசிகளாகிய நாம் பெற்றுக்கொள்ளும் ஐந்து வகையான கிரீடங்களைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் சீரானதாக அமைந்து அதில் நாம் வெற்றிபெறுவோமானால் "**அழிவில்லாத கிரீடம்**" நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது (*1*கொரி *9:24,25*). நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தின் முடிவிலும் விசுவாசத்தைக் காத்துக்கொண்டதினிமித்தம் தனக்கு "**நீதியின் கிரீடம்**" வைக்கப்பட்டிருப்பதாக 2தீமோத்தேயு *4:8*ல் அறிவிக்கிறார். சோதனையைச் சகித்து, தான் உத்தமன் என்று நிரூபித்து, அவரில் அன்புகூருகிறவர்களுக்கு கர்த்தர் "**ஜீவகிரீடத்தை**" யாக் *1:12*ல் வாக்குப்பண்ணியிருக்கிறார். மரண பரியந்தம் உண்மையாயிருக்கிறவர்கள் ஜீவகிரீடத்தைப் பெறுவது நிச்சயிக்கப்பட்-

டிருக்கிறது *(வெளி 2:10).* தங்களுடைய மந்தைகளை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாயிராமல் சீரான முறையில் கண்காணிப்பு செய்தால் அந்த மேய்ப்பர்கள் "**மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப்**" பெறுவார்கள் என்று *1பேதுரு 5:3*ல் வாசிக்கிறோம். நாம் தியானிக்கும் இந்த வசனத்தில் **மகிழ்ச்சியின் கிரீடம்** குறிப்பிடப்படுகிறது.

தெசலோனிக்கேயா பட்டணத்துக்கு வரவேண்டும் என்ற பவுலின் விருப்பத்தைச் சாத்தான் தடைபண்ணிவிட்டான் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் அவர்களைச் சந்திக்கக் கிறிஸ்துவே வரவிருக்கிறார் (parousia) என்பதை வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார். **கிறிஸ்துவின் வருகையைத் தடைசெய்ய யாராலும் முடியாது.** இந்த நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பவுல் பேசுகிறார் என்று பார்த்தோம். இந்த நிருபத்தின் *1:10; 2:19, 3:13, 4:13-18, 5:23,* 2தெசலோனிக்கேயர் *2:1,8* ஆகிய வசனங்களிலும் பவுல் கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பேசுகிறார். *1*கொரிந்தியர் *15:23*ல் பவுல் "அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களில் பலமுறை தன்னுடைய வருகையைக் குறித்து அறிவித்திருந்தார் என்றாலும் *(மத் 24;3, 27, 37,39)* அவருடைய சீஷர்கள் அதைக்குறித்து சரியாக அறிந்துகொள்ளாதிருந்தார்கள். யாக்கோபு *5:8*ல் சொல்கிறார், "கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதே". பேதுரு, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்" *(2பேதுரு 1:16)* என்கிறார். 2பேதுரு *3:9-11* வாசித்துப் பாருங்கள். "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" *(வ.12).*

நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமா-யிருக்கிறீர்கள். (2:20)

தெசலோனிக்கேய சபையாரைப் பவுல் சந்திக்கமுடியாமல் போயிருக்கலாம். அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதி-னிமித்தம் உபத்திரவங்களையும், பாடுகளையும் சந்தித்துக்-கொண்டிருக்கலாம். ஆனாலும் ரோமர் *8:18*ல் பவுல் என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள், "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்-தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்".

தெசலோனிக்கேய சபையார் தங்களுடைய மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறார்கள் என்று மிகுந்த பெருமையோடு அவர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் நாம் அந்தச் சபையாரைக் குறித்த பவுலின் சாட்சியை வாசித்து அவர்களைக் குறித்து தேவனுக்கு நன்றிசெலுத்துகிறோம்.

அதிகாரம் – 3

இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள்
அனைவரோடுங்கூட வரும்போது,
நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு
முன்பாகப் பிழையற்ற
பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள்
இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

1தெசலோனிக்கேயர் 3:13

தீமோத்தேயு அனுப்பப்படுகிறார் (3:1-5)

ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல் அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து (3:1)

இந்த வேதபகுதி புது அதிகாரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும் முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இது கருதப்படவேண்டும். தெசலோனிக்கேய சபையாரை நேரில் சென்று அவர்களை விசாரிக்க முடியாததினிமித்தம் *(2:17,18)* அத்தேனே *(Athens)* பட்டணத்தில் ஊழியம் செய்துகொண்டிருக்கும் பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகியோர் மிகுந்த வேதனைப்படுகிறார்கள் என்பது தொடர்ச்சியாக அறிவிக்கப்படுகிறது. சபையாரை இந்த இக்கட்டான நேரத்தில் உற்சாகப்படுத்த தீமோத்தேயுவை தெசலோனிக்கேயாவுக்கு அனுப்பலாம் என்று அவர்கள் முடிவுசெய்கிறார்கள்.

அத்தேனேயில் பவுலுடன் தீமோத்தேயு இருப்பது நிச்சயமாகவே பவுலுக்கு மிகவும் ஆறுதலாகவும், உதவியாகவும் இருந்திருக்கும் என்றாலும் தெசலோனிக்கேயர் சபையின்மேல் கொண்டிருந்த அன்பினிமித்தம் இந்த முடிவு எடுக்கப்படுகிறது. *1கொரிந்தியர் 9:12ல்* பவுல் சொல்கிறார், "கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும் படுகிறோம்". ஏனென்றால் பவுல் சொல்கிறபடி "அன்பு சகலத்தையும் தாங்கும்; சகலத்தையும் விசுவாசிக்கும்; சகலத்தையும் நம்பும்; சகலத்தையும் சகிக்கும்" *(1கொரி 13:7)*.

தெசலோனிக்கேயாவில் ஊழியத்துக்கு உண்டான எதிர்ப்பினிமித்தம் இரவோடு இரவாக பெரோயா பட்டணம் வந்து யூதருடைய ஜெப ஆலயத்தில் சில காலம் ஊழியம் செய்தபோது தெசலோனிக்கேயாவிலிருந்து வந்த யூதர்கள் அங்கும் பவுலுக்கு எதிராகப் பிரச்சனைகளை உண்டாக்கியதி-

னிமித்தம் பவுல் மட்டும் சமுத்திரவழியாக அத்தேனே பட்டணத்துக்குள் பிரவேசிக்கிறார், "அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான்" *(அப் 17:16,17)* என்று வாசிக்கிறோம்.

சில காலம் சென்றபின்புதான் சில்வானும், தீமோத்தேயுவும் அத்தேனே வந்துசேருகிறார்கள். ஆனாலும் உடனடியாகத் தான் தனித்துவிடப்பட்டாலும் பரவாயில்லை, தீமோத்தேயுவை தெசலோனிக்கேயாவுக்கு அனுப்புவதே நலம் என்று பவுல் முடிவுசெய்கிறார். அத்தேனே ஊழியத்துக்குப் பின் பவுல் கொரிந்து பட்டணம் வந்து ஊழியத்தைத் துவங்குகிறார் *(அப் 18:1)*. மக்கெதோனியாவிலிருந்து வந்த சீலாவும், தீமோத்தேயுவும் அவரோடு இணைந்துகொள்கிறார்கள் *(அப் 18:5)*.

இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம். (3:2)

தீமோத்தேயுவை தெசலோனிக்கேயாவுக்கு அனுப்பத் தீர்மானம் செய்த பவுல் அங்கே அவர் செய்யவேண்டிய காரியம் என்ன என்பதையும் திட்டவட்டமாக அறிவிப்பதைப் பார்க்கிறோம்.

1. சபையாரைத் திடப்படுத்தவேண்டும் (to strengthen)
   அவர்கள் சந்திக்கும் உபத்திரவங்கள் நிமித்தம் விசுவாசிகள் ஒருவரும் பின்மாற்றமடையக்கூடாது

2. விசுவாசிகள் திடப்படுத்தப்படவேண்டும் *(to encourage)*

3. தீமோத்தேயு சொல்லப்போகும் அறிவுரைகளின் மூலம் சபையார் தங்கள் விசுவாசத்தில் வளர்ச்சி அடையவேண்டும் *(to know your faith)*. "உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கு".

தீமோத்தேயுவைப்பற்றிய மூன்று காரியங்களைப் பவுல் தொடர்ச்சியாக அறிவிக்கிறார்.

1. **நம்முடைய சகோதரன்.** 2கொரிந்தியர் *1:1* மற்றும் கொலோசெயர் *1:1*லும் பவுல் தீமோத்தேயுவை சகோதரன் என்று குறிப்பிடுகிறார்.

2. **நம்முடைய சகோதரனாயிருக்கும் அதே வேளையில் அவர் தேவ ஊழியக்காரன் என்றும் அழைக்கப்படுகிறார்** *(diaKonos, deacon)(பிலிப் 1:1)*. தேவ ஊழியக்காரர்கள் என்று சொல்லும்போது அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், அவருடைய வேலையாட்கள் என்றும் பொருள் கொள்ளவேண்டும்.

3. **கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன் வேலைக்காரன்.** 1தெசலோனிக்கேயர் *2:2*ல் தேவனுடைய சுவிசேஷம் என்றும், 1தெசலோனிக்கேயர் *1:5*ல் எங்கள் சுவிசேஷம் என்றும் அறிவித்த பவுல் இங்கே கிறிஸ்துவின் சுவிசேஷம் என்கிறார்.

உடன்வேலையாளாகிய தீமோத்தேயுவைப் பற்றி பவுல் பிலிப்பியர் *2:20*ல் இவ்வாறு பாராட்டுகிறார், "உங்கள்

காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்தி-லில்லை", ஆதி அப்போஸ்தல சபையின் நாட்களிலும் உண்மையான ஊழியக்காரர்கள் குறைவாகத்தான் இருந்திருக்கி-றார்கள் போலத் தெரிகிறது.

தீமோத்தேயுவின் தாய் யூத இனத்தைச் சேர்ந்தவ-ளாயிருந்தாலும் தகப்பன் ஒரு கிரேக்கன் என்பதை அறிவோம் (அப் 16:1,3). அதினிமித்தம் அவருடைய முக பாவனை, பேச்சு மற்றும் நடவடிக்கைகள் அந்தப் பட்டணத்தாரால் எளிதில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடும் என்று பவுல் நினைத்திருக்கலாம். மேலும் இரவோடு இரவாக பட்டணத்தைவிட்டு வெளியே புறப்பட்டு வந்தவர்கள் பவுலும் சீலாவும்தான். தீமோத்தேயு அங்கு தொடர்ந்து தங்கியிருப்பதில் அவருக்கு எந்தப் பிரச்சனையும் உண்டாகவில்லை.

மேலும் இந்த மூன்று ஊழியக்காரர்களில் வயதில் குறைந்தவர் தீமோத்தேயு என்பதினால் சபையின் காரியங்க-ளைக் கவனித்து அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும்படியாக அவரைத் தெரிந்துகொள்கிறார். தீமோத்தேயுவைத் தொடர்ந்து மிகக் குறுகிய காலத்தில் சீலாவும் தெசலோனிக்கேயாவுக்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் நடபடி-கள் 18:5லிருந்து அறிந்துகொள்கிறோம்.

இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கி-றீர்களே. (3:3)

கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்கள் அவர் நிமித்தம் உபத்திரவங்களைச் சந்திக்க எல்லா வேளைகளிலும் ஆயத்த-மாயிருக்கவேண்டும். அதை சகிக்கவே நாம் நியமிக்கப் பட்டிருக்கிறோம் (we are destined, kei mai) என்கிறார் பவுல். இந்தச் சத்தியத்தை அவர்களுக்கு தான் ஏற்கெனவே அறிவித்-திருப்பதாகவும் பவுல் இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் அறிவிக்கிறார். அது அவர்களுக்கு மறைக்கப்படவில்லை.

உபத்திரவங்களை நாம் சகிக்கவேண்டும் என்று சொல்லும்போது இந்த மூன்று ஊழியர்களும் தங்களை தெசலோனிக்கேய சபை விசுவாசிகளுடன் இணைத்துக் கொள்கிறார்கள். இந்த உபத்திரவங்களைக் குறித்த எச்சரிக்கையை இந்த ஊழியக்காரர்கள் சபைக்கு அறிவிக்கத் தயங்கவில்லை.

தற்போது பிரபலமாகிவரும் செழிப்பின் உபதேசத்தை (prosperity gospel) அவர்கள் ஒருபோதும் அறிவிக்கவில்லை. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவான் 16:33) என்றுதான் கிறிஸ்து அறிவித்தார். அந்தியோகியா பட்டணத்திலும் "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" (அப் 14:22) என்ற அறிவிப்பு ஊழியக்காரர்களால் கொடுக்கப்பட்டது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ 3:12) என்று வாசிக்கிறோம்.

உபத்திரவங்களைச் சகிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் தேவன் தன்னுடைய ஊழியர்களை தெரிந்துகொள்கிறார் என்று வேதபண்டிதர் கால்வின் இந்த வசனத்துக்கு விளக்கம் தருகிறார்.

2கொரிந்தியர் 1:4-5ல் பவுல் இந்தக் காரியத்தைச் சற்று விளக்கமாக அறிவிக்கிறார், "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும், அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். எப்படியெனில், **கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கும் ஆறுதலும் பெருகுகிறது**". நாம் துன்பத்தில் இருக்கும்போது அவர் தரும் ஆறுதல் மற்றவர்கள் துன்பத்தில் இருக்கும்போது அவர்களை ஆறுதல்படுத்த நம்மை உற்சாகப்படுத்தும்.

நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள். (3:4)

தெசலோனிக்கேயாவில் ஊழியக்காரர்களும் விசுவாசிகளும் சந்தித்த உபத்திரவம் அப்போஸ்தலர் நடபடிகள் *17:5-10*ல் விளக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பக்தியுள்ள கிரேக்கரும் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளும் (வசனம் *4*) சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும் எதிரிகள் ஒன்றுசேர்ந்து ஊழியக்காரர்களுக்குப் புகலிடம் கொடுத்த யாசோன் மற்றும் சகோதரர்களை பட்டணத்து அதிகாரிகளிடம் கொண்டுவந்து "இவர்களெல்லாரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா என்று சொல்லி, இராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாகச் செய்கிறார்கள்" (வசனம் *7*) என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

முடிவில் பவுலும் சீலாவும் அன்று இரவிலேயே பெரோயா பட்டணத்துக்கு விரட்டப்படுகிறார்கள். ஆனால் இந்த உபத்திரவத்தின் மத்தியிலும் தேவனுடைய திட்டம் வேறுவிதத்தில் செயல்பட்டது.

அப்போஸ்தலர் நடபடிகள் *17:11*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்". இவ்விதமாக பெரோயா பட்டணத்தார் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். **வேதவசனத்தை வாசித்தால் மட்டும் போதாது. அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.** இணைவசனங்களோடு ஒப்பிட்டு அந்த வசனம் என்ன சொல்கிறது என்பதை அறிந்திருக்கவேண்டும்.

ஆகையால் நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோத-னைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்-டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன். (3:5)

இந்த 3ம் அதிகாரம் முதல் ஐந்து வசனங்களைக் கவனமாக வாசிப்போமானால் பவுல் சில காரியங்களைத் திரும்ப திரும்ப எழுதியிருப்பது தெரியவரும். தான் தீமோத்தேயுவை தெசலோ-னிக்கேயாவுக்கு ஏன் அனுப்பினார் என்பதை மீண்டுமாக பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். "நான் இனிப் பொறுத்திருக்-கக்கூடாமல்" என்று சொல்லும்போது தன்னுடைய சக ஊழியர்-களான சீலா, தீமோத்தேயு ஆகியவர்களின் தலைவர் என்ற முறையில் பவுல் பேசுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பில் இந்த வசனம் இன்னும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, "இதற்கா-கத்தான் நான் உங்களிடம் தீமோத்தேயுவை, உங்கள் விசுவாசத்-தைப்பற்றி அறிந்துகொள்ள அனுப்பிவைத்தேன். மேலும் என்னால் காத்திருக்கமுடியாத நிலையில்தான் நான் தீமோத்-தேயுவை அனுப்பிவைத்தேன். மக்களைத் தீயவற்றினால் இழுத்து கவர்ச்சிக்கும் பிசாசு உங்களைத் தோல்வியுறச்செய்து-விடுவானோ என்றும் எங்களின் உழைப்பு வீணாய்ப் போகுமோ என்றும் நான் பயந்திருந்தேன்".

கலாத்தியர் *4:11*லும் பவுல் சொல்கிறார், "நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்". எந்த அளவுக்குப் பவுல் தன்னுடைய விசுவாசிகளைக் குறித்துக் கரிசனை உள்ளவராக இருந்தார் என்பதைக் கவனியுங்கள். அதேநேரத்தில் *1*கொரிந்தியர் *15:58*ல் பவுல் சொல்கிறார், "கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய

கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக". **கர்த்தருக்கென்று நாம் செய்யும் வேலைகள் ஒருநாளும் வீணாகப் போவதில்லை.**

தங்களுடைய ஊழியம் வீணாகிவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் பவுல் பேசுகிறார். பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் மூன்று வாரங்கள் ஊழியம் செய்து முடித்ததும் எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி ஒரே நாளில் நகரைவிட்டு விரட்டியடிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்த ஊழியத்தின்போது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களின் விசுவாசம் உண்மையானதுதானா என்பதை அறிந்துகொள்ளும் அவகாசம் அவர்களுக்கு இருந்ததில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தெசலோனிக்கேயாவில் கிறிஸ்தவர்கள் சந்தித்த உபத்திரவங்களைக் கேள்விப்பட்டு அவர்கள் கலக்கமடைகிறார்கள். ஆனாலும் இத்தகைய பாடுகள் தேவனால் அனுமதிக்கப்பட்டவைதான் என்பதை சபை அறிந்துகொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

அதினிமித்தம் பவுல் தெசலோனிக்கேயாவுக்குப் போக விருப்பமுடையவராய் இருந்தாலும், அதைச் செயல்படுத்த முடியாதநிலையில், தீமோத்தேயுவை அங்கே அனுப்ப முடிவுசெய்கிறார். அடுத்த வசனங்களில் அவர்களுடைய விசுவாசம், அன்பு, ஊழியர்கள்மேல் அவர்கள் கொண்டிருந்த பற்றுதல் ஆகியவற்றை தீமோத்தேயு மூலமாகக் கேள்விப்பட்டு பெருமகிழ்ச்சி அடைகிறார்.

தீமோத்தேயுவைப் பவுல் அனுப்பியதின் நோக்கம் இந்த வசனத்தின் பின்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தெசலோனிக்கேயரின் விசுவாசத்தை சாத்தான் பெலவீனமடையச் செய்யும் விதத்தில் அவர்களை சோதிக்கக்கூடும் என்று பவுல் சந்தேகப்படுகிறார். ஆதியாகமம் துவங்கி வேதத்தின் பல பகுதிகளில் மனிதனுக்கு விரோதமாக சாத்தான் செயல்படும் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் பாவம் செய்வதற்குக் காரணமாக இருந்த சர்ப்பம் இந்த வசனத்தில் சோதனைக்காரன் என்று அழைக்கப்படுகிறான்.

யோபு முதல் இரண்டு அதிகாரங்களில் சாத்தானுடைய செயல்பாடுகள் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்கு தாவீது ராஜாவை ஏவிவிட சாத்தானே காரணமாக இருந்தான் (1நாளா 21:1). பிரதான ஆசாரியனாகிய யோசுவாவுக்கு விரோதமான அவனுடைய செயல்பாடு சகரியா 3:1,2ல் சொல்லப்பட்டிருக்கிறது. வனாந்தரத்திலே நாற்பதுநாள் உபவாசமிருந்த இயேசு கிறிஸ்துவைச் சோதிக்கும்படியாக மத்தேயு 4, லூக்கா 4ஆம் அதிகாரங்களில் பிசாசு வெளிப்படுகிறான். லூக்கா 22:3ல் "பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" என்று வாசிக்கிறோம். நல்ல விவசாய நிலத்தில் களைகளை விதைக்கும் வேலைகளையும் அவன் செய்தான் என்று பார்க்கிறோம் (மத் 13:39).

2கொரிந்தியர் 4:4ல் சாத்தான் "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று குறிப்பிடப்படுகிறான். குடும்பங்களுக்குள் குழப்பங்கள் உண்டாக்கும் சாத்தானின் செயல்பாடு 1 கொரிந்தியர் 7:5ல் சொல்லப்பட்டிருக்கிறது. எபேசியர் 2:2ல் சாத்தான் "ஆகாயத்து அதிகாரப் பிரபு" என்று அழைக்கப்படுகிறான். 2தெசலோனிக்கேயர் 2:8,9ல் "அக்கிரமக்காரன்" என்று பவுல் அவனை அழைக்கிறார். "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2கொரி 2:11) என்கிறார் பவுல்.

எத்தகைய வல்லமையோடு சாத்தான் செயல்பட்டாலும் அவன் தோற்கடிக்கப்படுவது உறுதி (1கொரி 15:24-26). அது இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கல்வாரியில் நடந்து முடிந்த காரியமாகக் கருதப்படவேண்டும், ஏனென்றால் பவுல் சொல்கிறபடி, "**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்**" (கொலோ 2:15). சோதனைக்காரன் என்று அழைக்கப்படும் சாத்தான் நமக்கு எதிராக திட்டமிட்டுக்கொண்டு எல்லாவேளைகளிலும் செயல்பட்டுக் கொண்டு வருகிறான் என்பதை மட்டும் அறிந்துகொள்ளுங்கள்.

ஆனாலும் அதைக் குறித்து நாம் பயப்படவேண்டியதில்லை. பவுல் எச்சரிக்கிறார், "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" (எபே 4:27). "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே 6:11,12). பேதுரு தனது முதலாம் நிருபம் 5:8ல் இவ்வாறு எச்சரிக்கிறார், "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான்".

தீமோத்தேயுவின் நற்செய்தி (3:6-9)

இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும் அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய் நினைத்துக்கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறதுபோல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்களென்பதைக் குறித்தும், எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே (3:6)

இந்த அதிகாரத்தின் இரண்டாவது பகுதி இங்கே துவங்குகிறது. தெசலோனிக்கேயா பட்டணத்துக்குப் போய் சபையாரின் ஆவிக்குரிய நிலைமையை அறிந்துகொள்ளாமல் போனதினிமித்தம் கலக்கத்தோடிருந்த பவுல் தீமோத்தேயுவை முந்தின வசனத்தின்படி அனுப்புகிறார். தீமோத்தேயு அங்கு

சென்று சகல காரியங்களையும் விசாரித்து சபையாரைக் குறித்த நற்செய்தியோடு பவுலிடம் திரும்புகிறார். அந்த நற்செய்தி என்பது இந்த 6-வது வசனத்தில் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. பவுலின் பிரதிநிதியாகத் தெசலோனிக்கேயாவுக்குச் சென்ற தீமோத்தேயு அவர்களைக் குறித்த நற்செய்தியை பவுலுக்கு அறிவிக்கிறார்.

பவுல் தீமோத்தேயு மூலமாக தெசலோனிக்கேயாவிலிருந்து பெற்றுக்கொள்ளும் நற்செய்தி அவர்களில் காணப்பட்ட விசுவாசத்தையும், அன்பையும் குறித்தது. தேவத்துவத்தின் பரிபூரணம் இந்த இரண்டிலிருந்து உருவாகிறது. **விசுவாசமும், அன்பும் நிறைந்த ஒரு மனிதன் நிச்சயமாகவே தான் பெற்றுக்கொண்டஇரட்சிப்பில் நிலைத்திருப்பான் என்று எதிர்பார்க்கலாம்.** இந்த இரண்டும் உண்மையான கிறிஸ்தவ பக்திமார்க்கத்தின் அஸ்திபாரமாகக் கருதப்படவேண்டும் என்கிறார் வேதபண்டிதர் கால்வின்.

கலாத்தியர் 5:6ல் பவுல் சொல்கிறபடி, “கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்”. வானத்திலிருந்து அக்கினியை இறக்கி சமாரிய கிராமத்தை அழித்துவிடலாம் என்று அறிக்கையிட்ட யாக்கோபு, யோவானிடம் விசுவாசம் இருந்தது, ஆனால் அவர்களில் அன்பு இல்லை (லூக்கா 9:54). இந்த நிருபத்தில் இரண்டாவது வசனத்திலேயே பவுல் இந்தச் சபையாரில் காணப்பட்ட விசுவாசத்தின் கிரியையையும், அன்பின் பிரயாசத்தையும் தேவசமுகத்தில் தான் நினைவுகூருவதாக அறிவிக்கிறார் (1,2) என்பதைப் பார்த்தோம்.

தெசலோனிக்கேய சபையார் பவுலின்மேல் கொண்டிருக்கும் மரியாதை, பவுலைக் காண அவர்கள் கொண்டிருக்கும் வாஞ்சை போன்றவை மூன்றாவது நற்செய்தியாகத் தீமோத்தேயு மூலமாக பவுலை வந்து சேருகிறது. எந்த அளவுக்கு பவுல் அவர்களைச் சந்திக்க வாஞ்சையாயிருந்து அதற்கான முயற்சி

செய்தாரோ அந்த அளவுக்கு அவர்களும் தங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்திய பவுலைக் காண விருப்பமுடையவர்களாய் இருக்கிறார்கள். எருசலேமிலிருந்து பவுலுக்கு விரோதமாகவும், சுவிசேஷத்துக்கு எதிராகவும் பிரச்சாரம் பண்ணும்படியாக வந்த யூதர்கள், பவுல் ஊழியம் பண்ணும்படியாக வராமல் வியாபாரம் பண்ணும்படியாக தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்துக்காக அலைந்து திரிவதாக நிச்சயமாகவே குற்றஞ்சாட்டியிருப்பார்கள். தெசலோனிக்கேயரைப் பொறுத்தவரை இந்தப் பொய்ப்பிரச்சாரம் வெற்றிபெறவில்லை என்பதால் பவுல் பெருமகிழ்ச்சி அடைகிறார்.

சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம். (3:7)

"எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும், உபத்திரவத்திலும்" என்று பவுல் சொல்லும்போது தெசலோனிக்கேயாவில் அவர்கள் சந்தித்த இக்கட்டையும், உபத்திரவத்தையும் மட்டும் மனதில் வைத்துக்கொண்டு எழுதவில்லை. இப்பொழுது அவர் ஊழியம் செய்துகொண்டிருக்கும் கொரிந்து பட்டணத்திலும் யூதர்கள் அவருக்கு எதிராக செயல்பட்டு அவரையும், சக ஊழியர்களையும் வேதனைப்படுத்திவந்தார்கள்.

கொரிந்து பட்டணத்தில் பவுல் செய்த ஊழியங்கள், அவர் சந்தித்த பாடுகளை அப்போஸ்தலர் நடபடிகள் *18:1-17*ல் வாசியுங்கள். அந்தச் சமயத்தில் "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்" *(அப் 18:9,10)*.

"உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்" என்று இந்த வசனம் முடிவடைகிறது. தெசலோ-

னிக்கேய சபையில் காணப்பட்ட விசுவாசத்தைப் பற்றி நான்காவது தடவையாகப் பவுல் இங்கே பாராட்டிப் பேசுகிறார். அதைக் குறித்து தான் மிகுந்த ஆறுதல் அடைந்ததாகப் பவுல் அறிவிக்கிறார். ரோமர் 1:16ல் விசுவாசத்தின் மேன்மையை பவுல் இவ்வாறு அறிவிக்கிறார், "முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது".

விசுவாசமின்றி இரட்சிப்பு இல்லை. "ஒருவன் கிரியை செய்யாமல், பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால் அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (ரோமர் 4:5). ஆசிரியரின் ரோமர் விளக்கவுரையையை வாசித்து இந்தச் சத்தியங்களை விளங்கிக்கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையை விளங்கிக்கொள்ள முயற்சிக்காமல் வாசித்துக்கொண்டே போவதினால் அதிக நன்மை உண்டாகாது.

நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம். (3:8)

பவுலுக்கு உண்டாயிருந்த ஆத்துமபாரம் எவ்வளவு மகத்துவமானது என்பதைப் பாருங்கள். அவரைப் போன்ற உண்மையான ஊழியக்காரர்கள் ஒரு சிலரையாவது தேவன் இந்தக் கடைசிநாட்களில் நமது தேசத்தில் எழுப்பவேண்டும் என்று ஜெபியுங்கள். ஊழியங்கள் வியாபாரங்களாக மாறிக்கொண்டிருக்கும் நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். உயர்ந்த நோக்கங்களோடு துவங்கப்பட்ட ஊழியங்களும் சத்துருவின் வஞ்சனையில் அகப்பட்டு வழிவிலகிப் போய்க்கொண்டிருப்பதை இன்று அதிகமாகக் காணமுடிகிறது.

1கொரிந்தியர் 9:22-27ல் பவுல் தன்னுடைய ஊழியத்தைக் குறித்து இவ்வாறு பேசுகிறார், "பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான்

எல்லாருக்கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன். பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். **அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.** ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்".

நாம் தியானிக்கும் வசனம் பரிசுத்த பைபிளில் இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது: "நீங்கள் உறுதியாக கர்த்தருக்குள் இருக்கும்போது எங்கள் வாழ்வு முழுமை பெறுவதாக உணர்கிறோம்". சபையார்மேல் பவுல் கொண்டிருந்த பிரியமும் பாசமும் இங்கே வெளிப்படுத்தப்படுகிறது. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் 1:21) என்று பவுல் சொன்னதைப்போல இன்றைய ஊழியக்காரர்கள் சொல்லத்தயாராக இருக்கவேண்டும். வசனம் 23,24ல் அவர் சொல்கிறார், ".... தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான், சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்".

ஊழியக்காரர்களாகிய பவுல், சீலா, தீமோத்தேயு பிழைத்திருக்கவேண்டுமானால் தெசலோனிக்கேய சபையார் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும் என்பது இந்த வசனத்தின் கருப்பொருள். 2தெசலோனிக்கேயர் 2:15ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்". 1கொரிந்தியர் 16:13ல் "விழித்திருங்கள்,

விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" என்று அறிவுறுத்தும் பவுல், கலாத்தியர் 5:1ல் "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்".

மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காக, நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம்? (3:9)

இந்த அதிகாரத்தின் 6 முதல் 10 வரையுள்ள வசனங்களில் 'உங்கள்' என்ற வார்த்தை குறைந்தபட்சம் எட்டு இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறதிலிருந்து தெசலோனிக்கேய சபையார்மீது பவுல் கொண்டிருந்த ஈடுபாடு வெளிப்படுத்தப்படுகிறது. "நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் அடைந்திருக்கிற சந்தோஷம்" என்று சொல்லும்போது பவுல் தன்னுடைய நினைவுகளிலும் நடத்தையிலும் எந்த அளவுக்கு தேவனை மையமாகக் கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார். தங்களுடைய ஊழியத்தில் வெற்றி உண்டாயிருக்கிறது என்றால் அதற்கு மூலகாரணம் அதன் பின்னணியில் செயல்பட்ட தேவனுடைய கரமே என்பதை உணர்ந்து பேசுகிறார்.

தீமோத்தேயு மூலமாக சபையாரைக் குறித்த நற்செய்தி பவுல் மற்றும் சக ஊழியர்களை எந்த அளவுக்கு சந்தோஷப்படுத்துகிறது என்றால் அதினிமித்தம் தாமதமின்றி தேவனுக்கு நேராகத் தங்களுடைய ஸ்தோத்திரபலியை ஏறெடுக்க ஆரம்பிக்கிறார்கள். இத்தகைய சந்தோஷம் யோவான் ஸ்நானனுக்கும் உண்டாயிருந்தது என்பதினால் சொல்கிறார், "மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" (யோவான் 3:29).

லூக்கா *15:7*ல் இயேசு சொல்கிறார், "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்".

தேவனாகிய கர்த்தர் தனது தயவுள்ள சித்தத்தின்படி கிருபையின் அடிப்படையில் இந்த மூன்று ஊழியர்கள் மூலமாக தெசலோனிக்கேயாவில் நடப்பித்த பலத்த கிரியைகளின் நிமித்தம் ஒரு விதத்தில் தங்களைப் பாராட்டுவதுபோலத் தோன்றினாலும், சபையார் எதிர்கொண்ட மிகப்பெரிய சோதனையில் அவர்கள் வெற்றிபெற்றதற்காக தேவனை ஸ்தோத்திரிக்க ஆரம்பிக்கிறார்கள். *1*தெசலோனிக்கேயர் *2:13*லும் "நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்" என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

தேவகிருபை வெளிப்படாத நிலையில் இந்த வெற்றி அவர்களுக்கு உண்டாயிராது. *1*கொரிந்தியர் *15:10*ல் பவுல் சொல்கிறபடி, "நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது".

இரவும் பகலும் பவுல் ஜெபிக்கிறார் (3:10-13)

உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறோமே. (3:10)

முந்தின வசனத்தில் தேவனை ஸ்தோத்திரித்த பவுல் தெசலோனிக்கேயா சபைக்காக தன்னுடைய ஜெப விண்ணப்பத்தை தேவனிடம் சமர்ப்பிக்கிறார். **ஸ்தோத்திரத்தின் பின்ன-**

ணியில் ஜெபக்குறிப்புகள் வெளிப்படுவது மிகுந்த ஆசீர்வாதமாக அமையும். ஊழியக்காரர்கள் சபையாருக்கு நற்போதனைகளை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் கொடுப்பதோடு நின்றுவிடக்கூடாது. அவர்களுக்காக தொடர்ந்து ஜெபிப்பதும் அவர்களுடைய கடமையாகிறது.

1சாமுவேல் 12:23ல் சாமுவேல் என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள், "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்". இங்கே விண்ணப்பத்தின் (ஜெபம்) பின்னணியில் போதனை வெளிப்படுகிறது.

சபையாரின் முகத்தைக் காணவேண்டும் என்ற வாஞ்சை முதலாவது ஜெபக்குறிப்பாக அமைகிறது. அவர்களுடைய விசுவாசக் குறைவுகளை தேவன் நிறைவாக்கவேண்டும் என்பது இரண்டாவது ஜெபக்குறிப்பு. 1தெசலோனிக்கேயர் 1:2ல் சபையில் காணப்பட்ட 'விசுவாசத்தின் கிரியையை' பவுல் பாராட்டியதைப் பார்த்தோம். 8-வது வசனத்தில் "தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" என்று அறிவித்ததைப் பார்த்தோம். "உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்" (3:7) என்று அறிக்கையிட்டதைப் பார்த்தோம்.

ஆனாலும் தெசலோனிக்கேயா சபையின் போதகர் என்ற முறையில் சபையில் காணப்படும் குறைகளைப் பவுல் சுட்டிக்காட்டி அவர்களைச் சரிசெய்யவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தவராய் அவர்களில் இருந்த விசுவாசக் குறைவுகளை வெளிப்படையாக அறிவிக்கிறார். ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தில் சற்று வெளிப்படையாகவே சொல்கிறார், "உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கு" (1:11) உங்களைக் காண வாஞ்சிக்கிறேன்.

தெசலோனிக்கேயா சபையாரைப் பவுல் காண வாஞ்சிக்கிறார் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் குறிப்பாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் விசுவாசம் இருக்கிறது என்பது உண்மைதான், ஆனாலும் அதில் பவுல் திருப்தியடையவில்லை, இன்னும் கூடுதலான விசுவாசம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது என்று பவுல் சொல்கிறார். அவர்கள் பரலோகத்தை நோக்கிப் பயணப்படுகிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை, ஆனாலும் **அந்த மோட்சப் பயணத்தில் அவர்கள் பாதிவழியில் தவறி விழுந்துவிடக்கூடாது, வழி விலகிப் போய்விடக்கூடாது, பின்மாற்றமடையக்கூடாது என்பதில் பவுல் கவனமுள்ளவராய் இருக்கிறார்.**

சத்துரு எப்போதுமே நம்முடைய விசுவாசத்தை பெலவீனப்படுத்தும் முயற்சியில் இரவுபகலாக செயல்பட்டுக்கொண்டிருப்பான். அவனுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றிபெற்றுவிட்டோம் என்ற சுயதிருப்தி நமக்கு உண்டாகக்கூடாது. கிறிஸ்துவோடு இருந்து ஊழியம் செய்த பேதுருவிடம் அவர் சொல்கிறார், "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்" *(லூக்கா 22:32).*

பேதுருவிடம் விசுவாசம் இருந்தது என்பதை கிறிஸ்து அறிந்திருந்தார், அது ஒழிந்துபோய்விடக்கூடாது என்பதினால் அவருக்காக ஜெபிக்கிறார். பேதுருவின் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்குக் கிறிஸ்து ஜெபிக்கிறார் என்றால் நாம் தியானிக்கும் வசனத்தில் சபையில் வெளிப்படும் விசுவாசத்தின் குறைவுகள் நிறைவாக்கப்படவேண்டும் என்று இரவும் பகலும் ஜெபிக்கிறார் பவுல். ஊழியக்காரர்களின் பிரதான வேலை இதுதான்.

ஆதிசபையின் நாட்களில் அப்போஸ்தலர்கள் "நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள் *(அப் 6:4).* இரவும் பகலும் வேண்டிக்கொள்கிறோம் என்று பவுல் சொல்லும்போது தொடர்ச்சியாக அவர்கள் தேவசமு-

கத்தில் சபையாருக்காகத் திறப்பின் வாசலில் நின்றார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

சபையாரில் காணப்பட்ட விசுவாசக்குறைவு 1தெசலோனிக்கேயர் 4:13-5:3ல் விளக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாகக் கர்த்தருடைய இரண்டாவது வருகை, இரகசிய வருகை, கர்த்தருடைய நாள், வருகைக்கு முன்பு மரித்தவர்களின் இரட்சிப்பு எவ்வாறு இருக்கும் என்பதுபோன்ற சத்தியங்களைப் பவுல் அவர்களுக்கு அறிவித்திருந்தும் அதைக்குறித்து நிச்சயமில்லாதவர்களாக அவர்கள் இருந்தார்கள்.

சபையாருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சில குறைபாடுகள் உண்டு என்பதை அறிந்தவராய் (1தெச 5:5-15) அதைக் குறித்து அவர்களிடம் நேரில் பேசி (முகத்தைக் கண்டு) பவுல் ஆலோசனை கொடுக்க விரும்புகிறார். **ஒருவன் பலவிதமான ஆவிக்குரிய வரங்களையும் கிருபைகளையும் பெற்றவனாக இருந்தாலும் அனுதினமும் அவன் வளர்ச்சி அடையவேண்டிய அவசியம் உண்டு.** இத்தகைய விசுவாசக் குறைவுகளை நீக்குவதற்கு மிகுதியான ஜெபம் தேவைப்படுகிறது. அவர்களை ஊழியக்காரரர்கள் சந்தித்து உற்சாகப்படுத்தவேண்டியதும் அவசியமாயிருக்கிறது.

நம்முடைய பிதாவாகிய தேவனும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக. (3:11)

தன்னுடைய வழக்கத்தின்படி சபைக்கு ஆலோசனை வழங்கும் வேளைகளிலும் பவுல் 11 முதல் 13 வரையுள்ள வசனங்களை தேவனை நோக்கி சபையாருக்காக ஜெபிக்கிறார் என்று பார்க்கிறோம். ஜெபத்தின் துவக்கத்தில் பிதாவாகிய தேவனை சபையாரின் பார்வைக்குநேராகக் கொண்டுவருகிறார். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (மத் 6:9) என்று பிதாவை தகப்பனே என்று அழைக்கும் உரிமை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அவரை அழைத்து ஜெபிக்-

கும்படியாக குமாரனாகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஏனென்றால் நாம் ஒவ்வொருவரும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். *"நீங்கள் புத்திரரா-யிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்-தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை (பரிசுத்த ஆவியானவரை) உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா 4:6)*, ரோமர் *8:15ல்* பவுல் சொல்கிறார், *"நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்...."*.

தொடர்ந்து பவுலின் ஜெபம் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு நேராக ஏறெடுக்கப்படுகிறது. *1தெசலோனிக்-கேயர் 1:1ல்* சொல்லப்பட்டபடி இயேசு கிறிஸ்து என்று திருத்துவத்தின் இரண்டாவது நபரின் பெயர் குறிப்பிடப்-படவில்லை. *1பேதுரு 2:1ல்* பேதுரு அவரை *"நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்து"* என்று அழைக்கிறதைக் கவனியுங்கள். *"மகா தேவனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து" (தீத்து 2:13)* என்று திருத்துவத்தின் இரண்டாவது நபர் குறிப்பிடப்படுகிறார். *2தெசலோனிக்கேயர் 2:16,17ல்* பவுல் ஜெபிக்கிறார், *"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்-திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக"*.

பவுலின் ஜெபக்குறிப்பு என்ன என்பதைக் கவனியுங்கள் - உங்களிடம் வருவதற்காக வழியை தேவனும் கர்த்தராகிய இயேசுவும் ஆயத்தம் செய்யட்டும். சந்தர்ப்பம் கிடைக்கும்-போதெல்லாம் பவுல் தன் நிருபங்களை தேவனுக்கு நேராகத் திருப்பி ஒரு சிறிய ஜெபத்தை ஏறெடுப்பதைப் பார்க்கமுடியும். அவ்வப்போது அவர் தேவனோடு பேச ஆரம்பிக்கிறார். தேவனுடைய ஒத்தாசை இன்றி நம்முடைய வாழ்க்கையில் ஒரு

காரியத்தையும் செய்துகொள்ள முடியாது. **காலையில் ஜெபிக்-காமல் தன் அலுவல்களைக் கவனிக்க வெளியே புறப்படும் ஒரு மனிதன் தன்னை தேவனாக்கிக்கொள்ள முயல்கிறான்** என்பதை அறிந்துகொள்ளுங்கள். தேவனுடைய ஒத்தாசை இன்றி, அவருடைய வழிநடத்துதல் இன்றி அவருடைய அனுமதி இன்றி ஒரு சிறியகாரியங்கூட நம்மால் செய்துகொள்ள முடியாது.

1தெசலோனிக்கேயர் 2:18ல் "பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான்" என்று பவுல் கூறுகிறார். அந்த வேளையில் சாத்தானால் எவ்வாறு தடைசெய்யமுடிந்தது? தேவனுடைய ஆலோசனை-யைப் பெறாமல் பவுல் முயன்றதுதான் அதற்குக் காரணம். "நானே வர மனதாயிருந்தேன்" என்று பவுல் தன் சுயவிருப்பத்-தையும் முயற்சியையும் அறிவிப்பதிலிருந்தே இதை அறிந்து-கொள்ளலாம்.

"உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக" என்ற பவுலின் இந்தஜெபம் கேட்கப்பட்டது என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் 20:1,2 உறுதிப்படுத்துகிறது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின் பவுலின் மூன்றாவது மிஷனரி பயணத்தின்போது பவுல் தன்னுடைய சீஷர்களுடன் மக்கெ-தோனியா சென்று கிரேக்கு தேசத்தில் ஊழியம் செய்தார்கள் என்று பார்க்கிறோம். **நம்முடைய ஜெபம் கேட்கப்படாமல் போவதே இல்லை** . யோவான் 14:13ல் கிறிஸ்து இவ்வாறு வாக்குக்கொடுக்கிறார், "என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்". யோவான் 16:23,24ல் சொல்கிறார், "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வ-தெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயி-ருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்". யோவான் 15:7ல் சொல்-கிறார், "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும்

நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்".

நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து (3:12)

இது பவுலின் இரண்டாவது ஜெபக்குறிப்பாகக் கருதப்பட வேண்டும். முந்தின ஜெபத்தின்படி ஒருவேளை தேவன் நாங்கள் உடனடியாக வருவதற்கு தேவன் வழியைத் தயார் செய்யவில்லை என்றாலும் நாங்கள் உங்களை நேசித்து அன்பு செலுத்துவதுபோல் நீங்கள் ஒருவரோடு ஒருவர் அன்புசெய்யவும், அது மட்டுமல்ல, சகல மக்களிடமும் அன்பு செலுத்தவும், அதற்கேற்றபடி உங்களிடம் காணப்படும் அன்பை தேவனாகிய கர்த்தர் பெருகச் செய்யவேண்டும் என்று பவுல் பிரார்த்திக்கிறார்.

தன்னுடைய நிருபங்களினிமித்தம் அப்போஸ்தலனாகிய யோவான் 'அன்பின் அப்போஸ்தலன்' என்று அழைக்கப்பட்டாலும் பவுல் 1கொரிந்தியர் 13-வது அதிகாரத்தில் அன்பு என்றால் என்ன என்பதை தெளிவாக அறிவிக்கிறார். அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை என்கிறார். அன்பு எனக்கிராவிட்டால் என்னுடைய தானதர்மங்களினால் எனக்குப் பிரயோஜனம் இல்லை என்கிறார். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனம் ஒழிந்துபோகும், பாஷைகள் ஒழிந்துபோகும், அறிவு ஒழிந்துபோகும் என்கிறார் (வசனம் 8). முடிவாக 13வது வசனத்தில் சொல்கிறார், "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இன்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது".

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1யோவான் 4:8) என்பதினால் அன்பைவிட முக்கியமானது ஒன்றும்

இருக்கமுடியாது. "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக (மத் 22:39) என்பது இரண்டாவது பிரதானமான கட்டளையாக இயேசு குறிப்பிட்டு, தேவனாகிய கர்த்தரிடத்திலும், பிறனிடத்திலும் அன்புகூர-வேண்டும் என்ற "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்-பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்-கிறது" (வசனம் 40) என்கிறார் இயேசு. "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் (சீனாய் மலையில் மோசே மூலமாகக் கொடுக்கப்பட்ட 613 பிரமாணங்களும்) நிறைவேறும்" (கலா 5:14) என்கிறார் பவுல்.

சபையாரின் அன்பு பெருகவேண்டும் என்று மட்டும் சொல்லவில்லை - நாங்கள் உங்களிடத்தில் வைத்திருந்த அன்புக்கொப்பாய்ப் பெருகவேண்டும் என்கிறார். மிகுந்த உபத்திரவத்தின் மத்தியிலும் (1தெச 1:6) அவர்களிடமிருந்து சபையார்மேல் மிகுந்த அன்பு வெளிப்பட்டதை சபையார் அறிந்துகொள்ளாதிருக்கமுடியாது. சபையாரிடமிருந்து வெளிப்-பட்ட அன்பு எப்படிப்பட்டது என்பதை 1:3, 3:6 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே பவுல் குறிப்பிட்டதைப் பார்த்தோம்.

அந்த அன்பை தேவன் இன்னும் பெருகச்செய்யவேண்டும் என்று பவுல் வேண்டிக்கொள்கிறார். 2தெசலோனிக்கேயர் 1:3ல் சொல்கிறார், "நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரி-லொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது".

சபையார் ஒருவர் மேல் ஒருவர் அன்பு செலுத்துங்கள் என்று சொல்லுவதோடு பவுல் நிறுத்திக்கொள்ளவில்லை. சபையில் தங்களை இணைத்துக்கொள்ளாத மற்ற மனுஷரிடத்-திலும் அவர்கள் அன்புள்ளவர்களாய்க் காணப்படவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். முழு மனித இனத்தையும் நாம் நேசிக்க வேண்டும். நம்முடைய மனுஷீக முயற்சியினால்

இதை நாம் நடப்பிக்கமுடியாது என்பதினால் கர்த்தர் உங்களை இந்த அன்பில் பெருகவும், நிலைத்தோங்கவும் செய்யவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார்.

'கர்த்தர்' என்ற வார்த்தை பிதாவையோ அல்லது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையோ குறிக்கலாம் என்றாலும் பவுல் பொதுவாக அந்த வார்த்தையை கூடுதலாக குமாரனோடு இணைத்துப் பேசுவதையே பார்க்கிறோம். ரோமர் *8:39*ல் இவ்வாறு வாசிக்கிறோம். "உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்".

இந்தச் சகோதர அன்பில் நம்மைப் பெருகச் செய்வது நம்முடைய முயற்சியினால் நடைபெறக்கூடிய காரியம் அல்ல என்பதை உணர்ந்தவராய் கர்த்தர் அதைப் பெருகச் செய்ய-வேண்டும் என்று வசனத்தின் கடைசிப் பகுதியில் கேட்டுக்-கொள்கிறார். நம்மில் அன்பை வளரச்செய்யவேண்டும் என்ப-தற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். *1*தீமோத்தேயு *1:5*ல் பவுல் இதைத் திட்டவட்டமாக அறிவிக்கிறார், "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே".

இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு-கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்-படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. (3:13)

இந்த நிருபத்தில் ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் பவுல் கிறிஸ்துவின் வருகையைக்குறித்துப் பேசுகிறார் என்பதைப் பார்த்தோம் *(1:10, 2:19, 3:13, 4:13-18, 5:10. 5:23)*. "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி *22:12*) என்பதுதான் கிறிஸ்து சபைக்குக் கொடுத்த மிக முக்கியமான அறிவிப்பு. இந்த

உலகத்தில் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்பதை அறிவிக்கும் அதே வேளையில் அவருடைய வருகையின்போது நாம் அவருக்கேற்ற பரிசுத்தத்தோடு காணப்படவேண்டும் என்பதினால் அதைக் குறித்துக் கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதை பவுல் அறிவிக்கிறார். பிதாவாகிய தேவனுக்குமுன் நாம் பரிசுத்தராயும், குற்றமற்றவர்களாயும் இருக்கவேண்டும் என்கிறார்.

கிறிஸ்துவின் வருகையைப்பற்றி அறிவிக்கும் பவுல் அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் அனைவரோடும் வருவார் என்கிறார். ஒருசில பரிசுத்தவான்களோடு வருவார் என்றோ அல்லது தேவதூதர்கள் அனைவரோடுங்கூட வருவார் என்றோ சொல்லப்படவில்லை. "என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" என்று சகரியா 14:5லும் சொல்லப்பட்டிருக்கிறது.

பரிசுத்தவான்கள் என்ற வார்த்தை பொதுவாக தேவனோடிருக்கும் தேவதூதர்களைக் குறிப்பிடுகிறது. "காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன்" (தானி 4:13) என்கிறார் தானியேல். மத்தேயு 25:31ல் அவர்கள் 'பரிசுத்த தூதர்' என்று குறிப்பிடப்படுகிறார்கள். 2தெசலோனிக்கேயர் 1:8ல் 'வல்லமையின் தூதர்' என்று குறிப்பிடப்படுகிறார்கள். "ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்" (யூதா 15) என்று வாசிக்கிறோம். மத்தேயு 13:41, 25:31, மாற்கு 8:38, லூக்கா 9:26, 2தெசலோனிக்கேயர் 1:8 ஆகிய பல வசனங்கள் கிறிஸ்துவின் வருகையோடு தேவதூதர்களை சம்பந்தப்படுத்துகின்றன.

அதே சமயத்தில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கும் தேவனுடைய பிள்ளைகளும் பரிசுத்தவான்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள். சங்கீதம் 31:23ல் தாவீது சொல்கிறார், "கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்". "அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை" (சங் 37:28). சங்கீதம் 116:15 சொல்கிறது, "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது".

*1தெசலோனிக்கேயர் 2:19*ல் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" என்ற வசனத்தைத் தியானித்தோம். இவ்விதமாக அவர் வரும்போது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாம் பிழையற்றவர்களாகவும், பரிசுத்த-முள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதினால்தான் *1தெசலோனிக்கேயர் 2:19*ல் பவுல் "எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்?" என்று சொன்னதைப் பார்த்தோம்.

கிறிஸ்துவினுடைய சந்நிதானத்தில் நிற்பது குறித்து ரோமர் *14:10*ல் பவுல் சொல்கிறார், "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே". *2கொரிந்தியர் 5:10*ல் சொல்கிறார், "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட-வேண்டும்". நாமெல்லாரும் என்று பவுல் தன்னையும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்திப் பேசுகிறார். கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நடக்கும் காரியங்கள் *1கொரிந்தியர் 3:11-13*ல் விளக்கமாகச் சொல்லப்படுகிறது.

கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கிறவர்கள் தங்களுடைய அஸ்திபாரத்தை கிறிஸ்துவின்மேல் போட்ட-வர்கள். இந்த அஸ்திபாரம் பலமானது. அதின்மேல் அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் கட்டிக்கொள்ளவேண்டும். இந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம் ஆகியவற்றினால் கட்டவேண்டும். புல், வைக்கோல் ஆகியவற்றால் கட்டினால் அக்கினியால் அந்த வேலைப்பாடு வெளிப்படுத்தப்படும். பரிசுத்த ஆவியானவராகிய அக்கினி கிறிஸ்தவர்களாகிய நம்முடைய கிரியைகளைச் சோதிக்கும்-போது அவை தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறவில்லை என்றால் அவை எல்லாம் வெந்துபோய் நஷ்டமடைய நேரிடும். *14,15*வது வசனம் சொல்கிறது, "ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப்பெறுவான். ஒருவன் கட்டினது வெந்து-போனால், அவன் நஷ்டமடைவான்; **அவனோ இரட்சிக்கப்-**

படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது-போலிருக்கும்*". இந்த நியாயத்தீர்ப்பைக் குறித்த விளக்கத்தை 1தெசலோனிக்கேயர் 4:16ஐத் தியானிக்கும்போது விளக்கமாக அறிந்துகொள்வோம்.*

பிழையற்றவர்களாக இருந்தால் மட்டும் போதாது, பாவமற்றவர்களாய் இருந்தால் மட்டும் போதாது, பரிசுத்த-முள்ளவர்களாய் இருக்கவேண்டும். *ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதற்கு முன்பு ஆதாமும் ஏவாளும் பிழையற்றவர்களாகவும் இருந்தார்கள் பாவமற்றவர்-களாகவும் இருந்தார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்-தார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியதிருக்-கிறது. ஏனென்றால் அவர்களிடமிருந்து நீதியின் கிரியை எதுவும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. 2கொரிந்தியர் 7:1ல் பவுல் சொல்கிறார், "மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்-குதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்".*

பரிசுத்தமாக்கப்படுவது என்பது தேவனுக்கென்று பிரித்-தெடுக்கப்படும் ஒரு அனுபவம் என்பதினால் பரிசுத்தமாக்கப்-படுதல் நம்முடைய இருதயத்தோடு, உள்ளான மனிதனோடு சம்பந்தப்பட்ட ஆவிக்குரிய ஒரு காரியம். இதையே "தேவன் உங்கள் உள்ளான இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" என்ற ஜெபக்குறிப்புடன் பவுல் இந்த அதிகாரத்தை நிறைவு-செய்கிறார்.

1தெசலோனிக்கேயர் 2:4ல் "இருதயங்களைச் சோதித்தறி-கிற தேவன்" என்று அவர் குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். நம்முடைய வெளிப்படையான வாழ்க்கை மட்டுமல்ல, நம்முடைய ஆத்துமாவின் உட்பகுதி, நம்முடைய மனச்சாட்சி தேவனால் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். இதுவே நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

அதிகாரம் – 4

பின்பு உயிரோடிருக்கும் நாமும்
கர்த்தருக்கு எதிர்கொண்டு போக,
மேகங்கள்மேல் அவர்களோடேகூட
ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு
இவ்விதமாய் எப்பொழுதும்
கர்த்தருடனேகூட இருப்போம்.

1தெசலோனிக்கேயர் 4:17

தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கை (4:1-5)

அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம். (4:1)

நான்காவது அதிகாரத்தில் முதல் 12 வசனங்களில் ஒரு புதிய வேதபகுதியைப் பவுல் துவக்குவதினால், "அன்றியும் சகோதரரே" என்று ஆரம்பிக்கிறார். பொதுவாகப் பவுல் தன்னுடைய நிருபங்களின் துவக்கத்தில் சத்திய உபதேசத்துக்கடுத்த காரியங்களை அறிவித்துவிட்டு தனிப்பட்ட மனிதர்களுக்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஆலோசனைகள், அறிவுரைகள், எச்சரிப்புகளை வழங்கும் பழக்கமுடையவர். இதுவரை தெசலோனிக்கேயர் நிருபத்தில், தான் அங்கு ஆரம்பித்த மிஷனரி ஊழியம், எதிரிகளால் அதற்கு ஏற்பட்ட சோதனைகள் ஆகியவற்றை பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

சபையாரைக் குறித்த நற்செய்திகளை தீமோத்தேயு மூலமாகப் பெற்றுக்கொண்ட பவுல் சபையாரின் வாழ்க்கை நடைமுறைகளைக் குறித்து கடைசி இரண்டு அதிகாரங்களில் பேச ஆரம்பிக்கிறார்.

1. பரிசுத்த வாழ்க்கைக்கு அழைப்பு *(4:1-12)*
2. வருகையைக் குறித்த அறிவிப்பு *(4:13-18)*
3. கர்த்தருடைய நாளைக் குறித்த எச்சரிப்பு *(5:1-11)*
4. சபைக்கு பொதுவான ஆலோசனை *(5:12-22)*
5. பவுலின் முடிவுரை *(5:23-28)*

கிறிஸ்துவின் வருகையைக் குறித்து *13*ம் வசனத்திலிருந்து *5*வது அதிகாரம் *10*வது வசனம் வரை அறிவிக்கவிருக்கும் பவுல், அதற்கு சபை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதினால் அவர்களில் காணப்படவேண்டிய பரிசுத்தத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறார். **பரிசுத்த ஜீவியத்தின் முக்கியத்துவத்தை இந்தக் கடைசி நாட்களில் ஊழியர்கள் அதிகமாக வலியுறுத்துவதில்லை.** "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" *(எபி 12:14)* என்று வாசிக்கிறோம்.

தீத்து *2:11-13*ல் பவுல் சொல்கிறார், "எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் (வருகைக்கும்) எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது".

அப்போஸ்தலனாகிய யோவானும் இவ்வுலக ஜீவியத்தின்போது பரிசுத்தமாக வாழவேண்டியதின் முக்கியத்துவத்தை இவ்வாறு அறிவிக்கிறார், "அவர் வெளிப்படும்போது (வருகை) அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" *(1யோவான் 3:2,3)*. கிறிஸ்துவும் சொல்கிறார், "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" *(யோவான் 17:19)*.

தெசலோனிக்கேயாவில் குறைவான நாட்கள் தங்கியிருந்து ஊழியத்தை நடப்பித்தாலும் தேவனுக்குப் பிடித்தமான, பரிசுத்தமான வாழ்க்கை எவ்வாறு வாழவேண்டும் என்பதை

பவுலும் சக ஊழியர்களும் கற்பித்ததை பவுல் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டுவருகிறார். கிறிஸ்துவை அறிந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளும் பலர் தங்கள் மனவிருப்பத்தின்படியும், தங்களுடைய பாரம்பரியங்களில் இருந்து விடுதலை பெறாமலும் வாழ்க்கை நடத்துவதை கிறிஸ்தவ வட்டாரங்களில் பார்க்கமுடியும். அது தவறு என்பதைப் பவுல் இந்த வேதபகுதியில் சுட்டிக்காட்டுகிறார். தேவன் பரிசுத்தராக இருப்பதால் அவர் நம்முடைய அன்றாட வாழ்க்கையைக் குறித்துக் கவனமுள்ளவராக இருக்கிறார். அது தேவனுடைய அங்கிகாரத்தைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டும்.

நம்முடைய அனுதின வாழ்க்கை தேவனுக்குப் பிரியமாயிருக்கவேண்டும், அவரால் அங்கிகரிக்கப்படக் கூடியதாய் இருக்கவேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை அப்போஸ்தலர்கள் தெசலோனிக்கேயருக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அதை அவர்கள் கேட்டு ஏற்றுக்கொண்டார்கள் என்பதைப் பவுல் சபையாரின் நினைவுக்குக் கொண்டுவருகிறார்.

"தேவனுக்குப் பிரியமானவன்" என்ற சாட்சியைப் பெற்றுக்கொண்ட ஒரு மனிதன் ஏனோக்கு *(எபி 11:5)*. தேவனுக்குப் பிரியமானவனாக அவன் காணப்பட்டபடியால் தேவனோடே சஞ்சரிக்கும் பாக்கியத்தைப் பெற்றவனாகிறான் *(ஆதி 5:22)*. 24வது வசனம் இவ்வாறு சொல்கிறது, "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்".

மனிதர்களைப் பிரியப்படுத்தும் விதத்தில் வாழ நாம் முயன்றோமானால் நாம் தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாக இருக்கவே முடியாது. "நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" *(1தெச 2:4)* என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். **ஒருவேளை மற்றவர்களைப் பிரியப்படுத்தும் விதத்தில் நாம் நடக்காமல் இருக்கலாம், ஆனால் நம்மை நாமே பிரியப்படுத்தும் விதத்தில் நடக்கலாம். அதுவும் தவறு.** தேவனுக்கு மட்டுமே நாம் பிரியமான விதத்தில்

நடக்கவேண்டும். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" (மத் 6:24, லூக்கா 16:13) என்கிறார் இயேசு.

'நடக்கவேண்டும்' என்று பவுல் சொல்லும்போது நம்முடைய அன்றாட வாழ்க்கைமுறை, பேச்சு, நாம் எடுத்து-வைக்கும் ஒவ்வொரு அடிச்சுவடும் எப்படி அமைந்திருக்கிறது என்பதில் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று ஆலோசனை வெளிப்படுகிறது. தேவன் சொல்கிறார், "என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்" (சங் 81:13).

இன்னொரு காரியத்தையும் பவுல் இந்த வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார். நாம் இப்பொழுது தேவனுக்குப் பிரியமான விதத்தில் நடந்து கொண்டிருப்பவர்களாக இருக்கலாம். அதில் நாம் சுயதிருப்தி அடைந்துவிடக்கூடாது, அதிகமதிகமாய்த் தேற வேண்டும் என்று பவுல் சொல்லும்போது மென்மேலும் அவ்வாறு வாழ முயற்சி செய்யவேண்டும் என்று பொருள்கொள்ளவேண்டும்.

நாம் தேவனால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் (1கொரி 6:20). நம்மை மீட்டுக்கொள்ளும்படியாக அவர் சரீரத்திலிருந்து ஒரு சொட்டு இரத்தத்தைக்கூட மீதிவைக்காமல் கல்வாரிசிலுவையில் சிந்தியிருக்கிறார். எனவே அனுதினமும் நாம் அவருக்குள் வளர்ச்சி அடைந்துகொண்டே இருக்க-வேண்டும் என்ற ஆலோசனை இங்கே சொல்லப்படுகிறது. தெசலோனிக்கேயர் மேல் குற்றஞ்சாட்டும் விதத்தில் பவுல் இவ்வாறு எழுதவில்லை. ஏனென்றால் அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை, அவர்களுடைய விசுவாசம் ஆகியவற்-றைக் குறித்து தீமோத்தேயு மூலமாக அவர் பெற்றுக்கொண்ட செய்தி அவரைச் சந்தோஷமடையச் செய்தது எனப் பார்த்தோம்.

கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்-குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. (4:2)

இயேசுவினால் நாங்கள் கொடுத்த கட்டளை என்று பவுல் சொல்லும்போது அவர் கொடுத்த அதிகாரத்தின் அடிப்படையில் அந்தக் கட்டளைகள் சபையாருக்குக் கொடுக்கப்பட்டன என்று பொருள் கொள்ளவேண்டும். அந்தக் கட்டளைகள் இந்த ஊழியர்களில் இருந்து புறப்படவில்லை. அது அவர்களுக்குச் சொந்தமானவையும் அல்ல. அப்போஸ்தலனாகிய பவுலே இந்தக் கட்டளைகளை அறியாதிருந்த நாட்கள் உண்டு.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே மூலமாக தேவன் 613 கட்டளைகள் அடங்கிய நியாயப்பிரமாணத்தைச் சீனாய் மலையில் கொடுத்ததுபோல சபைக்குத் தேவையான புதிய ஏற்பாட்டுக் கட்டளைகளை பவுல் மூலமாக சபைக்கு வெளிப்படுத்த தேவன் சித்தம் கொண்டார். இதுகுறித்து கலாத்தியர் 1:16, 17ல் பவுல் சொல்கிறார், “தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணாமலும், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுபோய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்”.

அரேபியாவில் (பத்துக் கற்பனைகள் மற்றும் பிரமாணங்கள் வழங்கப்பட்ட சீனாய் மலை அருகே) பவுல் தேவனுடைய பாதத்தில் காத்திருந்து புதிய ஏற்பாட்டுக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளச் சென்றிருந்தபோது பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் அவரோடு கொண்டுசென்றிருக்க வேண்டும். அங்கே தேவன் அவருக்குப் கிருபையை ஆதாரமாகக் கொண்ட புதிய ஏற்பாட்டுக் கட்டளைகளை வழங்கினார். அங்கிருந்து ஊழியத்துக்குப் புறப்படுமுன்பே புதிய ஏற்பாட்டுச் சத்தியங்கள் அனைத்தும் அவருக்கு அருளப்பட்டன.

அதனால்தான், “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்” (1கொரி 11:23) என்று பவுலால்

தைரியமாகச் சொல்லமுடிந்தது. அவர் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட உபதேசங்களே ஏற்றநேரத்தில் ரோமர், கொரிந்தியர், கலாத்தியர், எபிரெயர் முதலிய நிருபங்களாக வெளிப்பட்டு இன்றும் சபைக்கு ஆசீர்வாதமாக இருக்கிறது. கலாத்தியர் *1:11,12*ல் பவுல் சொல்கிறார், "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். **நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்**".

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து (4:3)

பரிசுத்தத்தைப் பற்றி நூற்றுக்கணக்கான வசனங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. நம்முடைய தேவன் "பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர்" *(யாத் 15:11)* "அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது" *(லூக்கா 1:49)* "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" *(எபி 12:14)* என்றெல்லாம் வாசிக்கிறோம். "நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" *(லேவி 22:9,32)* என்கிறார் தேவன். "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" *(சங் 29:2, 96:9)*, "அவருடைய நாமம் பரிசுத்தமானது" *(1நாளா 16:10 சங் 105:3)*, "பரிசுத்தமானது நித்திய நாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது" *(சங் 93:5)* என்று வாசிக்கிறோம்.

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்று பவுல் வெளிப்படையாக தெசலோனிக்கேய சபையாருக்கு அறிவிக்கிறார். அதுவே தேவனுடைய விருப்பம் என்கிறார். அவர்கள் சகலவிதமான வேசிமார்க்கத்துக்கும் (fornication, adultery) விலகியிருக்க வேண்டும் என்கிறார். பாலியல் குற்றங்களுக்கும் கிறிஸ்தவத்-

துக்கும் சம்பந்தமே இல்லை என்ற முறையில் திட்டவட்டமான முறையில் பவுல் சபையாரை எச்சரிக்கிறார்.

நம் தேவன் பரிசுத்தமானவர். அவருடைய பிள்ளைகள் பரிசுத்தமானவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். பவுல் சொல்கிறபடி, *"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1கொரி 6:19). 1கொரிந்தியர் 6:15,16ல்* பவுல் சொல்கிறார், *"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே?"*

கொரிந்து சபையாரிடம் காணப்பட்ட வேசிமார்க்கத்தினிமித்தம் பவுல் சொல்கிறார், "உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே; ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானே; அது அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரமாயிருக்கிறதே. இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள்" *(1கொரி 5:1,2)*. துணிகரமாகப் பாவம் செய்கிறவன் விரைவில் இறுமாப்படைகிறான்.

வேசிமார்க்கத்துக்கு விலகியிருங்கள் என்று கட்டளையிடும் பவுல், அதை எவ்வாறு மேற்கொள்ளுவது என்ற ஆலோசனையை *1கொரிந்தியர் 7:1-3ல்* இவ்வாறு கொடுக்கிறார், "நீங்கள் எனக்கு எழுதின காரியங்களைக் குறித்து நான் எழுதுகிறதென்னவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன்

சொந்தப்புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவன்". "பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடு". *(2தீமோ 2:22)* என்ற ஆலோசனையை பவுல் இளைஞனான தீமோத்தேயுவுக்கு வழங்குவதைக் கவனியுங்கள்.

பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதே தேவனுடைய சித்தம் என்று சொல்வதை அதுவே தேவனுடைய விருப்பம், மனிதர்களைக் குறித்த தேவனுடைய தீர்மானம் என்று பொருள் கொள்ளவேண்டும். **தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி, அதைக் கிரையமாகக் கொடுத்து கிறிஸ்து நம்மை மீட்டுக்கொண்டார் என்பதினால் அவருடைய சித்தத்தின்படி நடப்பது நம்முடைய கடமையாகிறது.** "பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்" *(மத் 7:21)* என்று கிறிஸ்து திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" *(மத் 12:50)* என்கிறார் இயேசு. பரிசுத்த ஜீவியம் தேவனுடைய சித்தம் என்பது மட்டுமல்ல, பரிசுத்தக் குலைச்சல் தேவ கோபாக்கினையை கொண்டுவரக்கூடியதாக இருப்பதினால் வேசிமார்க்கத்துக்கு விலகி இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல் (4:4)

நம்முடைய சரீரத்தைக் கட்டுப்படுத்தி அதைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தை பவுல் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டே போகிறார். தேவனை அறியாத, அவரை ஏற்றுக்கொள்ளாத, அவருடைய பரிசுத்தத்தின் மேன்மையை உணர்ந்துகொள்ளாத மனிதர்கள்தான் நம்மைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை மோக இச்சை ஒரு பாவமாகக் கருதப்படவில்லை.

அவர்களை அஞ்ஞானிகள் என்று பவுல் அறிவிக்கிறார். **ஞானத்துக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.** ஏனென்றால் பேதுரு சொல்கிறபடி, "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேதுரு 2:9). அவருடைய ஜனங்கள் என்ற முத்திரைபெற்ற நாம் அஞ்ஞானிகளைப் போல நடக்கமுடியாது.

மனிதர்கள் தங்களை மோக இச்சைகளுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள் என்றால் அதிலிருந்து விடுவிக்கப்படுவது மிகவும் கடினமான காரியம். அதனால்தான் பவுலிடமிருந்து இந்த எச்சரிக்கை வெளிப்படுகிறது. ரோமர் 13:13,14ல் பவுல் சொல்கிறார், "களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்".

இவ்விதமாகக் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டதினிமித்தம் உலகம் நம்மைக் கேலி செய்யலாம். உற்றார் உறவினர் நம்மைப் புறக்கணிக்கலாம். நம்மைச் சுற்றியிருப்பவர்களிடமிருந்து எதிர்ப்புகள் வரலாம். பேதுரு சொல்கிறபடி, "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்" (1பேதுரு 4:4). அதுகுறித்து எரிச்சலடையாமல், அல்லது விசனமடையாமல் நாம் செய்யவேண்டிய காரியம் என்ன என்பதைப் பவுல் அடுத்த இரண்டு வசனங்களில் ஆலோசனை தருகிறார்.

உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து: (4:5)

பரிசுத்த பைபிள் சொல்கிறது, "உங்கள் சரீரத்தை வெறித்தனமான உணர்வுகளுக்கு ஒப்படைக்காதீர்கள். தேவனை அறிந்துகொள்ளாதவர்கள்தான் அதனை அதற்குப் பயன்படுத்து-வார்கள்". ஒருவன் தன்னுடைய சரீரத்தை பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளவேண்டும். பாண்டம் என்ற வார்த்தை பாத்திரம் (vessal) என்று பொருள்படும். **ஒரு மனிதனுடைய ஆவியும் (spirit) ஆத்துமாவும் (soul) வாசம் செய்யும் இடமே அவனுடைய சரீரம் (body) என்று அழைக்கப்படுகிறது**. அந்தச் சரீரம் பரிசுத்தமாயும் கனமுள்ள-தாயும் ஆண்டுகொள்ளப்படவேண்டும் என்கிறார் பவுல்.

ஒரு மனிதன் ஆவி ஆத்துமா சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் சிருஷ்டிக்கப்பட்டவன், "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது" (நீதி 20:27) என்று வாசிக்-கிறோம். அது கர்த்தருக்குச் சொந்தமானது. உலகத்தோற்றத்-துக்கு முன்பே நம்முடைய ஆவி ஏதோ ஒரு நிலையில் கர்த்தரோடு இருந்தது. ஆதியாகமம் 2:7 சொல்கிறபடி "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்". மனிதனுடைய சரீரம் பூமியில் உள்ள மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது. சங்கீதம் 103:14 சொல்கிறது, "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்".

அந்த சரீரத்துக்குள் தேவனிடமிருந்த நம்முடைய ஆவி பிரவேசிக்கும்போது ஆத்துமா உருவாகிறது. ஒரு மனிதன் தன்னுடைய சரீரத்தின் மூலமாக இந்த உலகத்தின் காரியங்களில் ஈடுபட்டு வருகிறான். மனிதனில் காணப்படும் பார்வை, கேள்வி, தொடுதல், வாசனையை உணருதல், சுவாசித்தல்

போன்ற ஐம்புலன்களும் சரீரத்துக்கடுத்த காரியங்கள். சரீரத்தின் செயல்பாடுகளை உள்ளான மனிதனாகிய ஆத்துமா ஆளுகை செய்யவேண்டும் என்பதே தேவனுடைய தீர்மானம்.

ஒருவனுடைய ஆத்துமா அவனுடைய அறிவு, சித்தம் (இது வேண்டும், இது வேண்டாம் எனத் தீர்மானிக்கும் திறன்), உணர்ச்சிகள் (கவலை, துக்கம், மகிழ்ச்சி, வேதனை) ஆகியவற்றை உள்ளடக்கியது. அந்த ஆத்துமா தேவனுடைய ஜீவ சுவாசம் ஊதப்பட்டதன் விளைவாக மனிதன் பெற்றுக்கொண்ட ஆவியின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனின் ஆவியில்தான் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். மனிதனுடைய சரீரத்தின் செயல்பாடுகளும் அவனுடைய ஆத்துமாவின் ஆளுகைக்குட்பட்டதாகவே இருக்கவேண்டும்.

"ஒரு மனிதனின் ஆவி கர்த்தருக்கு முன்பாக ஒரு விளக்கைப் போலிருக்கிறது" என்பது பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு (நீதி 20:27). இந்த ஆவி மண்ணில் பிரவேசித்து சரீரத்தைப் பெற்று ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடைப்பட்ட நிலையில் ஆத்துமா உருவாகுவதற்கு முன்பே நாம் ஆவியில் தீபமாகக் கர்த்தருக்கு முன்பாக இருந்தோம். அதனால்தான் எபேசியர் 1:4ன்படி உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொள்ள முடிந்தது. உலகத்தோற்றத்துக்கு முன் நாம் ஏதோ ஒரு நிலையில் இருந்ததினால்தான் நம்மைத் தெரிந்துகொண்டார். இல்லாத ஒன்றை ஒருவரும் தெரிந்துகொள்ளமுடியாது.

உலகத் தோற்றத்துக்கு முன் நம்முடைய ஆவி இருந்தது என்பதை நீதிமொழிகள் 8ல் இருந்தும் அறிந்துகொள்ளலாம். அதில் உலகத்தோற்றத்துக்கு முன்பு தான் எங்கே இருந்ததாக கிறிஸ்து பேசுவதாக இருக்கிறது. பூமி உண்டாகுமுன், ஆதி முதற்கொண்டும் அவர் அபிஷேகிக்கப்பட்டிருந்தார். ஆழங்களும் ஜலம் புரண்டுவரும் ஊற்றுகளும் உண்டாகுமுன்னே அவர் ஜநிப்பிக்கப்பட்டார் (வசனம் 23,24). மலைகள் நிலைபெறு-

முன், வானங்கள், சமுத்திரம், பூமி உருவாக்கப்படுமுன் *(25-29)* "அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்" *(வ 30)*.

அடுத்த வசனம் என்ன சொல்கிறது என்பதைப் பாருங்கள். "அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்". **மனுமக்களாகிய நம்முடைய ஆவி உலகத்தோற்றத்துக்கு முன்பே பரலோகத்தில் அவரோடு இருந்தது.** அப்போஸ்தலர் நடபடிகள் *15:18*ன்படி "உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது". ஒரு தாயின் வயிற்றில் மனித சரீரம் உருவாகும்போது தேவனுடைய ஆவி மண்ணால் ஆன சரீரத்துக்குள் பிரவேசிக்கிறது. மனிதன் மரிக்கும்போது ஆவி தேவனிடத்தில் திரும்பிச் சென்று அடைக்கலமாகிவிடுகிறது.

அதனால்தான் பிரசங்கி எச்சரிக்கிறார், "மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" *(பிரசங்கி 12:7)*. "எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது; எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது" *(பிர 3:20)*. ஒரு மனிதன் மரிக்கும்வேளையில் அவனுடைய சரீரத்தில் இருந்து (மண்) ஆவியும், ஆத்துமாவும் வெளிவருகிறது, சரீரம் மண்ணில் புதைக்கப்படுகிறது. ஆவி தேவனிடம் போகிறது.

ஆத்துமாவுக்கு நடப்பது என்ன? வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் நாள்வரை அது பாதாளத்தில் வைக்கப்படுகிறது. சங்கீதம் *49:14*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "ஆட்டுமந்தையைப்போல பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்". பாதாளம் என்ற வார்த்தை நரகத்தைக் குறிப்பிடுவதில்லை. பாதாளத்தில் ஆத்துமாக்கள் வாதிக்கப்படுவதில்லை என்றாலும், ஆத்துமாக்கள் தங்கள் முடிவு நரகம்தான் என்பதை அறிந்திருப்பார்கள். அந்த நியாயத்தீர்ப்பு வெள்ளை சிங்காச-

னத்தில் வழங்கப்படும். வெளிப்படுத்தின விசேஷம் *20:13*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்".

ஒரு மனிதன் உயிரோடிருக்கும் நாட்களில் அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் சரீர பாண்டத்தில் வாசமாயிருப்பதினால் அதைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்வது அவனுடைய பொறுப்பில் விடப்படுகிறது. ஏனெனில் நாம் தேவனுடைய "ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும்" *(1பேதுரு 2:9)* இருக்கிறோம்.

பரிசுத்த ஜீவியம் (4:6-8)

இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். (4:6)

பவுல் ஊழியம் செய்த நாட்களில் கிரேக்க தேசத்தில் விபசாரம் போன்ற சரீர சம்பந்தமான பாவங்கள் பாவமாகக் கருதப்படவில்லை. எனவே இந்த அதிகாரத்தின் *3* முதல் *5* வரையுள்ள வசனங்களில் சரீரத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் பாதுகாத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தைப் பவுல் அறிவித்துவிட்டு, **முதலாவதாக** சபையாரிடம் காணப்படவேண்டிய சகோதர ஐக்கியம், அவர்கள் ஒருவரோடு ஒருவர் காட்டவேண்டிய அன்பின் மேன்மை ஆகியவற்றைக் குறித்து *6* முதல் *12* வரையுள்ள வசனங்களில் தொடர்ந்து எடுத்துரைக்கிறார்.

விபசாரம் செய்கிற ஒரு மனிதன் ஒரு விதத்தில் தன்னுடைய சகோதரனை வஞ்சிக்கிறவனாயும் இருக்கிறான். லேவியராகமம் *25:17* சொல்கிறது, *"உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது". "ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யக்கூடாது" (வ 14).* கர்த்தர் நீதியைச் சரிக்கட்ட வல்லவராயிருக்கிறார் என்று வசனம் முடிவடைகிறது. சங்கீதம் *94:1* சொல்கிறபடி, *"அவர் நீதியை சரிக்கட்டுகிற தேவனாயிருக்கிறார்".*

நம்முடைய சகோதரர்களை நாம் வஞ்சிக்கும்போது ஒருவேளை அவர்கள் நமக்கு எதிராக செயல்படமுடியாமல் இருக்கலாம். ஆனால் உபாகமம் *32:35* சொல்கிறபடி *"பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது".* தேவன் நமக்கு எதிராக செயல்பட ஆரம்பிப்பார். *"சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர் 1:18)* என்கிறார் பவுல். **நியாயத்தீர்ப்பு பரலோகத்திலிருந்து வெளிப்படுவது நிச்சயம்.**

நாம் யாரை வஞ்சித்தோமோ அந்த சகோதரனால் நமக்கு விரோதமாகப் புறப்பட்டு வர முடியாமல் இருக்கலாம். ஆனால் பவுல் தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த நாட்களிலேயே தேவன் இந்தக் காரியத்தில் நீதியைச் சரிக்கட்ட வல்லவராயிருக்கிறார் என்பதை அறிவித்து அவர்களை எச்சரித்திருக்கிறார். மத்தேயு *10:28*ல் கிறிஸ்து அறிவிக்கிறார், *"ஆத்துமாவைக் கொல்ல வல்லவராயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்".* நம் ஆத்துமாவை கொல்ல வல்லவரிடமிருந்து ஒருவனாலும் தப்பித்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் பவுல் சொல்கிறபடி, *"சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" (2கொரி 5:10).*

தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். (4:7)

கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் ஏன் பரிசுத்தம் காணப்பட வேண்டும் என்பதற்கான **இரண்டாவது** *காரணம் இங்கே சொல்லப்படுகிறது. நாம் பாவங்களில் வாழ்வதை தேவன் விரும்பவில்லை என்பதினால் நாம் பரிசுத்தமாக வாழ வேண்டும். பரிசுத்தமான தேவன் நாம் பாவங்களில் வாழ்வதை ஒருபோதும் விரும்புவதில்லை. நாம் "பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள்" (1கொரி 1:2). 2தீமோத்தேயு 1:9 சொல்கிறது, "நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்".* **தேவன் விரும்பும் காரியங்களை செய்வதிலும், தேவன் விரும்பாததை விலக்குவதிலுந்தான் நம்முடைய பரிசுத்தம் அடங்கியிருக்கிறது.** *1பேதுரு 1:15,16ல் பேதுரு சொல்கிறார், "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது-போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே".*

முந்தின வசனத்தில் மனிதரில் காணப்படும் பரிசுத்தக் குலைச்சலான காரியங்களினிமித்தம் தேவன் நீதியைச் சரிக்கட்டுவார் என்றும், அவர்கள் சந்திக்கவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேசிய பவுல் தேவனுடைய அழைப்பின் பின்னணியில் செயல்படும் அவருடைய பிரதானமான நோக்கம் என்ன என்பதை இந்த வசனத்தில் அறிவிக்கிறார். தெசலோனிக்கேயரை தேவன் அழைத்தார் என்றால் அதன் நோக்கம் அவர்கள் தங்களிடமிருந்த சகல அசுத்தமான காரியங்களையும் புறக்கணித்துவிட்டு தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான். அதற்கான அழைப்பு தேவனிடமிருந்தே வருகிறது. ஏனென்றால் 1தெசலோனிக்கேயர் 4:3ல் நாம் பார்த்தபடி "பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது".

ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்தஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான். (4:8)

கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்பதற்கான **மூன்றாவது** காரணம் இங்கே சொல்லப்படுகிறது. "ஆகையால்" என்று இந்த வசனம் துவங்குவதைக் கவனியுங்கள். எபிரெயர் *12:1*லும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முந்தின வேத பகுதிகளில் பவுல் அறிவித்த சத்தியத்தின் தொடர்ச்சி என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. *4:7*ல் நாம் பார்த்தபடி தேவன் நம்மை பரிசுத்தத்துக்கு அழைத்திருக்கிறபடியால் பவுல் தெசலோனிக்கேயரிடம் அறிவிக்கும் காரியம் இதுதான் - **உங்களைப் பரிசுத்தத்தில் நிலைத்திருக்கச் செய்யும்படியாகவே திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவராகிய தேவனை பிதா தந்தருளியிருக்கிறார்.** ஆவியானவர் சபையார் ஒவ்வொருவரிலும் வாசமாயிருந்து அவர்களை நடத்தும்படியாக பூமிக்கு வந்து வெளிப்பட்ட நாளே பெந்தெகொஸ்தே நாள் என்று அழைக்கப்படுகிறது.

கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் தன் சீஷர்களிடம் சொல்கிறார், "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப் *1:4*). அவர்களைவிட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போதும் அவர் சொல்கிறார், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக்கா *24:49*). ஆவியானவரின் ஒத்தாசையின்றி நடப்பிக்கப்படும் ஊழியங்களினால் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை. பிதாவின் வாக்குத்தத்தம் யோவேல் *2:28,29*ல் சொல்லப்பட்டிருக்கிறது, "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் .... ஊழியக்காரர்மேலும்

ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்".

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட நிகழ்ச்சி அப்போஸ்தலர் நடபடிகள் *2:3,4*ல் சொல்லப்பட்டிருக்கிறது. "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்".

இவ்விதமாக ஆவியானவர் தந்தருளப்படுவதற்குக் காரணம் என்ன என்பது யோவான் *14:16,17*ல் சொல்லப்பட்டிருக்கிறது. தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முந்தின நாள் தன் சீஷர்களிடம் கிறிஸ்து சொல்கிறார், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது **என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.** உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்". *26*வது வசனத்தில் சொல்லுகிறார், "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்".

யோவான் *15:26*ல் சொல்கிறார், "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்". சாட்சி கொடுப்பார் என்பது மட்டுமல்ல, சபைகளில் உருவாகும் பாவங்களைக் குறித்து கண்டித்து

உணர்த்துவார். யோவான் *16:7,8ல்* ஆண்டவர் சொல்கிறார், "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனாயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்".

பழைய ஏற்பாட்டு நாட்களில் பரிசுத்தவான்களுடன் பரிசுத்த ஆவியானவர் செயல்படவில்லையா என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. பூமியின் சிருஷ்டிப்பிலேயே ஆவியானவருக்கு முக்கியமான பங்கு இருந்தது என்பதை அறிவோம். தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் *(ஆதி 1:2)*. இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்தின் வழியே வழிநடத்திய மோசே அவர்களின் முரட்டாட்டத்தைக் குறித்து தேவனிடம் முறையிடும்போது அவர் சொல்கிறார், "உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்" *(எண் 11:17)*.

எண்ணாகமம் *27:18ல்* "ஆவியைப் பெற்றிருக்கிற யோசுவா" என்று வாசிக்கிறோம். யோசேப்பு *(ஆதி 41:38)*, ஒத்னியேல் *(நியா 3:10)*, கிதியோன் *(நியா 6:34)*, யெப்தா *(நியா 11:29)*, சிம்சோன் *(நியா 14:6,19)*, சவுல் *(1சாமு 10:10)*, எலியா *(1இராஜா 18:12)*, எலிசா *(2இராஜா 2:15)*, எசேக்கியேல் *(2:2)*, சாமுவேல், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல், தாவீது, எலியா முதலிய தீர்க்கதரிசிகள் அவர்களில் செயல்பட்ட பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால்தான் தேவனுடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு அறிவித்தார்கள். அவர்களை எச்சரித்து சீரான பாதையில் நடக்கவைத்தார்கள்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டார் என்றாலும் அவர்களைவிடப் புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய நாம் மேலான சிலாக்கியத்தை உடையவர்கள். அந்த நாட்களில் அவர்களில் ஆவியானவர் நிரந்தரமாக வாசமாயிருந்ததில்லை. அவர்கள் மூலமாக வெளிப்பாடுகளையும், தீர்க்கதரிசனங்களையும் ஜனங்களுக்கு

வழங்கியபின் ஆவியானவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவார். அவர்களில் வாசமாயிருப்பதில்லை.

புதிய ஏற்பாட்டு நாட்களிலோ, கிறிஸ்துவின் திட்டவட்டமான வேண்டுதலினிமித்தம் நமக்கு அருளப்பட்ட ஆவியானவர் நமக்குள் நிரந்தரமாக வாசமாயிருக்கிறார். **இந்த அனுபவம் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல் என்றும் (அப் 9:17), அபிஷேகம் பெறுதல் என்றும் (2கொரி 1:21, 1யோவான் 2:20), முத்திரை போடப்படுதல் (எபே 1:13, 4:30) என்றும் குறிப்பிடப்படுகிறது.** இந்த ஆவியின் நிறைவைப் பெற கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனாலும் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவரையே பின்பற்றி வாழ வேண்டியது நம்முடைய கடமையாகிறது. "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் (யோவான் 15:6) என்கிறார் இயேசு. "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல" (2யோவான் 9) என்கிறார் யோவான்.

அந்த ஆவியின் நிறைவை தனிப்பட்ட விதத்தில் நாம் விரும்பி தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆவியானவர் சுயமாய் எதுவும் செய்வதில்லை. ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொண்டவர்களால் மட்டுமே தங்கள் அனுதின வாழ்க்கையில் அவருடைய வல்லமையையும், செயல்பாட்டையும், வழிநடத்துதலையும் அறிந்து, உணர்ந்துகொள்ள முடியும். அவர்களால் மட்டுமே மற்றவர்களை சரியான சத்தியத்துக்குள் வழிநடத்த முடியும். கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்முடைய ஆலோசனைகள், திட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது. கிறிஸ்துவின் போதனைகளில் நிலைத்திருப்பது மட்டுமே நமக்கு பாதுகாப்பைத் தரும்.

பரிசுத்தக் குலைச்சலை தங்களுடைய அனுதின வாழ்க்கையில் அனுமதிப்பவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளிய

பிதாவாகிய தேவனையே அசட்டை பண்ணுகிறார்கள். லூக்கா 10:16ல் கிறிஸ்து சொல்கிறார், "என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணு-கிறான்". தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று இஸ்ரவேலின் மூப்பர்கள் சாமுவேலிடம் கேட்கும்போது அது குறித்து வேதனையடைந்த சாமுவேல் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறார். அப்பொழுது தேவன் சொல்கிறார், "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்" (1சாமு 8:7).

வேசித்தனம், விபசாரம் மற்றும் சரீர சம்பந்தமான பாவ கிரியைகள் தவறானவை என்பதை மனிதன் தன்னுடைய ஞானத்தினால், அறிவுத் திறமையினால் அறிந்துகொண்ட காரியம் அல்ல. அது தேவனிடமிருந்து வெளிப்பட்ட பிரமாணம். "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (யாத் 20:14) என்பது தேவன் சீனாய் மலையில் வழங்கின பத்துக் கற்பனைகளில் ஏழாவது கற்பனை. விபசாரம் செய்கிற ஒரு மனிதன் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு எதிராகச் செயல்படுகிறான் என்பதல்ல, பரிசுத்த ஆவியானவருக்கும் அவரை வழங்கிய பிதாவாகிய தேவனுக்கும் எதிராக செயல்படுகிறான்.

1கொரிந்தியர் 6:15ல் பவுல் சொல்கிறார், "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா?". 18,19 வசனங்களில் பவுல் மேலும் சொல்கிறார், "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ் செய்கிறான். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல-வென்றும் அறியீர்களா?"

சகோதர அன்பு (4:9-12)

சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. (4:9)

சகோதர அன்பைக் குறித்து ஏற்கெனவே 1தெசலோனிக்கேயர் 3:12ல் பவுல் பேசும்போது அன்பில் சபையார் எல்லாரும் பெருகி, நிலைத்தோங்கவேண்டும் என்று ஜெபித்ததைப் பார்த்தோம். 3:6ல் அவர்களில் காணப்பட்ட விசுவாசத்தையும் அன்பையும் குறித்துப் பவுல் பாராட்டினதையும் தியானித்தோம். இந்த வேதபகுதியில் நான்கு வசனங்களில் சகோதர அன்பின் மேன்மையைக் குறித்தும் 1கொரிந்தியர் 13ம் அதிகாரம் முழுவதிலும் பவுல் பேசுவதை வாசித்துப் பாருங்கள். "நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" (1கொரி 13:2).

சகோதர சிநேகம் (love to brothers, philedelphia) குறித்து ரோமர் 12:10ல் பவுல் இவ்வாறு சொல்கிறார், "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்". எபிரெயர் 13:1ல் சொல்கிறார், "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது". 1பேதுரு 1:22ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்". "தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2பேதுரு 1:7).

அன்பு என்ற பதம் (agape, love) தன்னைத்தானே தியாகம் செய்யவும் ஆயத்தமாயிருக்கும் தெய்வீக அன்பைக் குறிக்கிறது. ஒருவர்மேல் ஒருவர் அன்புள்ளவர்களாயிருக்கவேண்டும் என்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் பதின்மூன்று முறை குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இயேசு சொல்கிறார், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" *(யோவான் 13:35)*.

*1யோவான் 4:9-11*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. **தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூரக் கடனாளிகளாயிருக்கிறோம்**".

ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டும் என்ற போதனையை வழங்கியது மனிதர்கள் அல்ல, தேவனே அதைப் போதித்திருக்கிறார் என்கிறார் பவுல். யோவான் சொல்லும்போது, "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்" என்கிறார் *(1யோவான் 3:16-18)*.

"நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல" *(1யோவான் 3:10)* என்ற திட்டவட்டமான அறிக்கை அன்பின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் யோவானிடமிருந்து வெளிப்படுகிறது. தேவன் அன்பாகவே இருப்பதினால் *(1யோவான் 4:8)* அவர் பூமியில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்களில் சொல்கிறார், "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" *(மத் 5:44).*

1யோவான் 4:20,21ல் இவ்வாறு வாசிக்கிறோம், "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்".

ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தவேண்டும் என்ற கற்பனையை தேவனிடமிருந்தே பெற்றிருக்கிறபடியினால் அதை நான் உங்களுக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை. தேவனே அவற்றை உங்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறார் என்கிறார் பவுல். *1யோவான் 2:27* தேவனால் நேரடியாகப் போதிக்கப்படும் அனுபவத்தைக் குறித்து இவ்வாறு சொல்கிறது, "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக".

அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் (4:10)

தெசலோனிக்கேயருக்கு பவுல் நிருபத்தை எழுதும் நாட்களில் மக்கெதோனியா தேசத்தில் பிலிப்பி, பெரியா, தெசலோனிக்கேயா என்ற மூன்று இடங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. வேறு சில இடங்களிலும் சபைகள் இருந்திருக்கலாம், ஆனால் அவைகளைக் குறித்து வேத புத்தகத்தில் குறிப்புகள் இல்லை. இந்தச் சபையாரும் தெசலோனிக்கேய சபையாரின் அன்பின் கிரியைகளினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள் என்கிறார் பவுல்.

ஆனால் இந்த அன்பின் கிரியைகளில் பவுல் முழுவதுமாக திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. அந்த அன்பில் அவர்கள் இன்னும் அதிகமாகப் பெருகவேண்டும் என்று சபையாருக்கு ஆலோசனை தருகிறார். அன்பின் பொதுவான தன்மை என்னவென்றால் **எந்த அளவுக்கு நாம் ஒருவர்மேல் அன்பு செலுத்தினாலும் அதைக்காட்டிலும் சற்று அதிகமாக அவர்மேல் அன்பு செலுத்த நம்மால் முடியும்.** நம்முடைய நற்கிரியைகளினிமித்தம் சுயதிருப்தி அடைய ஆரம்பித்தால் மட்டுமே மேற்கொண்டு நற்கிரியைகளை நடப்பிக்க முடியாமல் போய்விடும்.

புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு (4:11)

“புறம்பேயிருக்கிறவர்கள்” என்று பவுல் சொல்லும்போது தெசலோனிக்கேயா பட்டணத்திலுள்ள தேவனை அறியாத அவிசுவாசியான மக்களை பவுல் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்தவர்கள் இந்த புறஜாதியாருக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கையில் எந்தக் குறையும், தவறும், பிழைகளும் இருக்கக்கூடாது என்கிறார் பவுல். கொலோசெயர் *4:5*ல் சொல்கிறார், "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்". **கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் சாட்சியின் ஜீவிதம் இருக்கவேண்டும்**. நாம் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதை ரோமர் *13:13,14*ல் இவ்வாறு சொல்கிறார், "களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்".

கிறிஸ்தவர்களாகிய நம்மை, நம்முடைய வாழ்க்கையை, நம்முடைய நடத்தையை, நாம் செய்கிற வியாபாரம், தொழில், குடும்ப உறவுமுறை ஆகியவற்றை உலகத்து மனிதர்கள் கவனித்துக்கொண்டே இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அப்படி கவனிக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. நம்முடைய சாட்சியுள்ள ஜீவியத்தினால் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் சிலாக்கியத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். *1*தெசலோனிக்கேயர் *5:14-16*ல் இந்த ஜீவியம் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்று பவுல் பொதுவான ஆலோசனை தருவதை தியானிக்கவிருக்கிறோம்.

'ஒன்றிலும் உங்களுக்கு குறைவில்லாதிருக்கும்பொருட்டு' என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தரித்திரத்திலும், மற்றவர்களின் காணிக்கைகளையும், பொருள் உதவியையும் நம்பி அல்லது கடன் வாங்கி வாழ்க்கையை நடத்துவது சரியான கிறிஸ்தவ வாழ்க்கை அல்ல. இத்தகைய நடத்தைகளின் மூலம் தேவனுடைய நாமம் பரிசுத்தக் குலைச்சலாக்கப்படும் அபாயம் இருக்கிறது. தேவன் என்னை போஷிக்கட்டும் என்று காலத்தையும் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருப்பதும் ஒரு பாவக்கிரியை என்பதை அறிந்துகொள்ளவேண்டும். எபேசியர்

*4:28*ல் பவுல் சொல்கிறார், "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்". "எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்" என்று *1*கொரிந்தியர் *4:12*ல் பவுல் கூறுகிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பிரதிநிதிகளாக இந்தப் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதனால்தான் பவுல் கொலோசெயர் *3:17*ல் சொல்கிறார், "வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்".

நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். (4:12)

மூன்று முக்கியமான காரியங்களைக் குறித்து ஏற்கெனவே கட்டளையிட்டிருந்ததாக அறிவித்த பவுல் வசனத்தின் முடிவில் அவற்றைக் குறித்து சபையாருக்குப் புத்தி சொல்லுவதையும் பார்க்கிறோம்.

1. அமைதலுள்ளவர்களாக இருங்கள் (சமாதானத்துக்குரிய வாழ்க்கை வாழ்வது)
2. சொந்த அலுவல்களைப் பாருங்கள் (சொந்தமாக ஏதேனும் தொழில் அல்லது வேலை செய்வது)
3. சொந்தக் கைகளால் வேலை செய்யுங்கள் (சொந்த வேலைகளைச் செய்வதினால் எவரையும் சார்ந்திருக்கவேண்டிய அவசியமில்லை)

இந்த ஆலோசனையின்படி விசுவாசிகள் நடக்கும்போது அதைக் காணும் புறஜாதிமக்கள் அவர்களுடைய வாழ்க்கை முறையை மதிப்பார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தப்படுவார்கள்.

அமைதலுள்ள வாழ்க்கையைக் குறித்து பவுல் **முதலாவதாகப்** பேசுகிறார். "நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படியாக" *(1தீமோ 2:2)* அழைக்கப்பட்டிருக்கிறோம். அமைதலோடு வாழவேண்டும் என்ற ஆலோசனை பெண்களுக்கு பிரத்தியேகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள்" *(1தீமோ 2:11)*. "எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்" *(நீதி 1:33)*.

சொந்த அலுவல்களைப் பாருங்கள் என்ற பவுலின் ஆலோசனை **இரண்டாவதாகச்** சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் இதுதான், பவுல் ஊழியம் செய்த நாட்களில் ஆண்டவரின் வருகை எந்த நேரத்திலும் நடக்கலாம் என்று போதித்தபடியால் விசுவாசிகளில் சிலர் எந்த வேலையும் செய்யாமல், தாங்கள் கவனித்துவந்த தொழிலையும் நிறுத்திவிட்டு தங்களுடைய காலத்தையும் நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி பவுலை வந்துசேருகிறது.

*2தெசலோனிக்கேயர் 3:10-12*ல் பவுலிடமிருந்து அடியிற்கண்ட திட்டவட்டமான கட்டளை வெளிப்படுகிறது. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்ட-

வர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்". கொரிந்து சபையாருக்கும் பவுல் சொல்கிறார், "எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன், இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன்" *(2கொரி 11:9)*.

மூன்றாவதாகப் பவுல் தங்கள் சொந்த கைகளால் வேலை செய்ய வேண்டும் என்கிறார். கைவேலைகளைச் செய்து பிழைப்பு நடத்துவது அடிமைகளுக்கு மட்டுமே உரித்தானது என்ற கொள்கை அந்த நாட்களில் கிரேக்கர் மத்தியில் காணப்பட்டது. இது தவறு என்று பவுல் தன்னுடைய நடக்கையையே உதாரணமாகக் காட்டி அறிவிக்கிறார். 2தெசலோனிக்கேயர் 3:7-9ல் அறிவிக்கிறார், "நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்".

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியத்தைத் துவங்குவதற்கு முன் தச்சன் வேலையில் ஈடுபட்டிருந்தார் என்று பார்க்கிறோம் *(மாற்கு 6:3)*. சிருஷ்டி கர்த்தர் என்ற முறையில் *(கொலோ 1:16)* தேவனாகிய கர்த்தரும் வேலை செய்கிறவர்தான். ஏசாயா 40:28 சொல்கிறது, "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை".

வசனத்தின் துவக்கத்தில் கட்டளையிட்ட பவுல் இறுதியில் புத்திசொல்லுகிறேன் என்கிறார். ஏனென்றால், "மனுஷர்

யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்" (பிரசங்கி 3:13). உழைத்து வேலைசெய்து சம்பாதிக்கும் மனிதன் தன் வீட்டாருக்கும், உற்றார் உறவினருக்கும் ஆசீர்வாதமாக இருக்கிறான். 1தீமோத்தேயு 5:8ல் பவுல் சொல்கிறபடி, "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்".

இரகசிய வருகை (4:13-18)

அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. (4:13)

நான்காம் அதிகாரத்தின் முதல் வசனமும் "அன்றியும், சகோதரரே" என்று துவங்கினதைப் பார்த்தோம். மீண்டுமாக நாம் தியானிக்கும் 4:13ல் "அன்றியும், சகோதரரே" என்று தன்னுடைய வாசகர்களை அழைத்து 5:11 வரை கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சத்தியங்களை சபையாருக்கு பவுல் போதிக்கிறார்.

தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முந்தின நாளில் தன்னுடைய சீஷர்களின் துக்கத்தையும், சஞ்சலத்தையும் நீக்கும்விதத்தில் கிறிஸ்து சொல்கிறார், "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, **நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"** (யோவான் 14:2-3). மனிதனை இரட்சிக்கும்படியாக வந்த இயேசு கிறிஸ்து, அந்த இரட்சிப்பை ஏற்றுக்கொண்டவர்களை

தன்னோடு சேர்த்துக்கொள்ளும்படியாக மீண்டும் வரவிருக்கிறார் என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த ஏனோக்கு (ஆதி 5:24, எபி 11:5) மற்றும் எலியா (2இராஜா 2:11) மரணத்தை சந்திக்காமலேயே பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்பதை அறிவோம். இந்த நிகழ்ச்சி இரகசியவருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னடையாளமாய் இருக்கிறது.

"நான் திரும்பி வருவேன், என்னோடு உங்களை அழைத்துச் செல்வேன்" (பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு) என்ற கிறிஸ்துவின் அறிவிப்பை அப்போஸ்தலனாகிய பவுல் சபையாருக்குமுன் வைத்து அவர்களை உற்சாகப்படுத்த விரும்புகிறார். தன்னுடைய முதலாவது நிருபத்தில் கிறிஸ்துவின் இரகசிய வருகையை பவுல் முக்கியப்படுத்துப் பேசிவிட்டு, 2தெசலோனிக்கேயர் 2:2-12ல் பகிரங்க வருகையைக் குறித்த இரகசியங்களை அறிவிக்கிறார்.

தன்னுடைய மணவாட்டியாகிய சபையை ஏற்றுக்கொள்ளும்படியாகக் கிறிஸ்து வருவது இரகசிய வருகை (secret coming, parousia) என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் எல்லாருமே இரகசியவருகையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பது தவறு. அவரை முழுமையாக விசுவாசித்து, அவரை தன்னுடைய ஆண்டவராகவும், இரட்சகராகவும் அங்கிகரித்து அவரோடு ஞானஸ்நானத்தின் மூலமாக உடன்படிக்கை செய்துகொண்ட மணவாட்டியை வரப்போகிற உபத்திரவ காலத்திலிருந்து விடுவிக்கும்படியாகவே அவர் வருகிறார்.

அடுத்ததாக பூமியின் துன்மார்க்கரை நியாயந்தீர்க்கும்படியாக, பகிரங்கமாக, பூமியில் உள்ள சகல ஜாதிகளும் கோத்திரங்களும் காணும் விதத்தில் கிறிஸ்து வருவது **பகிரங்க வருகை** என்று அழைக்கப்படுகிறது. அது நியாயத்தீர்ப்பின் நாளாக (வெள்ளை சிங்காசனம்) அமைவதினால் பவுல் சொல்கிறார், "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை

நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப் 17:31).

பவுலும் அவருடைய சக ஊழியர்களும் தெசலோனிக்கேயாவில் சுமார் மூன்று வாரங்கள்தான் ஊழியம் செய்தார்கள் என்றாலும், கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சத்தியங்கள் அவர்களுக்குஅறிவிக்கப்பட்டிருந்தது. சபையார் இயேசுவின் வருகை உடனடியாக, தங்களுடைய ஜீவிய நாட்களிலேயே நடக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று பார்க்கிறோம். அது சம்பவிக்கவில்லை என்பது மட்டுமல்ல, இந்தக் காலகட்டத்தில் அவர்கள் உற்றார் உறவினர் சந்தித்த மரணம் அவர்களை குழப்பமடையச் செய்கிறது. கிறிஸ்துவின் வருகைக்கு முன் மரித்த இவர்கள் ஒருவேளை தேவனால் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்களோ என்று கலக்கமடைந்தார்கள். "மேகம் பறந்துபோகிறதுபோல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான். இனி தன் வீட்டுக்குத் திரும்பான், அவன் ஸ்தலம் இனி அவனை அறியாது" (யோபு 7:9,10), "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" (பிரசங்கி 9:6) என்று அங்கலாய்க்கிறார்கள்.

சபையாரை ஆறுதல்படுத்தி, உற்சாகப்படுத்தும் விதத்தில் பவுல் அறிவிக்கிற காரியம்,

1. வருகைக்கு முன் மரித்தவர்களைக் குறித்து துக்கப்படாதிருங்கள் (வசனம் 13)
2. மரித்த விசுவாசிகள் உயிர்ப்பிக்கப்பட்டு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் காணப்படுவார்கள் (வசனம் 14-16)
3. கிறிஸ்துவின் வருகையில் பூமியில் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஏற்கெனவே மரித்தவர்களுடன் கிறிஸ்துவுடன் இருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (வசனம் 17)


பிதாவின் வீடு (யோவான் 14:2)
இரகசிய வருகையும் பகிரங்க வருகையும் (தீத்து 2:13)

4. *இந்தச் சத்தியத்தை மற்றவர்களுக்கும் அறிவித்து அவர்களை ஆறுதல்படுத்தும்படியாக சபைக்கு பவுல் ஆலோசனை தருகிறார் (வசனம் 18)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார், "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா 8:32). வருகையைக் குறித்த சத்தியங்களை தெசலோனிக்கேயா சபையார்தான் சரியானபடி அறிந்துகொள்ளாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார்கள் என்பதல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு இன்றும் வருகையைப் பற்றிய பல்வேறு குழப்பமான உபதேசங்கள் திருச்சபைகளில் காணப்படுவதைப் பார்க்கிறோம்.

ஒரு கூட்டத்தார் கிறிஸ்துவின் இரகசிய வருகை அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்குட்பட்ட ஏழு ஆண்டுகால உபத்திரவ காலம் துவங்குவதற்கு முன் சம்பவிக்கும் என்றும் (pre-tribulationalists), இன்னும் சிலர் உபத்திரவ காலத்தின் முடிவில்தான் வருகை சம்பவிக்கும் என்றும் (post-tribulationalists), இன்னும் சிலர் வருகை உபத்திரவ காலத்தின் மத்தியில் சம்பவிக்கும் என்றும் (mid-tribulationalists) அறிவிக்கிறார்கள். ஒரு சில கிறிஸ்தவர்களைத்தான் கிறிஸ்து வருகையில் எடுத்துக்கொள்வார் (partial rapturists) என்று போதிக்கிறவர்களும் உண்டு.

இந்த வேதபகுதியில் பவுல் அறிவிக்கும் இரண்டு முக்கியமான காரியங்களை நாம் சந்தேகத்துக்கிடமின்றி அறிந்துகொள்ளவேண்டும்.

1. *கிறிஸ்துவின் வருகை விசுவாசிகளைப் பொறுத்தவரை பாரபட்சமில்லாத முறையில் இருக்கும் - வருகையின் போது பூமியில் உயிரோடு இருப்பவர்களும், வருகைக்கு முன்பாக மரித்த பரிசுத்தவான்களும் ஒரேவிதமான ஆசீர்வாதங்களையே பெறுவார்கள் (4:13-18).*

2. கிறிஸ்துவின் வருகை சடுதியில் சம்பவிக்கும். எவரும் எதிர்பாராத வேளையில் கிறிஸ்து வருவார் *(5:1-11)*. அந்த நாளை பிதா ஒருவரே அறிவார்.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களைக் குறித்துப் பேசும் பவுல் அவர்களை மரித்தவர்களாகக் குறிப்பிடாமல் நித்திரை அடைந்தவர்கள் என்கிறார். எகிப்து தேசத்தில் யாக்கோபு மரணமடையும் காலம் சமீபித்தபோது யோசேப்பை வரவழைத்து இவ்வாறு சொல்கிறார், "நான் என் பிதாக்களோடே படுத்துக்கொள்ளவேண்டும்; (அதாவது நித்திரையடைய வேண்டும்) ஆகையால், நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்களை அடக்கம் பண்ணியிருக்கிற நிலத்திலே என்னையும் அடக்கம் பண்ணு" *(ஆதி 47:30)* என்கிறார். தீர்க்கதரிசி நாத்தான் மூலமாக கர்த்தர் தாவீதிடம் சொல்கிறார், "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்" *(2சாமு 7:12)*. தாவீது மரிக்கப்போவதாக தேவன் அறிவிக்கவில்லை.

லாசரு மரித்தபின் கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம் சொல்கிறார், "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" *(யோவா 11:11)*. *13*-வது வசனம் சொல்கிறது, இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார். "பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" *(மாற்கு 5:39*, லூக்கா *8:52)* என்று ஜெப ஆலயத் தலைவனின் மகளைக் குறித்து கிறிஸ்து அறிவிக்கிறார்.

கல்லெறிந்து கொலைசெய்யப்பட்ட ஸ்தேவானின் மரணத்தைக் குறித்து அப்போஸ்தலர் நடபடிகள் 7:60ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி

நித்திரையடைந்தான்". 1கொரிந்தியர் 15:6, 11:30, வெளிப்படுத்தின விசேஷம் 14:13, 1 இராஜாக்கள் 22:40 வாசித்துப் பாருங்கள்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் மரித்தவர்களாகக் கருதப்படக்கூடாது என்பதுதான் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கும் காரியம். கிறிஸ்தவர்களாகிய நாம் அவரோடு சிலுவையில் அறையப்பட்டோம் என்பது மட்டுமல்ல, அவருக்குள் புதிய ஜீவனை உடையவர்களாகிறோம். கிறிஸ்துவின் ஜீவனை உடையவர்கள் ஒருபோதும் மரிப்பதில்லை. அவர்கள் மரித்துவிட்டதாக நாம் கருதும்போது நாம் யோபுவைப்போல புலம்ப ஆரம்பிக்கிறோம். "என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது; அவைகள் நம்பிக்கையில்லாமல் முடிந்துபோகும். என் பிராணன் காற்றைப் போலிருக்கிறதென்றும், என் கண்கள் இனி நன்மையைக் காணப்போவதில்லையென்றும் நினைத்தருளும். இப்போது என்னைக் காண்கிறவர்களின் கண்கள் இனி என்னைக் காண்பதில்லை; உம்முடைய கண்கள் என்மேல் நோக்கமாயிருக்கிறது; நானோ இல்லாமற்போகிறேன்; மேகம் பறந்து போகிறது போல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான். இனி தன் வீட்டுக்குத் திரும்பான், அவன் ஸ்தலம் இனி அவனை அறியாது" *(யோபு 7:6-10).*

பிரசங்கி சொல்கிறார், "மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" *(9:5,6).*

நம்பிக்கையற்றவர்களாகிய அவிசுவாசிகளைப் பொறுத்தவரை மரணம் இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவாக அமைகிறது. மரித்த ஒரு மனிதனுக்கு மீண்டுமாக பூமியில் வாழ்ந்து தன்னைச் சரிசெய்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை. ஒரு மனிதன் மரிக்கும்போது ஆவி,

ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுடைய ஆத்துமா அவனுடைய சரீரத்தை விட்டு வெளியே தள்ளப்படுகிறது. ஆவி தேவனிடம் திரும்பிச் செல்கிறது (பிர 12:7). மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட விதத்தை அறிவிக்கும் ஆதியாகமம் 2:7ல் இவ்வாறு வாசிக்கிறோம், "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி (dust from the ground) ஜீவசுவாசத்தை (breath of life) அவன் நாசியிலே (nostrils) ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் (living being)".

மனிதனுடைய சரீரம் பூமியின் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டது. அது ஒரு நாள் மண்ணுக்குத் திரும்பியே ஆகவேண்டும். அந்த மண்ணுக்கு ஜீவனை, உயிரை, ஆவியைக் கொடுக்கும்படியாக தேவன் மண்ணில் இருந்து எடுக்கப்பட்ட சரீரத்தின் நாசியில் ஊதுகிறார். அதன்விளைவாக மனிதன் ஜீவாத்துமாவாகிறான். இந்த ஆத்துமா ஒரு மனிதனுடைய ஆள்தத்துவத்தை உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஒரு மனிதன் எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும், எப்போது செய்யவேண்டும், ஏன் செய்யவேண்டும் என்பதையெல்லாம் அவனுடைய ஆத்துமாவே நிர்ணயம் பண்ணுகிறது.

ஐம்புலன்கள் (five senses) என்று குறிப்பிடப்படும் பார்த்தல், கேட்டல், தொடுதல், சுவைத்தல், நுகர்தல் போன்ற ஐந்து சரீரத்துக்கடுத்த காரியங்களும் மனிதனுடைய ஆத்துமாவின் ஆளுகைக்குள்ளாக இருக்கவேண்டும் என்றும், அவனுடைய ஆத்துமா அந்த சரீரத்தில் வாசம் செய்யும் ஆவியின் ஆலோசனையின்படி காரியங்களை நடப்பிக்கவேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார்.இதன் விளைவாக மட்டுமே ஒரு மனிதன் இந்தப் பாவம் நிறைந்த பூமியில் பரிசுத்தமாக வாழமுடியும். ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறித்த விளக்கங்கள் 5-வது அதிகாரத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சரீர இச்சைகள் ஐம்புலன்கள் மூலமாக மனிதனுடைய ஆத்துமாவை ஆளுகை செய்ய ஆரம்பிக்கும்போது அவனுக்குள்

பாவம் பிரவேசிக்கிறது. அதன்விளைவாகவே மனிதன் பாவத்தின் சம்பளமான மரணத்தின் ஆளுகைக்குள்ளாகிறான். **மரணம் தேவனால் நியமிக்கப்பட்ட, அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு காரியம் அல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.** தேவன் சிருஷ்டித்த காரியங்கள் அத்தனையும் ஆதியாகமம் முதலாவது அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அதில் மரணம் சொல்லப்படவில்லை.

மரணத்தைப் பற்றிப் பேசும் முதல் வசனம் ஆதியாகமம் 2:17ல் இவ்வாறு சொல்கிறது, "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்". பவுல் சொல்கிறபடி, "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). "மரணத்தின் கூர் பாவம்" (1கொரி 15:56) ஆதாம் ஏவாள் பாவம் செய்வதற்கு முன் ஏதேன் தோட்டத்தின் மரங்களில் இருந்து ஒரு இலை கூட பழுத்துக் கீழே விழுந்திருக்காது. ஒரு மிருகமும் மரித்திருக்கமுடியாது. ஏனென்றால் மரணம் இன்னும் உலகில் பிரவேசிக்கவில்லை.

பவுலும் சக ஊழியக்காரர்களும் தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த நாட்களில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சத்தியங்களை அறிவித்திருப்பார்கள். ஆதி அப்போஸ்தல சபை விசுவாசிகள் எல்லாருமே "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி 22:20) என்ற அறிவிப்பின் அடிப்படையில் அவருடைய வருகை உடனடியாக, தங்களுடைய வாழ்நாட்களில் நடக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை" (மாற்கு 9:1) என்ற கிறிஸ்துவின் அறிவிப்பும் அவர்களுடைய மனதில் பதிந்திருக்கவேண்டும். "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன" (யோவான் 21:23) என்று யோவானைக் குறித்து ஆண்டவர் பேதுருவிடம் பேசியதையும் அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

பவுல் தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்துகொண்டிருந்த நாட்களில் சபையாரில் எவரும் மரித்ததாகத் தெரிய-

வில்லை. ஆனால் பின்நாட்களில் சபையாரில் சிலர் மரணத்தைச் சந்திக்கிறார்கள். இது சபையில் ஒரு குழப்பத்தை உண்டாக்குகிறது. கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு நித்திரையடைந்த, அதாவது மரித்த தங்கள் உறவினர்களின் நிலைமை என்ன ஆகும்? "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை" *(பிர 9:6)* என்று அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் பரலோகத்துக்கு எப்படி வரமுடியும் என்று பயப்படுகிறார்கள்.

இப்படியாகத் துக்கித்துக் கலங்கும் சபையாரிடம் பவுல் சொல்கிற காரியம் இதுதான் - நம்பிக்கையற்ற உலகத்து மனிதர்களைப் போல நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் உங்கள் அறியாமையே. சரீர மரணத்தைக் கடந்த வாழ்க்கை ஒன்று நமக்கு உண்டு. *1கொரிந்தியர் 15:53,54*ல் பவுல் சொல்கிறபடி, "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்". சரீரமரணம் மனித வாழ்க்கையின் முடிவு அல்ல. ஏனென்றால் நாம் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நித்திரை அடைகிறோமே தவிர ஒருபோதும் மரிப்பதில்லை என்பதை சந்தேகத்துக்கிடமின்றி அறிந்துகொள்ளுங்கள். கிறிஸ்து திட்டவட்டமாகச் சொல்கிறார், "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" *(யோவான் 11:25,26)*. கிறிஸ்துவை நமது ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட மறுவினாடியே அவருக்குள் நாம் மரித்தவர்களாகிறோம். "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்" *(2கொரி 5:14)*. பவுல் சொல்கிறார், "நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே

தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" *(கொலோ 3:3)*. நாம் "மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" *(1யோவா 3:14)* என்கிறார் யோவான்.

கிறிஸ்து சொல்கிறார், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், **மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்** என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" *(யோவான் 5:24)*. பவுல் சொல்கிறார், "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்" *(எபே 5:14)*. "கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால் அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம்" *(ரோமர் 6:8)* என்பதினால்தான் "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" *(1கொரி 15:55)* என்று சவாலிட்டுப் பேசமுடிந்தது.

ஒரு மனிதன் மரிக்கும்வேளையில் அவனைப் பொறுத்தவரை நித்தியம் இரண்டாகப் பிரிந்துபோகிறது. பாவத்தில் மரித்த மனிதனுடைய ஆத்துமா வேதனை நிறைந்த நித்திய நரகத்துக்குக் கொண்டுபோகப்பட நியமிக்கப்படுகிறது. பரிசுத்தவான்களோ தாங்கள் உயிரோடு இருந்தநாட்களிலேயே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகிறார்கள். எனவே அவர்களுடைய சரீர மரணம் அவர்களைப் பொறுத்தவரை நித்திரையாகவேஅமைகிறது.

தூங்கிக்கொண்டிருக்கும் மனிதன் தன்னைக் குறித்த உணர்வில்லாத நிலையில் இருந்தாலும், அவன் இல்லாமல் போய்விடுவதில்லை (does not cease to exist). கிறிஸ்துவுக்குள் மரித்த ஒரு மனிதனுடைய மண்ணினால் உருவாக்கப்பட்ட சரீரத்தை கல்லறையில் அடக்கம் பண்ணிவிடுவார்கள். ஆனாலும் அவன் அங்கே நித்திரையில் இருக்கிறவனாகவே

எடுத்துக்கொள்ளவேண்டும் (மத் 27:52, யோவான் 11:11, 1கொரி 11:30,15:6, 18, 51, 2பேதுரு 3:4). **கல்லறை அவனைப் பொறுத்தவரை ஒரு படுக்கையாகவே அமைகிறது.** அவன் எழும்பும்போது எத்தனை நாட்கள், அல்லது ஆண்டுகள் உறங்கிக்கொண்டிருந்தான் என்பதை அறியமாட்டான். தானியேல் சொல்கிறார், "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" (12:2).

நித்திரையில் இருக்கும் ஒரு மனிதன் மரித்தவனைப்போலத் தோற்றமளித்தாலும் அவனுடைய உள்ளுணர்வுகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நித்திரை என்பதற்கு வேதத்தில் KOIMAO என்ற பதம் மத்தேயு 28:13, லூக்கா 22:45, அப்போஸ்தலர் நடபடிகள் 12:6 ஆகிய இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்த ஒரு மனிதனுடைய ஆவியும் ஆத்துமாவும் செயல்நிலையிலேயே இருக்கின்றன என்பதினால்தான் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட லாசருவைப் பற்றி கிறிஸ்து சொல்கிறார், "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறார்; நான் அவனை எழுப்பப்போகிறேன்" (யோவான் 11:10).

பவுல் அறிக்கையிடுகிறார், "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" (2கொரி 5:8,9). பிலிப்பியர் 1:21-24 ல் சொல்கிறார், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம், ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன், ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு

அதிக அவசியம்". கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவனைப் பொறுத்தவரை **அவன் சரீர மரணத்துக்குப் பின்னும் அவனுடைய ஆவி ஆத்துமாவில் கிறிஸ்துவோடு கொண்டிருந்த ஐக்கியம், உறவு ஆகியவற்றில் குறைவு ஏற்படுவதில்லை.**

இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். (4:14)

பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பில் இவ்வாறு வாசிக்கிறோம், "ஆகையால் இயேசுவை விசுவாசித்து மரித்துப்போன எல்லாரையும் தேவன் இயேசுவோடுகூட ஒன்றுசேர்ப்பார்". கிறிஸ்துவின் மனுஷீகப் பிறப்பும் அவருயைய சிலுவை மரணமும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததுமே அவர் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்கிறது. ரோமர் *1:5*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்". "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோமர் *4:25*). அவர் உயிர்த்தெழவில்லை என்றால் மனிதனுக்கு இரட்சிப்பு இல்லை.

அந்த நாட்களில் வாழ்ந்த கிரேக்க ஞானிகள் ஒரு மனிதனுடைய மரணத்தோடு அவனுடைய சகல காரியங்களும் முடிவடைகிறது என்ற நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள். **கல்லறையைக் கடந்த ஒரு வாழ்க்கை உண்டு என்பதை இன்றும் பல தத்துவ ஞானிகள் ஏற்றுக்கொள்வதில்லை.** ஆனாலும் மரித்தோர்கள் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கை யூதர்களிடம் எப்போதுமே இருந்து வந்தது. "உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்று மார்த்தாளிடம்

இயேசு சொன்னபோது அவள் சொல்கிறாள்: *உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான்" (யோவான் 11:24)* என்கிறாள் அல்லவா?

பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான், "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லா-விட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழா-விட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினா-ரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை" *(1கொரி 15:12-16)*.

இன்னொரு காரியத்தையும் கவனிக்கவேண்டும். விசுவா-சிகள் நித்திரை அடைந்தார்கள் என்று முந்தின வசனத்தில் பேசிய பவுல் இந்த வசனத்தில் கிறிஸ்து நித்திரை அடைந்தார் என்று சொல்லாமல் அவர் மரித்து, பின்பு எழுந்திருந்தார் என்று கிறிஸ்துவின் மரணத்தை முக்கியப்படுத்திப் பேசுகிறார். **இயேசு நித்திரை அடையவில்லை. மரித்தார். ஏனென்றால் கல்வாரி சிலுவையில் மனித இனத்தின் பாவங்கள் அத்தனையும் அவர்மேல் சுமத்தப்பட்டன.** "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" *(யோவான் 10:15)* என்பது அவருடைய திட்டவட்டமான அறிவிப்பு. "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" *(வசனம் 17,18)*.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், (ஆதாம், விலக்கப்பட்ட கனியைப் புசித்தபடியால்) மனுஷனால் (கிறிஸ்து) மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்; முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி 15:20-23).

கிறிஸ்தவர்களாகிய நாம் மரிப்பதில்லை, நித்திரை அடைகிறோம் என்பதை விளக்கமாகப் பார்த்தோம். எனவே கிறிஸ்துவுக்குள் நாம் உயிர்த்தெழுவோம் என்பது கிறிஸ்தவத்தின் மூல உபதேசங்களில் ஒன்று. இதில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு என்ன என்பதை ரோமர் 8:11ல் பவுல் இவ்வாறு விளக்குகிறார், *"இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் (பிதா) உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்".*

நாம் தியானிக்கும் வசனத்தில் "கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தவர்கள்" என்று எழுதாமல் இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் என்று பவுல் குறிப்பிடுவதையும் கவனியுங்கள். இயேசு என்ற பதம் கிறிஸ்துவின் மனுஷீகத்தைப் பறைசாற்றுகிறதாய் இருக்கிறது. இந்த நிருபத்தில் அவருடைய மனுஷீகப் பெயர் இந்த இடம் தவிர 1தெசலோனிக்கேயர் 1:10ல் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **மனிதனாக வெளிப்பட்ட இயேசுவே மரித்தார். கிறிஸ்து ஒருபோதும் மரிப்பதில்லை.** திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய கிறிஸ்து மரிக்கமுடியாது.

அவருடைய வருகை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை பவுல் அறிவிக்கத் தவறவில்லை. அவர் தனிப்பட்டவராய் வருவதில்லை, அல்லது அவர் தன்னுடைய கோடிக்-

கணக்கான தேவதூதர்களுடன் வருவதில்லை. யாரோடு அவர் பூமிக்கு வருகிறார்? தனக்குள் நித்திரையடைந்த சகல பரிசுத்தவான்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வருகிறார். ஏனென்றால் கொலோசெயர் *1:18* சொல்கிறது, "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்". இந்த முதற்பேறுமானவரைத் தொடர்ந்து இயேசுவுக்குள் நித்திரையடைந்த பரிசுத்தவான்கள் மற்றும் இரகசியவருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் அவருடைய வருகையில் காணப்படுவார்கள்.

தேவன் அவரோடேகூட கொண்டுவருவார் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். தேவன் என்ற வார்த்தை கூடுதலாகப் பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுகிறது என்பதை அறிவோம். அவரோடேகூட என்று சொல்லும்போது கிறிஸ்துவோடுகூட, கிறிஸ்து மூலமாக, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டான மத்தியஸ்தத்தின் மூலமாக என்று பொருள் கொள்ளவேண்டும்.

அவர்கள் நித்திரை அடைந்துவிட்டார்கள் என்பதோடு கிறிஸ்து அவர்களுக்காகப் பரிந்துபேசும் மத்தியஸ்த ஊழியம் நிறைவுபெறுவதில்லை. கிறிஸ்துவின் இரகசிய வருகையைத் (parousia) தொடர்ந்து மத்திய வானத்துக்கு விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு *(2கொரி 5:10)*, இயேசு கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மேல் நாம் கட்டிய கிறிஸ்தவ வாழ்க்கை அக்கினியால் *(பரிசுத்த ஆவி)* சோதிக்கப்பட்டு தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்வரை *(1கொரி 3:11-15)* கிறிஸ்து தன்னுடைய பரிந்துபேசுதலுடன் நமக்காகத் துணைநிற்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவின் நியாயாசனம் குறித்து இந்த அதிகாரத்தின் முடிவில் விளக்கமாகப் பார்ப்போம்.

இரகசிய வருகை என்பது சபையைக் குறித்த தேவனுடைய திட்டம். பகிரங்க வருகையைக் குறித்து மட்டுமே

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அறிவித்து வந்தார்கள். இரகசிய வருகையைக் குறித்த வெளிப்பாடுகள் பழைய ஏற்பாட்டில் இல்லை. ஏனென்றால் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் மேல்வீட்டறையில் அப்போஸ்தலர்களும், சீஷர்களும் ஜெபத்தோடு காத்திருக்கும்போதுதான் ஆவியானவர் அருளப்பட்டு சபை உருவாகிறது. தன்னுடைய மணவாட்டி சபை உபத்திரவ காலத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது என்பதற்-காகவே இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்-படுகிறது.

பொதுவாகக் கிறிஸ்துவின் பகிரங்க வருகையே வேதத்தில் இரண்டாவது வருகையாகக் குறிப்பிடப்படுகிறது. வேதத்தில் 318 இடங்களில் இந்த வருகையைக் குறித்த வெளிப்பாடுகளைக் காணமுடியும். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் மட்டுமல்ல, ஆண்டவராகிய இயேசுவும் இந்த இரண்டாவது வருகையைக் குறித்து அறிவிக்-கிறார்கள் என்பதினால் வேதத்தில் மூல உபதேசங்களில் ஒன்றாக வருகை கருதப்படுகிறது.

சகரியா 14:4ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்", கிறிஸ்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும் ஒலிவமலையில் வெளிப்பட்ட தூதர்கள் கிறிஸ்துவின் சீஷர்களிடம் சொல்கிறார்கள், "கலிலே-யராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்-கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப் 1:11).

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரைய-டைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. (4:15)

முக்கியமான சத்தியமாகிய இயேசுவின் வருகையைக் குறித்த காரியம் தன்னுடைய கற்பனையோ அல்லது சுயமாகச் சிந்தித்ததோ அல்லது தேவதூதன் தனக்கு அறிவித்த காரியமோ அல்ல, அது முற்றிலுமாக தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்ட ஒரு காரியம் என்பதை பவுல் வலியுறுத்த விரும்புகிறார். தான் வெளிப்படுத்தப்போகும் காரியம் மிகவும் முக்கியமானது என்றாலும், மனித ஞானத்தினால் முழுமையாக விளங்கிக் கொள்வது என்பது கடினமான ஒரு காரியம் என்பதினால் தேவனால் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட இந்த சத்தியத்தை சபையார் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். “கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது” என்ற பதம் ஆங்கில Moffat மொழிபெயர்ப்பில் The Lord has told us என்றும், வேறு ஒரு மொழிபெயர்ப்பில் We declare to you by the Word of the Lord என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு காரியம்.

தன்னுடைய வருகையைக் குறித்துக் கிறிஸ்து மத்தேயு *24:30,31*ல் இவ்வாறு பேசுகிறார், “அப்பொழுது, மனுஷ-குமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்-பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டுமறுமுனை மட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்”.

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்திருந்த நாட்களில் பேசிய எல்லா வார்த்தைகளும் வேத புத்தகத்தில் எழுதப்பட்டிருக்க முடியாது. “வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்” *(அப் 20:35)* என்று கிறிஸ்து பேசியதாக பவுல் அறிவிக்கிறார் என்றாலும் நான்கு சுவிசேஷங்களிலும் இந்த வார்த்தைகளை கிறிஸ்து பேசியதாக சொல்லப்படவில்லை.

இரகசிய வருகை	பகிரங்க வருகை
1. இரகசிய வருகை சபையைக் குறித்த தேவனுடைய திட்டம்	பகிரங்க வருகை இஸ்ரவேலரையும், புறஜாதியாரையும் குறித்த தேவனுடைய திட்டம்
2. சபை உபத்திரவ காலத்துக்குள் பிரவேசிக்காதபடி தன்னுடைய மணவாட்டியை கிறிஸ்து எடுத்துக்கொள்கிறார்.	தன்னுடைய மனைவியு-டன் உலகில் ஆயிரவருஷ அரசாட்சியை ஸ்தாபிக்க வருகிறார்.
3. சடுதியில், எந்நேரத்திலும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, இரகசிய வருகை அமைந்திருக்கும்.	பகிரங்க வருகை குறித்து பல முன்னடையாளங்கள் வேதத்தில் சொல்லப்-பட்டிருக்கின்றன.
4. உபத்திரவ காலம் துவங்குமுன் இரகசிய வருகை நடைபெறும்.	உபத்திரவ காலத்தை முடிவு செய்யும்படியாக பகிரங்க வருகை சம்பவிக்கும்.
5. மணவாட்டி சபையை கிறிஸ்து ஆகாயத்தில்தான் சந்திக்கிறார். அவர் பூமிக்கு வருவதில்லை.	உலகத்து மனிதர்கள் அத்தனை பேரும் காணத்தக்கதாக கிறிஸ்து பூமியில் வந்து இறங்குகிறார்.
6. இரகசிய வருகை பற்றிய உண்மைகள் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு அறிவிக்கவில்லை.	பகிரங்க வருகையைக் குறித்து எல்லாத் தீர்க்கதரிசிகளும் அறிந்திருந்தார்கள்.

யோவான் சுவிசேஷத்தின் கடைசி வசனத்தில் இவ்வாறு வாசிக்கிறோம், "இயேசு செய்த வேறுஅநேக காரியங்களு-முண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" *(21:25).*

கிறிஸ்துவிடமிருந்து நேரடியாக தெய்வீக வெளிப்பாடு-களைப் பெறும் மேலான சிலாக்கியத்தைப் பெற்ற பவுல் அதின் இரகசியத்தை *1கொரிந்தியர் 2:16*ல் இவ்வாறு அறிவிக்கிறார். "கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயி-ருக்கிறது". அதன்விளைவாகவே கிறிஸ்துவின் இராப்போஜனப் பந்தியில் நேரில் பங்குகொண்ட அப்போஸ்தலர்களைவிட அந்தப் பந்தியின்போது அவர்களுடன் இராத பவுல் தெளிவான முறையில் அறிவிப்பதை *1கொரிந்தியர் 11:23-31*ல் வாசிக்கி-றோம். *23*வது வசனத்தில் பவுல் அறிவிக்கிறார், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்-கொண்டேன்".

எபேசியர் *3:3*ல் தான் பெற்றுக்கொண்ட இன்னொரு மகத்துவமான வெளிப்பாட்டை பவுல் அறிவிக்கிறார், "புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கி-றார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்". **புறஜாதியார் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள முடியும் என்பதை யூதர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.** அதை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

ஆதி அப்போஸ்தல சபையின் நாட்களில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு மிகவும் பரவலாகக் காணப்பட்டது. மத்தேயு *24:42-44*ல் சொல்லப்பட்ட எச்சரிப்பு எல்லா வேளைகளிலும் அவர்களுடைய மனதில் இருந்தது. "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று

நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்". பிலிப்பியர் *3:20*ல் பவுல் சொல்கிறார், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்". பிலிப்பியர் *4:5*ல் சொல்கிறார், "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்".

தீத்து *2:13*ல் பவுல் சொல்கிறார், "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது". உயிரோடிருக்கும் "நாம்" என்று பவுல் சொல்லும்போது (*1*தெச *4:15*) கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது தானும் பூமியில் உயிரோடு இருப்பார் என்ற நம்பிக்கையோடு பேசுகிறார். கிறிஸ்துவின் வருகைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தாமதமாகும் என்ற சத்தியம் பவுலுக்கு அறிவிக்கப்படவில்லை. பிலிப்பியர் *3:20*ல் பவுல் சொல்கிறார், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்". அவர் வர ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும் என்பது பவுலுக்குத் தெரியாது.

இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான், கிறிஸ்துவின் வருகையின்போது இந்த உலகத்தில் உயிரோடு இருப்பவர்கள்தான் அவர் வழங்கும் நித்திய ஜீவனைப்பெற முடியும் என்று சொல்வது தவறு. அப்படியாகக் கிறிஸ்துவின் வருகையில் பூமியில் உயிரோடு இருப்பவர்கள்தான் அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமையைச் சுதந்தரித்துக்கொள்ள முடியும் என்ற உபதேசம் தெசலோனிக்கேயர் சபையில் காணப்பட்டது. இதைச் சுட்டிக்காட்டி பவுல் இந்த வசனத்தில்

அறிவிக்கும் காரியமாவது: உண்மையில் ஏற்கெனவே மரித்து அடக்கம் பண்ணப்பட்ட விசுவாசிகளே முதலாவதாக கிறிஸ்துவின் இரகசிய வருகையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு உயிர்த்தெழுகிறார்கள்.

எனவே வருகையின்போது உயிரோடு இருக்கும் நாம் (நாம் என்று சொல்லும்போது பவுல் தன்னையும் உட்படுத்திக்-கொள்கிறார் என்பதையும் கவனியுங்கள்) எழும்புவோம். "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசு-வைக் கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" *(2கொரி 4:14).* **கிறிஸ்துவின் வருகையின்போது உயிரோடிருப்பவர்கள் ஏற்கெனவே மரித்து அடக்கம் பண்ணப்பட்ட பரிசுத்தவான்-களைவிட எந்தவிதத்திலும் மேலான சிலாக்கியத்தைப் பெறுவதில்லை.** இரண்டு கூட்டத்தாருமே ஒரே விதமான மகிமையான சரீரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்படுகிறார்கள்.

நாம் அறிந்துகொள்ளவேண்டிய காரியம் என்னவென்-றால், கிறிஸ்து தன்னுடைய சம்பூரணமான மகிமையோடு **இரகசிய வருகையில் வெளிப்படும் நாள் தேவனால் மறைக்-கப்பட்ட ஒரு இரகசியமாக இருக்கிறது.** அதை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கும் உரிமை நமக்கு இல்லை. "மறைவான-வைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவை-கள்" *(உபா 29:29).* இயேசு திட்டவட்டமாகச் சொல்லியிருக்-கிறார், "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" *(மத் 24:36).* "குமாரனும் அறியார்" *(மாற்கு 13:32).* நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ-குமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" *(மத் 24:44).* "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையை-யாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" *(மத் 25:13).*

ஆனாலும் கிறிஸ்துவின் இரகசிய வருகை எப்போது சம்பவிக்கும் என்பதைக் குறித்த இரண்டு அடையாளங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. மத்தேயு 24:32,33ல் இயேசு சொல்கிறார், "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்-விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்றுஅறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மாற்கு 13:28,29).

வேதத்தில் அத்திமரம் இஸ்ரவேல் தேசத்துக்கு அடையா-ளமாயிருக்கிறது என்பதை அறிவோம். கி.பி.70ல் தீத்து இராயனால் இஸ்ரவேல் தேசம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, யூதர்கள் உலகமெங்கிலுமுள்ள பல தேசங்களுக்கு சிதறடிக்கப்-பட்டார்கள் என்பது சரித்திர ரீதியான உண்மை. ஆனால் 14.5.1948ல் நூற்றுக்கணக்கான உலக நாடுகளின் எதிர்ப்புகளின் மத்தியிலும் ஐக்கிய நாடுகளின் சபையால் ஒரு தனிப்பட்ட தேசம் என்ற அங்கீகாரத்தை இஸ்ரவேல் பெற்றிருக்கிறது. இஸ்ரவேல் என்கிற இளங்கிளை தோன்றியது மட்டுமல்ல, இந்த நாட்களில் துளிர்விட்டு வருகிறது என்பது சரித்திரரீதியான உண்மை. வருகையின் நாட்கள் சமீபமாகிவிட்டது.

வருகையைக் குறித்த இன்னொரு அடையாளம் மத்தேயு 24:14ல் சொல்லப்பட்டிருக்கிறது. "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சி-யாக அறிவிக்கப்படும். அப்போது முடிவு வரும்". உலகமெங்-கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவரும் முடிவின் நாட்களில் இருக்கிறோம். "மின்னல் வானத்தின் ஒருதிசையில் தோன்றி மறுதிசை வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனும் தம்முடைய நாளிலே தோன்றுவார்" (லூக்கா 17:24).

உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை என்ற இரகசியம் 1கொரிந்தியர் 15:51-53லும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "இதோ,

ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும்". "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" *(1கொரி15:22)*.

எக்காள சத்தம் தொனிக்கும்போது மரித்த விசுவாசிகள் அத்தனைபேரும் எப்போதும் வாழும்படியாக எழுப்பப்படுவார்கள். அதற்குப்பிறகுதான் உயிரோடிருக்கும் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம்.

மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள் (4:16-17)

ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். (4:16)

"கர்த்தர் தாமே" வானத்திலிருந்து இறங்கி வருவார் என்கிறார் பவுல். மணவாட்டியாகிய தன்னுடைய சபையை ஏற்றுக்கொள்ள யூத சம்பிரதாயங்களின் அடிப்படையில் மணவாளன் தன்னுடைய தோழர்களுடன் மணவாட்டியின் வீட்டுக்கு வந்து அவளை அழைத்துக்கொண்டு செல்லவேண்டும். மணவாட்டியை அழைத்துக்கொண்டு வரும்படியாகத் தன்னுடைய தோழர்களை, உற்றார் உறவினர்களை அனுப்புவதில்லை.

மரித்து உயிர்த்தெழுந்த இயேசு தன்னுடைய சீஷர்களை பெத்தானியா வரை அழைத்துக்கொண்டுபோய் (லூக்கா 24:50) அங்கிருந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார் (வசனம் 51). சீஷர்கள் வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில் இரண்டு தேவதூதர்கள் வெளிப்பட்டு "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப் 1:11). அப்போஸ்தலர் நடபடிகள் 1:11ல், "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" (மத் 24:27). வருகை மின்னலைப்போல இருப்பதினால் இரகசிய வருகையில் பங்குகொள்ளாத மனிதர்கள் அதை அறிந்துகொள்ளமுடியாது.

கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது மூன்று வித்தியாசமான சத்தங்கள் வெளிப்படுகின்றன என்றாலும், அந்த சத்தத்தை உலகத்து மனிதர்கள் கேட்பதில்லை என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் கிறிஸ்துவின் மணவாட்டி, அவள் மரித்த நிலையில் இருந்தாலும் சரி, உயிரோடு இருந்தாலும் சரி, அவளால் மட்டுமே அந்த சத்தத்தைக் கேட்கமுடியும். இரட்சிக்கப்படாத உலகத்து மனிதர்கள் அவருடைய சத்தத்தைக் கேட்பதில்லை.

1. ஆரவாரம்:

இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தம். மரணத்தை ஜெயங்கொண்ட இயேசு கிறிஸ்து, தான் யாருக்காக ஜீவனைக் கொடுத்தாரோ அவர்களைத் தன்னோடு சேர்த்துக்கொள்ளும்படியாக ஆரவாரத்தோடு பூமிக்கு வருகிறார். லாசருவின் கல்லறைக்கு வெளியே நின்றவராய், "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க்

கூப்பிட்டார்" (யோவான் 11:43) என்று வாசிக்கிறோம். கல்லறைக்குள் இருந்த லாசரு இந்த சத்தத்தைக் கேட்டு வெளியே வருகிறார். யோவான் 5:25ல் இயேசு சொல்கிறார், "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிற-வர்கள் பிழைப்பார்கள்". "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்-படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனை-வரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்" (வ 28).

இந்த ஆரவாரச்சத்தம் கிறிஸ்துவுடையது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அது அவருக்கு வழங்கப்பட்ட ஆணையோ, உத்தரவோ அல்ல - அவருடைய சத்தம். அவரது சத்தம் வெளிப்பட்டதும் மரித்த நிலையில் இருக்கும் பரிசுத்தவான்கள் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்-படும் மகிமையின் சரீரத்தோடு இணைந்து ஜீவனைப் பெறுகி-றார்கள். அவர்கள் உயிரோடிருந்த நாட்களில் பெற்றிருந்த சரீரம் மண்ணோடு மண்ணாகிறது. "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி 3:19) என்கிறார் தேவன்.

2. பிரதான தூதனுடைய சத்தம்:

ஆரவார சத்தம் கிறிஸ்துவுடையது. அதைத்தொடர்ந்து பிரதான தூதன் பேசுகிறான். யூதா 9, வெளி 12:7ல் "பிரதான தூதனாகிய மிகாவேல்" என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் காபிரியேல் தேவதூதனுடைய பெயரும் லூக்கா 1:19, 26 ஆகிய இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவ தூதர்களின் தலைவனாக பிரதான தூதன் வெளிப்பட்டு கிறிஸ்துவைச் சந்திக்க மரித்தோரையும் உயிரோடிருப்பவர்களையும் ஆயத்தப்படுத்துகிறான்.

3. தேவ எக்காளம்:

கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது எக்காளச் சத்தமும் கேட்கப்படும் என்று பார்க்கிறோம். 1கொரிந்தியர் 15:51,52ல் இவ்வாறு வாசிக்கிறோம், "கடைசி எக்காளம்

தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம், எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்". வெளிப்படுத்தின விசேஷம் *1:10, 4:1 8:2,6, 7-12,13, 9:13, 14, 18:22*, யாத்திராகமம் *19:16*, ஏசாயா *27:13*, யோவேல் *2:1*, சகரியா *9:14* ஆகிய வசனங்களிலும் எக்காள சத்தம் குறிப்பிடப்படுகிறது.

எரிகோ கோட்டையை ஏழாவது தரம் சுற்றிவரும்போது ஆசாரியர் எக்காளம் ஊதி ஆர்ப்பரிக்கும்போது கோட்டையின் அலங்கங்கள் இடிந்து விழுந்தன. மீதியானியரின் சேனையை முறியடிக்கும்போது கிதியோனின் முந்நூறு போர்வீரர்கள் எக்காளங்களை ஊதி "கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்" (நியா *7:20*) என்று ஆர்ப்பரித்தார்கள் என்று பார்க்கிறோம். "தேவன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காள சத்தத்தோடும் உயர எழுந்தருளினார்" (சங் *47:5*) என்று வாசிக்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆரவாரத்தோடும்,பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார் என்று இந்த வசனம் அறிவிக்கிறது. "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்" (யோவான் *14:18*) என்று தன்னுடைய சீஷர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்.

வானத்திலிருந்து கிறிஸ்து இறங்கி வந்ததும் பூமியில் நடக்கிற காரியம் என்ன என்பது வசனத்தின் கடைசியில் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருக்கிறார்கள். "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்" (யோவான் *5:25*) என்ற வசனத்தின்படி முதலாவது கிறிஸ்துவின் ஆரவாரசத்தத்தைக் கேட்கிற இவர்கள் தொடர்ந்து பிரதான தூதனுடைய சத்தத்தையும், தேவ எக்காளத்தின் சத்தத்தையும் கேட்கும்படியாக தங்கள்

கல்லறைகளிலிருந்து வெளிப்படுகிறார்கள். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மட்டுமே இந்த சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள். அவர்களுடைய சரீரம் மட்டுமே நித்திரையடைந்த நிலையில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கும் என்பதை விளக்கமாகப் பார்த்திருக்கிறோம். பூமியின் மண்ணில் இருந்து உருவாக்கப்பட்ட சரீரம் (ஆதி 2:7) மண்ணுக்குத் திரும்புகிறது (ஆதி 3:19) மனிதனுடைய நாசியில் ஊதப்பட்ட ஜீவசுவாசமே தேவனுடைய ஆவி. ஆவியும் சரீரமும் இணையும்போது மனிதன் ஜீவாத்துமாவாகிறான் (ஆதி 2:7). நாம் ஏற்கெனவே பார்த்தபடி "மண்ணானது, தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு" (பிர 12:7) போகவேண்டும் என்பது தேவனுடைய நியமம்.

கிறிஸ்துவுக்குள் மரித்த ஒரு மனிதனுடைய சரீரம் ஒரு மகத்துவமான மாற்றத்தைப் பெறுகிறது. பிலிப்பியர் 3:20,21ல் பவுல் அதை இவ்வாறு அறிவிக்கிறார், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, **நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்**". கிறிஸ்துவின் சரீரத்துக்கு ஒப்பாகும் மேன்மை மணவாட்டி சபைக்குக் கொடுக்கப்படுகிறது.

கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தபோது அவர் பெற்றுக்கொண்ட மகிமையான சரீரத்தைப்போல கிறிஸ்துவின் வருகையில் உயிர்ப்பிக்கப்படும் ஒவ்வொருவனும் பெற்றுக்கொள்கிறான். இதைக் குறித்துத்தான் பவுல் 2கொரிந்தியர் 5:1-4ல் "பூமியில் வாழ்வதற்குக் கிடைத்த கூடாரம் போன்ற நம் சரீரம் அழியக்கூடியது என்பதை நாம் அறிவோம். ஆனால் அது நிகழும்போது தேவன் நாம் வாழ்வதற்கென்று ஓர் இடம் வைத்துள்ளார். அது மனிதர்களால் அமைக்கப்பட்ட இடமல்ல,

அது பரலோகத்தில் உள்ள வீடு (மகிமையின் சரீரம் மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதல்ல). அது என்றென்றும் நிலைத்திருப்பது. ஆனால் நாம் இப்பொழுது இந்த சரீரத்தால் சோர்வுற்றிருக்கிறோம் (மண்ணில் உருவான மாமிச சரீரம்). பரலோக வீட்டைத் தேவன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அது நம்மை ஆடையுள்ளவர்களைப் போலாக்கும். நாம் நிர்வாணமானவர்களைப் போல இருக்கமாட்டோம். நம் கூடாரம் போன்ற இந்த சரீரத்தில் வாழும்வரை பாரமுள்ளவர்களாய் துன்பப்படுகிறோம். இந்த சரீரத்தை விட்டுவிடவேண்டுமென்று நான் கூறவில்லை, ஆனால் நாம், பரலோக வீட்டால் போர்த்தப்படவேண்டும் என்றே விரும்புகிறேன்" (பரிசுத்த பைபிள்).

மரித்தவர்கள் உயிர்பெற்று எழுந்திருக்கும் காரியத்தின் மேன்மையை பவுல் 1கொரிந்தியர் 15:42-44ல் இவ்வாறு அறிவிக்கிறார், "மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமை-யுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு". கிறிஸ்துவின் வருகையினால் ஏற்கெனவே மரித்தவர்கள் எந்தவிதத்திலும் பாதிப்படை-வதில்லை. மேன்மை அடைகிறார்கள்.

16வது வசனம் அறிவிக்கும் நிகழ்ச்சிகள் ஐந்தையும் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

1. கிறிஸ்து ஆரவார சத்தத்தோடு உரத்த கட்டளையிட்டவராய் வெளிப்படுவார்
2. தொடர்ந்து பிரதான தூதனுடைய குரல் ஒலிக்கும்
3. தேவ எக்காளம் தொனிக்கும்
4. கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வருவார்
5. மரித்தவர்கள் அழிவில்லாதவர்களாய் ஆகாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்

சபையார் ஆகாயத்துக்கு தேவ தூதர்களால் எடுத்துக்-கொள்ளப்படுவதைக் குறித்து மத்தேயு *24:31*ல் வாசிக்கிறோம். "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்-தோடே அவர் (மனுஷ குமாரன்) தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்". மாற்கு *13:26,27*ல் இவ்வாறு வாசிக்கி-றோம், "அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமை-யோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்". "அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனை மட்டுமுள்ள நாலு திசைகளிலிருந்து கூட்டிச் சேர்ப்பார்".

மூன்றாம் வானம்வரை அப்போஸ்தலனாகிய பவுல் எடுக்கப்பட்ட நிகழ்ச்சியை 2கொரிந்தியர் *12:2,3*ல் வாசிக்கி-றோம், "கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்-தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்".

ரோமர் *14:8*ல் பவுல் சொல்கிறார், "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்".

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (4:17)

முந்தின வசனத்தில் கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது (parousia) ஏற்கெனவே மரித்த விசுவாசிகளுக்கு என்ன

நடக்கிறது என்பதை அறிவித்த பவுல் இந்த வசனத்தில் அவருடைய வருகையின்போது இந்த பூமியில் உயிரோடிருக்கிறவர்களுக்கு சம்பவிக்கும் காரியம் என்ன என்பதைத் தெரியப்படுத்துகிறார். "உயிரோடிருக்கும் நாம்" என்ற வார்த்தை ஏற்கெனவே 15-வது வசனத்திலும் சொல்லப்பட்டதைப் பார்த்தோம். "உயிரோடிருக்கிறவர்கள்" என்று பவுல் அறிவிக்கும் பட்டியலில் பவுல்,சில்வான், தீமோத்தேயு ஆகிய ஊழியர்களும் இடம் பெறுகிறார்கள்.

"நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே" *(1கொரி 15:36)* என்று அறிக்கையிட்ட பவுல் கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது மரிக்காமல் இருக்கும்போதே தன்னுடைய சரீரம் மறுரூபமாக்கப்படுவதன் மூலமாக ஆகாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நித்திய நித்தியமாகக் கர்த்தருடன் இருக்கும் சிலாக்கியத்தைப் பெறமுடியும் என்பதை இந்த வசனத்தில் உறுதிப்படுத்துகிறார். ஆதியாகமம் *5:24*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்". ஏனோக்கு மரிக்கவில்லை.

*1*கொரிந்தியர் *15:51,52*ல் இந்தச் சத்தியத்தை சற்று விளக்கமாக பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்". "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, **நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்**" *(2கொரி 5:10)*

வருகையின் சமயத்தில் பூமியில் உயிரோடிருப்பவர்கள் அவரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமானால் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக ஆயத்தமாயிருக்கவேண்டும் என்ற சத்தியம் இங்கே வலியுறுத்தப்படுகிறது. மணவாளனுக்கு எதிர்கொண்டு போக மிகுந்த வாஞ்சையோடு பத்து கன்னியர்கள் புறப்பட்டாலும்கூட (மத் 25:1) "நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்" (வ 6) என்ற சத்தம் உண்டானபோது ஐந்துபேர் ஆயத்தமாயிருக்கவில்லை என்பதால் அவர்கள் கலியாண வீட்டுக்குள் பிரவேசிக்க முடியாமல் போகிறது. இந்த உவமையின் முடிவில் 13-வது வசனத்தில் இவ்வாறு சொல்லப்படுகிறது, "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்". விழித்திருக்கவேண்டியது கிறிஸ்தவர்களாகிய நம்முடைய கடமை, பொறுப்பு.

பிலிப்பியர் 3:20, 21ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கே-யிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமை-யான செயலின்படியே, **நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்-படுத்துவார்**".

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" (யோபு 19:25) என்று கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த யோபுவின் நிச்சயத்தைப் பாருங்கள்.

மத்தேயு 24:42-44ல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார், "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்தி-ருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று

வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்". **கிறிஸ்துவின் இரகசியவருகை நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கும் வேளையிலேயேகூட சம்பவிக்கலாம்.**

மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதாக பவுல் அறிவிக்கிறார். "மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்" (மத் 26:64) என்று கிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு அறிவித்திருக்கிறபடியால், எழுத்தின்படி மேகங்கள்மேல் உயிரோடிருக்கும் கிறிஸ்தவ விசுவாசிகள் கிறிஸ்துவை சந்திப்பார்கள் என்றும் எடுத்துக்கொள்ளலாம். தானியேல் 7:13ல் இவ்வாறு வாசிக்கிறோம், "மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்". சங்கீதக்காரன் சொல்கிறார், "மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது" (97:2). நாகூம் சொல்கிறார், "மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது" (1:3).

ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இந்த பூவுலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஆகாயத்து மார்க்கமாகத் தான் பரலோகத்துக்குள் பிரவேசிக்கவேண்டும். எபேசியர் 2:2ல் லூசிபர் "ஆகாயத்துப் அதிகாரப் பிரவுவாகிய ஆவி" என்று அழைக்கப்படுவதைக் கவனியுங்கள். சிருஷ்டிக்கப்பட்ட நாள்முதற்கொண்டு தேவசமுகத்தில் இருக்கும் மேலான ஸ்தானத்தைப் பெற்றிருந்த லூசிபர் தன்னுடைய பெருமையினிமித்தம், கீழே தள்ளப்படுகிறான்.

அவனுடைய மேன்மையை அறிவிக்கும் எசேக்கியேல் 28:12-15 வாசித்துப் பாருங்கள். "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன், பூரண

அழகுள்ளவன்" *(வசனம் 12)*. தேவன் சொல்கிறார், "நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்; தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்; அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்" *(வசனம் 14,15)*. **அவனுடைய பெருமையே அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது.**

ஏசாயா *14:13-15*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்".

ஆகாயத்து அதிகார பிரபு என்ற முறையில் சபை இரகசிய வருகையில் ஆகாயத்தின் வழியாக மேலே எடுத்துக்கொள்ளப்படுவதை சாத்தானுடைய சேனைகள் தடைசெய்ய முயற்சிக்கும் என்றும், ஆனாலும் மிகாவேல், காபிரியேல் தேவதூதர்களால் தோற்கடிக்கப்பட்டு பூமியிலே தள்ளப்படுவார்கள் என்றும் சில வேத பண்டிதர்கள் அறிவிக்கிறார்கள். "சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" *(லூக்கா 10:18)* என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒரு தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்தோடு தான் பூமியில் இருந்த நாட்களில் அறிவிக்கிறார்.

ஆகாயத்தில் "எடுத்துக்கொள்ளப்பட்டு" என்ற வசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு என்பதற்குப் பயன்படுத்தப்படும் arpazo என்ற கிரேக்க பதம் மிகுந்த வல்லமையோடு பறித்துக்கொள்ளப்படுதல் *(யோவான் 10:28,29)* அல்லது பிடுங்கிக்கொள்ளப்படுதல் என்று பொருள்படும். இவ்விதமாக

ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் நித்தியநித்தியமாகக் கர்த்தருடனே இருப்பார்கள். பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது, *"கிறிஸ்துவுக்குள் இறந்துபோனவர்கள் முதலில் உயிர்த்தெழுவார்கள். அதற்குப் பிறகு, அவர்களோடு அப்பொழுது வாழும் நாமும் எடுத்துச் செல்லப்படுவோம். கர்த்தரை வானவெளியில் சந்திப்போம். அதன்பின் எப்பொழுதும் கர்த்தரோடு இருப்போம்" (1தெச 4:16,17).*

இந்தச் சத்தியம் *1தெசலோனிக்கேயர் 5:10ல்* மீண்டுமாக வலியுறுத்தப்படுகிறது, *"நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், நம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே". கொலோசெயர் 3:4ல்* பவுல் சொல்கிறார், *"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்".* **நித்திய நித்தியமாய் அவரோடு இருக்கும்படியாக நாம் எடுத்துக்கொள்ளப்படுவோம்.**

"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய், அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" (சங் 103:12). இதன்விளைவாக *"நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி 5:8-10).*

கிறிஸ்துவின் நியாயாசனம்

விசுவாசிகளாகி, இரட்சிக்கப்பட்டவர்களாகி, மறுபடியும் பிறந்த அனுபவத்தோடு தேவனுடைய பிள்ளைகள் என்ற

அங்கீகாரத்தைப் பெற்ற நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதும் உடனடியாகப் பிதாவாகிய தேவனுடைய சமுகத்துக்குள் அழைத்துக்கொண்டு போகப்படுவதில்லை. "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோமர் 14:10) என்று பவுல் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன் தன்னையும் நிறுத்திப் பேசுகிறார்.

2கொரிந்தியர் 5:10ல் சொல்கிறார், "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்". ஏனென்றால் "பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:22).

கிறிஸ்துவின் நியாயாசனம் நியாயத்தீர்ப்பு bema judgement *என்று கிரேக்க மொழியில் குறிப்பிடப்படுகிறது. இது நியாயத்தீர்ப்பு வழங்கும் அல்லது தண்டனை கொடுக்கும் நீதிமன்றம் அல்ல, விசுவாச ஓட்டப்பந்தயத்தில் அதில் கலந்துகொண்டவர்கள் அத்தனைபேருக்கும் பரிசளிப்பு வழங்கும் இடமாக அமைகிறது. ஏனென்றால் நம்முடைய பாவங்கள் தேவனுடைய முதுகுக்குப் பின் எறியப்பட்டுவிட்டன (ஏசாயா 38:17). இந்த ஆவிக்குரிய ஓட்டத்தின் முடிவில் பீமா நியாயாசனத்துக்கு முன்பாக போட்டியிட்டவர்கள் அத்தனைபேரும் நிறுத்தப்பட்டு, பரிசுகள் பெறுவார்கள். கலந்துகொண்டவர்கள் அத்தனைபேரும் பரிசுகளைப் பெறுகிறார்கள்.*

கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு ஓட்டப்பந்தயமாக எடுத்துக்கொண்டால் அதில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கிறிஸ்து பரிசுகளை வழங்குகிறார். எவருமே ஆக்கினைத் தீர்ப்பைப் பெறுவதில்லை. ஏனென்றால் **அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்து என்கிற அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது.**

அவருடைய இரத்தம் அவர்களுடைய சகலபாவங்களையும் மூடிவிட்டது. கிறிஸ்துவினிமித்தம் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. "அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை" (எபி 10:17) என்கிறார் தேவன்.

1கொரிந்தியர் 3:11-13ல் இந்த பீமா நியாயத்தீர்ப்பு குறித்து பவுல் சற்று விளக்கமாக அறிவிக்கிறார். "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்,மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்".

கிறிஸ்துவின்மேல் அஸ்திபாரம் போடுவதோடு, அவரை நம் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வதோடு நம்முடைய கடமைகள் முடிவடைவதில்லை. **கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு வீடு கட்டும் தொழிலாளியைப்போல கிறிஸ்து என்ற அஸ்திபாரத்தின்மேல் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையைக் கட்டி எழுப்புகிறோம்.** அந்த அஸ்திபாரத்தின்மேல் நாம் எவ்வாறு கட்டுகிறோம் என்பதில் கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அஸ்திபாரமாகிய கிறிஸ்து ஏற்கெனவே போடப்பட்டாயிற்று. வேறு எந்த அஸ்திபாரத்தையும் கிறிஸ்தவர்களாகிய நம்மால் போட அவசியமில்லை.

அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டிடத்தை எழுப்புவதற்கு பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இவை ஒருபோதும் அழிந்துபோவதில்லை. அழிந்துபோகக்கூடிய மரம், புல், வைக்கோல் ஆகியவற்றினாலும் ஒருவன் வீடுகட்டலாம். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய மாம்ச முயற்சியில் நடப்பிக்கும் நற்கிரியைகளாக

இவைகளை எடுத்துக்கொள்ளலாம். இவைகளைக் குறித்துப் பவுல் சொல்கிறார், "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினேன்" *(1கொரி 9:27)*.

ரோமர் *14:12* சொல்கிறபடி, "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்". அதாவது கிறிஸ்து தன்னுடைய ஜனங்களை நியாயந்தீர்க்கிற நாளில் ஒவ்வொருவனின் வேலையும் பகிரங்கப்படுத்தப்படும். "அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" *(1கொரி 3:13)*. "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்" *(1கொரி 4:2)*. எனவே அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையானது என்பதை அவன் அறிந்துகொள்ளுவது அவசியமாயிருக்கிறது. எனவே ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட முறையில் நியாயம் கிறிஸ்துவின் சமுகத்தில் விசாரிக்கப்படுவான்.

நம்முடைய கிரியைகளை சோதிக்கும் அக்கினி வேறு யாரும் அல்ல. பரிசுத்த ஆவியானவர். இரட்சிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு அவர் நமக்குள் வாசமாயிருக்கிறபடியால் நம்முடைய வெளிப்படையான கிரியைகளை மட்டும் அல்ல, நம்முடைய கிரியைகளின் உள்ளான நோக்கங்களையும் அவர் அறிவார். இந்த அக்கினி சோதனையில் வெற்றிபெறுகிறவர்களுக்கு ஐந்துவகையான கிரீடங்கள் வாக்களிப்பட்டிருக்கின்றன.

1. அழிவில்லாத கிரீடம் (1கொரி 9:25)

2. மகிழ்ச்சியின் கிரீடம் (1தெச 2:19)

3. ஜீவ கிரீடம் (யாக் 1:12)

4. நீதியின் கிரீடம் (2தீமோ 4:8)

5. மகிமையுள்ள வாடாத கிரீடம் (1பேதுரு 5:4)

கிறிஸ்து நம்முடைய அஸ்திபாரமாக அமைவதினால் அதின்மேல் கட்டப்பட்ட கட்டிடத்தின் குறைபாடுகளின் மத்தியிலும் நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற அங்கீகாரத்தை இழந்துபோவதில்லை. "உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" *(1கொரி 1:9)*. "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்" *(1தெச 5:24)* என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அழைக்கப்பட்டவர்கள் உண்மையுள்ளவர்கள் என்று வேதம் அறிவிக்கவில்லை. "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு" *(1பேதுரு 5:10)* தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

அக்கினியால் சோதிக்கப்பட்டபின் தொடர்ந்து என்ன நடக்கிறது என்பதைக் கவனியுங்கள். "அதின்மேல் (கிறிஸ்து என்ற அஸ்திபாரத்தின்மேல்) ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். அவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" *(1கொரி 3:14,15)*.

ஒரு அழகான, நீளமான, சுத்திகரிக்கப்பட்ட மரக்கட்டையை அக்கினியில் கொஞ்சநேரம் போட்டுவிட்டு எடுத்துப் பாருங்கள். அது தோற்றம் மாறி, நிறம் மாறி, கோணலாகி அருவருக்கத்தக்கதாகக் காட்சி அளிக்கும். ஆனாலும் அது மரக்கட்டையாகத்தான் இருக்கும். இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின்மேல் அஸ்திபாரத்தைப் போட்ட நாமும் கிறிஸ்தவ வாழ்க்கை என்ற கட்டிடத்தை நல்லமுறையில் எழுப்பத் தவறியிருக்கலாம். அதைச் சீர் செய்து, மீண்டுமாக அழகுபடுத்துவது ஆவியானவரின் செயல்பாடுகளில் ஒன்றாக அமைகிறது. **"அவனோ இரட்சிக்கப்படுவான்" என்று திட்டவட்டமாக அறிவிக்கப்படுவதைக் கவனியுங்கள்.**

அதனால்தான் இரகசிய வருகையில் எடுக்கப்பட்டவர்களாகிய நாம் உடனடியாக பிதாவாகிய தேவனுடைய சமுகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பே கிறிஸ்துவின் நியாயாசனத்தின்முன் சுத்திகரிப்பைப் பெறுகிறோம்.

வெளிப்படுத்தின விசேஷம் *19:7* சொல்கிறபடி, "ஆட்டுக்குட்டி-யானவருடைய கலியாணம் வந்தது; அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்". நம்முடைய அஸ்திபாரம் கிறிஸ்துவில் போடப்பட்டதே இந்த ஆயத்தம். ஆவியானவரின் அக்கினி நம்மை சுத்திகரிக்கிறது.

அதன் விளைவாக என்ன நடக்கிறது? வெளிப்படுத்தின விசேஷம் *19:8* சொல்கிறபடி, "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்த-வான்களுடைய நீதிகளே".

பரிசுத்தவான்களுடைய நீதியால் அலங்கரிக்கப்பட்ட நீதி அவளுக்குச் சொந்தமானது அல்ல என்பதினால்தான் அது அவளுக்கு தேவனால் அளிக்கப்படவேண்டியதிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு (அஸ்திபாரம்) நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோமர் *3:24*) என்கிறார் பவுல். இரட்சிப்பு "கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே *2:9*). "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்-கிறதுமான நீதி" (பிலிப் *3:9*) மட்டுமே தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறும்.

ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். (4:18)

உயிரோடு இருக்கிறவர்களானாலும் சரி, ஏற்கெனவே மரித்தவர்களானாலும் சரி, கிறிஸ்துவின் அஸ்திபாரத்தின்மேல் தங்களுடைய வாழ்க்கையை கட்டிக்கொண்டவர்கள் அத்தனை-பேரும் தேவனுடைய பிள்ளைகள் என்ற அங்கிகாரத்தை இழந்துபோவதில்லை என்பதால் தெசலோனிக்கேய சபையார் ஒருவரை ஒருவர் தேற்றி ஆறுதல்படுத்தும்படியான ஆலோசனை பவுலிடமிருந்து வெளிப்படுகிறது.

சபையாரிடம் எதைக் குறித்தும் நம்பிக்கையற்ற தன்மை காணப்படக்கூடாது என்பதில் பவுல் கவனமுள்ளவராக இருக்கிறார். சங்கீதம் 116:15 சொல்கிறபடி, "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது". ஏனென்றால் **பரிசுத்தவான்களின் மரணம் அவர்களை கிறிஸ்துவோடு இணைக்கும் பாலமாக அமைகிறது**. "அவன் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 5:24) என்கிறார் இயேசு. "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" என்று சங்கீதம் 48:14ல் வாசிக்கிறோம்.

அதனால்தான் ஏசாயா 57:2 சொல்கிறது, "நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்". **மரணத்தைக் குறித்துப் பயப்படுகிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க-முடியாது.** "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று பிலிப்பியர் 1:21ல் சொல்கிறார் பவுல். மரித்த மறுவினாடி மணவாளனாகிய இயேசு கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொள்கிறார் என்ற நிச்சயம் நமக்கு உண்டு.

அதிகாரம் – 5

இரவிலே திருடன் வருகிறவிதமாய்க்
கர்த்தருடைய நாள் வருமென்று
நீங்களே
நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

1தெசலோனிக்கேயர் 5:2

பகிரங்க வருகை (5:1-4)

சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுதவேண்டு-வதில்லை. (5:1)

முந்தின அதிகாரத்தில் 16-வது வசனத்தில் கிறிஸ்துவின் இரகசிய வருகை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை பவுல் விளக்கமாக அறிவித்ததைப் பார்த்தோம். அவர் மிகுந்த ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அந்த வேளையில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், அதாவது இரட்சிப்பின் நிச்சயத்தை உடையவர்கள் மகிமையின் சரீரத்-தோடு முதலாவது எழுந்திருப்பார்கள் என்றும், வருகையின்-போது பூமியில் உயிரோடு இருப்பவர்களும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போகும்விதத்தில் ஆகாயத்தில் எடுத்துக்கொள்-ளப்படுவார்கள், அதைத் தொடர்ந்து எல்லாவேளைகளிலும் இந்த இருதரத்தாரும் கர்த்தருடன் இருப்பார்கள் என்ற திட்ட-வட்டமான அறிவிப்பு வெளியிடப்பட்டதைப் பார்த்தோம்.

இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட மறுவினாடி பூமியில் அந்திக்கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால அரசாட்சி உதயமாகிறது. மணவாட்டி சபைக்கும் உபத்திரவ-காலத்துக்கும் சம்பந்தம் இல்லை. கிறிஸ்து திட்டவட்டமாகச் சொல்கிறார், "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்-படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனை-காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" *(வெளி 3:10)*. தப்பும்படி உன்னைக் காப்பேன் என்று சொல்வதைக் கவனியுங்கள். உபத்திரவ காலத்தில் சபை இந்த பூமியில் இருக்கப்போவதில்லை.

இரவில் திருடன் வருகிற விதமாய்ச் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். (5:2)

கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படும் கிறிஸ்துவின் பகிரங்க வருகையின் நாளைக் குறித்து வேதத்தில் சுமார் முந்நூறு இடங்களுக்கு மேல் சொல்லப்பட்டிருக்கிறது(ஏசா 2:12, 13:6, எசே 13:5, 30:3, யோவேல் 1:15, 2:1,11,31, 3:14, ஆமோஸ் 5:18,20, செப் 1:7,14, சகரி 14:1, மல் 4:5, அப் 2:20, 1தெச 5:2, 2தெச 2:2, 2பேதுரு 3:10, etc..,). *மனிதனுடைய பாவங்களைத் தன்னுடைய சரீரத்தில் சுமந்து தீர்க்கும்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வெளிப்பட்ட நிகழ்ச்சியை அறியாதவர்கள் இல்லை. பவுல் சொல்கிறபடி, "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி 9:28).*

மனித இனத்தின் பாவங்களை எல்லாம் தன்மேல் ஏற்றுக்கொண்டு பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை மனிதனி-லிருந்து அகற்றிவிட்டார் என்றாலும் அவர் அருளிச்செய்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்களை நியாயந்தீர்க்கும்-படியாக மீண்டும் வருகிறார். "லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப் போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் (கர்த்தரின்) நாளிலும் அப்படியே நடக்கும்" (லூக்கா 17:29,30).

வேதத்தில் இது பகிரங்க வருகை என்று அழைக்கப்-பட்டு *14* இடங்களில் கடைசி நாட்களில் 'The last days' என்று குறிப்பிடப்படுகிறது. *ஏசாயா 13:9-11ல் இவ்வாறு இந்த வருகையின் நாள் விவரிக்கப்படுகிறது, "இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது. வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும். சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளிகொடாதிருக்கும். பாவத்தினிமித்தம் உலகத்தை-யும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து,*

அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன்".

உயிர்த்தெழுந்த இயேசு ஒலிவமலையிலிருந்து பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வெண் வஸ்திரம் தரித்த தேவ தூதர்கள் அப்போஸ்தலர்களிடம் இவ்வாறு அறிவிக்கிறார்கள், *"கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி* **உங்கள் கண்களுக்கு முன்பாக** *வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப் 1:11).* **யாவரும் காணக்கூடிய விதத்தில் இந்த பகிரங்கவருகை அமைந்திருக்கும். அந்திக்கிறிஸ்துவின் ஏழுஆண்டுகால ஆட்சியின் முடிவில் இது சம்பவிக்கும்.** *"அப்பொழுது நரரின் மேட்டிமை தாழ்ந்து, மனுஷரின் வீறாப்புத் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார். விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்" (ஏசாயா 2:17,18).*

இந்தச் சம்பவத்தை சகரியா தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார், *"இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, ... அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; ... ... தேவனாகிய கர்த்தர் வருவார்: தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" (சகரியா 14:1-5). "ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த, சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்" (யூதா 14,15).*

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து அந்திக்கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு **பூமியில் கிறிஸ்துவினுடைய ஆயிர வருட அரசாட்சி உதயமாகும்** என்பதை சகரியா 14:9 வது வசனம் இவ்விதமாக அறிவிக்கிறது: "அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்".

'அந்நாளில்' என்று வேதத்தில் 300 தடவைக்கு மேலாக பகிரங்க வருகையைக் குறித்த காரியங்கள் சொல்லப்படுகின்றன. கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களில் தான் மீண்டும் வரவிருப்பதை 21 இடங்களில் அறிவித்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அவரைக் குறித்துப் பழைய ஏற்பாட்டில் 333 தீர்க்கதரிசனங்கள் அறிவிக்கப்பட்டன என்றும், அவற்றில் 109 மட்டுமே கிறிஸ்து இந்த பூமியில் இருந்த நாட்களில் நிறைவேறியுள்ளன என்றும் வேதபண்டிதர்கள் அறிவிக்கிறார்கள். மீதமுள்ள 224 தீர்க்கதரிசனங்களும் நிறைவேறுவதற்கு அவர் மீண்டும் வரவேண்டியதிருக்கிறது. பழைய ஏற்பாட்டு வேத புத்தகங்களில் 46 தீர்க்கதரிசிகள் பேசினார்கள் என்றும், அவர்களில் 36 பேர் அவருடைய இரண்டாவது வருகையின் நிகழ்ச்சிகளைக் குறித்தே அறிவித்தார்கள் என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

தன்னுடைய நிருபங்களில் கர்த்தருடைய பந்தியைக் குறித்து இரண்டுமுறையும், ஞானஸ்நானத்தைக் குறித்து பதின்மூன்று முறையும் எழுதிய பவுல் கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்து ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் பேசுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்த வசனத்தில் பவுல் இவைகள் நடக்கும் காலங்களையும், சமயங்களையும் குறித்துத் தன்னுடைய நிருபத்தில் எழுதப்போவதில்லை என்று சொல்கிறார். அதைக் குறித்த முழுமையான வெளிப்பாடுகள் பவுலுக்கு வழங்கப்படவில்லை.

காலங்கள் times என்பதற்குப் பயன்படுத்தப்படும் chromos என்ற கிரேக்க பதம் ஒரு குறிப்பிட்ட கால வரையறையைக்

குறிப்பிடுவதில்லை. ஆனால் சமயங்கள் என்பதற்குப் பயன்படுத்தப்படும் kairos குறிப்பாக திட்டமிடப்பட்டு குறித்த காலக்கட்டத்தில் ஒன்றன்பின் ஒன்றாக செயல்முறைக்கு வரும் தொடர் கிரியைகளையும் சம்பவங்களையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இந்தச் சம்பவங்கள் அனைத்தும் ஒரே நாளில் நடந்துமுடிவதில்லை. பல நாட்களில் பலவிதமான முறையில் சம்பவிக்கும் காரியங்களை இது குறிப்பிடுகிறது. இவைகளின் முடிவில் கிறிஸ்துவின் வருகை சம்பவிக்கும் (*மத் 24:21-31*). இவைகளைக் குறித்து நான் உங்களுக்கு ஒன்றும் எழுத வேண்டிய அவசியமில்லை என்கிறார் பவுல். ஏனென்றால் கிறிஸ்து தன்னுடைய மரணத்துக்கு முன் இவை சம்பவிக்கும்விதம் குறித்து ஒலிவ மலையில் தன்னுடைய சீஷர்களுக்குத் தேவையான எச்சரிக்கைகளை ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்.

மத்தேயு *24:4-13*ல் சொல்கிறார், "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலை செய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்".

Rapture என்று நாம் அழைக்கும் இரகசிய வருகையைக் குறித்த ஒரு வெளிப்பாடும் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். **பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு சபையைக் குறித்த காரியங்கள் முற்றிலுமாக மறைக்கப்பட்ட ஒரு இரகசியம்.** ஆனால் கர்த்தரின் நாள் என்று அழைக்கப்படும் பகிரங்க வருகையைக் குறித்து பல பழைய ஏற்பாட்டு வசனங்கள் அறிவிப்பதினால் அதைக் குறித்து தான் எழுதவேண்டியதில்லை என்கிறார் பவுல்.

மத்தேயு *24:21-24*ல் இயேசு சொல்கிறார், "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்: ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்".

மத்தேயு *24:27-30*ல் இவ்வாறு வாசிக்கிறோம், "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்". "நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்கு முன்

அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்" *(சங் 50:3)*.

தன்னுடைய பகிரங்க வருகையின் காலங்களையும் சமயங்களையும் குறித்த பல அடையாளங்களை கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம் மாற்கு *13:4-26*லும் விளக்கமாகப் பேசுகிறார், "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படும்போது, கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும், பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம்" *(5-8)*.

மாற்கு *13:19-22*ல் சொல்கிறார், "தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும். கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார். அப்பொழுது: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கேயிருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள். ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்". "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும், அக்கிரமஞ் செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும்" *(மல் 4:1)*.

மாற்கு *13:24-27*ல் இயேசு சொல்கிறார், "*அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு,சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள். அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்*".

இறுதியில் கிறிஸ்து சொல்கிறார், "*அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்,பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.* அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் *(மாற் 13:32,33)*. மத்தேயு *24:36*ல் சொல்கிறார், "*அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்*".

இவைகள் நடக்கும் காலங்களையும் சமயங்களையும் குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டிய அவசியமில்லை என்ற அறிவிப்போடு பவுல் வசனத்தை முடிவு செய்கிறார். மோசே சொல்கிறபடி, "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்" *(உபா 29:29)*. தேவன் தனது தயவுள்ள சித்தத்தின்படி பல காரியங்களை மனிதனுக்கு மறைத்து வைத்திருக்கும்போது, அதை அறிந்துகொள்ள நமக்கு அனுமதி இல்லை. மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து தன்னுடைய அப்போஸ்தலர்களிடம் திட்டவட்டமாக அறிவிக்கிறார், "பிதாவானவர் *தம்முடைய* ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் *அறிகிறது* உங்களுக்கு அடுத்ததல்ல" *(அப் 1:7)*.

அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய வருகையைக் குறித்த எதிர்பார்ப்புடன் ஆயத்தமாயிருக்க

வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார். மத்தேயு 24:42-44ல் அவர் சொல்கிறார், "உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்".

கர்த்தரின் நாள் இரவில் திருடன் வருகிறவிதமாய் இருக்கும் என்பது ஏற்கெனவே அனேக இடங்களில் பழைய ஏற்பாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் பவுல் தன்னுடைய வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறார். எந்தத் திருடனும் தான் திருடவரும் நாளை வீட்டுக்காரர்களுக்கு முன்னறிவித்துவிட்டு வருவதில்லை. திருடனுடைய வருகையை அறிந்திருப்பார்களானால் வீட்டுக்காரர்கள் தங்களுடைய பொருட்களை பாதுகாத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளைச் செய்திருப்பார்கள்.

லூக்கா 12:39,40 ல் கிறிஸ்து சொல்கிறார், "திருடன் இன்ன நேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள். அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" என்றார். மத்தேயு 24:44லும் இதை அறிவித்துவிட்டு கிறிஸ்து சொல்கிறார், "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்".

பேதுரு சொல்கிறார், "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்,

பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேதுரு 3:10). "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" (அப் 17:31).

சர்தை சபையின் தூதனிடம் கிறிஸ்து எச்சரிக்கிறார்: "திருடனைப் போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி 3:3). "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" (வெளி 16:15) என்கிறார் இயேசு.

ஆமோஸ் தீர்க்கதரிசி சொல்கிறார், "கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும். கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ" (5:18,19).

***கர்த்தரின் நாள் பயங்கரமானது, அந்தகாரமானது என்பது மட்டுமல்ல, அது யாரும் எதிர்பாராத வேளையில் சம்பவிக்கிறதாயிருக்கும்** என்பதையும் பல வேதவசனங்கள் அறிவிக்கின்றன. ஏசாயா 13:6-8ல் "அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது, அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும், ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம், அவர்கள் திகிலடைவார்கள்; வேதனைகளும் வாதைகளும் அவர்களைப் பிடிக்கும்; பிள்ளைபெறுகிறவளைப்போல வேதனைப் படுவார்கள்; ஒருவரையொருவர் பிரமித்துப் பார்ப்பார்கள்; அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்".*

கர்த்தருடைய நாள் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வெளிப்படும் நாளாக இருக்கும் என்பதினால் பேதுரு சொல்கிறார், "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையி-னின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளான-வர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (2பேதுரு 2:9). ரோமர் 2:5ல் பவுல் அதை "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாள்" என்று குறிப்பிடுகிறார். "அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்" (2பேதுரு 3:12). "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" (மத் 24:37).

1கொரிந்தியர் 5:5லும் 1:8லும் கர்த்தரின் நாள் "இயேசு கிறிஸ்துவின் நாள்" என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்டுக்-குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருக்-கும் பிதாவின் வலது கரத்தில் இருக்கும் ஏழு முத்திரைகளினால் முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தின் முத்திரைகளை உடைக்கும்-போது (வெளி 6) கர்த்தரின் நாள் என்று தானியேல் அறிவித்த 70-வது வாரம் துவங்குகிறது. "அருவருப்பான செட்டைக-ளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்-பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும்" (தானி 9:27) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முந்தின வசனத்தில் அறிவிக்கப்பட்ட கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்த சத்தியம் ஒரு திருடனுடைய வருகைக்கு ஒப்பிடப்பட்டிருப்பதினால் இரண்டு காரியங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

1. பகிரங்க வருகை சடுதியில் சம்பவிக்கும்

2. யாருமே எதிர்பாராத நேரத்தில் சம்பவிக்கும்.

கர்த்தருடைய இரகசிய வருகையின் நாளை மனித இனம் தெரிந்துகொள்ளாமல் இருப்பதைப் போல் கர்த்தருடைய நாள்

எப்போது துவங்கும் என்பதையும் மனிதர்கள் கண்டுகொள்ள-முடியாதபடி இருக்கும். ஆனால் விசுவாசிகளாகிய நாம் அதைக் குறித்துத் திகிலடையத் தேவை இல்லை. ஏனென்றால் நாம் தேவகோபாக்கினை நாளுக்கென்று நியமிக்கப்படவில்லை, கிறிஸ்து மூலமாகப் பெறும் விலையேறப்பெற்ற இரட்சிப்புக்-கென்று நியமிக்கப்பட்டு இருக்கிறோம். இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகுதான் உபத்திரவ நாள் துவங்கும்.

கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருகிறவிதமாய் அமைந்திருக்கும். செப்பனியா *1:14-18* கர்த்தரின் நாள் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்பதை விவரிக்கிறது. "கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்-சேர்ந்து மிகவும் தீவிரித்து வருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது, இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமான எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்-போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன், அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்".

எசேக்கியேல் *13:13-15*ல் கர்த்தர் சொல்கிறார், "ஆகையால் என் உக்கிரத்திலே கொடிய புசல்காற்றை எழும்பி அடிக்கப்-பண்ணுவேன்; என் கோபத்திலே வெள்ளமாக அடிக்கிற மழையும், என் உக்கிரத்திலே நிர்மூலமாக்கத்தக்க பெருங்கல்

மழையும் சொரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லு-கிறார். அப்பொழுது நீங்கள் சாரமில்லாத சாந்தைப் பூசின சுவரை நான் இடித்து, அதின் அஸ்திபாரம் திறந்துகிடக்கும்படி அதைத் தரையிலே விழப்பண்ணுவேன்; உள்ளே இருக்கிற நீங்கள் நிர்மூலமாகும்படி அது விழும்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள். இப்படிச் சுவரிலும், அதற்குச் சாரமில்லாத சாந்தைப் பூசினவர்களிலும் நான் என் உக்கிரத்தைத் தீர்த்துக்கொண்டு: சுவருமில்லை, அதற்குச் சாந்து பூசினவர்களுமில்லை".

சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. (5:3)

கர்ப்பவதியானவளுக்கு பிரசவ வேதனை உண்டாவது-போல் சற்றும் எதிர்பாராத வேளையில் கர்த்தரின் நாளோடு சம்பந்தப்பட்ட அழிவுகள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்க ஆரம்பிக்கும் என்கிறார் பவுல். ஒரு கர்ப்பதியின் பிரசவ நேரம் நிச்சயமாக வரும் என்பதை சகலரும் அறிந்திருப்பார்கள் என்றாலும், அந்தக் குறிப்பிட்ட நேரத்தை யாராலும் திட்டவட்-டமாக முன்னறிவிக்க முடியாது. ஒரு பிரசவ ஸ்திரீ எவ்வாறு பிரசவ வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாதோ அவ்வாறு இந்த உலகத்து மனிதர்கள் கர்த்தரின் நாளில் சந்திக்கவிருக்கும் வேதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. அவள் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை கர்ப்ப-வதியானவளுக்கு பிரசவ வேதனை அவளைப் பொறுத்தவரை படிப்படியாக அதிகரித்துக்கொண்டே இருக்கும். அதனால்தான் கர்த்தரின் நாள் கர்ப்பவதியின் பிரசவ வேதனைக்கு ஒப்பிடப்-பட்டு பல வேத வசனங்கள் பேசுவதைப் பார்க்கிறோம்.

ஏசாயா 26:17,18ல் இவ்வாறு வாசிக்கிறோம், "கர்த்தாவே, பேறுகாலம் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டு, தன்

அம்பாயத்தில் கூப்பிடுகிற கர்ப்பவதியைப்போல, உமக்கு முன்பாக இருக்கிறோம், நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப் போல் இருக்கிறோம்; தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்யமாட்டாதிருக்கிறோம்; பூச்சக்கரத்துக் குடிகள் விழுகிறதுமில்லை".

கர்த்தரின் பகிரங்க வருகையின் நாளை கர்ப்பவதியானவள் பிரசவ வேதனையை சற்றும் எதிர்பாராத வேளையில் எதிர்கொள்வதோடு சம்பந்தப்படுத்தி இன்னும் சில வேத வசனங்கள் சுட்டிக்காட்டுவதைப் பார்க்கிறோம். ஓசியா 13:13ல் இவ்வாறு வாசிக்கிறோம். "பிரசவஸ்திரீயின் வேதனை அவனுக்கு வரும்; அவன் விவேகமில்லாத பிள்ளை; பேறுகாலமட்டும் அவன் நிற்கவில்லை".

எரேமியா சொல்கிறார், "நம்முடைய கைகள் தளர்ந்தது, இடுக்கணும், கர்ப்பவதிக்கு உண்டாகும்வேதனைக்கொப்பான வேதனையும் நம்மைப் பிடித்தது" (எரே 6:24). "கர்ப்பவதிக்குப் பிரசவவேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல் வேதனைகள் உன்னைப் பிடிப்பதில்லையோ" (எரே 13:21). "வேதனைகளும் பிள்ளைப்பெறுகிறவளுக்கொத்த வாதையும் உனக்கு வருகையில், நீ எவ்வளவு பரிதபிக்கப்படத்தக்கவளாயிருப்பாய்" (எரே 22:23). "பிரசவ ஸ்திரீயைப் போல இடுக்கமும் வேதனைகளும் அதைப் பிடித்தது" (எரே 49:24). "பிரசவிக்கிற ஸ்திரீக்கு ஒத்த வேதனை உனக்கு உண்டாகும். சீயோன் குமாரத்தியே, பிரசவ ஸ்திரீயைப் போல அம்பாயப்பட்டு வேதனைப்படு" (மீகா 4:9,10).

"அழிவு சடுதியில் அவர்கள் மேல் வரும்" என்கிறார் பவுல். இந்த அழிவு அவர்கள் எதிர்பார்த்த நேரத்தில் நடவாதபடியால் இப்படிப்பட்ட பேரழிவு ஒருநாளும் உண்டாவதில்லை என்று நம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது மட்டுமல்ல, ஆதி அப்போஸ்தலருடைய நாட்களிலும் பொதுவாக வருகையைக் குறித்து அவிசுவாசம் காணப்பட்டது என்பதினால் பேதுரு எச்சரிக்கிறார். "கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள்

சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.

பேதுரு தொடர்ந்து சொல்கிறார்: "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்**; அப்பொழுது வானங்கள் மடமடஎன்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேதுரு 3:3-11).

"அவர்கள் தப்பிப்போவதில்லை" என்று பவுல் இந்த வசனத்தை முடிக்கிறார். அவர்களுடைய அழிவு சடுதியாய் வரும் என்பது மட்டுமல்ல, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அந்த நேரத்தில் அவர்கள் எடுக்கும் எந்த முயற்சியும் அவர்களுக்கு எந்த நன்மையையும் தருவதில்லை. நோவாவின் நாட்களில் பெருவெள்ளத்தைக் குறித்த எச்சரிப்பு சகல மனிதர்களுக்கும் கொடுக்கப்பட்டது. அவர்கள் அத்தனை-

பேருமே பேழைக்குள் பிரவேசித்து தங்களைக் காப்பாற்றிக்-கொண்டிருக்கலாம். ஆனால் பேதுரு சொல்கிறபடி, "அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுபேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" *(1பேதுரு 3:20)*. சோதோம், கொமோரா தேவனால் அழிக்கப்படுவதைக் குறித்த எச்சரிக்கை லோத்துவுக்கும் அவனுடைய குடும்பத்தார் அத்தனைபேருக்கும் சொல்லப்பட்டது *(ஆதி 19:12-14)*. ஆனாலும் அவர்கள் அவிசுவாசத்தினிமித்தம் அழிவைச் சந்திக்கவேண்டியதாயிற்று.

பொதுவாகவே மனிதர்கள் தங்கள் மரணத்தைக் குறித்தோ, அதைத் தொடர்ந்து அவர்கள் எதிர்கொள்ளும் நித்தியத்துக்கடுத்த காரியங்களைக் குறித்தோ எண்ணிப் பார்ப்பதில்லை. அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கலாம் என்ற மனநிலையில் காணப்படுகிறார்கள். அதைக் குறித்துத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அறிந்தோ அறியாமலோ **நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு நிமிடமும் நம்முடைய கல்லறையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்**

மரணத்தைச் சற்றுத்தள்ளிப்போடவோ, நிறுத்திவைக்-கவோ யாராலும் முடியாது. மனிதன் சந்திக்கும் முதல் மரணம் அவனுடைய ஆத்துமாவில் சம்பவிக்கிறது. ஏதேன் தோட்-டத்தில் விலக்கப்பட்ட கனியைப் புசித்த அதே வேளையில் ஆதாமும் ஏவாளும் தங்கள் ஆவியில் மரணத்தை சந்திக்கிறார்-கள். தேவ ஐக்கியத்தை இழந்துபோகிறார்கள். அதற்குப் பின் ஆதாம் சரீரத்தில் *930* வருடங்கள் வாழ்ந்திருந்தான் என்று ஆதியாகமம் *5:5* அறிவிக்கிறது. பலவகை மரணங்கள் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும் - சரீர மரணம், ஆத்தும மரணம், நித்திய மரணம். பரிசுத்தவான்களின் சரீர மரணம் நித்திரை என்று அழைக்கப்படுகிறது *(1தெச 4:13,14)*. யவீருவின் மகளின் சரீர மரணத்தை கிறிஸ்து நித்திரை என்று அழைக்கிறார் *(மாற்கு 5:39)*. பாவம் செய்கிற மனிதன் ஆதாமைப் போல் ஆத்துமாவில் மரிக்கிறான்.

சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே (5:4)

அதிகாரத்தின் முதல் வசனத்தில் சபையாரை "சகோதரரே" என்று அழைத்த பவுல் மீண்டுமாக சபையாரைக் கனம் பண்ணும் விதத்தில் சகோதரரே என்கிறார். சகோதரன் என்ற வார்த்தை வேதத்தில் சுமார் முன்னூறு தடவைக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

"அந்த நாள்" என்ற வார்த்தை *5:2*ல் குறிப்பிடப்பட்ட கர்த்தரின் நாளைக் குறிப்பிடுகிறது. மத்தேயு *24:43*, லூக்கா *12:39*ல் கிறிஸ்து அறிவித்தபடி கர்த்தரின் வருகையின் நாளைக் குறித்த வெளிப்பாடுகள் மனிதர்களுக்கு முற்றிலுமாக மறைக்கப்பட்ட ஒரு காரியமாக இருக்கிறது. "அந்த நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத் *24:36*). அதன் விளைவாக அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை ஆசாப் இவ்வாறு சொல்கிறார், "அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்" (சங் *82:5*).

நீதிமொழிகள் *4:19* சொல்கிறபடி, "துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப் போலிருக்கும்; தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்". "இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்" (ஏசாயா *60:2*) என்ற வசனம் அந்த நாட்களில் நிறைவேறும். அந்தகாரத்திலிருக்கிறவர் என்ற வார்த்தை அறியாமை, துன்மார்க்கம், குருட்டாட்டம் போன்ற காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களைக் குறிப்பிடுகிறது. "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோ *8:12*) என்று பிரகடனம் பண்ணிய இயேசுவை அங்கீகரியாமலிருந்ததினிமித்தம் அவர்கள் அந்தகாரத்துக்கு உரியவர்கள் ஆகிறார்கள். "திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி *3:3*) என்கிறார் இயேசு.

வெளிச்சத்தின் பிள்ளைகள் (5:5-7)

நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. (5:5)

தெசலோனிக்கேய சபையாராகிய நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகள், பகலின் பிள்ளைகள் என்று துவங்கிய பவுல் வசனத்தின் பின்பகுதியில் தன்னையும் சபையாரோடு இணைத்துக்கொண்டு நாம் இரவுக்கும், இருளுக்கும் உள்ளானவர்களல்ல என்கிறார். நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே என்று முந்தின வசனத்தில் அறிவித்தபவுல் இந்த வசனத்தில் நீங்கள் எல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாய் இருக்கிறீர்கள் என்கிறார்.

அந்தகாரத்தில் இருந்து வெளியே வந்தால்மட்டும் போதாது. வெளிச்சத்துக்குள் பிரவேசிக்கவேண்டும். லூக்கா 16:8ல் இவர்களை இயேசு ஒளியின் பிள்ளைகள் என்றும், இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் என்றும் பிரித்துக் காட்டுகிறார். இந்த ஒளி எப்படி வந்தது? பவுல் சொல்கிறார், "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" (எபே 5:8). தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஒளியில் நாம் நிலைத்திருக்கவேண்டும். "ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்" (யோ 12:36) என்கிறார் இயேசு. "அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்-கடவோம்" (ரோமர் 13:12) என்கிறார் பவுல்.

நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்கள் அல்ல என்ற திட்டவட்டமான அறிவிப்பு வசனத்தின் முடிவில் காணப்படுகிறது. ஏனென்றால் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளும்

பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறோம். "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" *(எபே 5:8).*

வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ள நம்மால் முடியும். ஏனென்றால் நம்மிலிருந்து தேவமகிமை வெளிப்படும். ஏசாயா சொல்கிறபடி, "கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்" *(60:2).* "கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்" *(ஏசாயா 58:8).*

பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனுக்கு வழங்கிய மகிமை அவருடைய வேண்டுதலின் பேரில் நம்முடையதாகிறது. தன்னுடைய மரணநாளுக்கு முன் கிறிஸ்து ஜெபிக்கிறார், "நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவான் 17:22). கொடுப்பேன் என்று கிறிஸ்து சொல்லவில்லை, கொடுத்தேன் என்கிறார். நாம் தேவமகிமையை ஏற்கெனவே பெற்றுக்கொண்டவர்கள்.

ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம். (5:6)

இந்த நிருபத்தை முதலாவதாகப் பெற்றுக்கொள்ளும் தெசலோனிக்கேயா சபையாரும், அதை அவர்களுக்கு எழுதும் அப்போஸ்தலனாகிய பவுலும் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும் பகலின் பிள்ளைகளாகவும் இருப்பதினால் உலகத்து மனிதர்களைப் போல் தூங்கிக்கொண்டிராமல் எல்லா வேளைகளிலும் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கவேண்டும் என்கிறார் பவுல்.

மற்றவர்கள் தூங்குகிறதுபோல் தூங்காமல் நாம் விழித்துக்-கொண்டு இருக்கவேண்டும் என்று முதலாவது சொல்லிவிட்டு அதைத் தொடர்ந்து நாம் தெளிந்தவர்களாயிருக்கவேண்டும் என்கிறார். **அவருடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டி-ருப்பதில்தான் நம்முடைய தெளிவு வெளிப்படுகிறது** *என்பதை பேதுரு இவ்வாறு உறுதிப்படுத்துகிறார், "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்-களாயிருந்து இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்க-ளாயிருங்கள்" (1பேதுரு 1:13).*

மற்றவர்கள் என்ற வார்த்தை உலகத்து மனிதர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களுக்கு கிறிஸ்துவின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு இல்லாததால் தூங்கிக்கொண்டிருக்-கிறார்கள். இந்த உலகத்து மனிதர்கள் தூங்கிக்கொண்டிருக்-கிறார்கள் என்று பவுல் சொல்லும்போது ஒவ்வொரு நாளும் இரவில் நாம் சரீரக் களைப்பின் காரணமாகத் தூங்கும் செயல்பாட்டை மனதில் வைத்து பவுல் பேசவில்லை, அல்லது குடித்து வெறித்துப்போன நிலையில் ஒரு மனிதன் தன்னைச் சுற்றியிருக்கும் காரியங்களை எல்லாம் மறந்து தூங்குவதைக் குறிப்பிடவில்லை. **வீணான முறையில் தேவனுக்கடுத்த காரியங்களை மறந்து, தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்ற உணர்வில்லாமல் தங்கள் தனிப்பட்ட காரியங்களில் கவனம் செலுத்தும் காரியங்களே தூக்கம் என்று இங்கே குறிப்பிடப்படுகிறது.**

இவர்களை மரித்தோர் என்று பவுல் எபேசியர் 5:14ல் குறிப்பிடுகிறார் என்று பார்த்தோம். "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு". மாற்கு 13:36,37ல் இயேசு சொல்கிறார், "நீங்கள் நினையாத வேளையில் அவன் (வீட்டெஜமான்) வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்-கள்". "ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோ 4:2), "விழித்தி-

ருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" *(1கொரி16:13)* என்கிறார் பவுல்.

நாம் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தால் மட்டும் போதாது - தெளிந்தவர்களாய் இருக்கக்கடவோம் என்கிறார் பவுல். தெளிந்தவர்களாயிருப்பது எப்படி? எபேசியர் 5:18-21ல் பவுல் சொல்கிறபடி "துன்மார்க்கத்துக்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங்க-ளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி-சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்-காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்". "உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள்" *(லூக்கா 12:35,36)*.

கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் ஏன் விழித்திருக்க-வேண்டும் என்பதை கிறிஸ்து விளக்கமாகவே சொல்கிறார், "விழித்திருங்கள். ஏனெனில் வீட்டெஜமான் சாயங்காலத்-திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லு-கிறேன், விழித்திருங்கள்" *(மாற்கு 13:35-37)*. "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள்" *(1கொரி 16:13)*. "ஸ்தோத்தி-ரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" *(கொலோ 4:2)*. நாம் ஏன் விழித்திருக்கவேண்டும் என்பதை பேதுரு அறிவிக்கிறார். "விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசா-னவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" *(1பேதுரு 5:8)*.

சர்தை சபையாரை இயேசு எச்சரிக்கிறார், "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து" (வெளி 3:2). இதைச் செய்யத் தவறினால் மரணத்தைச் சந்திப்பது நிச்சயம். வெளிப்படுத்தின விசேஷம் 16:15ல் அவர் சொல்கிறார், "இதோ, திருடனைப் போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்". நீதிமொழிகள் 8:34ல் சொல்கிறார், "என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்". "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு" (எபே 5:14) என்று பவுல் ஆலோசனை தருகிறார். "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோ 4:2).

தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்: வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். (5:7)

தூங்காமல் விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் மீண்டுமாக அந்த சத்தியத்தை இங்கே வலியுறுத்துகிறார். தூங்குவது, குடித்து வெறித்திருப்பது ஒரு மனிதன் பகல்வேளைகளிலும் நடப்பிக்கலாம் என்றாலும் அவை இருளின் கிரியைகளாகவே கருதப்படவேண்டும்.

"இவர்கள் ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து, உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்; விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்"

(2பேதுரு 2:13,14). இரவின் கிரியைகளாகிய உறக்கம், குடித்து வெறிகொண்டிருக்கும் தன்மை எல்லா வேளைகளிலும் இவர்களிடம் காணப்படுகிறது. மரணத்தைக் குறித்தும், நித்திய ஜீவனைக் குறித்தும் அறிந்து கொள்ளவோ, எண்ணிப் பார்க்கவோ அவர்கள் விரும்புவதில்லை.

இராத்திரியில் வெறிகொள்பவர்களின் கிரியைகள் என்ன என்பதை யோபு எவ்வாறு விவரிக்கிறார் என்பதைப் பாருங்கள், "அவர்கள் வெளிச்சத்துக்கு விரோதமாய் நடக்கிறவர்களின் கூட்டத்தார்; அவர்கள் அவருடைய வழிகளை அறியாமலும், அவருடைய பாதைகளில் தரிக்காமலும் இருக்கிறார்கள். கொலைபாதகன் பொழுது விடிகிறபோது எழுந்து, சிறுமையும் எளிமையுமானவனைக் கொன்று, இராக்காலத்திலே திருடனைப்போல் திரிகிறான். விபசாரனுடைய கண் மாலை மயங்குகிற வேளைக்குக் காத்திருந்து: என்னை ஒரு கண்ணும் காணமாட்டாதென்று முகத்தை மூடிக்கொள்ளுகிறான். அவர்கள் பகலில் அடையாளம் பார்த்த வீடுகளை இருட்டிலே கன்னமிடுகிறார்கள்; அவர்கள் வெளிச்சத்தை அறியார்கள். விடியுங்காலமும் அவர்களுக்கு மரணஇருள் போல் இருக்கிறது; அப்படிப்பட்டவன் மரண இருளின் பயங்கரத்தோடு பழகியிருக்கிறான்" *(யோபு 24:13-17).*

தூங்குகிறவர்கள் என்று சொல்லும்போது, சரீர தூக்கத்தை மட்டும் குறிப்பிடாமல் ஆவிக்குரிய ரீதியில் கனநித்திரையில் இருப்பவர்களையும் மனதில் வைத்துப் பவுல் பேசுகிறார். "வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையிலே அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்" *(மாற்கு 13:35,36)* என்கிறார் இயேசு.

"தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்" *(நீதி 20:13).* "சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்?

இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை-செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலவும் வரும்" *(நீதி 6:9,10)* என்கிறார் சாலொமோன்.

நம்முடைய பாதுகாப்பு (5:8-10)

பகலுக்குரியவர்களாகிய நாமோ, தெளிந்தவர்-களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்-தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்-சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக் கடவோம். (5:8)

கிறிஸ்தவர்களாகிய நாம் பகலுக்குரியவர்கள். பகலுக்-குரிய நாம் தூங்கிக்கொண்டிராமல் எல்லா வேளைகளிலும் மிகுந்த எச்சரிக்கையோடும் விழிப்போடும் இருக்கவேண்டும். ஏற்கெனவே 6-வது வசனத்தில் பவுல் அறிவித்தபடி தெளிந்த-வர்களாகவும் சுயகட்டுப்பாடுள்ளவர்களாகவும் இருக்க-வேண்டும். உலகத்து மனிதர்களைப் போல் தூக்கக் கலக்கத்துக்குட்டவர்களாய் செயல்படக்கூடாது. மாற்கு *13:35*ல் நாம் பார்த்தபடி எல்லாவேளைகளிலும் நாம் விழித்திருக்க-வேண்டும். "ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்". "நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார்" *(லூக்கா 12:40)*.

"அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக்குடித்து வெறிக்க-வும் தலைப்பட்டால், அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்க-ளோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்" *(லூக்கா 12:45,46)*.

தூங்குகிறதுஎன்ற வார்த்தை இந்த வேத பகுதியில் சரீர தூக்கத்தை மட்டும் குறிப்பிடாமல் ஆவிக்குரிய ரீதியில் கன நித்திரையில் இருப்பதைக் குறிப்பிடுகிறது என்பதாகப் பார்த்தோம். நாள் ஒன்று வரும், அன்று நம் எஜமானுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவேண்டியதிருக்கும் என்ற உணர்வின்றி நம்முடைய மனவிருப்பத்தின்படி நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்பவர்கள் கனநித்திரையில் இருப்பவர்களாகக் கருதப்படவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாமோ பகலுக்குரியவர்கள். பகல் பொழுது தூங்கும் சமயம் அல்ல.

இருளுக்குரியவர்கள் முந்தின வசனத்தின்படி இரவில் குடித்து வெறிகொள்கிறவர்களாய் இருப்பார்கள். அவர்களுக்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பகலுக்குரிய நாம் இரவுக்குரியவர்களைப் போல வெறி கொண்டவர்களாக இருப்பதில்லை. அதில் மட்டும் நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது என்பதைத்தான் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். தெளிந்தவர்களாயிருக்கவேண்டும் என்கிறார். 6வது வசனத்திலும் "**நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்**" என்றுஆலோசனை கொடுத்ததைப் பார்த்தோம். தெளிந்தவர்கள் என்ற முறையில் நாம் நடப்பிக்கவேண்டிய காரியம் என்ன என்பதை ரோமர் 13:12ல் இவ்விதமாக அறிவிக்கிறார், "இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக் கடவோம்". பகலுக்குரியவர்களால் மட்டுமே இந்தக் காரியத்தை நடப்பிக்க முடியும்.

விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசமும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவும் மட்டுமே நாம் அணிந்துகொள்ளவேண்டிய ஆயுதவர்க்கங்களாகக் குறிப்பிடப் படுகிறது. ஏசாயா 59:17ல் இவை கர்த்தர் அணிந்துகொள்ளும் ஆயுதவர்க்கங்களாகக் குறிப்பிடப்படுகிறது. "அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை

உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக் கொண்டார்". ரோமர் 13:12ல் இவைகளே ஒளியின் ஆயுதங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

ஒரு யுத்த வீரன் அணிந்துகொள்ளும் மார்க்கவசம் அவனுடைய கழுத்து துவங்கி மார்பு, இடுப்பு வரை சரீரத்துக்கு முழுமையான பாதுகாப்பைத் தருகிறது. தலைச்சீரா அவனுடைய தலையில் எந்த சேதமும் உண்டாகாமல் பாதுகாக்கிறது. இந்த இரண்டு தளவாடங்களையும் எதிரிகளைத் தாக்குவதற்கு பயன்படுவதில்லை. அதை அணிந்துகொள்ளும் யுத்த வீரனுக்கு அவை பாதுகாப்பைத் தருவதாக இருக்கிறது. பெலிஸ்தரின் ராணுவ வீரனாகிய கோலியாத், "தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப் போட்டு, ஒரு போர்க்கவசம் தரித்துக்கொண்டிருப்பான்; அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கும்" என்று 1சாமுவேல் 17:5ல் வாசிக்கிறோம். உபத்திரவ காலத்தில் ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதியபோது பாதாளக் குழியிலிருந்து வெளிப்படும் வெட்டுக்கிளிகள் இருப்பு மார்க்கவசங்களை அணிந்திருந்தன என்று வெளிப்படுத்தின விசேஷம் 9:9 ல் வாசிக்கிறோம்.

எபேசியர் 6:11ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்". அவைகளின் பட்டியல் 14 முதல் 17வரை இவ்வாறு சொல்லப்படுகிறது. "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்".

நாம் தியானிக்கும் வசனத்தில் விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசமும், இரட்சிப்பு, நம்பிக்கை என்னும் தலைச்சீராவும்

மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. நாம் தேவன் மேல் வைக்கும் விசுவாசம் நமக்கு ஒரு உள்ளான பாதுகாப்பைத் தருகிறது. ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் அன்பு வெளியரங்கமான பாதுகாப்பைத் தருகிறது. இந்த இரண்டு கிருபைகளையும் தனித்தனியாகப் பிரிக்கமுடியாது. ஏனென்றால் தேவனை விசுவாசிக்கும் ஒரு மனிதன் எல்லாரையும் நேசிக்கிறவனாகத்தான் இருப்பான். **ஒருவனுடைய விசுவாசமே அவனுடைய இரட்சிப்பைக் குறித்த நம்பிக்கையை உருவாக்குகிறது.** "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று தன்னிடம் வந்த சிறைச்சாலைக்காரனிடம் பவுலும் சீலாவும் சொல்கிறார்கள், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" *(அப் 16:31).* நம்முடைய விசுவாசம் நம்முடைய குடும்பத்தாருக்கும் ஆசீர்வாதமாக அமைகிறது.

தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். (5:9)

இரட்சிப்பின் நம்பிக்கையைக் குறித்து முந்தின வசனத்தில் பார்த்தோம். இரட்சிப்பின் சுவிசேஷத்தை தன்னுடைய நிருபங்களில் பல தடவை பவுல் முக்கியப்படுத்திப் பேசுவதைப் பார்க்கிறோம். 2தெசலோனிக்கேயர் *2:13*ல் அவர் "இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பற்றி பவுல் சொல்கிறார், "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" *(ரோமர் 1:16).* "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" *(ரோமர் 10:10).*

நாம் தியானிக்கும் வசனத்தில் பவுல் உறுதிப்படுத்தி அறிவிக்கும் காரியம் இதுதான்: கிறிஸ்தவர்களாகிய நாம் கோபாக்கினைக்கென்று நியமிக்கப்படவில்லை. "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர்" *(1தெச 1:10)* என்று கிறிஸ்து குறிப்பிடப்படுவதைப் பார்த்தோம். கல்வாரி சிலுவையில் அவர் சிந்திய இரத்தம் முற்றிலுமாக தேவகோபாக்கினையினின்று நம்மை விடுவிக்கிறது. ரோமர் *5:9* சொல்கிறபடி, "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினை நீங்கலாக, அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே".

தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்கவில்லை என்பதினால் உலகமெங்கும் வரப்போகிற ஏழுஆண்டுகால உபத்திரவகாலத்துக்கு முன்பே தன்னுடைய மணவாட்டியாகிய சபையை தன்னுடைய இரகசிய வருகையில் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்கிறார். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகுதான் அந்திக்கிறிஸ்துவின் அரசாட்சி உலகில் ஆரம்பமாகிறது. **இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படாதவர்கள் மட்டுமே தேவ கோபாக்கினையைச் சந்திக்கவேண்டியதி-ருக்கும்.** அப்போது அவர்கள், "பர்வதங்களையும் கன்மலை-களையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காச-னத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்-குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்-கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்" *(வெளி 6:16,17)*.

பேதுரு சொல்கிறபடி, "நீங்களோ, உங்களை அந்தகாரத்-தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்-கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" *(1பேதுரு 2:9)*.

சபையாராகிய நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமிக்கப்பட்டவர்களாகிறோம். கிறிஸ்துவின் நிமித்தம் நாம் இரட்சிக்கப்படுவதற்கு பிதாவாகிய தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்பே நம்மை நியமித்திருக்கிறார். **உலகத் தோற்றத்துக்கு முன்பே, நாம் சரீரத்தில் உருவாக்கப்படுமுன்பே நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்** என்பதை எபேசியர் *1:4* உறுதிப்படுத்துகிறது. "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்".

கிறிஸ்து சொல்கிறார், "நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான் *15:16*). "நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே *2:10*). அவர் நமக்கென்று ஆயத்தம் பண்ணிய காரியங்களை நாம் நடப்பிக்கிறோம்.

கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாகவே மனித இரட்சிப்பு உண்டாகிறது என்றாலும் அந்த இரட்சிப்பு தேவ கிருபையின் செயலாற்றலாகவே அமைகிறது. நம்முடைய நற்கிரியைகள் நம்முடைய இரட்சிப்புக்குக் காரணமாய் அமைவதில்லை. எபேசியர் *2:8,9* சொல்கிறபடி, "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல".

நம் விசுவாசம் தேவ கிருபையோடு இணைந்து நம்முடைய இரட்சிப்புக்குக் காரணமாக அமைகிறது என்று சொல்லும் அதே வேளையில் இந்த விசுவாசம் நம்மில் இருந்து உருவான ஒரு காரியம் அல்ல, முற்றிலுமாக தேவனுடைய ஈவு,

தேவன் இலவசமாக நமக்குத் தந்தருளும் ஒரு காரியம் என்பதை இந்த வேதப்பகுதி உறுதிப்படுத்துகிறது. "அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" *(பிலிப் 2:12)* என்ற ஆலோசனையை அடுத்து உடனடியாக பவுல் சொல்கிறார், "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" *(வ 13)*. இரட்சிப்படைய பிரயாசப்படுகிறோம் என்கிறார். அது தேவ கிருபையின் செயலாற்றலே. நம்முடைய தனிப்பட்ட தீர்மானம் அல்ல.

நாம் தியானிக்கும் வசனத்தில் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார் என்று பவுல் இதைத்தான் குறிப்பிடுகிறார். ரோமர் *8:1* இதை உறுதிப்படுத்துகிறது, "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை". ஏனென்றால் இந்த இரட்சிப்படைவதற்கென்று தேவனால் நியமிக்கப்பட்டவர்கள். இந்த நியமனம் உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவன் நியமித்த ஒரு காரியம். அப்போஸ்தலர் நடபடிகள் *15:18* சொல்கிறபடி, "உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது". "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளாக" *(1பேதுரு 1:2)* நாம் இருக்கிறோம்.

"தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார், எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" *(ரோமர் 8:29-30)*.

தேவன் நம்மை முன்னறிந்தார் என்றால் அது உலகத்தோற்றத்துக்கு முன் நடந்து முடிந்த ஒரு காரியம். நீதிமொழிகள்

8:22-30 வாசித்துப்பாருங்கள். பூமியை தேவன் சிருஷ்டிக்கும் வேளையில் - பூமி, ஆழங்கள், ஜலம், மலைகள், பூமி, வானம், சமுத்திரம், மேகம் ஆகியவை உருவாகுமுன்பு கிறிஸ்து "அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்து, நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து அவர் சமுகத்தில் களிகூர்ந்தார்" என்று *(8:30)* சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்த 31வது வசனத்தில் கிறிஸ்து இவ்வாறு சொல்கிறார், "அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்". **இந்த மனுமக்கள் யார் என்று யோசித்துப் பார்த்திருக்கிறீர்களா? அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கென்று முன்குறிக்கப்பட்ட மனுமக்கள் நீங்களும் நானும்தான்.** அவரே நம்மை அழைத்தார். அவரே நம்மை நீதிமானாக்கினார். முடிவில் அவரே நம்மை மகிமைப்படுத்தப் போகிறார். ஏனென்றால் நித்தியத்தில், உலக சிருஷ்டிப்புக்கு முன்பே மனுமக்களாகிய நம்மோடு தேவகுமாரன் மகிழ்ச்சிஅடைந்துகொண்டிருந்தார்.

நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும், தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே. (5:10)

கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது உயிரோடிருப்பவர்கள் விழித்திருக்கிறவர்கள் என்றும் அவருடைய வருகைக்கு முன் மரித்த பரிசுத்தவான்களை நித்திரை அடைந்தவர்கள் என்றும் பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். இந்த இரண்டு பிரிவினருமே ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அதாவது நித்திய நித்தியமாக அவரோடு இருக்கும்படி கிறிஸ்து நமக்காக மரித்தார் என்கிறார். அவருடைய சிலுவை மரணத்தின் மூலமாக அவருடைய ஜீவன் நமக்குச் சொந்தமானதாகிறது. **மனித இரட்சிப்பின் ஆதாரம் கிறிஸ்துவின் சிலுவை மரணமே. அவருடைய அற்புதமான போதனைகளினாலோ, பரிசுத்த ஜீவியத்தினாலோ, அவர் நடப்பித்த அற்புத அடையாளங்-**

களினாலோ அல்ல, அவருடைய மரணமே நமக்கு இரட்சிப்பை வழங்குகிறது. ஆசிரியருடைய "உனக்காக நான் மரித்தேன்" என்ற புத்தகம் அவருடைய மரணத்தின் மேன்மையை வெளிப்படுத்துகிறது.

கிறிஸ்து சொல்கிறார், "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோ 10:11). பவுல் சொல்கிறார், "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5:6). 8-வது வசனம் சொல்கிறது, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்". "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1கொரி 15:55) என்று தைரியமாக நாம் சொல்லமுடியும்.

நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தார் என்ற திட்டவட்டமான அறிவிப்பு பவுலிடமிருந்து வெளிப்படுகிறது. "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் (2கொரி 5:14,15). கிறிஸ்து ஏன் மரித்தார்? நாம் அவருக்குள் பிழைத்திருக்கும்படியாக.

கிறிஸ்துவின் சிலுவை மரணம் பிதாவாகிய தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு புதிய நல்லுறவை உருவாக்கிவிட்டது என்று பார்க்கிறோம். அதன் விளைவாக, ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் வைக்கப்படுவதின் விளைவாக மரணத்தைக் குறித்த பயம் அவனிடம் இருப்பதில்லை. ரோமர் 8:32 சொல்கிறபடி, "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" 1தெசலோனிக்கேயர் 4:14 துவங்கி பவுல்

தொடர்ச்சியாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு மனிதன் தன் சரீர மரணத்தைக் குறித்து எவ்விதத்திலும் பயப்படத்தேவையில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாகவே இது சாத்தியமாகிறது.

பொதுவான ஆலோசனைகள் (5:11-13)

ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவ-ரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள். (5:11)

ஒருவரையொருவர் தேற்றுவது, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படிச் செய்வது ஆகிய காரியங்களை ஏற்கெனவே தெசலோனிக்கேய சபையார் செய்துவருகிறார்கள் என்பதை இந்த நிருபத்தின் 4வது அதிகாரம் 10வது வசனத்தில் பவுல் அறிவித்திருந்தார். அதில் பவுல் சொல்கிறார், "அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லா-ருக்கும் செய்து வருகிறீர்கள்". 4:18ல் பவுல் தெசலோனிக்கேய சபையாரிடம் சொல்கிறார், "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்". சபையாராகிய நாம் சுயநலக்-காரர்களாக இருக்கக்கூடாது. நம்மைச் சுற்றிலும் பெலவீனமான விசுவாசிகள் இருப்பதை உணர்ந்தவர்களாய் அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களில் பக்திவிருத்தி உருவாக்கும் கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை உணரவேண்டும்.

சங்கீதம் 69:20ல் தாவீது சொல்கிறார்: "எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை;தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன்". எரேமியா புலம்புகிறார், "என் கண், என் கண்ணே நீராய்ச் சொரிகிறது; என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்" (புலம்பல் 1:16). தேற்றுவதோடு

நிறுத்திக்கொள்ளக்கூடாது. ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படிச் செய்யுங்கள் என்கிறார் பவுல்.

நான்காவது அதிகாரத்தில் சபையாரில் சிலர் கர்த்தருடைய வருகைக்கு முன்பாக மரித்த அவர்கள் உற்றார் உறவினர்களைக் குறித்து நம்பிக்கையற்றவர்களாக துக்கத்தோடு இருந்த காரியத்தைப் பவுல் சுட்டிக்காட்டினார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவின் வருகையின்போது கிறிஸ்துவுக்குள் மரித்த இந்தப் பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்ற அறிவிப்பை பவுல் மீண்டுமாக சபையாரின் கவனத்துக்குக் கொண்டுவந்து அவர்களை உற்சாகப்படுத்துகிறார். இத்தகைய வேத சத்தியங்களை சபையார் அறியவேண்டிய விதத்தில் அறிந்திருந்தால் மட்டுமே அவர்களில் பக்திவிருத்தி உண்டாகும். மரணத்தைக் குறித்த பயம் நீங்கும். **தன்னுடைய இரட்சிப்பைக் குறித்த நிச்சயத்தோடிருக்கும் ஒரு கிறிஸ்தவன் தன் மரணத்தைக் குறித்துப் பயப்படத் தேவையில்லை.** “கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்” (பிலிப் 1:21)என்கிறார் பவுல். “கிறிஸ்துவை என் வாழ்வின் ஜீவனாக நம்புகிறேன். இதனால் நான் இறந்துபோனாலும் எனக்கு லாபம்தான்” (பரிசுத்த பைபிள்).

அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து (5:12)

இந்த அதிகாரத்தின் முதல் 11வசனங்களில் கர்த்தரின் நாள் சற்றும் எதிர்பாராத வேளையில் சடுதியில் வரக்கூடும் என்பதினால் சபையார் மிகுந்த எச்சரிக்கையோடும், ஆயத்தத்தோடும் இருக்கவேண்டும் என்ற ஆலோசனையை பவுல் கொடுத்ததைப் பார்த்தோம். தெசலோனிக்கேய சபையார் கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றாலும்,

அவர்களுடைய சபை ஐக்கியத்தில் சில குறைபாடுகள் இருப்பதை அறிந்துகொண்டவராய் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை இந்த வசனம் துவங்கி 22-வது வசனம் வரை கொடுக்கிறார். 1தெசலோனிக்கேயர் 3:6ல் நாம் பார்த்தபடி தெசலோனிக்கேயாவில் இருந்து பவுலிடம் வந்த தீமோத்தேயு, சபையாரைக் குறித்த சகல காரிங்களையும் அங்கு காணப்பட்ட சில குறைகளையும் அறிவித்தபடியால் அதின் அடிப்படையில் சுருக்கமாக சில ஆலோசனைகளை இந்த வேதபகுதியில் வழங்கியபின் இந்த நிருபத்தை பவுல் முடிவுக்குக் கொண்டுவருகிறார்.

இந்த வேதபகுதியின் துவக்கத்திலேயே 'சகோதரரே' என்று சபையாரை பவுல் பாசத்தோடு அழைப்பதைக் கவனியுங்கள். இந்த நிருபத்தில் மட்டும் சகோதரரே என்ற இந்த வார்த்தை 'adelphoi' 21 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த வார்த்தை சகோதரிகளையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய குடும்பத்தில் பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் பிறந்தவர்கள் சகோதரர்களாகவும் இருக்கலாம், சகோதரிகளாகவும் இருக்கலாம்.

சபையார் தங்கள் சபையை வழிநடத்தும் மூப்பர்கள் மற்றும் ஊழியக்காரர்களை கனம்பண்ணவேண்டும் என்ற ஆலோசனை 12 மற்றும் 13ம் வசனங்களில் காணப்படுகிறது. சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதும் அதை நிர்வாகம் பண்ணும்படியாக மூப்பர்கள் நியமிக்கப்படுவார்கள். "அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்" என்று அப்போஸ்தலர் நடபடிகள் 14:23ல் வாசிக்கிறோம்.

தீத்து 1:5ல் பவுல் சொல்கிறார், "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்-

படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே". கர்த்தருக்குள் சபையாரை விசாரித்து புத்திசொல்லுவது இந்த மூப்பர்களின் பொறுப்பு.

இந்த மூப்பர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க-வேண்டும் என்று 1தீமோத்தேயு *3:2-9*ல் விளக்கமாகச் சொல்-லப்படுகிறது, "கண்காணியானவன் குற்றஞ்- சாட்டப்படாத-வனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்-ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்-ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிற-வனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனு-மாயிருக்கவேண்டும். **ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?** அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிருக்கவேண்டும். அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிற-வர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும் விசுவா-சத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளு-கிறவர்களாயும் இருக்கவேண்டும்".

இந்த மூப்பர்கள் சபையாரை விசாரணை செய்வதோடு தங்கள் கடமையை முடித்துக்கொள்வதில்லை. சபையாருக்குத் தேவையான புத்தி சொல்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் *20:31*ல் பவுல் எபேசு சபையின் மூப்பர்களை வரவழைத்துச் சொல்கிறார், "நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல்

அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்". ரோமாபுரியாரிடம் சொல்கிறார், "நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 15:14).

"ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என்று கொலோசெயர் 3:16,17ல் சொல்கிறார். 2தெசலோனிக்கேயர் 3:15ல் வசனத்துக்குக் கீழ்ப்படியாதவர்களையும் "சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" என்கிறார் பவுல்.

ரோமாபுரி சபையாரைக் குறித்து பவுல் சொல்கிறார், "நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 15:14). 1கொரிந்தியர் 4:14ல் சொல்கிறார், "உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்". கொலோசெயர் 1:28ல் சொல்கிறார், "... எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்".

தெசலோனிக்கேயாவில் கர்த்தருடைய ஊழியம் செய்த மூப்பர்கள் நடப்பித்த மூன்று காரியங்களை பவுல் இந்த வசனத்தில் அறிவித்து அதினிமித்தம் அவர்கள் மதிக்கப்படவேண்டும் என்று இந்த வசனத்திலும், அவர்கள்மேல் அன்பு செலுத்தவேண்டும் என்று அடுத்த வசனத்திலும் பவுல் குறிப்பிடுகிறார்.

அவர்கள் சபையாருக்காக மிகவும் பிரயாசப்படுகிறார்கள் என்பது **முதலாவதாகச்** *சொல்லப்படுகிறது. அதற்காகவே மூப்பர்களை பவுல் நியமித்து கர்த்தரின் கரத்தில் சபையாரை ஒப்புவித்தார். அப்போஸ்தலர் நடபடிகள் 14:23ல் இவ்வாறு வாசிக்கிறோம், " ... அல்லாமலும் அந்தந்த சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்".*

தாங்கள் நியமித்த மூப்பர்களை கர்த்தருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். **மனுஷீக ஞானத்தில் சபை நடத்தப்படக்கூடாது.** *"அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" (கொலோ 1:29). "இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், நிந்தையும் அடைகிறோம்; ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" (1தீமோ 4:10).*

தன்னுடைய கடினமான ஊழியப் பிரயாசத்தைக் குறித்து பவுல் 1கொரிந்தியர் 4:12,13ல் இவ்வாறு சொல்கிறார், "எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப் போலவுமானோம்".

இரண்டாவதாக *ஊழியக்காரர்கள் சபையாரை விசாரணை செய்கிறவர்களாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. சபை விசுவாசிகளின் நடத்தைகளைக் குறித்து விசாரிக்கும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விசாரணையின் நோக்கம் சபையார் அதன்மூலமாக ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பதே. 2கொரிந்தியர் 10:8ல் பவுல் சொல்கிறார், "உங்களை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, உங்களை*

ஊன்றக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைக் குறித்து, நான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மைபாராட்டினாலும் நான் வெட்கப்படுவதில்லை".

சபையாருக்கு புத்தி சொல்வது மூப்பர்களின் பிரதானமான வேலைகளில் ஒன்று என்பது **மூன்றாவதாகச்** சொல்லப்படுகிறது. புத்தி சொல்வதின் நோக்கம் என்ன என்பது கொலோசெயர் 1:28ல் இவ்வாறு சொல்லப்படுகிறது, "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்". "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லவேண்டும்" (கொலோ 3:16).

புத்தி சொல்கிற ஊழியக்காரர்களை சபையார் மதித்து நடக்கவேண்டும் என்கிறார் பவுல். புத்திசொல்வதின் நோக்கம் சபையாரை மட்டந்தட்டுவதற்கோ, வெட்கப்படுத்துவதற்கோ தங்களை பெருமைப்படுத்துவதற்கோ அல்ல. 1கொரிந்தியர் 4:14ல் பவுல் சொல்கிறார், "உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்". புத்திசொல்லும்படியாகவே தேவன் ஊழியக்காரர்களை கண்காணிகளாக நியமித்திருக்கிறார்.

"தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" (அப் 20:28). 1தீமோத்தேயு 5:17ல் பவுல் சொல்கிறார், "நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்".

தேவனுடைய ஊழியக்காரர்களை நீங்கள் மதிக்க-வேண்டும் என்று பவுல் சொல்லும்போது மூன்று காரியங்களை அவர் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். முதலாவது சபையார் அவர்களைக் குறித்து அறிந்திருக்கவேண்டும். இரண்டாவதாக அவர்களுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க-வேண்டும். மூன்றாவதாக அவர்களைக் கனம் பண்ண-வேண்டும். அவர்கள் செய்யவேண்டிய நான்காவது காரியம் அடுத்த வசனத்தில் சொல்லப்படுகிறது-அவர்கள்மேல் அன்பு செலுத்தவேண்டும். அவர்களை கனம் பண்ணுவதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக நினைக்கக்கூடாது.

அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதான மாயிருங்கள். (5:13)

“உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்” என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். ஒருவேளை தெசலோனிக்கேயா சபையாரிடம் ஊழியக்காரர்கள்மேல் பவுல் எதிர்பார்க்கிற அளவு அன்பு இல்லாதிருந்திருக்கலாம் - அதினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறேன் என்று பிரத்தியேகமாக பவுல் சொல்ல வேண்டியதாயிற்று. **ஒரு சபையின் தலைவர்களை சபையார் அன்பாக நடத்தத்தவறும்போது தேவன் விரும்பும் விதத்தில் அந்த சபை செயல்படமுடியாது.** தனிப்பட்ட விதத்தில் ஊழியக்காரர்களை நேசிக்க சபையாரால் முடியா-விட்டாலும் அவர்கள் கிரியைகளினிமித்தம், அவர்கள் சபைக்-காக நடப்பிக்கும் செயல்பாடுகளினிமித்தம் அவர்களை அன்பாய் எண்ணிக்கொள்ளுங்கள் என்று பவுல் ஆலோசனை தருகிறார்.

கலாத்தியர் 6:6-9ல் பவுல் “திருவசனத்தில் உபதேசிக்கப்-படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன். மோசம் போகாதிருங்கள், தேவன்

தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். **தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.** நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்". "பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்" *(2தீமோ 2:6)* என்பது தேவநியதி.

1கொரிந்தியர் 13ஆம் அதிகாரம் முழுவதும் பவுல் அன்பின் மேன்மையைக் குறித்து விளக்கமாக அறிவிக்கிறார். "அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" *(வ 2)*. "அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம்" *(வ 8)*. "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது, இவைகளில் அன்பே பெரியது" *(வ 13)*.

அன்பின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படும் யோவான் சொல்கிறார், "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்; தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" *(1யோ 4:16)*. "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(வ 7,8)*. "சமாதானத்தின் தேவன்" *(ரோமர் 15:33, 16:20, பிலிப் 4:9, 1தெச 5:23)* என்று அவர் அழைக்கப்படுகிறார்.

ரோமர் *12:18*ல் பவுல் சொல்கிறார், "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்". "ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும்

இருங்கள்" (மாற்கு 9:50). இந்த ஆலோசனை வேதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது (ரோமர் 12:18, 14:19, 1கொரி 7:15, 2கொரி 13:11, கொலோ 3:15, 2தீமோ 2:22).

ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாயிருத்தல் (5:14-15)

மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். (5:14)

சகோதரரே என்று பவுல் அழைப்பதில் இருந்து பவுல் இந்த வேதபகுதியில் 14,15 ஆகிய வசனங்களில் சபையின் ஊழியக்காரர்களிடம் மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசியிடமும் பேசுகிறார் என்பது தெளிவாகிறது. இதை அடுத்துவரும் 16,17,18 ஆகிய மூன்று வசனங்களில் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவேண்டும், இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும், எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்யவேண்டும் ஆகிய மூன்று கட்டளைகள் சபையாருக்குக் கொடுக்கப்படுகிறது. 19-வது வசனம் துவங்கி 22-வது வசனம் வரை சபையாருக்கு ஐந்து வித்தியாசமான ஆவிக்குரிய ஆலோசனைகளை பவுல் வழங்குகிறார்.

சகோதரரே நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால் என்று இந்த வேதபகுதி துவங்குகிறது. சகோதரரே என்று பவுல் சொல்லும்போது சபையின் மூப்பர்களை மட்டும் குறிப்பிடாமல் ஒவ்வொரு சபை அங்கத்தினரையும் பவுல் மனதில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஆலோசனைதருவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். குறைகள் உள்ள, பெலவீனமான-

வர்கள் எல்லாச் சபைகளிலும் ஏராளமாகக் காணப்படுகிறார்கள். அவர்களுடைய தேவைகள் என்ன என்பதை அறிந்தவராய், சபையார் அத்தனைபேருக்கும் நான்கு ஆலோசனைகளை வழங்குகிறார்.

1. ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுங்கள்.

2. திடனற்றவர்களைத் தேற்றுங்கள்.

3. பலவீனரைத் தாங்குங்கள்.

4. எல்லாரிடமும் நீடிய சாந்தமாயிருங்கள்.

இதைத் தொடர்ந்து 22-வது வசனம் வரை பதின்மூன்று ஆலோசனைகளை பவுல் தருகிறார்.

ஒழுங்கில்லாதவர்கள், திடனற்றவர்கள் மற்றும் பலவீனர் என்று மூன்று வித்தியாசமான விசுவாசிகள் இந்த வசனத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். ஆனாலும் இவர்கள் பவுல் மூலமாக தெசலோனிக்கேயா பட்டணத்தில் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்பதினால் அவர்களுடைய பெலவீனத்தின் மத்தியிலும் அவர்களுக்குப் புத்தி சொல்வது, அவர்களைத் தேற்றுவது, தாங்குவது ஊழியர்களின் கடமையாகிறது.

நம்முடைய சத்துருக்களையே சிநேகிக்கும்படியாக நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்குப் போதித்திருக்கிறார். மத்தேயு 5:44ல் அவர் சொல்கிறார், "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்". தொடர்ந்து 45 முதல் 48 வரையுள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

நீதிமொழிகள் 25:21 சொல்கிறது, "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு". ரோமர் 12:17-21ல்

இவ்வாறு வாசிக்கிறோம், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். **நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு**".

பேதுரு சொல்கிறார், "தீமைக்கு தீமையையும் உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப்பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்" *(1பேதுரு 3:9)*. மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது தேவனுடைய ஆசீர்வாதம் நம்மைத் தேடிவருகிறது.

முதலாவது சொல்லப்படும் **ஒழுங்கில்லாதவர்கள்** இந்த உலகத்தில் காணப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, திருச்சபைகளிலும் திரளாகக் காணப்படுகிறார்கள். 2தெசலோனிக்கேயர் *3:11*ல் பவுல் சொல்கிறார், "உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்". அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய புத்திமதி 1தெசலோனிக்கேயர் *4:11,12*ல் "புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக்கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்". ஏற்ற-

நேரத்தில் அவர்களுக்குச் சொல்லப்படும் புத்திமதி அவர்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும். இரட்சிப்பில் நிலைத்திருக்கச் செய்யும்.

இரண்டாவதாக திடனற்றவர்களைக் குறித்துப் பவுல் பேசுகிறார். சத்தியத்தை அறிந்து ஏற்றுக்கொண்ட பின்பும் அதைக் குறித்த முழுமையான நிச்சயமில்லாத **திடனற்ற விசுவாசிகள்** சபையில் இருப்பார்கள். தெசலோனிக்கேயர் சபையில் இருந்த திடனற்றவர்கள்தான் "நித்திரையடைந்தவர்களினிமித்தம்" நம்பிக்கையற்றவர்களாய் துக்கித்துக் கொண்டிருந்தார்கள் என்று 1தெசலோனிக்கேயர் 4:13ல் வாசித்தோம். அவர்களுக்கு வருகையைக் குறித்த சத்தியத்தை அறிவித்து "இந்த வார்த்தைகளினாலே ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (வ 18) என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

மூன்றாவதாக பலவீனரைத் தாங்கும்படியாகப் பவுல் அறிவிக்கிறார். "ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" (1தெச 5:11). ரோமர் 14:1ல் பவுல் சொல்கிறார், "விசுவாசத்தில் **பலவீனமுள்ளவனைச்** சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்". திடனற்ற பலர் கொரிந்து சபையிலும் இருந்தார்கள் என்பதினால் அவர்களைக் குறித்த தேவ ஆலோசனைகளை 1கொரிந்தியர் 8ம் அதிகாரம் முழுவதிலும் கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்துப் பாருங்கள். புத்திசொல்லுவதின் நோக்கம் அவர்களை சபையை விட்டு வெளியே தள்ளுவதாக இருக்கக்கூடாது.

தெசலோனிக்கேயாவில் மட்டுமல்ல, இன்றும் எல்லாச் சபைகளிலுமே பலவீனர்கள் காணப்படுகிறார்கள். அதினிமித்தம் நாம் அவர்களைப் புறக்கணித்துவிடக்கூடாது. சில விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நம்மைவிடக் குறைவுள்ளவர்களாகக் காணப்படலாம். பவுல் சொல்கிறபடி, "உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச

அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண-வேண்டும்" (ரோமர் 12:3). திடனற்ற சகோதரர்களை பெலனடையச் செய்வது நம்முடைய கடமை.

அவர்களுக்கு சரியான சத்திய மார்க்கத்தையும், போதனைகளையும் கற்றுக்கொடுப்பது நம்முடைய பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பிரசங்கி 4:1ல் இவ்வாறு வாசிக்கிறோம், "ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை;ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவா-ரில்லை". "என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்" (புலம்பல் 1:16) என்று புலம்புகிறார் எரேமியா.

சபையாரின் பலவீனத்தின் நிமித்தம் அவர்களை சபை புறக்கணித்துவிடக் கூடாது. ஏனென்றால் "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5). "**நாம் பெலனற்ற-வர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்**" (ரோமர் 5:6). எனவே பெலவீனர்களோடு நம்மை ஒப்பிட்டு நம்மை மேன்மைப்-படுத்திக்கொள்ளக்கூடாது. "உங்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரம் எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாத-படிக்குப் பாருங்கள்" (1கொரி 8:9) என்கிறார் பவுல். ஆண்டவராகிய இயேசுவைக் குறித்து ஏசாயா சொல்கிறார், "அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்-படுத்துவார்" (42:3).

எல்லாரிடத்திலும் **நீடிய சாந்தமாயிருங்கள்** என்பதை இந்த வசனத்தின் **நான்காவது** ஆலோசனையாக பவுல் அறிவிக்-கிறார். இந்த அதிகாரத்தின் 22வது வசனம் வரை மொத்தம் 13 ஆலோசனைகளை தேவ ஆவியானவர் சபைகளுக்கு வழங்குகிறார் என்று பார்த்தோம். தேவனாகிய கர்த்தர் தான்

"நீடிய சாந்தமும், மகா தயையும் சத்தியமுமுள்ள தேவன்" என்று தன்னை அறிமுகப்படுத்துகிறார் (யாத் 34:6, எண் 14:17, சங் 145:8, யோனா 4:2). "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்" (மத் 11:29) என்கிறார் இயேசு. ஆவியின் கனிகளில் ஒன்றாக சாந்தம் குறிப்பிடப்படுகிறது. கலாத்தியர் 5:23, யோவேல் 2:13, நாகூம் 1:3, ரோமர் 2:4, 9:23 வாசித்துப் பாருங்கள் "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத் 5:9) என்கிறார் இயேசு.

நீடிய சாந்தமாயிருப்பது எப்படி என்பதை பவுல் ரோமர் 12:10-21ல் விளக்கமாக அறிவிக்கிறார், "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள். மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். **கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.** பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்".

ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள். (5:15)

"உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" *(மத் 5:44)* என்ற கிறிஸ்துவின் அறிவிப்பு பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண விதிமுறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டது என்பதை அறிவோம்.

"பழிக்குப் பழி வாங்கப்படவேண்டும்" *(யாத் 21:20)* என்பது பிரமாணம். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழிகொடுக்கவேண்டும்"*(வ 24,25)*. "நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; அவன் ஒரு மனிதனை ஊனப்படுத்தினதுபோல அவனும் ஊனப்படுத்தப்படவேண்டும்" *(லேவி24:20)*. "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்படவேண்டும்" *(உபா 19:21)*. "ஒரு மனிதனைக் கொல்லுகிறவன் எவனோ,அவன் கொலைசெய்யப்பட வேண்டும்" *(லேவி 24:17)*. "ஒருவன் பிறனை ஊனப்படுத்தினால்,அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது" *(வ 19)*.

அதே சமயம் நியாயப்பிரமாணத்தில் "பழிக்குப் பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீஅன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" *(லேவி 19:18)* என்ற கற்பனையும் வழங்கப்பட்டிருக்கிறது. உபாகமம் *32:35*ல் தேவன் திட்டவட்டமாகச்

சொல்கிறார், "பழிவாங்குதலும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்ற காலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்". நீதிமொழிகள் 20:22ல் இவ்வாறு வாசிக்கிறோம், "தீமைக்குச் சரிகட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை இரட்சிப்பார்".

இந்த ஆலோசனைகளை கிறிஸ்து தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் சபையாருக்கு வெளிப்படுத்துகிறார். மத்தேயு 5:38-41ல் இயேசு சொல்கிறார், "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல்தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல்தூரம் போ".

மற்றவர்களுக்கு தீமை செய்யாதபடி இருந்தால் மட்டும் போதாது. ஒருவருக்கொருவர் எப்பொழுதும் நன்மை செய்யவேண்டும் என்ற ஆலோசனையும் இந்த வசனத்தில் கொடுக்கப்படுகிறது. நன்மை செய்யவேண்டும் என்று சொல்லப்படாமல் நன்மை செய்ய நாடுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.எல்லாருக்கும் நன்மை செய்ய முயற்சி செய்யவேண்டும். "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:21) என்று சொல்லப்பட்ட காரியம் இதுதான்.

1பேதுரு 3:9ல் பேதுரு சொல்கிறார், "தீமைக்குத் தீமையையும் உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்". நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்போது தேவனுடைய ஆசீர்வாதம் நம்மைத் தேடி வரும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

பேதுரு ஒருமுறை இயேசுவிடம் வந்து இவ்வாறு கேட்கிறார், “ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்” *(மத் 18:21,22).*

லூக்கா *6:27-35*ல் இயேசு சொல்கிறார், “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள். உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு: உன் அங்கியை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதே. உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பிக் கேளாதே. **மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்**”.

தொடர்ச்சியாகக் கிறிஸ்து சொல்கிறார், “உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே, உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே”.

கிறிஸ்தவக் கடமைகள் (5:16-18)

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். (5:16)

12 முதல் 15 வரையுள்ள வசனங்களில் சபையார் தங்கள் சபைத்தலைவர்கள், ஒழுங்கில்லாத சபை உறுப்பினர்கள் மற்றும் பலவீனமானவர்கள், சபையில் இருந்துகொண்டே தீமை செய்பவர்கள் ஆகியோரோடு எப்படி நடந்துகொள்ள-வேண்டும் என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அதைத் தொடர்ந்து 16 முதல் 18 வரையுள்ள வசனங்களில் நம்முடைய உள்ளான மனநிலை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்ற ஆலோசனை வெளிப்படுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் நடப்பிக்கவேண்டிய கிரியைகளை அறிவிக்கிறது.

1. *சந்தோஷமாயிருக்கவேண்டும்(வ.16)*
2. *ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும் (வ.17)*
3. *ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் (வ.18)*

புதிய ஏற்பாட்டு கற்பனைகளை கணக்கிட்டுப் பார்ப்போ-மானால் 70 கற்பனைகளில் ஒன்று நாம் மனமகிழ்ச்சியாய் இருக்கவேண்டும் (Rejoice) என்பது குறித்த ஆலோசனையாய் இருக்கிறது. பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு அருளிச்செய்த ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்ப்போமானால் நிச்சயமாகவே நாம் எல்லா வேளைகளிலும் மனமகிழ்ச்சியாய் இருக்கமுடியும். கிறிஸ்துவுக்குள் நாம் அவ்வளவு மகிமையான ஆசீர்வாதங்களை அனுதினமும் சுதந்தரித்துக்கொண்டிருக்கிறோம்.

சிலவேளைகளில் கடினமான, உபத்திரவங்கள் நிறைந்த பாதைகளில் நாம் பிரயாணம் செய்ய நேரிடலாம். ஆனாலும் நெகேமியா சொல்கிறபடி, "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்-பதே உங்களுடைய பெலன்" (8:10). பவுலும் சீலாவும் பிலிப்பி

பட்டணத்தில் சிறைச்சாலையில் கால்களைத் தொழுமரத்தில் கட்டப்பட்டிருந்த நிலையிலும் "ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப்பாடினார்கள்" *(அப் 16:25)*.

பவுல் அழகாகச் சொல்கிறார், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" *(பிலிப் 4:4)*. 2கொரிந்தியர் 6:10ல் பவுல் சொல்கிறார், "துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்".

கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் வேதனை நிறைந்த காரியங்கள் சம்பவிக்கலாம். ஆனாலும் பவுல் சொல்கிறபடி "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28) **நன்மையான தோற்றம் அவைகளில் காணப்படாமல் இருக்கலாம். அவற்றின் முடிவு நன்மையே.** ஏனென்றால் அவற்றின் பின்னணியில் செயல்படுவது தேவனுடைய தீர்மானம்.

பவுல் சொல்கிறபடி "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும் உயர்வானாலும், தாழ்வானாலும்,வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" *(ரோமர் 8:38,39)*.

கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் தேவதூதன் சொல்கிறார், "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" *(லூக் 2:10)*. கிரேக்க மொழியில் புதிய ஏற்பாட்டில் "எப்பொழுதும்

சந்தோஷமாயிருங்கள்" என்ற 1தெசலோனிக்கேயர் 5:16வது வசனம்தான் மிகவும் சிறிய வசனம் என்று வேதபண்டிதர்கள் அறிவிக்கிறார்கள். யோவான் 11:35 "இயேசு கண்ணீர் விட்டார்" என்ற வசனமும் வேதத்தில் சிறிய வசனங்களில் ஒன்று.

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். (5:17)

"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து பவுல் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்ற ஆலோசனையைத் தருகிறார். இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறவர்கள்தான் சந்தோஷமாக இருக்கமுடியும். **நம்முடைய தொடர்ச்சியான ஜெபமே நாம் எந்த அளவுக்கு தேவனையே நம்பியிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது.** எந்த அளவுக்குத் தேவனைச் சார்ந்திருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லும்போது அனுதினமும், காலைதோறும், மாலைதோறும், இரவுதோறும், அவ்வப்போது தூங்கி எழுந்ததும், உணவு எடுத்துக்கொள்ளும்வேளைகளிலும், ஒரு புதிய காரியத்தை குடும்பத்தில் துவங்கும் சமயங்களிலும் ஜெபம்பண்ண வேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. **நாம் விழித்திருக்கும் வேளையில் எல்லாம் தேவனோடு ஐக்கியம் கொள்வதையே ஜெபம் என்று அழைக்கிறோம்.** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோ 4:2) என்கிறார் பவுல்.

பிலிப்பியர் 4:6-7ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்-

ளும்". **"எப்பொழுதும் ஆவிக்குள் பிரார்த்தனை செய்யுங்கள். எல்லா வகையான பிரார்த்தனைகளையும் செய்து உங்களுக்குத் தேவையான அனைத்தையும் கேளுங்கள்"** (பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு). தேவையான அனைத்தையும் கேட்கும் உரிமை நமக்கு உண்டு.

தெசலோனிக்கேயர் சபையாருக்காக தான் எவ்வாறு ஜெபிக்கிறார் என்பதை *1*தெசலோனிக்கேயர் *1:4*ல் பவுல் இவ்வாறு சொல்கிறார், "எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்". கொலோசெயர் சபையாரிடம் பவுல் சொல்கிறார், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" *(1:5)*.

உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் முற்றிலுமாக தேவனை மட்டுமே சார்ந்திருக்கிறது என்பதை நம்முடைய ஜெப வாழ்க்கையே உறுதிசெய்வதாக இருக்கிறது. சில ஜெபக்குறிப்புகளை தேவ சமுகத்தில் அறிவிப்பதே ஜெபம் என்று நினைத்துக்கொள்கிறோம். அப்படி அல்ல. தேவனோடு நாம் கொண்டிருக்கும் ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதே நம்முடைய ஜெபம். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் தேவபிரசன்னத்தை எல்லா வேளைகளிலும் உணர்வதே ஜெபஜீவியம். நம்முடைய நினைவுகளையும், சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் சிறைப்படுத்துவதே ஜெபம்.

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (5:18)

ஆங்கில வேதாகமத்தில் give thanks *(நன்றி செலுத்துங்கள்)* என்ற வார்த்தைக்குப் பதிலாக ஸ்தோத்திரம் சொல்லுதல்

என்ற வார்த்தை தமிழ் வேதத்தில் பயன்படுத்தப்படுகிறது. "கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்" (சங் 96:2) என்று வாசிக்கிறோம். தேவன் சொல்கிறார், "நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி; ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்"(சங் 50:14,15). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் "ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" என்று மத்தேயு 26:30ல் வாசிக்கிறோம். எபிரெயர் 13:15ல் இவ்வாறு வாசிக்கிறோம், "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்".

தானியேல், "தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" (6:10). தன்னுடைய ஜெப வேளைகளில் எல்லாம் அப்போஸ்தலனாகிய பவுல் "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம் (ரோமர் 6:17, 1கொரி 15:57, 2கொரி 9:15, எபே 5:20, 1தெச 2:13, 3:9, 2தெச 1:3). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தேவனை ஸ்தோத்திரிப்பதை பல வசனங்களில் காண்கிறோம் (லூக்கா 10:21, யோவா 11:41, மத் 26:27, லூக்கா 22:17,19, 1கொரி 11:24, etc.)

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யும்படியான தேவ ஆலோசனை இந்த வசனத்தில் வெளிப்படுகிறது. சில உபத்திரவங்கள், வியாதி வருத்தங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் , பெலவீனங்கள் ஆகியவற்றை நாம் இந்த உலகத்தில் சந்திக்கவேண்டி இருக்கலாம். அந்த வேளைகளிலும்

நாம் தேவனை ஸ்தோத்திரிப்பது நம்முடைய கடமையா-யிருக்கிறது. ஏனென்றால் ரோமர் 8:28ன்படி தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது. உபத்திரவங்கள் வேதனை நிறைந்தவைகள்தான் என்றாலும் நம்மை நேசித்து, நமக்காகத் தன் ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்து அதை நம்முடைய வாழ்க்கையில் அனுமதித்திருக்கிறார் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கும் என்பதை உணர்ந்துகொண்டு, தேவனை ஸ்தோத்திரிப்பது நம்முடைய கடமையாகிறது. **சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்போது தேவனை ஸ்தோத்திரியாமல் நம்மால் இருக்கவே முடியாது.**

அதனால்தான் பவுல் இந்த வசனத்தின் பின்பகுதியில் சொல்கிறார், "அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது". "அப்படிச் செய்வது" என்று சொல்வது எப்போதும் சந்தோஷ-மாயிருப்பது, இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது, எல்லாவற்-றிலேயும் ஸ்தோத்திரம் செய்வது ஆகிய மூன்று காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

இப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்த தேவனுடைய சித்தம் என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். 1தெசலோனிக்கேயர் 4:3ல் நாம் பரிசுத்தமுள்-ளவர்களாக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம் என்று பார்த்தோம். **நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் தேவனுடைய சித்தத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க-வேண்டும்.** எபேசியர் 5:17ல் பவுல் சொல்கிறார், "நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்". பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது, "முட்டாள்தனமாக உங்கள் வாழ்க்கையை வீணாக்கிவிடாதீர்கள். பிதா உங்களிடம் என்ன விரும்புகிறார் (பிதாவின் சித்தம்) என்பதை அறிந்துகொள்ளுங்கள்".

ஆவியானவரின் செயல்பாடுகள் (5:19-22)

ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (5:19)

தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முந்தின நாளில் தன்னுடைய சீஷர்களை தைரியப்படுத்தும்விதத்தில் கிறிஸ்து சொல்கிறார், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய, வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவான் 14:16). அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (வ.17). "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (வ.26).

இன்று நாம் பரிசுத்த ஆவியானவரை பெற்றிருக்கிறோம் என்றால் அது நம்முடைய தகுதியின் அடிப்படையில் அல்ல, நாம் அவரைப் பெறவேண்டும் என்று வாஞ்சித்ததினாலோ, ஜெபித்ததினாலோ அல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக, நம் சார்பில் பிதாவிடம் வேண்டிக்கொண்டார். *அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் எருசலேமில் மேல்வீட்டறையில் ஜெபத்தோடு காத்திருந்தபோது "அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள்" (அப் 2:3) வடிவில் பரிசுத்த ஆவியானவர் சபைக்குத் தந்தருளப்பட்டார். பழைய ஏற்பாட்டு நாட்களில் ஆவியானவர் தீர்க்கதரிசிகளுக்கு அவ்வப்போது தந்தருளப்பட்டார் என்றாலும் அவர்களுக்குள் நிரந்தரமான முறையில் வாசம் பண்ணவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.*

ஆவியானவர் நம்முடைய பெலவீனங்கள், பாவங்கள் மத்தியிலும் கிறிஸ்துவின் வேண்டுதலினிமித்தம் நமக்குள் வாசமாயிருப்பதினால் நம்மால் அவரைத் துக்கப்படுத்த முடிகிறது. அவருடைய செயல்பாடுகளைத் தடைசெய்து அவித்துப் போடமுடிகிறது. அதனால்தான் ஆவியை அவித்துப் போடாதிருங்கள் என்றும் "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" *(எபே 4:30)* என்றும் பவுல் எச்சரிக்கிறார். பாவம் செய்யும்போதும்,தேவனுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போதும் நமக்குள் வாசமாயிருக்கும் திருத்துவத்தின் மூன்றாவது நபரைத் துக்கப்படுத்துகிறோம்.

அவித்துப் போடுதல் என்றால் என்ன என்பதை நாம் அறிந்தகொள்ளவேண்டும். எரிந்துகொண்டிருக்கும் நெருப்பை தண்ணீர் ஊற்றி அல்லது அதின்மேல் எதையாவது போட்டு எரியவிடாமல் அணைத்துவிடுவதே அவித்துப் போடுதல் ஆகும். **பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை மட்டுப்படுத்தும்போது நாம் ஆவியை அவித்துப் போடுகிறவர்களாகிறோம்.** புத்தி இல்லாத ஐந்து கன்னிகளின் தீவட்டிகளில் எண்ணெய் இல்லாதபடியால் அவர்கள் விளக்கு அணைந்துபோன காரியம் மத்தேயு *25:8*ல் சொல்லப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் சபைக்கு வழங்கும் கிருபை வரங்களை சரியான முறையில் உபயோகிக்கத் தவறும்போது அல்லது சுயநலநோக்கத்தோடு செயல்படுத்தும்போது ஆவியை அவித்துப் போடுகிறோம். கொரிந்து சபையாரைப் போல் இராமல், ஒருவேளை தெசலோனிக்கேய சபையார் ஆவியானவரின் செயல்பாடுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். அதனால்தான் ஆவியை அவித்துப் போடாதிருங்கள் என்ற ஆலோசனையை பவுல் அவர்களுக்கு வழங்குகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டின் அடிப்படையில்தான் பாவ மனிதன் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறான். "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்" (1கொரி 12:3) என்கிறார் பவுல். "ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1கொரி 12:7-11). **ஆவியானவரின் செயல்பாடுகளை முழுமையாக அங்கிகரிக்காதவர்கள் வேதத்தை முழுமையாக அறிந்துகொள்ள முடியாது.** *மெய்யான கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது.*

ஆவியை அவித்துப் போடுவது என்பது பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை மட்டுப்படுத்தும் காரியமாக மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு மொழிபெயர்ப்பு சொல்கிறது, "பரிசுத்த ஆவியானவருக்கான வேலையை நிறுத்தாதீர்கள்". அடுத்த வசனம் "தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள்" என்று சொல்வதினால், அவ்வாறு செய்வது ஆவியை அவித்துப் போடும் காரியங்களுள் ஒன்றாகக் கருதப்படவேண்டும். பேதுரு சொல்கிறார், "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2பேதுரு 1:21).

அதனால்தான் பவுல் சொல்கிறார், "ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள். ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" *(1கொரி 14:1-4)*.

தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். (5:20)

ஆவிக்குரிய வரங்களைக் குறித்த கூடுதலான வெளிப்பாடுகளைப் பெற்ற தேவமனிதன் அப்போஸ்தலனாகிய பவுல். 1கொரிந்தியர் 12,13,14 ஆகிய மூன்று அதிகாரங்களில் அவற்றைக் குறித்து எழுதியுள்ளார். பெந்தெகொஸ்தே தினத்தன்று எருசலேம் மேல்வீட்டறையில் இருந்த அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவின் சீஷர்களும் அவருடைய ஆலோசனையின்படி காத்திருக்கும்போது *(அப் 1:4-8)* பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த ஆவியானவர் ஒருவனுக்குள் வாசமாயிருக்கும்போது அவனில் சபை பக்திவிருத்தி அடையும்படியாக ஆவிக்குரிய வரங்கள் செயல்பட ஆரம்பிக்கின்றன.

எனவே ஆவிக்குரிய வரம் ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவத்தைப் பெறும்வேளையில் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு கிறிஸ்து வழங்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்திறன் ஆகும். விசுவாசிகள் அத்தனைபேரிலும் குறைந்த பட்சம் ஒரு ஆவிக்குரிய வரமாவது செயல்பட்டுக்கொண்டிருக்கும். பவுல்

சொல்கிறார், "அவனவனுக்குத் தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது" (1கொரி 7:7). 1கொரிந்தியர் 12:7,11, எபே 4:7, 1பேதுரு 4:10 வாசித்துப் பாருங்கள்.

எல்லா ஆவிக்குரிய வரங்களையும் பெற்றுக்கொண்டவர்கள் யாரும் இல்லை (1கொரி 12:29,30). தேவன் வழங்கிய வரங்களை உபயோகியாமல் இருப்பது (1தீமோ 4:14, 2தீமோ 1:6), தேவன் வழங்காத வரங்களை செயல்படுத்த முயற்சிப்பது (எண் 16:1-3, அப் 8:18-20) வேதத்தில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ரோமர் 12:6-8, 1கொரிந்தியர் 12:4-10,28, எபேசியர் 4:7,8 ஆகிய வசனங்களில் 18 வித்தியாசமான ஆவிக்குரிய வரங்கள் குறிப்பிடப்படுகின்றன. சபை பக்திவிருத்தியடையவேண்டும் என்ற நோக்கத்தோடு மட்டுமே வரங்கள் செயல்படுத்தப்படவேண்டும்.

தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள் என்று சொல்லும்போது தீர்க்கதரிசனங்களை முக்கியமற்ற ஒன்றாக எண்ணாதீர்கள் என்று பொருள்கொள்ளவேண்டும். ஏனென்றால் 1கொரிந்தியர் 14:3 சொல்கிறபடி, "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்". ரோமர் 12:6-8ல் சொல்லப்படும் ஆவிக்குரிய வரங்களின் பட்டியலில் தீர்க்கதரிசனம் முதலிடம் பெறுகிறது. "நீங்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்" (1கொரி 14:5) என்கிறார் பவுல்.

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். (5:21)

கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்த எச்சரிப்பு மோசே காலத்திலேயே வெளிப்படுவதைக் கவனியுங்கள். "உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும்

எழும்பி: நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லு-கிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்றுஅறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபா 13:1-3).

இந்தத் தீர்க்கதரிசிகள் சொல்லும் அடையாளமும் அற்புதமும் நடந்தாலும் அவர்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற எச்சரிக்கை ஆதி நாட்களிலேயே மோசே மூலமாக பழைய ஏற்பாட்டில் வெளிப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் கிறிஸ்து எச்சரிக்கிறார், *"கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை-யாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" (மத் 7:15)*. மத்தேயு *24:24*ல் கடைசி நாட்களில் *"கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்-தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்"*.

இயேசு அறிவித்தபடி இந்தக் கடைசிநாட்களில் ஆயிரக்கணக்கான கள்ளத்தீர்க்கதரிசிகள் உலகமெங்கும் எழும்பி தொலைக்காட்சி மூலமாகவும், ஜெபக்கூட்டங்கள் மற்றும் கவர்ச்சிகரமான ஆராதனைகள் மூலமாகவும் திரளான ஜனங்களின் விசுவாசத்தை தங்களுக்கு நேராக திசைதிருப்பிக் கொண்டிருக்கிறார்கள். *"உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்க-தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவான் 4:1)* என்ற ஆலோச-

னையின் முக்கியத்துவத்தை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்து-கொள்ளத் தவறியதின் விளைவாக கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் சபைக்குள் நுழையப்பண்ணு-கிறார்கள். பேதுரு சொல்கிறபடி *"கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்" (2பேதுரு 2:1).*

எரேமியா *14:14*ல் தேவன் சொல்கிறார், **"தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள்.** *நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினது-மில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தை-யும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்-தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்".*

இப்படிப்பட்டவர்கள் மூலமாக மனிதனுடைய ஆவியின் கிரியைகள் வெளிப்பட்டு போலியான தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுகின்றன. உண்மையான தீர்க்கதரிசிகள் தங்களிடம் கிரியை நடத்தும் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையினால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் என்றால் இவர்கள் தங்களுடைய மனுஷீக ஆவியினால் தீர்க்கதரிசனம் சொல்லு-கிறார்கள். இந்தக் கடைசிநாட்களில் மனித ஆவியினால் தீர்க்கதரிசனம் சொல்லுவது பெருகிவருகிறது. ஜெபக்கூட்டங்-களிலும் தொலைக்காட்சிகளிலும் மனுஷீக ஆவியுடன் ஊழியர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதைப் பார்க்கமுடியும். ஜெபத்தில் கூட்டத்துக்கு வந்திருப்பவர்களின் பெயர்சொல்லி அழைப்பது, வியாதிகளின் பெயரைச் சொல்லி சுகத்தை அறிவிப்பது ஆகியவை மனுஷீக ஆவியின் செயல்பாடுகளாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட மனிதர்கள் மூலமாக பல வேளைகளில் பிசாசின் ஆவியும் இணைந்து செயல்படுவதினால் அதின் மூலமாக தீர்க்கதரிசனம், வெளிப்பாடுகள், தரிசனங்கள் வெளிப்படக்கூடும். எசேக்கியேல் *13:3-11* வாசித்துப்

பாருங்கள். தேவன் சொல்கிறார், "**தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும், தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற** *(தேவ ஆவியை அல்ல, மனுஷீக ஆவி)* **மதி-கெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ !** *(வ.3)*. "கர்த்தர் தங்களை அனுப்பாதிருந்தும், கர்த்தர் உரைத்தாரென்று சொல்லி, அவர்கள் அபத்தத்தையும் பொய்க்குறியையும் தரிசித்து, காரியத்தை நிர்வாகம் பண்ணலாமென்று நம்பிக்கையாயிருக்கிறார்கள்" *(வ.6)*.

பிசாசின் ஆவியின் கிரியைகளும் இப்படிப்பட்ட தீர்க்க-தரிசிகள் மூலமாக வெளிப்படக்கூடும். பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த நாஸ்டர்டாமஸ் என்ற மனிதன் 1565ல் மரணமடைந்தான் என்றாலும் இரண்டு உலக மகாயுத்தங்களைக் குறித்தும், கென்னடி, ஹிட்லர், முசோலினி, இந்திய பிரதமர்கள் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ஆகியோரின் மரணத்தைக் குறித்தும் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவரில் செயல்பட்ட பிசாசின் ஆவி. இன்றும் சில ஊழியர்கள் கைநீட்டினால் விசுவாசிகள் கூட்டம்கூட்டமாகப் பின்புறமாக விழுகிறார்கள், ஊதினால் கீழே விழுகிறார்கள். சில அற்புத அடையாளங்களையும் செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய மனுஷீக ஆவியுடன் பிசாசின் ஆவியும் இணைந்து செயல்படுவதுதான்.

இந்த ஆபத்தைக் குறித்து கிறிஸ்துவின் எச்சரிக்கை மலைப்பிரசங்கத்திலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இயேசு சொல்கிறார், "*அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்-காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்*" *(மத் 7:22,23)*.

இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் நாமத்தை அறிந்து செயல்பட்டார்கள் என்பது உண்மைதான். அதிசயங்களையும் அற்புதங்களையும் நடப்பித்தார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் இயேசுவோ தான் அவர்களை அறியவில்லை என்கிறார். அக்கிரமச் செய்கைக்காரர்களே என்கிறார். அப்படியானால் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னது, பிசாசுகளைத் துரத்தினது, அற்புதங்களைச் செய்தது தேவ ஆவியானவரின் செயல்பாடு அல்ல என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இதனால், சொல்லப்படுகிற தீர்க்கதரிசனங்களை நாம் சோதித்துப் பார்ப்பது அவசியமாகிறது. "நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்" *(ரோமர் 12:6)*. இதைச் செய்யத் தவறும் ஊழியக்காரர்கள் மூலமாக சபை எந்த அளவுக்குப் பாதிப்படைகிறது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. "அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்" *(தீத்து 1:10,11)*.

சபையிலே "தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள் *(1கொரி 14:29)* என்கிறார் பவுல். தங்களுடைய தீர்க்கதரிசன வெளிப்பாடுகளை எவரும் நிதானிப்பதில்லை என்ற தைரியத்தினால்தான் எங்கு பார்த்தாலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பலுகிப் பெருகிவருகிறார்கள். வேதாகமத்தை தன் கையில் வைத்துக்கொண்டு ஒரு ஊழியக்காரன் பேசுகிறான் என்பதினால் மட்டும் அவன் உண்மையுள்ளவன் என்று அங்கிகரிக்க இயலாது. **"சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற"** *(2தீமோ 2:15)* **ஊழியர்களே இன்றைய தேவை.** சத்திய வசனத்தைப் போதிக்கிற ஊழியர்கள் மிகவும் குறைந்துபோய்விட்டார்கள். தேவனுடைய வார்த்தைகளைவிட தனிப்பட்ட

மனிதர்களின் சொந்த அனுபவங்களே பறைசாற்றப்படுகின்றன. விளம்பரப்படுத்தப்படுகின்றன.

பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். (5:22)

நிக்கொதேமுவிடம் இயேசு சொல்கிறார், "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான்" *(யோவான் 3:20)*. எருசலேமிலிருந்து வந்த பரிசேயர் மற்றும் வேதபாரகர்களிடம் பொல்லாத சிந்தனைகள், விபசாரம், வேசித்தனம், கொலை-பாதகம், களவு, பொருளாசை, துஷ்டத்தனம், கபடு, காம-விகாரம், வன்கண், தூஷணம், பெருமை, மதிகேடு ஆகியவை-களைக் குறிப்பிட்டு, "பொல்லாங்கானவைகளாகிய இவைக-ளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்-படுத்தும்" *(மாற்கு 7:23)* என்கிறார் இயேசு.

நாம் தியானிக்கும் வசனத்தில் பொல்லாங்கானது மட்டு-மல்ல, **பொல்லாங்காய்த் தோற்றமளிக்கிற காரியங்களை நாம் விட்டுவிலகவேண்டும் என்ற ஆலோசனை தரப்படுகிறது.** ஒரு காரியம் சீரானதாகவே இருக்கலாம், ஆனாலும் அதின் தோற்றம் பொல்லாங்குடையதாகக் காணப்பட்டால் கிறிஸ்தவர்களாகிய நமக்கும், அதற்கும் சம்பந்தமிருக்கக்கூடாது. சீசருடைய மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும் என்பது ஒரு ரோம பழமொழி.

ஒரு உபதேசத்தில் அல்லது ஒரு போதனையில் தவறு இருக்கிறதா அல்லது இல்லையா என்ற குழப்பம் காணப்படு-மானால், நம்முடைய மனச்சாட்சியில் அதைக் குறித்த தெளிவு உண்டாகவில்லை என்றால் அதைவிட்டுவிலகுவதே புத்திசா-லித்தனமான காரியம். வேசிமார்க்கத்துக்கு விலகியிருக்கும்-படியாக ஆலோசனை சொன்ன பரிசுத்த ஆவியானவர் *(1தெச 4:3)* இந்தக் கடைசிநாட்களில் அறிவிக்கப்படும் தீர்க்கதரிசன வெளிப்பாடுகளில் தவறு இருக்கக்கூடும் என்ற தோற்றமுடை-யதாக இருந்தால் அதைப் புறக்கணித்துவிடுவதே ஞானமான காரியம் என்று இந்த வசனத்தில் ஆலோசனை தருகிறார்.

“விட்டு விலகுங்கள்” என்ற வார்த்தை சபையார் அனுசரிக்கவேண்டிய பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கையை நமக்கு வலியுறுத்துகிறது. இந்தக் கடைசிநாட்களில் சபைகளிலும், தொலைக்காட்சிகளிலும் அறிவிக்கப்படும் ஆவிக்குரிய பகட்டான போதனைகளில் 90 சதவீதம் உண்மை இருக்கிறது என்றாலும் மீதமுள்ள பொல்லாங்கான உபதேசங்கள் நம்மை நரகத்துக்கு வழிநடத்தப் போதுமானதாயிருக்கின்றன.

வருகையின்போது காக்கப்படுதல் (5:23-25)

சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. (5:23)

தெசலோனிக்கேயா சபையாருக்குத் தேவையான ஆலோசனைகளைக் கொடுத்து முடித்த பவுல் நிருபத்தின் முடிவில் சபையாருக்காக ஜெபிக்கிறார். நிருபத்தின் முதல் பகுதி முடிவடையும்போதும் 3:11-13 ஆகிய வசனங்களில் பவுல் ஜெபித்ததைப் பார்த்தோம். அவர் மூலமாக வெளிப்பட்ட தெய்வீக ஆலோசனைகளை ஒருமனிதன் தன்னுடைய சுயபெலத்தினால் கடைப்பிடிக்கமுடியாது. **சமாதானத்தின் தேவன் நம்மைப் பரிசுத்தப்படுத்தாத நிலையில், நாம் எந்த நற்கிரியைகளையும் நடப்பிக்கமுடியாது.** ரோமர் 15:33ல் பவுல் சொல்கிறார், “சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக”. சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்” (ரோமர் 16:20). சமாதானத்தின் தேவன் என்ற வார்த்தை வேதத்தில் பல இடங்களில் காணப்படுகிறது (1கொரி 14:33, 2கொரி 13:11, பிலிப் 4:9, எபி 13:20, 2தெச 3:16, கொலோ 3:15).

சமாதானத்தின் தேவன் உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக என்ற வசனத்தோடு பவுல் தன்னுடைய ஜெபத்தைத் துவங்குகிறார். ஏற்கெனவே 1தெசலோனிக்கேயர் 3:13ல் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக (3:13)என்றும் பவுல் ஜெபித்ததைப் பார்த்தோம். ஏனென்றால் "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (4:3). "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (4:7). கொரிந்து சபையாரை, "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபை" என்று பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி 1:2).

"வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும்,உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1கொரி 6:9-11) என்கிறார் பவுல்.

ஒருவன் தன்னுடைய சுய முயற்சியினால் தன்னை பரிசுத்தமாக்கிக்கொள்ளவோ, நீதிமானாக்கவோ முடியாது என்பதை அறிந்துகொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தினால், அவர் கொடுக்கும் அதிகாரத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்து கிரியைகளை நடப்பிக்கும்போது தேவன் விரும்புகிற பரிசுத்தம் நம்மில் உண்டாகிறது. அந்த வேளையில் முழு மனிதனும் புதுப்பிக்கப்படுகிறான்.

"நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (*லேவி 22:9, 32; 20:8; 21:8,15*) என்கிறார் தேவன். பவுல் சொல்கிறபடி, "**பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்**" (*எபி 2:11*). நம்மை பரிசுத்தப்படுத்தவேண்டும் என்பதற்காகவே கிறிஸ்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்" (*எபி 13:12*).

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது உங்கள் ஆவி (spirit, pneuma), ஆத்துமா (ஆன்மா, soul, psycho), சரீரம் (body) முழுவதும் குற்றமில்லாததாய் இருக்கும்படி காக்கப்படுவதாக என்று இந்த வசனம் முடிவடைகிறது. இந்த வசனத்தில் பவுல் மனிதன் முப்பரிமாண நிலையில் (ஆவி, ஆத்துமா, சரீரம்) செயல்படுவதை உறுதிப்படுத்தினாலும் ரோமர் *8:10*, *1*கொரிந்தியர் *5:5*, *7:34*, *2*கொரிந்தியர் *7:1*, *2:3*, கொலோசெயர் *2:5* ஆகிய வசனங்களில் மனிதனுடைய சரீரத்தையும் (மாம்சம்) ஆவியையும் (மனது) மட்டுமே குறிப்பிடுகிறார். ஏற்கெனவே *1*தெசலோனிக்கேயர் *4:5*ம் வசனத்தைத் தியானிக்கும்போது ஆவி, ஆத்துமா, சரீரம் குறித்து நாம் கற்றுக்கொண்ட காரியங்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இந்த வசனத்தில் கிறிஸ்துவின் வருகையின்போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றுமே குற்றமற்றதாக இருக்கவேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். அவை இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதல்ல, மணவாளனாகிய கிறிஸ்து தன்னுடைய மணவாட்டியை பரலோகத்துக்கு எடுத்துக்கொண்டு போகும்படியாக வரும்போது குற்றமற்றதாய் (amempto, without blame, set apart) காத்துக்கொள்ளப்படவேண்டும் என்பதை சொல்கிறார்.

கிறிஸ்துவின் வருகையின்போது ஒரு மனிதனுடைய ஆவி ஆத்துமா, சரீரம் குற்றமுள்ளதாகக் காணப்பட்டால் அவன்

நித்திய ஆக்கினைத் தீர்ப்பை சந்திக்கவேண்டியதிருக்கும். **பரலோக மகிமையோடு சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதர்களையே அவர்கள் பாவம் செய்தபோது தேவன் தப்பவிடவில்லை.** 2பேதுரு *2:4* சொல்கிறது, "பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார்".

முற்றிலுமாக பரிசுத்தமாக்கப்படாத நிலையில் ஒருவனையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை என்பதினால்தான் மிகுந்த ஆத்தும பாரத்தோடு பவுல் சொல்கிறார், "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" (கொலோ *1:28, 29*). இப்படிப்பட்ட ஆத்துமபாரம் உள்ள ஊழியக்காரர்களே இன்று சபைக்குத் தேவை.

ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் தேவன் மனிதனை சிருஷ்டித்தார். மனிதனுடைய ஆவி உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவனிடமிருந்தது. அந்த நிலையில் அந்த ஆவிக்கு ஆத்துமாவும் சரீரமும் வழங்கப்படவில்லை. ஆனாலும் அந்த ஆவி தேவசமுகத்தில் பூமியில் பிரவேசிக்க தேவன் முன்குறித்த நேரத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தது.

எபேசியர் *1:4*ல், "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே" என்று வாசிக்கிறோம். நம்முடைய ஆவி உலகத்தோற்றத்துக்கு முன்பே இருந்தபடியால்தான் தேவன் நம்மை தெரிந்துகொள்ள முடிந்தது. இல்லாத ஒன்றை யாரும் தெரிந்துகொள்ள முடியாது.

நீதிமொழிகள் 8:22-30ல் குமாரனாகிய இயேசு கிறிஸ்து உலகத்தோற்றத்துக்குமுன் செயல்பட்ட விதம் சொல்லப்படுகிறது. 29, 30 வசனங்களில் இவ்வாறு வாசிக்கிறோம், "சமுத்திர ஜலம் தன் கரையைவிட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், நான் அவர் அருகே செல்லப்பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் அவர் சமுகத்தில் களிகூர்ந்தேன்".

அடுத்து வரும் 31-வது வசனத்தில் கிறிஸ்து இவ்வாறு பேசுகிறார், "அவருடைய பூவுலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்துகொண்டிருந்தேன்". இந்த மனுமக்கள் யார்? உலகத்தோற்றத்துக்கு முன் தேவனோடிருந்த ஆவிதான் இங்கே குறிப்பிடப்படுகிறது. அந்த ஆவிக்கு சரீரமும் ஆத்துமாவும் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த ஆவியை தேவன் ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட வேளையில் ஒரு தாயின் வயிற்றில் வைக்கிறார். அதன் விளைவாக மனிதனுடைய சரீரம் உருவாகிறது. அதன் நாசியில் தன்னுடைய ஆவியை ஊதும்போது மனிதனுடைய ஆவி உருவாகிறது.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டவிதம் ஆதியாகமம் 2:7 ல் இவ்வாறு சொல்லப்படுகிறது. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை (தேவனிடமிருந்த ஆவி) அவன் நாசியிலே ஊதினார் (ஆவியும் மண்ணும் ஒன்றோடொன்று இணைந்து) மனுஷன் ஜீவாத்துமாவானான்". ஆவி (தேவனுடையது), சரீரம் (மண்), மண்ணில் தேவ ஆவியின் செயல்பாட்டினால் நாசியில் அவர் ஊதியதினால் ஆத்துமா உருவாகிறது. **இந்த மூன்றும் முழு மனிதனுடைய ஆள்தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. மனிதனுடைய ஆத்துமா சரீரத்தின் மூலமாக இந்த உலகத்தில் செயல்படுகிறது. ஆவியின் மூலமாக தேவனோடு உறவுகொள்ளும் சிலாக்கியத்தையும் தருகிறது.**

ஒரு மனிதனுடைய சரீரம் அவனுடைய சுவைத்தல், தொடுதல், நுகர்தல், பார்வை, கேள்வி (காதால் கேட்டல்)

முதலிய ஐம்புலன்களை ஆளுகை செய்கிறது. அவனுடைய ஆத்துமா மனிதனுடைய அறிவு (உலக ஞானம்) சித்தம் (ஒரு காரியத்தை செய்வதா வேண்டாமா என முடிவுசெய்யும் திறன்), உணர்ச்சிகள் (எரிச்சலடைதல், கோபப்படுதல், மகிழ்ச்சி-யடைதல்) ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. மண்ணிலே இருந்து உருவாக்கப்பட்ட சரீரம் மீண்டுமாக மண்ணுக்கே திரும்ப வேண்டும். "எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது" *(பிரசங்கி 3:20)*.

தன்னுடைய ஆவியின் உதவியினால் மட்டுமே ஆவியாகிய தேவனுடன் மனிதன் ஐக்கியம் கொள்ளமுடியும். மனிதனுடைய ஆத்துமா அவனுடைய ஆவிக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அதுமட்டுமல்ல, ஒரு மனிதனுடைய சரீரம் அவனுடைய ஆத்துமாவின் ஆலோசனைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தம்.

ஆத்துமா ஆவியின் ஆலோசனைப்படி செயல்பட-வேண்டும். ஏனென்றால் ஆவியின் மூலமாகவே மனிதன் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரோடு உறவுகொள்கிறான். "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்-குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய-மாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்" *(1கொரி 2:11,12)*.

மரிக்கும் வேளையில் மனிதனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்புகிறது *(பிரசங்கி 3:20)* என்று பார்த்தோம். ஆவி தேவனிடமிருந்து வந்தபடியால் தேவனிடம் போகிறது என்பதை பிரசங்கி 12:7ல் பார்க்கிறோம். "மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை

உன் வாலிபப் பிராயத்திலே நினை". ஆத்துமா தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெறும்படியாக பூமியில் விடப்படுகிறது. ஆத்துமா ஏதேனும் சரீரத்துக்குள் நுழைந்து கிரியை நடத்த முயற்சிசெய்து தோல்வி அடைகிறது. தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பின் நாள்வரை அது பாதாளத்தில் காவல் வைக்கப்பட்டிருக்கும்.

மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றுமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படவேண்டுமென்பதே பவுலின் முதலாவது ஜெபக்குறிப்பு. 2கொரிந்தியர் 5:10 சொல்கிறபடி, "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்". அந்த வேளையில் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் குறையுள்ளதாகக் காணப்படக்கூடாது.

தேவனாகிய கர்த்தர் சமாதானத்தின் தேவன் என்று அழைக்கப்படுகிறார். ஏனென்றால், "கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்" என்று சங்கீதம் 29:11ல் வாசிக்கிறோம். "அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக" (சங் 85:8). "சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக" (ரோமர் 15:33) என்கிறார் பவுல்.

2கொரிந்தியர் 1:2, கலாத்தியர் 1:3, எபேசியர் 1:2, பிலிப்பியர் 1:2, கொலோசெயர் 1:2, 1தெசலோனிக்கேயர் 1:1, 2தெசலோனிக்கேயர் 1:2, பிலேமோன் 1:3 ஆகிய வசனங்களிலும் பவுல் சபையாருக்கு சமாதானத்தை ஆசீர்வாதமாக அறிவிப்பதைப் பார்க்கிறோம். யோவானும் (2யோவான் 3, 3யோவான் 14), பேதுருவும் (1பேதுரு 1:2, 2பேதுரு 1:2, 2பேதுரு 3:14) சமாதானத்தை ஆசீர்வாதமாக அறிவிக்கிறார்கள்.

மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களை சந்தித்தபோது, "இயேசுதாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம்" (லூக்கா 24:36, யோவான் 20:19, 21) என்கிறார். யோவான் 14:27ல் தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முந்தினநாளில் கிறிஸ்து தன் அப்போஸ்தலர்களிடம் சொல்கிறார், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக".

*தேவனாகிய கர்த்தர் உங்களை முற்றிலும் (*through and through*) பரிசுத்தமாக்குவாராக என்று இந்த வசனத்தின் முதல் பகுதியில் அறிவிக்கிறார்.* **ஒரு மனிதனைப் பரிசுத்தமாக்க தேவன் ஒருவரால்தான் முடியும். அதை அங்கிகரித்து ஏற்றுக்கொள்வது மட்டுமே மனிதனுடைய பொறுப்பு.** *கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாகவே பரிசுத்தமான தேவனுக்கும், பாவ மனிதனுக்குமிடையே சமாதானம் உருவாகிறது. தெசலோனிக்கேயா சபையார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து, ஏற்றுக்கொண்டபோது அவர்களில் சமாதானம் உருவாயிற்று என்றாலும், அது அவர்களுடைய மரணநாள் வரை அனுதினமும் ஆவிக்குரிய ரீதியில் வளர்ந்துகொண்டே இருக்கவேண்டும் என்றால் அதற்கான தொடர்கிரியைகளை தேவன் நடப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும்.*

ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் தேவன் மனிதனை சிருஷ்டித்தார் (ஆதி 2:7) என்று முந்தின அதிகாரத்தில் விளக்கமாகப் பார்த்ததை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவின் வருகையின்போது குற்றமற்றதாக, without blame *என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு வசனத்தில்தான் காணப்படுகிறது. ஒரு மனிதன் தன்னுடைய ஆவியின் உதவியோடு மட்டுமே தேவனோடு உறவுகொள்ளமுடியும். நம்முடைய ஆத்துமா நாம் யார், நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ளச் செய்கிறது.*

நம்முடைய உள்ளான மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை நம்முடைய சரீரம் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு உட்பட்டதாய் மனிதனுடைய ஆவி அவனுடைய ஆத்துமாவை தன்னுடைய ஆளுகைக்குள் வைத்துக்கொண்டிருக்கும்போது அந்த ஆத்துமா அவனுடைய சரீரத்தின் கிரியைகளை (ஐம்புலன்களை) தன்னுடைய ஆளுகைக்குள் வைத்துக்கொண்டிருக்கும். இவ்விதமாக நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் குற்றமற்றதாக பாதுகாத்துக்கொள்ளப்படும். ஏற்கெனவே பவுல் 1தெசலோனிக்கேயர் *3:13* ல் இதற்காக ஜெபிக்கிறதைப் பார்த்தோம். "நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக".

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.(5:24)

தேவனாகிய கர்த்தர் நம்மை அழைப்பதின் நோக்கம் 1கொரிந்தியர் 1:9ல் சொல்லப்பட்டிருக்கிறது. "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்". கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளவேண்டுமானால் நமக்குத் தேவை பரிசுத்தம்.

ஏற்கெனவே 1தெசலோனிக்கேயர் 4:7ல் "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்துக்கே அழைத்திருக்கிறார்" என்று பார்த்தோம். "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2தெச 2:14).

"கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்"

(2தெச 3:3). "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்க-மாட்டார்" (2தீமோ 2:13).

தேவன் உண்மையுள்ளவராயிருப்பதினால் பவுலின் நிச்சயம் என்ன என்பது தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டிருக்-கிறது "*அவர் அப்படியே செய்வார்*". அவருடைய அழைப்பும், அவர் அதைக் குறித்துப் பேசிய காரியங்களும் ஒருபோதும் மாறுவதில்லை. பிலேயாம் சொல்கிறபடி, "*பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண் 23:19).*

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வெற்றி நம்முடைய பெலனை நம்பியிருப்பதில்லை. நம்மில்தாமே நாம் எதையுமே நம்பிச் செய்யமுடியாது. நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை நிலைப்படுத்திக்கொள்ள நம்முடைய முயற்சி-யினால் முடியாது. கிறிஸ்து சொல்கிறார், "*நான் அவைகளுக்கு (என்னுடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து என்னைப் பின்பற்றி வருகிற ஆடுகளுக்கு) நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை (யோவான் 10:28)*. ஜீவனைக் கொடுக்கிறவர் அவர். அதை நம்மில் நிலைத்திருக்கச் செய்கிறவரும் அவரே.

தேவனாகிய கர்த்தர் நம்மை அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு அங்கிகரித்திருக்கிறார் என்றால் நாம் பரலோகத்துக்குள் பிரவேசிக்கும்வரை அவருடைய கிருபை நம்மைப் பாதுகாத்து வழிநடத்தப் போதுமானதாய் இருக்கிறது. நாம் இரட்சிக்கப்படும்போது நாம் தேவனுடைய கரத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்கிறோம் என்பதல்ல, அப்படி நாம் பிடித்திருப்போமென்றால் ஒருவேளை சில பெலவீன வேளைகளில் நம்முடைய கரம் வழுவிப்போய்விடலாம். நாமல்ல, **தேவனே நம்முடைய கரத்தைப் பிடித்து பரலோகப் பாதையில் வழிநடத்திக்கொண்டிருக்கிறார்.** ஏனென்றால் நாம்

பார்த்தபடி அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை. முந்தின வசனத்தில் பார்த்தபடி நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் குற்றமற்றதாக இருக்கும்படி பாதுகாத்துக்கொள்ளும் பொறுப்பு அவரிடமே ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். (5:25)

17வது வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சபையாரை இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொண்டதைப் பார்த்தோம். தொடர்ச்சியாக சில ஆலோசனைகளைக் கொடுத்த பவுல், சபையார் பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்றும் அவர்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் குற்றமற்றதாகக் காக்கப்படவேண்டும் என்றும் 23வது வசனத்தில் அவர்களுக்காக ஜெபித்ததைப் பார்த்தோம். நாம் தியானிக்கும் 25வது வசனத்தில் தனக்காகவும் தன் சக ஊழியர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளும்படியாகச் சபையைக் கேட்டுக்கொள்கிறார்.

பவுல் அப்போஸ்தலன் தேவனால் மிக வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட ஊழியர் என்பதில் சந்தேகமே இல்லை. கிறிஸ்து இந்த உலகில் இருந்த நாட்களில் தன்னுடன் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களையும் எழுபது சீஷர்களையும் இணைத்துக்கொண்டு இரவு பகலாக ஊழியப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தார் என்பதை அறிவோம். சத்திய உபதேசங்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். மூன்று வருடங்களுக்கு மேலாக இரவும் பகலும் கிறிஸ்து அவர்களோடு இருந்தார்.

ஆனாலும் கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் இந்த உபதேசங்கள் சபையாருக்கு, பின்வரும் சந்ததியாருக்கு அறிவிக்கப்பட தேவன் பவுலை விசேஷமாகத் தெரிந்துகொண்டார். தேசமெங்கும் சென்று பல எதிர்ப்புகள்,

போராட்டங்கள், சரீர பாடுகள் மத்தியில் பவுலே சபைகளை ஸ்தாபித்தார். சத்திய உபதேசங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதி அவரால் எழுதப்பட்டு இன்றும் சபைக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்ட ஊழியனாக இருந்தும் எந்தவித மனமேட்டிமையும் இன்றி எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்று தெசலோனிக்கேயா சபையாரைக் கேட்டுக்கொள்கிறார்.

எபேசிய சபையாரிடம் பவுல் சொல்கிறார், "நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி, எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்" (எபே *6:20*). கொலோசெயர் *4:4*ல் சொல்கிறார், "திருவசனம் செல்லும்படியான வாசலைத் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்". ஜெபம் நம் எல்லாருக்குமே தேவைப்படுகிறது.

முடிவுரை (5:26-28)

சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள். (5:26)

ரோமர் *16:16*ல் பவுல் சொல்கிறார், "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்". *1*கொரிந்தியர் *16:20*ல் சொல்கிறார், "சகோதரரெல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்". *2*கொரிந்தியர் *13:12*ல் சொல்கிறார், "ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்" (*1*பேதுரு *5:14*).

அந்த நாட்களில் சபையார் ஒருவரையொருவர் முத்தமிட்டு தங்களுடைய அன்பை வெளிப்படுத்தும் பழக்கம் இருந்து-வந்தது. இன்று நாம் நமக்கு நெருக்கமாயிருப்பவர்களின் கைகளைக் குலுக்கி நம்முடைய அன்பை வெளிப்படுத்து-கிறோம். 1கொரிந்தியர் கடைசி வசனத்தில் இவ்வாறு பவுல் தன்னுடைய அன்பை சபையாருக்கு அறிவிக்கிறார், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லா-ரோடுங்கூட இருப்பதாக". தெசலோனிக்கேயா சபையில் பெல-வீனமானவர்கள், குறைகள் உள்ளவர்கள், பரிசுத்தக் குலைச்சல் உள்ளவர்கள், ஒழுங்கில்லாதவர்கள், திடனற்றவர்கள், பலவீனர் (1தெச 5:14) ஆகிய பலதரப்பட்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரையுமே பவுல் சகோதரர்களாகப் பாவித்து வாழ்த்து-கிறார் என்பதைக் கவனியுங்கள்.

இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்யவேண்டுமென்று கர்த்தர்பேரில் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன். (5:27)

"அனைத்து சகோதர சகோதரிகளிடமும் இந்த நிருபம் வாசிக்கப்படவேண்டும் என்று உங்களுக்கு கர்த்தரின் அதிகாரத்தால் ஆணையிட்டுக் கூறுகிறேன்" (பரிசுத்த பைபிள்) என்ற கட்டளையை அப்போஸ்தலனாகிய பவுல் வேறு எந்த நிருபத்திலும் கொடுக்கவில்லை. இரகசிய வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு எல்லா சபையினரிடமும் காணப்பட்டது. தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபத்தில் மட்டும் அதைக் குறித்த கூடுதல் வெளிப்பாடுகள் கொடுக்கப்பட்டிருக்கிற-படியால் சபையார் யாவரும் அதைக் குறித்து அறிந்துகொள்ள-வேண்டும் என்று பவுல் வாஞ்சிக்கிறார். அறிந்துகொண்டால்-மட்டும் போதாது, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். 1கொரிந்தியர் 14:37ல் சொல்கிறார், "ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்-றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று ஒத்துக்கொள்ளக்கடவன்".

அந்த நாட்களில் வேதபுத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளிவரவில்லை. சுருள்களில் (scroll) வேதபண்டிதர்கள் தங்கள் கைகளினால் எழுதியதை சபை கூடும் வேளைகளில் வேதபாரகர்கள் வாசித்து அதின் அர்த்தத்தை சபையாருக்கு விளங்கப் பண்ணுவார்கள். சபையில் பெரும்பாலோர் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருந்தபடியால் தேவனுடைய வார்த்தை ஊழியக்காரர்களினால் சபையில் வாசிக்கப்பட்டது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நாசரேத்தில் ஜெப ஆலயத்தில் ஏசாயா புத்தகத்தை சபையாருக்கு வாசித்த சம்பவம் லூக்கா *4:16-20ல்* சொல்லப்பட்டிருக்கிறது. "மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள் தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டன" என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் *15:21ல்* இருந்து அறிந்துகொள்கிறோம். "மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே *(2கொரி 3:15)* என்று வாசிக்கிறோம். *1தீமோத்தேயு 4:13*, அப்போஸ்தலர் நடபடிகள் *13:5* வாசித்துப் பாருங்கள்.

தன்னுடைய தெசலோனிக்கேயர் நிருபம் யாவரும் கேட்கும் விதத்தில் வாசிக்கப்படவேண்டும் என்று பவுல் வெறுமனே ஆலோசனையாக மட்டும் அறிவிக்காமல் கர்த்தர் பேரில் ஆணையிட்டுச் (Enorkizo) சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். "பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்" *(ஏசாயா 65:16)* என்று வாசிக்கிறோம். "மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு" *(எபி 6:16)*.

கிறிஸ்துவின் வருகையைப் பற்றி சபை அறிந்துகொள்ளக் கூடாது என்று சாத்தான் தீவிரமாக இன்றும் செயல்பட்டு வருவதை அறிவோம். ஆனால் பவுல் எழுதிய முதல் நிருபத்திலேயே பவுல், வருகையைக் குறித்த சத்தியத்தை அறிவித்து

அதை சபையார் அத்தனைபேரும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற வைராக்கிய வாஞ்சையுடன் எழுதுகிறார். கர்த்தரின் பெயரில் எல்லாரும் வாசிக்கவேண்டும் என்று ஆணையிட்டுச் சொல்லப்பட்ட ஒரே வேதபுத்தகம் இதுதான்.

பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூவரும் இந்த நிருபத்தின் ஆசிரியர்களாக முதல் வசனம் துவங்கி, இன்னும் பல வசனங்களில் குறிப்பிடப்பட்டார்கள் என்பதைப் பார்த்தோம். எங்கள் ஜெபங்களில் *(1:4)*, எங்கள் சுவிசேஷம் *(1:5)*, நாங்கள் *(1:8, 2:1)* etc. என்று புத்தக ஆசிரியர்கள் பல இடங்களில் பன்மையில் குறிப்பிடப்பட்டாலும் இந்த வசனத்தின் கடைசிப் பகுதியில் "உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பவுல் ஒருமையில், சில்வானையும் தீமோத்தேயுவையும் சேர்த்துக்கொள்ளாமல், சகோதரர் யாவரும் அறிந்துகொள்ளும் விதத்தில் இந்த நிருபம் வாசிக்கப்படவேண்டும் என்று தானே கர்த்தர்பேரில் ஆணையிட்டுச் சொல்வதாக அமைகிறது.

பொதுவாகவே பவுல் தன்னுடைய நிருபங்களின் கடைசி சில வசனங்களை தன்னுடைய கரத்தினால் எழுதிக் கையெழுத்திட்டு, அதில் சொல்லப்படும் சத்தியங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தும் பழக்கம் உடையவர். கொலோசெயர் *4:18*ல் சொல்கிறார், "பவுலாகிய நான் என் கையினால் எழுதி உங்களை வாழ்த்துகிறேன்".

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென். (5:28)

நிருபத்தின் முதல் வசனத்திலேயே சபையாருக்கு பவுல் கிருபையையும் சமாதானத்தையும் ஆசீர்வாதமாக அறிவித்தார் என்பதைப் பார்த்தோம். கடைசி வசனத்திலும் கிருபை என்ற ஆசீர்வாதத்தோடு நிருபத்தை முடிக்கிறார். **ஏனென்றால் கிருபை இன்றி இரட்சிப்பு இல்லை. நித்திய ஜீவன் இல்லை.** "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23).

வேதத்தில் கிருபையை பெற்றுக்கொண்டதாகக் குறிப்பிடப்பட்ட முதல் மனிதன் நோவா. பாவம் பெருகியதினிமித்தம் "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" (ஆதி 6:5) என்று வாசிக்கிறோம். அதினிமித்தம் முழு மனித இனத்தையும், மிருக ஜீவன்களையும் அழித்துவிட முடிவுசெய்கிறார். "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை (grace, charis) கிடைத்தது" (ஆதி 6:8).

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே" (புலம் 3:22). 2தெசலோனிக்கேயரிலும் பவுல் கிருபையை ஆசீர்வாதமாக அறிவிக்கிறார், "பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்" (3:17,18).

கொலோசெயர் 4:18ல் சொல்கிறார், "பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன். நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள். கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்". கிருபையை ஆசீர்வாதமாக அறிவித்து நிருபத்தை நிறைவுசெய்யும் மற்ற வசனங்களையும் வாசித்துப் பாருங்கள். 1கொரிந்தியர் 16:23, ரோமர் 16:20, கொலோசெயர் 4:18, 1தீமோத்தேயு 6:21, தீத்து 3:15, 2தீமோத்தேயு 4:22, 2கொரிந்தியர் 13:14ல் சொல்கிறார், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்".

II தெசலோனிக்கேயர்

பொருளடக்கம்

I. பவுலின் வாழ்த்துதல் (1:1-2) 288

II. பவுல் ஜெபிக்கிறார்

i. பவுலின் ஸ்தோத்திர ஜெபம் (1:3-4) 290

ii. பகிரங்க வருகை குறித்த எச்சரிக்கை (1:5-10) 298

iii. பவுலின் வேண்டுதல் (1:11-12) 315

III. வருகையைக் குறித்த உபதேசம் (2:1-12) 322

கர்த்தருடைய நாள் (2:2) 325

பாவமனிதன் வெளிப்படுதல் (2:3-5) 331

அந்திக்கிறிஸ்துவைத் தடைசெய்கிறவன் யார்? (2:6-10) . 342

தேவன் அனுப்பும் கொடிய வஞ்சகம் (2:11-12) 361

IV. தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல் (2:13-17) 367

V. அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (3:1-5)

i. பவுலின் ஜெபக்குறிப்பு (3:1-2) 380

ii. உண்மையுள்ள கர்த்தர் உங்களை நடத்துவாராக (3:3-5) 385

VI. பவுலின் எச்சரிக்கை (3:6-15)

i. சபையில் ஒழுக்கம் தேவை (3:6-13) 392

ii. கீழ்ப்படியாமையின் விளைவு (3:14-15) 407

VII. சபையை வாழ்த்தும் பவுல் (3:16-18) 412

அதிகாரம்–1

கர்த்தராகிய இயேசு
தமது வல்லமையின் தூதரோடும்,
ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும்,
வானத்திலிருந்து வெளிப்படும்போது
அப்படியாகும்.

2 தெசலோனிக்கேயர் 1:8

பவுலின் வாழ்த்துதல் (1:1-2)

பவுலும், சில்வானும், தீமோத்தேயுவும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசு-கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது. (1:1)

இந்த இரண்டாவது தெசலோனிக்கேயர் நிருபத்தையும் எழுதியவர்களாக பவுல், சீலா, தீமோத்தேயு ஆகிய மூன்று ஊழியர்களே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டாவது நிருபத்தில் "நம்முடைய பிதாவாகிய தேவன்" என்று குறிப்பிடுகிறார்கள். முதல் நிருபத்தில் நம்முடைய என்ற வார்த்தை துவக்கத்தில் சொல்லப்படவில்லை என்று பார்க்கிறோம். வசனத்தின் பின்பகுதியில் "நம்முடைய" என்ற வார்த்தை காணப்படுகிறது.

இந்த நிருபமும் பவுல் கொரிந்து சபையில் ஊழியம் செய்த நாட்களில் எழுதப்பட்டிருப்பதினால் முதல் நிருபம் எழுதி மூன்று மாத காலத்தில் இது எழுதப்பட்டிருக்கவேண்டும். தெசலோனிக்கேயாவில் இரண்டு சபையை இந்த ஊழியர்கள் ஸ்தாபித்தார்கள் என்றும், முதலாவது சபையில் புறஜாதியார் கூடுதலாக இருந்தார்கள் என்பதினால், அவர்கள் நிமித்தம் முதல் நிருபம் எழுதப்பட்டது. கூடுதலாக யூதர்களை உள்ளடக்கிய இரண்டாவது சபையாருக்காக இந்த இரண்டாவது நிருபம் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்றும் சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள்.

இரண்டாவது நிருபத்தில் மட்டுமே யூதர்கள் பாரம்பரியமாக நம்பிவந்த கேட்டின் மகனாகிய பாவ மனிதனின் வருகை, எருசலேம் தேவாலயத்தில் அந்திக்கிறிஸ்து தன்னை உயர்த்தும் காரியம் சற்று விளக்கமாக அறிவிக்கப்பட்டி-ருக்கிறது. யூத இனத்தாரை மனதில் வைத்துக்கொண்டுதான் "இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தேவன் உங்களைத்

தெரிந்துகொண்டார்" *(2தெச 2:13)* என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். **புறஜாதியார் ஆதிமுதல் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அல்ல.** ஆனாலும் பழைய ஏற்பாட்டு வசனம் ஒன்றுகூட இந்த நிருபத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதல் நிருபத்தில் மட்டுமே சபையார் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்தில் மனந்திரும்பின காரியம் சொல்லப்படுகிறது *(1தெச 1:9).*

முதல் நிருபம் அனுப்பப்பட்டு மூன்று மாதங்கள் ஆகியும் தான் எதிர்பார்த்த விளைவுகள் சபையில் உண்டாகவில்லை என்பதினால் சற்றுக் கடினமான முறையில் பவுல் சபையைக் குறித்துப் பேசுவதைப் பார்க்கிறோம். *1தெசலோனிக்கேயர் 4:13ல்* தான் அறிவித்த சத்தியங்களை *2தெசலோனிக்கேயர் 1:5-10இல்* சற்று விளக்கமாக பவுல் அறிவிக்கிறார். யூதர்கள் என்ற முறையில் இவற்றைக் குறித்து ஏற்கெனவே அவர்கள் அறிந்திருந்தார்கள்.

பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபை என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். கிறிஸ்து உலகத்தில் இருந்த கடைசி நாட்களில் பிதாவிடம் இவ்விதமாக ஜெபித்தார் என்பதை அறிவோம். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.... அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" *(யோவான் 14:16-17).*

சபைக்குள் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் வேண்டுதலினிமித்தம் நிரந்தரமாக வாசமாயிருக்கிறார். அப்படி அவர் நமக்குள் இருப்பதினால்தான் நாம் அவருக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்யும்போது அவர் துக்கமடைகிறார், வேதனைப்படுகிறார். அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" *(1தெச 5:19)* என்று கட்டளையிடுகிறார். இன்று சபை ஆவியானவரின் மூலமாகவே செயல்படுகிறது.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (1:2)

1தெசலோனிக்கேயர் நிருபத்திலும் எழுத்தின்படி இதே கிருபையும் சமாதானமும் ஆசீர்வாதமாக அறிவிக்கப்பட்டதை வாசித்துப் பாருங்கள். தேவனிடமிருந்து **கிறிஸ்தவர்களாகிய நாம் பெறும் மிகப் பெரிய ஆசீர்வாதங்களாக கிருபையும் சமாதானமும் குறிப்பிடப்படுகின்றன.** *எபேசியர் 2:8,9ல் பவுல் சொல்கிறபடி, "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது (இரட்சிப்பு) உங்களால் உண்டானதல்ல, (உங்களை நீங்களே இரட்சித்துக்கொள்ள முடியாது) இது தேவனுடைய ஈவு (தேவன் தரும் இலவசமான பரிசு). ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல (தன்னைத்தானே இரட்சித்துக்கொண்டதாக ஒருவனும் பெருமை பாராட்ட முடியாது).*

தேவகிருபையை நாம் பெற்றுக் கொண்டோம் என்பதை உறுதிப்படுத்தும் காரியம் உண்டென்றால் அது நாம் பெற்றுக்கொள்ளும் சமாதானம். "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்" (பிலிப் 4:7) அவருடைய பிள்ளைகளுக்கு தேவன் வாக்குப்பண்ணியிருக்கிறார். கிருபையையும் சமாதானத்தையும் ஆசீர்வாதமாக பவுல் சபையாருக்கு அறிவிக்கிறார்.

பவுலின் ஸ்தோத்திர ஜெபம் (1:3-4)

சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது. (1:3)

இந்த வசனத்தில் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் காணப்படவேண்டிய பிரதான குணாதிசயங்களான விசுவாசமும், அன்பும் சுட்டிக்காட்டப்படுகிறது. நம்மிடமிருந்து வெளிப்படும் விசுவாசம், அன்பு ஆகியவற்றில் திருப்தி அடைந்துவிடக்கூடாது **நம்முடைய விசுவாசம் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும், அன்பு மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கவேண்டும்.** தெசலோனிக்கேயரின் சபையில் இந்தப் பெருக்கம் நடந்துகொண்டிருப்பதினிமித்தம் தேவனை ஸ்தோத்திரிக்க பவுல் மற்றும் இரண்டு சக ஊழியர்களும் தேவனுக்குக் கடன்பட்டவர்களாகிறார்கள். “அதுவே செய்வதற்கு உரியது என்பதால் நாங்கள் அதனைச் செய்கின்றோம்” (பரிசுத்த பைபிள்) தேவன் நமக்கு ஒரு நன்மையான காரியத்தைச் செய்யும்போதுதான் நாம் அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும் என்பதல்ல, மற்றவர்களுக்கு அவர் நன்மையான காரியங்களைச் செய்யும்போதும் அவரை ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

“அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது” (it is meet) என்கிறார் பவுல். ஏற்கெனவே முதல் நிருபத்தில் பவுல் தெசலோனிக்கேயரில் காணப்பட்ட விசுவாசம், அன்பைக் குறித்தும், பொறுமையைக் குறித்தும் பாராட்டினார் என்பதை *1*தெசலோனிக்கேயர் *1:2*ல் பார்த்தோம். சபையார் சந்திக்கும் உபத்திரவங்கள் மத்தியிலும் அவர்களுடைய அன்பும், பொறுமையும் அதிகரித்துக்கொண்டிருப்பதை அவரால் மேலும் அதிகமாகப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும், உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக் குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம். (1:4)

அப்போஸ்தலனாகிய பவுல், மற்றும் உடன் ஊழியர்களாகிய தீமோத்தேயும், சீலாவும், தெசலோனிக்கேய

சபையாரை மேன்மை பாராட்டுகிறார்கள், அவர்களைக் குறித்துப் பெருமையோடு பேசுகிறார்கள் என்றால் அதற்கான காரணம் என்ன என்பது இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. தீமோத்தேயு சபையாரைக் குறித்த நற்செய்தியோடு வந்துஅதை பவுலுக்கு அறிவிக்கிறார் என்றாலும், சபையார் பலவிதமான துன்பங்களை சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை பவுல் நன்றாகவே அறிந்திருக்கிறார்.

சபையார் சந்திக்கும் துன்பங்கள், உபத்திரவங்களிலும் அவர்கள் பொறுமையோடு தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டிருப்பதை இந்த தேவ ஊழியர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடும், பெருமையோடும் சந்தர்ப்பம் கிடைக்கும் சமயங்களில் எல்லாம் அவர்கள் ஊழியம் பண்ணும் சபைகளில் அறிவித்து மேன்மை பாராட்டுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெலோனிக்கேயா சபையை மேன்மை பாராட்டுவதின் விளைவாக அவர்களுடைய மாதிரி-யின்படி இந்தப் புதிய சபைகள் தங்களுடைய பொறுமையிலும் விசுவாசத்திலும் உற்சாகமடைவார்கள் என்று பவுல் எதிர்பார்க்-கிறார். தெசலோனிக்கேயா சபையார் பல உபத்திரவங்களை சந்திக்கவேண்டியதிருந்தது என்பதை ஏற்கெனவே பார்த்திருக்-கிறோம். இருந்தாலும் அவர்கள் அவற்றை பொறுமையோடு ஏற்றுக்கொண்டார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களு-டைய விசுவாசமே. அதினிமித்தம் பவுல் சபையாரைப் பாராட்டுகிறார். 2கொரிந்தியர் 1:24, 8:1-6, 9:2, பிலிப்பியர் 4:15 ஆகிய வசனங்களும் திருச்சபைகளைக் குறித்து பவுலிடமிருந்து வெளிப்படும் பாராட்டுதல்களை உறுதிப்படுத்துகிறது.

விசுவாசம் தேவனோடு ஒருவன் கொண்டிருக்கும் உறவுமுறையில் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. எந்த அளவு அந்த ஐக்கியம் பெலனடைந்-திருக்கிறது என்பதை அவன் கொண்டிருக்கும் விசுவாசத்தில் இருந்தே அறிந்துகொள்ளலாம். தேவன்மேல் ஒரு மனிதன் கொண்டிருக்கும் விசுவாசம் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசப்-

படும். நூற்றுக்கு அதிபதியைப் பாராட்டும்போது கிறிஸ்து சொல்கிறார், “இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை” (மத் 8:10). அதே சமயம் தன்னுடைய சீஷர்களைப் பார்த்து “அற்பவிசுவாசிகளே” (மத் 8:26) என்கிறார். தன்னுடைய சீஷர்களிடம் விசுவாசம் இல்லை என்று கிறிஸ்து குற்றப்படுத்தவில்லை. அதில் அவர்கள் இன்னும் தேர்ச்சி அல்லது வளர்ச்சி அடையவேண்டியதிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். விசுவாசம் வளர்ச்சியடையும்போது நிச்சயமாகவே நம்முடைய பொறுமையும் வளர்ச்சியடையும். 1தெசலோனிக்கேயர் 1:2ல் பொறுமையோடு நம்பிக்கையையும் விசுவாசத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது.

பகிரங்க வருகை குறித்த எச்சரிக்கை (1:5-10)

நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு, அதுவே அத்தாட்சியாயிருக்கிறது. (1:5)

தெசலோனிக்கேயர் தேவனுடைய ராஜ்யத்தை அங்கிகரித்து, கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டதினிமித்தம் சுவிசேஷத்தை அந்தப் பட்டணத்துக்குக் கொண்டுவந்த மூன்று ஊழியக்காரர்களைப் போல பல பாடுகளை சந்திக்கவேண்டியதிருந்திருக்கலாம். ஆனால் **அந்தப் பாடுகள் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை பெற்றுக்கொள்வதற்கு தகுதியுள்ளவர்கள் என்பதை நிரூபிக்கிறதாய் இருக்கிறது** என்கிறார் பவுல். இரண்டாவதாக அவர்கள் சந்திக்கும் பாடுகள் ஒரு முக்கியமான சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. தேவன் நீதியுள்ள நியாயாதிபதி என்றும் அவருடைய

நியாயத்தீர்ப்புகள் நீதியானவை என்பதையும் சபையார் அநுபவிக்கும் பாடுகள் உறுதிப்படுத்துவதாக இருக்கிறது என்கிறார் பவுல்.

பாவ மனிதனை இரட்சிப்பதற்கு பரிசுத்தமான இயேசு கிறிஸ்து பல பாடுகளை சந்திக்கவேண்டியதிருந்தது (மாற்கு 8:31 லூக்கா 24:26). யோவான் 12:24ல் கிறிஸ்து சொல்கிறார், **"கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்"**. "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" (அப் 14:22) என்பது அப்போஸ்தலர்களிடமிருந்து வெளிப்பட்ட சுவிசேஷ அறிவிப்பு. ரோமர் 8:17ல் பவுல் சொல்கிறார், "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூட பாடுபட்டால் அப்படியாகும்". பிலிப்பியர் 1:29ல் பவுல் சொல்கிறார், "கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது".அதைக் குறித்து நிச்சயமாகவே நாம் பெருமைப்படலாம். செழிப்பின் உபதேசங்கள் அந்த நாட்களில் அறிவிக்கப்படவில்லை.

கிறிஸ்துவினிமித்தம் நாம் எதிர்கொள்ளும் பாடுகளும் உபத்திரவங்களும் தேவராஜ்யத்துக்கு நம்மை தகுதிப்படுத்துவதாய் இருக்கிறது. இந்தப் பாடுகள் உலகத்துக்கடுத்த ஆசாபாசங்களை நம்மிடமிருந்து வெளியே கொண்டுவருகிறதினால் நித்திய ராஜ்யத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ள நம்மைத் தகுதிப்படுத்துவதாய் இருக்கிறது. ஆனாலும் பொதுவாக எல்லாப் பாடுகளுமே தீமையானவை என்றும், பாடுகள் நம் வாழ்க்கையில் பிரவேசிக்கவே கூடாது என்றும் வாஞ்சிக்கிறோம். ஆனால் பவுல் இந்த உபத்திரவங்களைக் குறித்து சொல்கிறதென்ன? "இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம்"(1தெச 3:3). அதின் மூலமாக தேவன் பல காரியங்களை நமக்குக் கற்றுக்கொடுக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் நியாயமான தீர்ப்பு செய்கிற நியாயாதிபதி என்பதற்கு நாம் சந்திக்கும் பாடுகளே அத்தாட்சி-யாயிருக்கிறது என்கிறார் பவுல். **நாம் எதிர்கொள்ளும் பாடுகளும் உபத்திரவங்களும் தேவன் நம்மை புறக்கணித்து-விட்டார் என்று அறிவிப்பதில்லை. தேவன் நம்மோடிருக்கிறார் என்பதை நிரூபிப்பதாக இருக்கிறது.** அதனால்தான் பவுல் சொல்கிறார், "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்-கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (*கொலோ 1:24*). சபை கிறிஸ்துவினுடைய சரீரமாக இருப்பதினால் நாம் பாடுகளை அநுபவிக்கும்போது அவரும் நம்மோடு இணைந்து பாடுபடுகிறார்.

தேவனிடமிருந்து நாம் பெறும் நியாயமான தீர்ப்பினால் நாம் சந்திக்கும் பாடுகள் தேவன் நீதியுள்ள நியாயாதிபதி என்பதை விளங்கப் பண்ணுகிறது. தகப்பன் என்ற முறையில் அவர் தன்னுடைய பிள்ளைகளை சிட்சிக்கிறார் என்றும் எடுத்துக்கொள்ளலாம். மோசே சொல்கிறார், "ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்து-கொள்வாயாக" (*உபா 8:5*). எலிப்பாஸ் சொல்கிறார், "இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்" (*யோபு 5:17*). "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (*எபி 12:11*).

தன்னுடைய சிட்சைகள் மூலமாகவே தேவன் அவருடைய பிள்ளைகளை அவர் விரும்பும், எதிர்பார்க்கும் விதத்தில் அனுதினமும் வனைந்து கொண்டிருக்கிறார். அவர் நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார் என்று பார்த்தோம். பவுல் சொல்கிறபடி, "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ,

அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்கிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லு-கிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்" *(எபி 12:6).*

உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்-திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. (1:6)

தெசலோனிக்கேயா சபையார் தாங்கள் சந்திக்கும் உபத்திரவங்கள் நிமித்தம் பின்மாற்றம் அடைந்துவிடக்கூடாது என்பதினால் பவுல் அவர்களிடம் சொல்லும் காரியம் இதுதான்-உங்கள் உபத்திரவங்கள் நிமித்தம் உபத்திரவங்களுக்குக் காரணமாக இருக்கிறவர்களைப் பகைத்து, மனங்கசந்து, அவர்-களுக்கு எதிராக செயல்பட்டு, அவர்களுக்கு எதிராக நியாயத்-தீர்ப்பு செய்யாதிருங்கள். **நீங்கள் சந்திக்கும் பாடுகள் உங்களில் விசுவாசத்தையும், அன்பையும் வளரச் செய்யவேண்டுமே தவிர, பகையை அல்ல.**

"மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகி-றீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" *(மத் 7:12)* என்ற மலைப்பிரசங்க போதனையை பவுல் சபையாரின் கவனத்துக்குக் கொண்டுவருகிறார். துன்மார்க்க மனிதர்களுக்கு எதிராக நாம் எதையும் செய்யத் தேவையில்லை. அவர்களை உபத்திரவப்படுத்தும் பொறுப்பு தேவனுடையது. "பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது; ஏற்ற-காலத்தில் அவர்களுடைய கால் தள்ளாடும்; அவர்களுடைய ஆபத்துநாள் சமீபமாயிருக்கிறது; அவர்களுக்கு நேரிடும் காரியங்கள் தீவிரித்து வரும்" *(உபா 32:35)* என்று வாசிக்கிறோம்.

"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால்,

நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" *(ரோமர் 12:19)* என்ற ஆலோசனை பவுலிடமிருந்து வெளிப்படுகிறது. எபிரெயர் *10:30, 31* சொல்கிறது, "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம், ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே".

தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகியவற்றைக் குறித்து கூடுதலாக புதிய ஏற்பாடு பேசுகிறது என்பது உண்மைதான். அதே சமயத்தில் சபையை உபத்திரவப்படுத்தும் துன்மார்க்கருக்கு விரோதமாக தேவன் நிச்சயமாகவே செயல்படுவார் என்பதை வேதம் அறிவிக்கத் தவறவில்லை. பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்: "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது *(ரோமர் 1:18)*. லூக்கா *13:3-5*, மாற்கு *9:43-48* வாசித்துப் பாருங்கள்.

தெசலோனிக்கேயா சபையார் சபையின் எதிரிகளினால் பல வேதனைகளை சந்தித்துக்கொண்டிருக்கலாம். அதுகுறித்து அப்போஸ்தலர் நடபடிகள் *17:5-6*ல் வாசிக்கிறோம். அவர்களுக்கு எங்களோடேகூட (பவுல், சீலா, தீமோத்தேயு) இளைப்பாறுதலை பிரதிபலனாகத் தருவது தேவனுக்கு நீதியாயிருக்கிறது என்ற அறிவிப்புடன் இந்த வசனம் முடிவடைகிறது. ஏனென்றால் சபையாரோடு அவர்களும் அந்தப் பட்டணத்தில் பல உபத்திரவங்களைச் சந்திக்கவேண்டியதாக இருந்தது. பவுல் சொல்கிறார்: "தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில் அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்" *(எபி 4:9,10)*.

இளைப்பாறுதல் *(Rest)* என்ற வார்த்தை மூன்று காரியங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். **முதலாவதாக** இளைப்பாறுதல் தேவன் நமக்கு வாக்குப் பண்ணியிருக்கும் நித்திய ஜீவனைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு நித்திய ஜீவன் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்" *(1யோவான் 5:11)*. கிறிஸ்து சொல்கிறார், "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" *(யோவான் 17:3)*. யோவான் 5:24 சொல்கிறது: "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

இரண்டாவதாக இளைப்பாறுதல் என்ற வார்த்தை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் பெறும் விடுதலையைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்து சொல்கிறார்: "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" *(யோவான் 8:34-36)*. நம்முடைய முயற்சியினால் நாம் விடுதலையாவதில்லை.

மூன்றாவதாக இளைப்பாறுதல் என்ற வார்த்தை சபையாராகிய நாம் பெறும் நித்திய சமாதானத்தைக் குறிக்கிறது. ஏசாயா 53:5இல் வாசிக்கிறோம்: "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது". "உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போலும் இருக்கும்" *(ஏசாயா 48:18)*. தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முன் கிறிஸ்து சொல்கிறார்:

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" *(யோவான் 14:27).* அவருடைய சமாதானம் நமக்குச் சொந்தமாகிறது.

இந்த உலகத்தில் இருக்கும் நாட்களில் முறுமுறுப்பின்றி நாம் சந்தித்த உபத்திரவங்களை ஏற்றுக்கொண்டதினிமித்தம் இளைப்பாறுதலை தேவனுடைய ராஜ்யத்தோடு இணைத்து *(வசனம் 1)* பிரதிபலனாக நமக்கு வழங்குவது தேவனுடைய நீதியாயிருக்கிறது என்ற அறிவிப்புடன் இந்த வசனம் முடிவடைகிறது. கலாத்தியர் *5:19-21*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.

தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு (1:7)

உபத்திரவப்படுகிற தெசலோனிக்கேயா சபையாருக்கு அங்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்ற பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோருடன் இளைப்பாறுதல் உண்டாயிருக்கும் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், உடனடியாக தேவனுடைய நீதியுள்ள ஆக்கினைத்தீர்ப்பைக் குறித்துப் பேசுகிறார். தேவனுடைய நீதி இரண்டு வழிகளில் செயல்படுகிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். சபையாரும்,

ஊழியக்காரர்களும் பலவிதமான உபத்திரவங்களைச் சந்திக்க-வேண்டியதிருக்கலாம். “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு” *(யோவான் 16:33)* என்று தன்னுடைய சீஷர்களிடம் அறிவித்த இயேசு கிறிஸ்து தொடர்ச்சியாகச் சொல்லுகிறார்: “ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்”.

“மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்-திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன” என்று பவுல் 2கொரிந்தியர் 7:5ல் வெளிப்படையாகச் சொல்கிறார். ஆனாலும் இந்த நிலைமை நீடித்திருப்பதில்லை. வெகுசீக்கிரத்திலேயே தேவனை அறியா-தவர்கள், இந்த ஊழியக்காரர்கள் அறிவித்த சுவிசேஷத்தைக் கேட்டும் அதை ஏற்றுக்கொள்ளாதவர்களும், சுவிசேஷ சத்தியங்-களுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை வழங்கும்படியாகக் கிறிஸ்து இயேசு வருவார் என்ற சத்தியம் இந்த வேதபகுதியில், இந்த வசனம் துவங்கி 10வது வசனம் வரை அறிவிக்கப்படுகிறது.

தேவனை அறியாதவர்கள் 1தெசலோனிக்கேயர் 4:4ல் ‘அஞ்ஞானிகள்’ என்று அழைக்கப்படுகிறார்கள். மற்றும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைக் குறித்து 1தெசலோ-னிக்கேயர் 2:15இல் “கர்த்தராகிய இயேசுவையும் தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனு-ஷர் யாவருக்கும் விரோதிகள்” என்றும் அழைக்கப்-படுகிறார்கள்.

மத்தேயு 13:13ல் இவ்வாறு வாசிக்கிறோம்: “அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும்” இருப்பார்கள். 14-வது வசனம் சொல்கிறபடி, “ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும்

உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள்". இவர்களுடைய அன்றாடக் கிரியைகள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை ரோமர் *1:18-32*ல் பவுல் விளக்கமாக அறிவிப்பதை வாசித்துப் பாருங்கள்.

தேவனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினைத்தீர்ப்பு நிச்சயமாகவே உண்டு என்ற சத்தியம் இந்த வேதபகுதியில் அறிவிக்கப்படுகிறது. கிறிஸ்து-வினுடைய இரண்டாவது வருகையின் (பகிரங்க வருகை) நோக்கம் இதுதான் என்று பார்க்கிறோம். சுவிசேஷம் (gospel) என்றால் நற்செய்தி என்று பொருள்படும். **கிறிஸ்துவுக்குள்ளாக மனிதர்களுக்கு வழங்கப்படும் தேவ அன்பு மற்றும் அவருடைய ராஜ்யத்தைக் குறித்த தேவனுடைய பிரகடனமே சுவிசேஷம் என்று சொல்லலாம்.**

சுவிசேஷம் என்ற வார்த்தை வேதத்தில் சுமார் நூறு இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் மட்டுமே இந்த வார்த்தை காணப்படுகிறது. *1*நாளாகமம் *16:23*, சங்கீதம் *96:2* ஆகிய இரண்டு வசனங்களில் "அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது வசனமாக "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கி-றார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" (ஏசாயா *61:1*) என்கிறார் இயேசு.

பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் கிறிஸ்து சீஷர்களுக்கு வழங்கிய கடைசிக் கட்டளை இதுதான்: "நீங்கள் உலகமெங்கும்போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு *16:15*). சுருக்கமாகச் சொல்வதானால் **சுவிசேஷம் என்பது கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டாகும் இரட்சிப்பு.** பவுல் சொல்கிறார்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ

அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது: விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" *(ரோமர் 1:16,17)*.

தேவனுடைய ஊழியக்காரர்களால் அறிவிக்கப்படும் சுவிசேஷத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதில்தான் மனிதனுடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிய ஒரு மனிதன் மறுக்கும்போது சுவிசேஷத்தினால் உண்டாகும் இரட்சிப்பை அவன் அடையமுடியாமல் போகிறது. விளைவாக நித்திய நரகமாகிய ஆக்கினைத் தீர்ப்பை அவன் சுதந்தரித்துக் கொள்கிறான்.

இந்த ஆக்கினைத் தீர்ப்பு நீதியுள்ளதுதான். அதில் எந்த அநீதியும் அல்லது தவறும் இல்லை என்கிறார் பவுல் (righteous judgement of God). இந்த நீதியுள்ள நியாயத்தீர்ப்பின் விளைவாக சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த பாவ மனிதன் சந்திக்கும் நரக வேதனைகளை வார்த்தையினால் விவரிக்கவே முடியாது. கலியாண வஸ்திரம் தரித்து தன்னை ஆயத்தம் பண்ணத் தவறியவனுக்கு எதிராக ராஜா என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள், "இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்" *(மத் 22:13)*.

கிறிஸ்துவினுடைய பகிரங்க வருகை அவருடைய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவருடைய நீதியுள்ள ஆக்கினையை, தண்டனையை வழங்குவதாக அமையும். யூதா *14,15*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதிற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்".

அவபக்தி என்ற வார்த்தை நான்குமுறை இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவருடைய இந்த பகிரங்க வருகையின் நோக்கம் என்ன? ஏசாயா 59:18,19 சொல்கிறபடி அவர் "கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார்; தம்முடைய சத்துருக்களிடத்தில் உக்கிரத்தைச் சரிக்கட்டி, தம்முடைய பகைஞருக்குத்தக்க பலனையும், தீவுகளுக்குத்தக்க பலனையும் சரிக்கட்டுவார். அப்பொழுது சூரியன் அஸ்தமிக்குந் திசைதொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந் திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்".

கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். (1:8)

கிறிஸ்துவின் இரகசிய வருகையைக் குறித்து 1தெசலோனிக்கேயர் 4:13,17ல் அறிவித்த பவுல் அவருடைய பகிரங்க வருகையைக் குறித்து இந்த வசனம் துவங்கி 2:12 வரை பேசுகிறார். இந்த வசனத்திலேயே அதைக் குறித்த மூன்று காரியங்கள் அறிவிக்கப்படுகின்றன.

1. ***கிறிஸ்து வானத்திலிருந்து வருவார்.*** *மரித்து உயிர்த்தெழுந்த இயேசு இப்பொழுது தன்னுடைய பிதாவின் மகிமையை உடையவராய் மூன்றாம் வானத்தில் வாசம் செய்கிறார். இந்தப் பூமியை நியாயந்தீர்க்கும்படியாக, மிருகமாகிய அந்திக்கிறிஸ்துவையும், கள்ளத்தீர்க்கதரிசியையும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே தள்ள (வெளி 19:20), பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை (லூசிபர்) ஆயிரம் வருஷம் கட்டிவைத்து (வெளி 20:1,2), பூமியில் தன்னுடைய ஆயிரவருஷ அரசாட்சியை ஸ்தாபிக்க (வெளி 20:6) கிறிஸ்து வருகிறார்.*

2. *கிறிஸ்துவின் இந்த* ***பகிரங்க வருகையின்போது அவருடன் அவருடைய வல்லமையின் தூதர்களும் வருகிறார்கள்.*** *மத்தேயு 13:41,42ல் கிறிஸ்து இதைக் குறித்து இவ்வாறு*

சொல்கிறார்: "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்".

இந்த அழுகையும் பாழ்க்கடிப்பும் எதனால் உண்டாகிறது என்பதை வெளிப்படுத்தின விசேஷம் 14:19 சொல்கிறது: "அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின் மேலே நீட்டி, பூமியின் திராட்சப் பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான்".

வல்லமையின் தூதர் என்று சொல்லும்போது அவர்களிடமிருந்து வெளிப்படும் வல்லமையினால் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்காலம் முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று பொருள்கொள்ளலாம். யூதா 15ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று (ஏனோக்கு) முன்னறிவித்தான்".

3. **ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வானத்திலிருந்து வெளிப்படுவார்** *என்பது மூன்றாவதாகச் சொல்லப்படுகிறது. ஏசாயா 66:15,16ல் இவ்விதமாக அவருடைய பகிரங்க வருகை குறிப்பிடப்படுகிறது: "இதோ தம்முடைய கோபத்தை உக்கிரமாகவும், தம்முடைய கடிந்துகொள்ளுதலை அக்கினி ஜுவாலையாகவும் செலுத்தக் கர்த்தர் அக்கினியோடும் வருவார், பெருங்காற்றைப் போன்ற தம்முடைய இரதங்களோடும் வருவார். கர்த்தர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும், மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார்; கர்த்தரால் கொலையுண்டவர்கள் அநேகராயிருப்பார்கள்". ஏசாயா மேலும் சொல்கிறார்: "இடிகளினாலும், பூமி அதிர்ச்சி-*

யினாலும், பெரிய இரைச்சலினாலும், பெருங்காற்றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப்படுவாய்" *(29:6)*.

அக்கினி வேதத்தில் பொதுவாக தேவ பிரசன்னத்தை உணர்த்துவதாக இருக்கிறது. மோசேயிடம் "கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்" *(யாத் 3:2)* என்று வாசிக்கிறோம். நியாயப்பிரமாணத்தை இஸ்ரவேலருக்கு வழங்கும்போது நடந்த நிகழ்ச்சி யாத்திராகமம் *19:18*இல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது: "கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று".

சங்கீதம் *50:3*ல் வாசிக்கிறோம்: "நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்". "அக்கினி அவருக்கு முன் சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது. அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக் கண்டு அதிர்ந்தது. கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று" *(சங் 97:3-5)*.

கிறிஸ்து இவ்விதமாக வானத்திலிருந்து வெளிப்படும்போது மேலே சொல்லப்பட்ட மூன்று காரியங்கள் சம்பவிக்கின்றன என்று பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய யோவான் கிறிஸ்து வெளிப்படும்போது சம்பவிக்கும் காரியங்களை வேதத்தின் கடைசி புத்தகத்தில் விளக்கமாக அறிவிக்கிறார். அவர் சொல்கிறார், "மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்

காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்" *(வெளி 1:7)*.

மத்தேயு சொல்கிறார், "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும் *(மத் 24:27-30)*.

லூக்கா *17:29,30*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "லோத்து சோதோமைவிட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்".

அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது (1:9)

அவர் வரும்போது என்று இந்த வசனம் முடிவடைகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற நிச்சயம் பவுலுக்கு இருந்தது என்றாலும், அவர் எப்போது வருவார் என்பது அவருக்குத் தெரியாது. "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" *(மத் 24:36)* என்கிறார் இயேசு.

அவருடைய வருகையின்போது பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராக வருவார், ஏனென்றால் **கிறிஸ்துவின்**

இரகசிய வருகையின்போது எடுத்துக்கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் அவரோடு வருவார்கள். அவர்கள் இரகசிய வருகையின்போது மணவாட்டி என்ற அங்கிகாரத்தோடு எடுத்துக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பு நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் அஸ்திபாரத்தை கிறிஸ்துவின் மேல் போட்டிருந்தபடியால் அங்கீகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு பிதாவின் சமுகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். அங்கே மணவாட்டி என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டு "ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி" (வெளி 21:9) என்ற மேன்மை வழங்கப்படுகிறது. "ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்" (வெளி 19:7) என்று வாசிக்கிறோம்.

தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராய் கிறிஸ்து வருவார் என்று பவுல் சொல்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டும்தான் வருகையின்போது மகிமைப்படத்தக்கவராய் இருப்பார் என்பதல்ல. அவருடைய மகிமையை ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொண்ட பரிசுத்தவான்களும் பெற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். பரலோகத்திலிருந்து கிறிஸ்து வெள்ளைக்குதிரையில், இறங்கி வரும்போது அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலைபோல இருந்தன என்றும், அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமம் எழுதப்பட்டிருக்கும் என்று வெளிப்படுத்தின விசேஷம் 19:12ல் வாசிக்கிறோம். 14-வது வசனம் சொல்கிறது, "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்" (வெளி 19:14).

அவர்கள் அர்மகெதோன் என்ற இடத்தில் அந்திக்கிறிஸ்துவின் படையை எதிர்கொள்கிறார்கள். வலுசர்ப்பத்தின் (லூசிபர்) வாயிலும், மிருகத்தின் (அந்திக்கிறிஸ்து) வாயிலும், கள்ளத்-

தீர்க்கதரிசியின் வாயிலும் இருந்து வெளிப்பட்ட தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகளினால் கூட்டிச் சேர்க்கப்பட்ட பூலோகமெங்குமுள்ள ராஜாக்களும் (வெளி *16:13,14)* வானத்திலிருந்து வெள்ளைக் குதிரைகளில் வரும் சேனையை எதிர்கொள்கிறார்கள். **ஆனால் யுத்தம் செய்வது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே.**

வெளிப்படுத்தின விசேஷம் *19:15,16* சொல்கிறது, "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார். ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின் மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது" (வெளி *19:15,16).*

கிறிஸ்துவின் பகிரங்க வருகையின்போது அவரோடு வெள்ளைக் குதிரைகளில் ஆட்டுக்குட்டியானவரின் மனைவி எத்தகைய அந்தஸ்தோடும் மகிமையோடும் வருகிறாள் என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். இந்த ஊழியக்காரரர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட சாட்சியை விசுவாசித்தவர்கள் முதலாவதாகக் குறிப்பிடப்படுகிறார்கள். கிறிஸ்துவை அறிந்து அவரை இரட்சகராக அறிக்கையிடுபவர்கள் அவருக்கு சாட்சிகளாயிருப்பார்கள். "அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்" (யூதா *14,15).*

சகரியா *14:3-5*ல் கர்த்தருடைய பகிரங்க வருகையின்போது தன்னுடைய பரிசுத்தவான்களோடு வருவார் என்பதையும், அது அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்குட்பட்ட ஏழு ஆண்டு உபத்திரவ

காலத்தின் முடிவில் வரும் என்பதை முன்னறிவிக்கிறது. "கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே (அந்திக்கிறிஸ்துவின் மனிதர்கள்) போராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும். அப்பொழுது என் மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள்; மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால் மட்டும் போகும்; நீங்கள் யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களில் பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல் ஓடிப்போவீர்கள்; என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்" (சக 14:3-5) "... அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்" (வசனம் 9). **இது பகிரங்க வருகையைத் தொடர்ந்து தேவன் ஸ்தாபிக்கும் ஆயிரவருட அரசாட்சியைக் குறிக்கிறது.**

மனித இனத்தின் பாவங்களினிமித்தம் வெளிப்படும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை தன் சரீரத்தில் ஏற்றுக்கொள்ளும்படியாகவே கிறிஸ்து இந்த உலகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்பட்டார். அவர் பூமியில் இருந்த நாட்களில் சபையை ஸ்தாபித்தார், தன்னுடைய சீஷர்களுக்குத் தேவையான போதனைகளைக் கொடுத்து பெலப்படுத்தினார். அதேசமயத்தில் தன்னுடைய பகிரங்க வருகையையும் அதைத் தொடர்ந்து வரும் கோபாக்கினை நிறைந்த நியாயத்தீர்ப்பைக் குறித்தும் வெளிப்படையாகப் பேசினார்.

மத்தேயு 13:40-42 சொல்கிறது, "களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல

இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்".

மத்தேயு 13:49-50ல் "இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" என்று வாசிக்கிறோம்.

கிறிஸ்து தன்னுடைய சிலுவை மரணத்துக்கு முன் ஒலிவமலையில் தன் சீஷர்களுடன் இருந்தபோது தன்னுடைய பகிரங்க வருகையில் சம்பவிக்கவிருக்கும் காரியங்களை விளக்கமாகப் பேசினார். ஏற்கெனவே மத்தேயு 16:27ல் "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தியவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்" என்று அறிவித்த இயேசு மத்தேயு 24,25 அதிகாரங்களில் அதை விளக்கமாக அறிவிக்கிறார். மத்தேயு 24:27-31 "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, **மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.** வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்".

கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்த அறிவிப்பு உயிர்த்தெழுந்த இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்-

பட்ட நாளிலேயே தேவதூதர்கள் மூலமாக அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" *(அப் 1:11)*.

புதிய ஏற்பாட்டில் பெரும்பகுதியை எழுதிய அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் பகிரங்க வருகையைக் குறித்து சுமார் ஐம்பது இடங்களில் பேசியிருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய பந்தியின்போது பவுல் மேல்வீட்டறையில் அப்போஸ்தலர்களோடு இருக்கவில்லை என்றாலும் அதைக்குறித்த மேலான வெளிப்பாடுகளை *1கொரிந்தியர் 11:23-30*ல் அறிவிக்கிறார். 26வது வசனம் சொல்கிறது: "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் **கர்த்தர் வருமளவும்** அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்". கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் போதெல்லாம் அவருடைய வருகையை நாம் அறிக்கை பண்ணுகிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். எபிரெயர் *9:28*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்".

பகிரங்க வருகையின் நாளை **கர்த்தருடைய நாள்** என்று குறிப்பிட்டு பேதுரு சொல்கிறார்: "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்" *(2பேதுரு 3:10,11)*.

பகிரங்க வருகையைக் குறித்து யோவான் இவ்வாறு சொல்கிறார்: "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள்

யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்" (வெளி 1:7). ஆபிரகாமுக்கு 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோபு சொல்கிறார்: "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" (19:25).

கிறிஸ்து இந்த பூமிக்கு வரும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தை இதை உறுதி செய்வதாக இருக்கிறது. இரகசிய வருகையைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பூமியில் உபத்திரவ காலத்து நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கவிருப்பதினால், அந்த தேவ கோபாக்கினை வெளிப்படுவதற்கு முன்பாக கிறிஸ்து இந்த பூமியில் உள்ள தன்னுடைய மணவாட்டியை இரகசிய வருகையில் எடுத்துக்கொள்கிறார் என்பதைப் பார்த்தோம். இந்த ஏழு ஆண்டுகால உபத்திரவ காலத்தில் பூமியில் வசிக்கும் மனிதர்கள் தாங்கள் சந்திக்கும் சகலவிதமான உபத்திரவங்கள் மத்தியில் இயேசுவை ஏற்றுக்கொள்ளவேண்டும், அல்லது அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்களுக்கு நித்திய அழிவாகிய தண்டனை நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை அடுத்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். (1:10)

5வது வசனத்தில் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் துன்பங்கள் அனுபவிக்கும் பரிசுத்தவான்களைக் குறித்து பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அந்தத் துன்பங்கள் உண்மையில் அவர்களை தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கத் தகுதியுள்-

ளவர்களாக்குகிறது என்பது மட்டுமல்ல, அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்கள் தேவகோபாக்கினை நிறைந்த நியாயத்தீர்ப்பை கிறிஸ்துவிடமிருந்து பெறுவது உறுதி என்ற சத்தியம் தொடர்ச்சியாக அறிவிக்கப்படுகிறது.

அதற்காகவே அவர் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வருகிறார் என்பதை 8வது வசனத்தில் பார்த்தோம். அப்போஸ்தலர் நடபடிகள் 17:31ல் பவுல் சொல்கிறபடி "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்".

கிறிஸ்துவின் பகிரங்க வருகையை உறுதிப்படுத்திய பவுல் கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்படும் அவருடைய வருகையின் நாளிலே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத் தவறிய துன்மார்க்கர் பெறும் தண்டனைகள் என்ன என்பதை இந்த வசனத்தில் அறிவிகிக்கிறார்.

1. தேவனுடைய சந்நிதியிலிருந்து விலக்கப்படுவார்கள்.
2. தேவனுடைய வல்லமை நிறைந்த மகிமையிலிருந்து நீங்கலாக்கப்படுவார்கள்.
3. நித்திய அழிவாகிய ஆக்கினைத் தீர்ப்பை அடைவார்கள்.

இந்த ஆக்கினைத் தீர்ப்பு கிறிஸ்துவின் மணவாட்டி சபை பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகுதான் சம்பவிக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். 1தெசலோனிக்கேயர் 4:17ல் பவுல் இதை உறுதிப்படுத்தினார் என்பதைப் பார்த்தோம். ஆகாய் சொல்கிறபடி இது சம்பவிக்கிறது: "இதோ, உம்மைவிட்டுத் தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர்" (சங் 73:27).

அவர்களுக்கோ நித்திய அழிவாகிய தண்டனை காத்திருக்கிறது. அவர்கள் நித்திய ஜீவனை இழந்துபோகிறார்கள். யோவான் 17:3ல் இயேசு சொல்கிறபடி: "**ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் (பிதா), நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்**". இந்த சிலாக்கியத்தை அவர்கள் இழந்துபோகிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் அதை இனி ஒருபோதும் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. "அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1தெச 5:3). இவர்களை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள் என்று 1கொரிந்தியர் 5:5ல் பவுல் குறிப்பிடுகிறார். "அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச்செய்கிறேன்".

'நித்திய அழிவு' என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். அந்த அழிவுக்கு முடிவு இல்லை, அவர்கள் அழிந்துகொண்டே இருப்பார்கள். அந்த அழிவிலிருந்து அவர்கள் ஒருபோதும் விடுவிக்கப்படுவதில்லை. விடுதலை அடைவதும் இல்லை. அந்த ஆக்கினைத் தீர்ப்பு நித்திய நித்தியமாக அவர்களில் செயல்பட்டுக்கொண்டே இருக்கும். ஒருபோதும் அவர்கள் இந்த வேதனையில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. தேவசித்தத்துக்கு எதிராக செயல்பட்டு, தேவனுடைய அழைப்பைப் புறக்கணித்த துன்மார்க்கர்கள் நித்திய நித்தியமாக அதற்கான தண்டனையை அனுபவித்துக்கொண்டே இருப்பார்கள் என்பதையே பவுல் இந்த வசனத்தில் வெளிப்படுத்துகிறார்.

இத்தகைய பயங்கரமான நித்திய அழிவாகிய நியாயத்தீர்ப்பு அன்பும் இரக்கமும் நிறைந்த தேவனிடமிருந்து வெளிப்படக் காரணம் என்ன என்பதை யோவான் 3:19-20 இவ்வாறு அறிவிக்கிறது: "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால்

அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்".

உலகின் ஒளியாக வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவை பகைத்து அவரைப் புறக்கணித்த இந்தத் துன்மார்க்கரின் முடிவு பரிதாபத்துக்குரியதாய் இருக்கும். "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்" (ஏசாயா 2:11). இரட்சிக்கப்பட இன்னொரு சந்தர்ப்பம் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

பவுலின் வேண்டுதல் (1:11-12)

ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்-பொருட்டாக (1:11)

*1*வது அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களில் *(11, 12)* பவுலின் சுருக்கமான ஜெபம் அமைந்திருக்கிறது, 'ஆகையால்' என்று இந்த வசனம் துவங்குகிறது. கிறிஸ்துவின் பகிரங்க வருகையின் விளைவாக துன்மார்க்கமான மனிதர்கள் நித்திய ஆக்கினைத் தீர்ப்பைப் பெறுவார்கள் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், தெசலோனிக்கேய சபையார் இந்தக் கொடூரமான நியாயத்தீர்ப்பில் இருந்து தப்புவிக்கப்பட-வேண்டுமானால் அவர்கள் கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட பாத்திரராகவேண்டும் என்கிறார்.

அவர்களிடமிருந்து விசுவாசக் கிரியைகள் வெளிப்பட-வேண்டும் என்பது மட்டுமல்ல, பிதாவாகிய தேவனிடமிருந்-

தும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் கிருபையின் அடிப்படையில் **அவர்க-ளுடைய வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்துவதாய் இருக்க-வேண்டும் என்பதே பவுலின் ஜெபக்குறிப்பு**. மனித இரட்சிப்பின் துவக்கநாட்களில்தான் கிருபை தேவைப்படுகிறது என்பதல்ல, வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் நாள்வரை தேவ கிருபை அவசியமாயிருக்கிறது.

*1*தெசலோனிக்கேயர் *1:1* மற்றும் *2*தெசலோனிக்கேயர் *1:2*ல் "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதா-னமும் உண்டாவதாக" என்று பவுல் தன்னுடைய நிருபத்தைத் துவங்கினார் என்பதைப் பார்த்தோம். **தேவகிருபை பிதாவாகிய தேவனிடமிருந்து வெளிப்படுகிறது என்றாலும், கிறிஸ்து மூலமாகவே பாவ மனிதனால் அந்தக் கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளமுடியும்.** எந்த ஒரு மனிதனும் தன்னுடைய தகுதியின் அடிப்படையில் தேவகிருபையை சுதந்தரித்துக்-கொள்வதில்லை.

ஆசிரியரின் '**கிருபையின் மேல் கிருபை**' என்ற புத்தகத்தில் கிருபையின் உபதேசம் விளக்கப்பட்டிருக்கிறது. தகுதியில்லாத மனிதன்மேல் தேவன் கிறிஸ்துவினிமித்தம் பாராட்டும் அன்பும், இரக்கமுமே கிருபை என்று அழைக்கப்-படுகிறது. அதின்மூலமாக அவருடைய நாமம் மகிமைப்-படுகிறது. கிறிஸ்து மகிமைப்படும் பொருட்டாக என்று சொல்லாமல் இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும் பொருட்டாக என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். ஒரு மனிதனை இன்னொரு மனிதனில் இருந்து வேறுபிரித்துக் காட்டுவது அவனுடைய பெயர் என்பதை அறிவோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய நாமமும் ஒன்றுதான் என்றாலும் கிறிஸ்து பிதாவிடம் இவ்வாறு ஜெபிக்கிறார்: "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" *(யோவான் 17:22)*.

பத்தாவது வசனத்தில் அவர் தேவனிடம் சொல்கிறார்: "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்; உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்". இரட்சிக்கப்பட்டதின் விளைவாக கிறிஸ்துவிடமிருந்து ஒருபுதிய நாமத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

பெர்கமு சபையின் தூதனிடம் இயேசு சொல்கிறார்: "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்" (வெளி 2:17). இந்த நாமத்தினிமித்தம் நாம் பெறும் மேலான ஆசீர்வாதம் என்ன என்பதை பவுல் அடுத்த வசனத்தில் அறிவிக்கிறார்.

நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம். (1:12)

எப்பொழுதும், எல்லா வேளைகளிலும் சபையாருக்காகப் பவுல் தேவனிடம் வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறார் என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்ற ஆலோசனை 1தெசலோனிக்கேயர் 5:17ல் ஏற்கெனவே சபையாருக்கு வழங்கிய பவுல், அவர்களைக் குறித்த தன்னுடைய ஜெபக்குறிப்பு என்ன என்பதை பவுல் சபையாருக்கு அறிவிக்கிறார்.

1. சபையார் தேவனுடைய அழைப்புக்குப் பாத்திரராக நடந்துகொள்ளவேண்டும்.

2. சபையாரிடமிருந்து வெளிப்படும் விசுவாசக் கிரியைகளின் அடிப்படையில் தேவனுடைய சித்தம் அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிறைவேறவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிருபங்களில் தேவனுடைய அழைப்பைக் குறித்துக் கூடுதலாகப் பேசுவதைப் பார்க்கமுடியும். **நாம் நடப்பிக்கும் நற்கிரியைகளின் அடிப்படையில் நாம் அழைக்கப்படுகிறோம் என்பது அல்ல, தான் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறது தன்னுடைய தகுதியின் அடிப்படையில் அல்ல** என்பதைப் பவுல் பலமுறை அறிவிப்பதைப் பார்க்கிறோம்.

கலாத்தியர் *1:13-15*ல் அவர் சொல்கிறார்: "தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி; என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன். அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்" என்று தன்னுடைய அழைப்பின் காரணத்தை பவுல் உறுதிப்படுத்துகிறார்.

தன்னுடைய தாயின் வயிற்றில் இருந்த நாட்களிலேயே அந்த அழைப்பு தேவகிருபையின் அடிப்படையில் தேவனால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு காரியமாகிறது என்பதினால் கொரிந்து சபையாரிடம் சொல்கிறார்: "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்" (1கொரி *1:26*). "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய்" (எபே *4:1*) நடந்துகொள்ளுங்கள் என்கிறார். ஏனென்றால் "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1தெச *4:7*).

ரோமர் *8:28-30*ல் தேவனுடைய அழைப்பின் நோக்கம் விளக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. "**அவருடைய தீர்மா-**

னத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கி-னாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்". பரிசுத்த வேதாகமத்தில் உள்ள மிக முக்கியமான வேத பகுதிகளில் இது ஒன்று.

தேவனுடைய அழைப்பைப் பெற்றிருப்பது நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய மிகப் பெரிய சிலாக்கியம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஏனென்றால் 1கொரிந்தியர் *1:24* சொல்கிறபடி, "யூதரானாலும், கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்". இந்த மேலான அழைப்புக்குப் பாத்திரராக நடந்துகொள்வது நம்முடைய கடமையாகிறது. "அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்-ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக,புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார்" (எபி *9:15*) என்றாலும் மத்தேயு *20:16*, *22:14*ல் கிறிஸ்து சொல்கிறார், "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்ட-வர்களோ சிலர்". "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்-குப் பாத்திரவான்களாய்" (எபே *4:1*) நடந்துகொள்ளுங்கள் என்ற ஆலோசனை பவுலிடமிருந்தும் வெளிப்படுகிறது.

இரண்டாவதாக பவுல் தேவனுடைய தயவுள்ள சித்தத்தைக் குறித்து பேச ஆரம்பிக்கிறார். **தேவனுடைய சித்தம் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிறைவேறவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.** அதனால்தான் "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்-

யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத் 6:10) என்று ஜெபிக்கும்படியாக ஆண்டவராகிய இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

பவுல் சொல்கிறபடி, "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" (எபே 1:6). "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலிப் 2:13). **அவர் செயல்படாதநிலையில் விசுவாசக் கிரியைகள் நம்மில் உருவாகுவதில்லை.** அப்படியே உருவானாலும் அது அதிக நாட்கள் நிலைத்திருப்பதில்லை. எனவேதான் பவுல் சபையாரின் விசுவாச கிரியைகள் பலமான விதத்தில் சபையாரிடம் நிலைத்திருக்கவேண்டும் என்று ஜெபிக்கிறார்.

தெசலோனிக்கேய சபையின் விசுவாசிகள் சகிக்கிற துன்பங்கள், உபத்திரவங்கள் மத்தியிலும் அவர்களுடைய விசுவாசம் பெருகுகிறபடியாலும், அன்பு அதிகரிக்கிறபடியினாலும் அவர்களைப் பாராட்டிய பவுல் (2தெச 1:3,4) விசுவாசத்திலும், அன்பிலும் அவர்கள் மேலும் தேர்ச்சி அடையவேண்டும் என்று அவர்களுக்காக இந்த வசனத்தில் ஜெபிக்கிறார். எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம் என்கிறார். தெசலோனிக்கேய சபையாரும் இதற்காக ஜெபித்துக்கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்களோடு பவுலும் ஜெபத்தில் தன்னை இணைத்துக்கொள்ளுகிறார்.

அதிகாரம் – 2

(தடைசெய்கிறவன்) நீக்கப்படும்போது,
அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்;
அவனைக் கர்த்தர்
தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து,
தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே,
நாசம்பண்ணுவார்.

2 தெசலோனிக்கேயர் 2:8

வருகையைக் குறித்த உபதேசம் (2:1-12)

அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், (2:1)

அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபத்தோடு முந்தின அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததைப் பார்த்தோம். தேவனாகிய கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் மேன்மைகளை நம்முடைய முயற்சியின் அல்லது திறமையின் அடிப்படையில் சுதந்தரித்துக்கொள்ளமுடியாது என்பதினால் பவுல் சபைக்காக வேண்டிக்கொள்ளுவதைப் பார்த்தோம். தெசலோனிக்கேயா சபைக்கு விரோதமாக யூத இனத்தைச் சேர்ந்த மனிதர்கள்தான் செயல்பட்டு வந்தார்கள் என்பதல்ல, பல கள்ளத்தீர்க்கதரிசிகள் தேசமெங்கும் எழும்பி, தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொண்டே தவறான உபதேசங்களைப் போதித்து வந்தபடியால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசி-களின் குழப்பங்களை நீக்கும் முயற்சியில் பவுல் இந்த அதிகாரத்தில் செயல்படுகிறார்.

பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த நாட்களில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்த வெளிப்-பாடுகளை அவர்களுக்கு அறிவித்திருந்தார் என்றாலும், அதை அவர்கள் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. 1தெசலோனிக்-கேயர் நிருபத்தில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து 1தெசலோனிக்கேயர் 4:15-17ல் பவுல் எழுதியிருந்தார் என்றாலும் அதையும் அவர்கள் முழுமையாக விளங்கிக்கொள்-ளவில்லை. பழைய ஏற்பாட்டில் வருகையைக் குறித்து 1845 இடங்களில் குறிப்புகள் உள்ளதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மொத்தம் 260 அதிகாரங்களே உள்ள புதிய ஏற்பாட்டில் 318

இடங்களில் வருகை அறிவிக்கப்படுகிறது. ஆனாலும் வருகையைக் குறித்த தெளிவான வெளிப்பாடுகள் சபைகளில் அறிவிக்கப்படவில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லோருமே கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுகிறவர்களாக இருக்கிறோம். அதைக் கிறிஸ்து தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாள் (பஸ்கா பண்டிகைக்கு முந்தின நாள்) ஸ்தாபித்தபோது அப்போஸ்-தலனாகிய பவுல் கிறிஸ்துவோடு இல்லை என்றாலும் அதைக்குறித்து தான் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டின் அடிப்படையில் சொல்கிறார், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்-போதெல்லாம் **கர்த்தர் வருமளவும்** அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" *(1கொரி 11:26)*. வருமளவும் என்று சொல்லும்போது அது கிறிஸ்து தன்னுடைய மணவாட்டியை ஏற்றுக்கொள்ளும்படியாக வரும் இரகசிய வருகையைக் (rapture) குறிக்கிறது.

கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இரகசிய வருகை நடக்கும் என்று பவுல் தெளிவாக அறிவித்தும், அவருடைய பகிரங்க வருகையில் கிறிஸ்துவோடு முதலாவதாக எழுந்திருந்து அவரோடு இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் வருவார்கள் என்ற சத்தியத்தை சபையார் முழுமையாக விளங்கிக்கொள்ளவில்லை என்ற செய்தி தீமோத்தேயு மூலமாக பவுலை வந்தடைகிறது.

கிறிஸ்துவின் இரகசிய வருகையைக் குறித்து (parousia) முதலாவது நிருபத்தில் கூடுதலாகப் பேசிய பவுல், அவருடைய பகிரங்க வருகையைக் குறித்து (episynagoge) இந்த வேதபகுதியில் பேசுகிறார். மத்தேயு *24:30,31*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்-

கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்". "அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டு-முள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்" (*மாற்கு 13:27*).

கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்து பல காரியங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும் இரகசிய வருகை, பகிரங்க வருகை என்ற காரியங்கள் வேறுபிரித்துச் சொல்லப்படவில்லை என்பதினால் சில குழப்பங்கள் சபைக-ளில் காணப்படுகின்றன. இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்களை சுருக்கமாக அறிந்துகொள்ளுவோம்.

இரகசிய வருகை Rapture	**பகிரங்க வருகை** Second Advent
1. இரகசிய வருகை திருச்சபையைக் குறித்த தேவனுடைய திட்டம்	*1.* பகிரங்க வருகை இஸ்ரவேலரையும் புறஜாதியாரையும் குறித்த தேவனுடைய திட்டம்
2. உபத்திரவ காலம் துவங்குமுன் தன் மணவாட்டி சபையை கிறிஸ்து ஏற்றுக் கொள்கிறார்	*2.* உபத்திரவ காலம் முடிந்தபின் தன்னுடைய ஆயிர வருஷ அரசாட்சியை ஸ்தாபிக்க வருகிறார்
3. சடுதியில், எந்த நேரத்திலும், எந்த முன்னறிவிப்பும் இன்றி இரகசிய வருகை அமைந்திருக்கும்	*3.* பகிரங்க வருகையைக் குறித்து பல முன்னடையாளங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன

இரகசிய வருகை Rapture	பகிரங்க வருகை Second Advent
4. உபத்திரவ காலம் துவங்குமுன் இரகசிய வருகை நடைபெறும்	4. பகிரங்க வருகை உபத்திரவ காலத்தை முடிவுக்குக் கொண்டுவரும்
5. இரகசிய வருகையில் கிறிஸ்து சபையை ஆகாயத்தில்தான் சந்திக்கிறார்	5. உலகத்தார் அத்தனைபேரும் காணும் விதத்தில் கிறிஸ்து பூமியில் வந்து இறங்குவார்
6. இரகசிய வருகை குறித்து பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அறிவிக்கப்படவில்லை	6. பகிரங்க வருகையைக் குறித்து எல்லா தீர்க்கதரிசிகளும் அறிந்திருந்தார்கள்

கர்த்தருடைய நாள் (2:2)

ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். (2:2)

'கர்த்தரின் நாள்' என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் இருபது இடங்களுக்கும் மேலாகக் குறிப்பிடப்படுகிறது. அந்த நாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பகிரங்க வருகையின் நாளைக் குறிப்பிடுகிறபடியால் 'கிறிஸ்துவின் நாள்' என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. நாள் என்று சொல்லப்பட்டிருப்பதினால் அது சரியாக 24 மணிநேர காலக்கட்டத்தைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் உலகின் பல்வேறு இடங்களில் சம்பவிக்கும்

வருகையின் சம்பவங்களை இது குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

இவை எப்போது சம்பவிக்கும் என்பது சொல்லப்படவில்லை. இயேசு சொல்கிறார், "மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்" *(மத் 25:13)*. கர்த்தரின் வருகை எப்போது நடக்கும்? ஒருவரும் அறியாத காலத்தில் *(மாற்கு 13:33)*, ஒருவரும் அறியாத நாளில் *(மாற்கு 13:32)*, ஒருவரும் நினையாத நாழிகையில் *(மத் 24:44)*, ஒருவரும் நினையாத நேரத்தில் *(லூக்கா 21:34)*என்ற நான்கு காரியங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாளில் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையில் பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா பேசிக்கொண்டிருக்கும்போது, "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங்காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும்" *(மாற்கு 13:4)* என்று கேட்கிறார்கள். அதற்குக் கிறிஸ்து: "அநேகர் வந்து, என் நாமத்தைக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படும்போது கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்கவேண்டியதே. ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்; பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம்" *(மாற்கு 13:6-8)* என்கிறார்.

"தேவன் உலகத்தைச் சிருஷ்டித்ததுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்" *(வ.19)*. "கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (வ.22). "அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்; வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும். **அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.** அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, அவர் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனை மட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்" (வ.24-27).

கர்த்தரின் நாளைக்குறித்துப் பேசும் ஏசாயா சொல்கிறார்: "நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார். விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்" (2:11,18). "அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது; அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும்" (13:6). "இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது. வானத்தின் நட்சத்திரங்களும், ராசிகளும் ஒளிகொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்" (வ.9,10).

யோவேல் 1:15 சொல்கிறது: "அந்த நாளினிமித்தம் ஐயோ! கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது சங்காரம்போலச் சர்வவல்லவரிடத்திலிருந்து வருகிறது". "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் **கர்த்தருடைய நாள் வருகிறது. அது சமீபமாயிருக்கிறது. அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும், மந்தாரமுமான நாள்;** விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும்

உண்டானதுமில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை" *(யோவேல் 2:1,2)*. "கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?" *(யோவேல் 2:11)*. "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்" *(2:31)*.

ஆமோஸ் *5:18-20*ல் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்: "கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும். கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல், இருளும் பிரகாசமற்ற அந்தகாரமுமாயிருக்குமல்லவோ?...". "செப்பனியா *1:7,8* சொல்கிறது: "கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம் பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார். கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்".

கர்த்தருடைய நாளைக்குறித்து அப்போஸ்தலர் நடபடிகள் *2:20*ல் "கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்" என்று பேதுரு தன்னுடைய பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில் அறிவிப்பதைப் பார்க்கிறோம். 2பேதுரு *3:10*ல் பேதுரு சொல்கிறார்: "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்". 1தெசலோனிக்கேயர் *5:2*ல் "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்-

கிறீர்கள்" என்று பவுல் சபைக்கு அறிவித்ததை விளக்கமாகப் பார்த்தோம்.

கிறிஸ்துவின் நாள் என்று குறிப்பிடப்படும் கர்த்தரின் பகிரங்க வருகை எப்போது சம்பவிக்கும் என்பதைக் குறித்த குழப்பங்கள் ஆதி அப்போஸ்தல சபையின் நாட்கள் துவங்கி இன்றுவரை சபையில் காணப்படுகிறது என்பதையே பவுல் இந்த வசனத்தில் தெளிவுபடுத்துகிறார். இந்தக் குழப்பத்தின் பின்னணியில் செயல்படும் காரியங்கள் மூன்று.

1. அசுத்த ஆவிகளின் மூலமாக தீர்க்கதரிசனம் போன்ற வெளிப்பாடுகள், வார்த்தைகள், அறிவிப்புகள் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காணமுடியும். அதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்பதை பவுல் 1தெசலோனிக்கேயர் 5:6ல் இவ்வாறு சொல்வதைப் பார்த்தோம்: "மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்".

நாம் பகலுக்குரியவர்கள் என்பதை 5வது வசனத்தில் சொல்கிறார்: "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே". 8வது வசனத்தில் சொல்கிறார்: "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்".

2. வார்த்தையினாலும் விசுவாசிகளாகிய நாம் வஞ்சிக்கப்படக்கூடும். வார்த்தையை அங்கிகரித்து ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக அந்த வார்த்தை யாருடையது, யார் மூலமாக வருகிறது, எந்த நோக்கத்தோடு வருகிறது என்பதை நிதானித்து அறிந்துகொள்ளவேண்டும். தீர்க்கதரிசன வரத்தின் மேன்மையை 1கொரிந்தியர் 14ம் அதிகாரம் முழுவதிலும் பேசும் பவுல் அதே

நேரத்தில் இவ்வாறு எச்சரிப்பதைக் கவனியுங்கள்: "தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம், மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்" *(வ.29).*

1யோவான் 4:1,3ல் யோவான் இவ்வாறு எச்சரிக்கிறார்: "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று ***நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே****, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது".*

யோவான் காலத்தில் செயல்பட்ட அந்திக்கிறிஸ்துவின் ஆவி இந்தக் கடைசி நாட்களில் வருகையைக் குறித்த கள்ள உபதேசங்களை பரவலாக அறிவித்து வருகிறது. யெகோவா சாட்சிகள் என்று அழைக்கப்படும் கள்ள சபை செயல்படாத தேசங்களே இல்லை. அதின் ஸ்தாபகர் பாஸ்டர் சார்லெஸ் ரஸ்ஸல் 1874ல் கிறிஸ்துவின் வருகை இருக்குமென்றும் உடனடியாக உலகம் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்படும் என்று பிரசங்கித்து வந்தார். அது நடைபெறாமல் போனபின் 1914ல் உலகம் அழியும் என்று போதித்தார். அதன்பின் 1914ல் கிறிஸ்து இரகசியமாக பூமிக்கு வந்துவிட்டார் என்ற போதனை அவர் சபையிலிருந்து அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி பகுதியில் பிரமாண்டமாக ஊழியம் செய்த பாலாசீர் லாரி ஜூலை 21,1969ல் மனிதன் சந்திரனில் கால்வைத்த நாளில் கிறிஸ்து வந்துவிட்டதாகப் பிரசங்கித்தார்.

3. இத்தகைய தவறான கள்ள உபதேசங்களுக்கு ஆதாரமாக சில நிருபங்கள் தெசலோனிக்கேயா சபையில் பயன்படுத்தப்பட்டன என்று பார்க்கிறோம். கிறிஸ்துவின் வருகை நடந்துமுடிந்துவிட்டது என்று பவுல் அதில் எழுதியிருப்பதாக சில ஊழியக்காரர்கள் அறிவித்து வந்தார்கள் என்றும் விசுவாசிகளிடம் அந்த நிருபங்களைக் காட்டி வந்தார்கள் என்றும்,

சொல்லப்படுகிறது. இதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்கிறார் பவுல். கர்த்தரைப் பொறுத்தவரை ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது *(2பேதுரு 3:8)*. காலங்களை சிருஷ்டிக்கவும், மாற்றவும், முடிக்கவும் அவரால் முடியும். ஏனென்றால் கடந்தகாலம், நிகழ்காலம், வரும்காலம் ஆகிய மூன்றையும் ஒரே நிகராய் அவர் காணக்கூடியவர்.

பாவமனிதன் வெளிப்படுதல் (2:3-5)

எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்: ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. (2:3)

முந்தின வசனத்தில் கர்த்தரின் வருகை ஏற்கெனவே நடந்துமுடிந்துவிட்டதாக ஊழியக்காரர்கள் தீர்க்கதரிசன-மாகவோ, செய்தியாகவோ, அல்லது பவுல் அவ்விதமாக ஒரு கடிதத்தில் அறிவித்ததாகவோ சொல்லி ஏமாற்றப்பார்த்தால் அதை நம்பவேண்டாம் என்று எச்சரித்த பவுல் "எவரும் உங்களை எவ்விதத்திலும் முட்டாள் ஆக்காமல் பார்த்துக்-கொள்ளுங்கள். **ஏனெனில் விசுவாச மறுதலிப்பும், அழிவின் மகனாகிய பாவமனிதனும் தோன்றும் வரை அந்த நாள் வராது.** பாவ மனிதன் நரகத்துக்கு உரியவன்" *(பரிசுத்த பைபிள்)*.

ஒலிவமலையில் இயேசு அந்திக்கிறிஸ்துவின் வருகை-யைக் குறித்த எச்சரிக்கையை தன் சீஷர்களுக்கு வழங்கினார் என்பதை அறிவோம். "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துகொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" *(மத் 24:4,5)*.

இந்த நிருபம் எழுதப்படுவதற்கு சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய வருகைக்கு முன் சம்பவிக்கவிருக்கும் காரியங்களைக் குறித்து இயேசு தன்னுடைய சீஷர்களிடம் இவ்வாறு சொல்கிறார்: "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது" (வ.6). **முடிவு உடனே வராது என்று இயேசு திட்டவட்டமாய் அறிவிப்பதைக் கவனியுங்கள்.** ஏனென்றால் பவுல் சொல்கிறபடி விசுவாச துரோகம் (apostasy) முந்தி நேரிடவேண்டும். அதற்குப் பின்புதான் கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் (champion of wickedness) வெளிப்படுகிறான்.

விசுவாச துரோகம் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும், ஏனென்றால் விசுவாச துரோகம் முடிந்தபின்புதான் அந்திக் கிறிஸ்து நேரடியாக இந்த உலகில் செயல்பட ஆரம்பிப்பான். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று வேதத்தில் நான்குமுறை சொல்லப்பட்டிருக்கிறது (ஆப 2:4, ரோமர் 1:17, கலா 3:11, எபி 10:38). "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி (பிலிப் 3:9) மட்டுமே ஒருவனை கிறிஸ்துவுக்குள் நிலைநிறுத்துகிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி 11:6) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவான் 5:4).

அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு முன் விசுவாச துரோகம் நடைபெறும் என்பதை பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். **தேவன்மேல் வைக்கவேண்டிய நம்பிக்கை, பக்திவைராக்கியம், விசுவாசம் ஆகியவற்றை இன்னொன்றின்மேல் வைத்துவிட்டு மனித இனம் பின்மாற்றம் அடைவதே விசுவாச துரோகம் என்று அழைக்கப்படுகிறது.** தேவனைத் தேடுவதை, அவரை ஆராதிப்பதை, அவருக்கு ஊழியம் செய்வதை விட்டுவிட்டு, தன்னுடைய சுயபலத்தின்மேல் நம்பிக்கையுடையவர்களாய்

வாழ்க்கையை நடத்துகிறவர்கள் விசுவாச துரோகிகளாக மாறுகிறார்கள்.

இந்தக் கடைசிநாட்களில் பல விசுவாச துரோகிகள் நம்மைச் சுற்றிலும் உருவாகி தடபுடலாக செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கமுடியும். எதற்கெடுத்தாலும் பரலோகம் போனேன், இயேசுவைத் தரிசித்தேன், தேவனிடம் பேசினேன், நரகத்தைப் பார்த்தேன், தூதன் வந்தான், தூதன் பேசினான் என்று பேசும் பழக்கமுடையவர்கள் பொய்யர்களாயிருக்கவேண்டும், அல்லது பொய்யின் ஆவியினால் வஞ்சிக்கப்பட்டு பொய்யான தரிசனங்களைப் பெறுகிறவர்களாயிருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களை விட்டு விலகி ஓடாவிட்டால் வஞ்சிக்கிற ஆவிகள் இவர்கள் வழியாக மற்றவர்களிடம் செயல்பட்டு அவர்களையும் வழிதப்பிப் போகச் செய்துவிடும். 1யோவான் 2:18ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்". அந்திக்கிறிஸ்துக்கள் யோவானின் நாட்களிலும் செயல்பட்டார்கள். இன்றும் செயல்படுகிறார்கள். இன்று அவனுடைய செயல்பாடுகள் அதிகரித்துள்ளன என்பது தான் உண்மை.

மோசம்போகாதபடிக்கு (beguile) எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார் பவுல். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய ஒலிவமலைப் பிரசங்கத்தில் சொல்கிறார்: "அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத் 24:10,11). நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த நாட்களிலேயே அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும், போதகர்களும், தேவனுடைய வார்த்தையை புரட்டிப் பேசுகிறவர்களும் செயல்பட்டு வருகிறார்கள் என்றாலும் பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடும் விசுவாச துரோகம் இன்னும் சம்பவிக்கவில்லை.

துரோகம் என்ற வார்த்தை *(apostasy)* தேசத்தை ஆண்டுகொண்டிருக்கும் ராஜாங்கங்களுக்கு எதிராக ஒரு கூட்டத்தார் எழும்பி புரட்சி செய்வதைக் குறிப்பிடுகிறது. **இந்த பூமியை ஆண்டுகொண்டிருக்கும் தேவனுக்கு விரோதமாக, அவருடைய அதிகாரத்தைப் புறக்கணித்து, அவரை விட்டு விலகுவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவருக்கு எதிராக இந்த மனிதர்கள் செயல்படுவதே விசுவாச துரோகம்.** தன்னை சிருஷ்டித்தவரைப் புறக்கணிக்க அவரால் சிருஷ்டிக்கப்பட்ட மனித இனம் துணிகரம் கொள்கிறது. தேவனுடைய ஆளுகையை ஏற்றுக்கொள்ளாதிருப்பதே பிரதானமான பாவம். அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியாகிய லூசிபர் அதைத்தான் செய்தான் *(ஏசாயா 14:12-15, எசேக் 28:1-19)*.

விசுவாச துரோகம் சம்பவித்ததின் விளைவாக உடனடியாக பூமியில் என்ன நடக்கிறது என்பதை பவுல் தொடர்ச்சியாக அறிவிக்கிறார். கேட்டின் மகன் *(அழிவின் மகன்,* son of perdition*)* இந்த பூமியில் வெளிப்படுவான். யோவான் *17:12*ல் யூதாஸ் இஸ்காரியோத்தை மனதில் வைத்துக்கொண்டு கிறிஸ்து பிதாவிடம் ஜெபிக்கிறார்: *"வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் (அவருடைய சீஷர்களில்) ஒருவனும் கெட்டுப்போகவில்லை".*

அப்போஸ்தலர்களில் ஒருவனாயிருந்த யூதாஸ் எப்போது கேட்டின் மகன் ஆகிறான்? ஆண்டவருடைய கடைசி இராப்போசனத்தின்போது அவனுக்குள் சாத்தான் புகுந்தபின். யோவான் *13:26,27*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: *"இயேசு துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான்".* **ஒரு மனிதனுக்குள் சாத்தான் புகுந்ததாக வெளிப்படையாக வேதத்தில் சொல்லப்படும் ஒரே நபர் யூதாஸ்.** அவனைக் குறித்து இயேசு சொல்கிறார்: *"பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசா-*

சாயிருக்கிறான்". **பிசாசு பிடித்தவன் என்று சொல்லவில்லை, அவனையே பிசாசு என்கிறார்.** சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்" *(யோவான் 6:70,71).*

முதலாவது கேட்டின் மகன் வெளிப்படவேண்டும் என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். அந்திக்கிறிஸ்துவாக வெளிப்படு-வதற்கு முன்பாக அவன் இந்த பூமியில் மூன்றரை ஆண்டுகள் இருப்பான். ஆனால் அவன் யார் என்பதை யாராலும் கண்டுகொள்ள முடியாது. உபத்திரவ காலம் முடிவடைய மொத்தம் ஏழு ஆண்டுகள் ஆகும் என்பதினால் முதல் மூன்றரை ஆண்டுகாலம் தன்னுடைய சுயரூபத்தை மறைத்து ஒரு மனிதனைப் போல் காணப்பட்டு செயல்படுவான். முழு உலகமும் அவனை மிகுந்த எதிர்பார்ப்போடு சேவித்துக்கொண்-டிருக்கும். 2தெசலோனிக்கேயர் 1:8ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவதை அறிவித்த பவுல், இந்த வசனத்தில் கேட்டின் மகனாகிய பாவமனுஷன், ஏழு ஆண்டுகால உபத்திரவ காலத்தின் மத்தியில் தன்னை முழுமையாக வெளிப்படுத்துவான் என்பதை அறிவிக்கிறார்.

இதைக் குறித்த மேலான வெளிப்பாடுகளைக் கிறிஸ்து பிறப்பதற்கு முன் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தானியேல் பெற்றுக்கொண்டு இவ்வாறு சொல்கிறார்: "அவர் (அந்திக்கிறிஸ்து, கள்ளத்திருத்துவத்தின் இரண்டாவது நபர்) ஒரு வாரமளவும் (ஏழு ஆண்டுகள்) அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது (3 ½ ஆண்டுகள்) பலியையும் காணிக்கையையும் ஒழியப்-பண்ணுவார்" (தானி 9:27). முதல் 3½ ஆண்டுகளில் அந்திக்-கிறிஸ்து யூதர்களை பிரியப்படுத்தும் விதத்தில் அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்து, மோரியா மலையில் சாலொமோன் தேவாலயம் கட்டப்பட்டிருந்த இடத்தில் அவர்களுக்கென்று ஆலயம் கட்டி, பழைய ஏற்பாட்டு

முறைமைகளின்படி பலிகள், காணிக்கைகள் செலுத்த அவர்களுக்கு உதவியாய் இருப்பான்.

3 ½ ஆண்டுகளுக்குப் பின் அவன் தன்னுடைய சுயரூபத்தை வெளிப்படுத்துவான். தேவாலயத்தின் பலிபீடத்தைத் தீட்டுப்படுத்தி, அங்கே சிலையை ஸ்தாபித்து அதை வணங்கும்படியாக கள்ளத்திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய கள்ளத்தீர்க்கதரிசியின்மூலம் கட்டளையிடுவான். அடுத்தவசனம் 2தெசலோனிக்கேயர் 2:4ல் பவுல் இதை இவ்வாறு குறிப்பிடுகிறார்: "தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்". அந்த சிலையை கனம் பண்ணாதவர்கள் கொலை செய்யப்படுவார்கள்.

இவ்விதமாக பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணப்பட்ட பின் "அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும்" (தானி 9:27). இவ்விதமாக உபத்திரவகாலத்தின் பின்பகுதியில்தான் கேட்டின் மகனாகிய பாவமனிதன் சாத்தான் பூமியில் நேரடியாக வெளிப்பட்டு செயல்படுவான். லூசிபர் என்று அழைக்கப்படும் இவனே கள்ளத்திருத்துவத்தின் முதலாவது நபர்.

அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2:4).

வெளிப்படப்போகிற கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் (கள்ளத்திருத்துவத்தின் இரண்டாவது நபர்) எப்படிப்பட்ட-

வனாக இருப்பான் என்பதைத் தொடர்ச்சியாக பவுல் அறிவிக்கிறார்.

1. அந்திக்கிறிஸ்து எதிர்த்து நிற்கிறவன்

2. தன்னைத்தானே உயர்த்துகிறவன்

3. தன்னைத் தேவனாகக் காட்டுகிறவன்

அந்திக்கிறிஸ்து எதிர்த்து நிற்கிறவன் என்று சொல்லும்போது அவன் மனிதர்களை அல்ல, சர்வ வல்லமையுள்ள தேவனை எதிர்த்து நிற்கிறவன் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஏதேன் தோட்டத்தில் மனிதனை தேவன் சிருஷ்டிப்பதற்குமுன்பே வானமண்டலங்களில் தேவனுக்கு விரோதமாக அவன் செயல்பட்டு இவ்வாறு பேசுகிறான்: "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" (ஏசாயா 14:13,14).

அவனுடைய மேன்மையான சிருஷ்டிப்பைக் குறித்துத் தேவன் சொல்கிறார்: "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்" (எசே 28:12). 15ஆம் வசனத்தில் தேவன் அவனுடைய மேன்மையைக் குறித்துச் சொல்கிறார்: "நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்". 17-வது வசனத்தில் சொல்கிறார், "உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்".

தேவனை சாத்தான் ஏதோ ஒரு கால கட்டத்தில் எதிர்த்தான் என்று சொல்லி முடித்துவிடவில்லை. எதிர்த்து நிற்கிறவனாக இருப்பான் என்று எழுதியிருப்பதைக் கவனியுங்கள். "ராஜா

(அந்திக்கிறிஸ்து) தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான்" (தானி 11:36). "எந்தத் தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி, அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி, தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும், வெள்ளியினாலும், இரத்தினங்களினாலும், உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம் பண்ணுவான்" (வ.37, 38).

பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு சொல்கிறது: "அவன் தேவனுக்கும் மனிதர்களின் வழிபாடுகளுக்கும் எதிரானவன். அவன் தேவனுடைய ஆலயத்திற்கும் சென்று அங்கே உட்காரு-வான். பிறகு தன்னை தேவனைவிட உயர்ந்தவனாக காட்டிக்-கொள்வான்" (2தெச 2:4). உபத்திரவ காலத்தின் முன்பகுதியில் உலகத்தில் ஆளுகை அதிகாரங்கள் எல்லாம் அவன் பெற்றுக்-கொள்வான் என்றாலும் அதில் அவன் திருப்தி அடையப்-போவதில்லை. தன்னைத்தான் தேவன் என்று அறிவித்து மனிதர்கள் தனக்கு தேவனுக்குரிய கனத்தைக் கொடுக்க-வேண்டும் என்று கட்டளையிடுவான். முந்தின நாட்களில் எகிப்தின் பார்வோன்களும், ரோமாபுரியின் சக்கரவர்த்திகளும் தங்களைத் தேவர்களாக அறிவித்து தங்கள் சுயமகிமையைத் தேடிவந்தார்கள் என்பது சரித்திர நிகழ்ச்சி. ஆனால் அவர்கள் எவருமே தங்களை தங்களுடைய தெய்வங்களுக்கு மேலானவர்-களாகக் காட்டிக்கொள்ளவில்லை.

*தானியேல் தீர்க்கதரிசனமாக அறிவித்தபடி சீரியா தேசத்தின் அதிபதியாகிய அந்தியோகு-*IV *என்பவன் (இன்னொரு பெயர்* Ephihanes*) எருசலேம் தேவாலயத்துக்குள் கி.மு.168-145ல் பிரவேசித்து கிரேக்க தேசத்து தெய்வங்களுக்கு (*Zeus*) பீடம் கட்டி பன்றிகளை பலியிட்ட நிகழ்ச்சியை பாழாக்குகிற அருவருப்பு (*abomination that causes desolation*) என்று இயேசு கிறிஸ்து மத்தேயு 24:15, மாற்கு 13:14ல் குறிப்பிடுகிறார். அதைக்குறித்து தானியேல் சொல்லியிருக்-*

கிறானே என்கிறார். தானியேல் 11:31ல் இவ்வாறு வாசிக்கி-றோம், "அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்ச-லாக்கி, அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்". தானியேல் 11:31, 12:11, 8:13, 9:27 வாசித்துப் பாருங்கள். அதினிமித்தம் தேவாலயம் தீட்டான-தாகிவிட்டதாகக் கருதி யூதர்கள் எல்லா வழிபாடுகளையும் நிறுத்திவிட்டார்கள். 2300 நாட்களுக்குப் பின் (தானி 8:14) யூத இனத்தைச் சேர்ந்த மக்கபீஸ் என்ற குடும்பத்தார் தேவாலயத்-தைச் சுத்திகரிக்கிறார்கள்.

*எசேக்கியேல் 28:2ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்; உன் இருதயம் மேட்டிமை கொண்டு: நான் தேவன், நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று நீ சொல்லி, உன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல் ஆக்கினாலும், நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல". ரோம தேசத்து பேரரசனாகிய கலிகுல்லாவும் (*Galligulla*) கி.பி.40ல் தன்னுடைய சிலையை தேவாலயத்தில் ஸ்தாபிக்க முயன்றும் கி.பி.41ல் அவன் கொலை செய்யப்பட்டதின் விளைவாக அவனுடைய முயற்சி தோல்வி அடைகிறது. கி.பி.63ல் போம்பே (*Pompey*) என்ற ரோம தளபதியும் தேவாலயத்தில் தன்னுடைய சிலையை ஸ்தாபிக்க முயன்று தோல்வி அடைகிறான்.*

உபத்திரவ காலத்தின் பின்பகுதியில் தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவ-னென்று காண்பிக்கும் அந்திக்கிறிஸ்து எப்படிப்பட்டவனாக இருப்பான், அவனுடைய குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பதைக் குறித்த வெளிப்பாடுகளை தேவன் தானியேலுக்குக் கொடுத்ததை தானியேல் 11:36-45 வசனங்களிலிருந்து அறிந்து-கொள்கிறோம்.

1. *மிகுந்த பெருமை நிறைந்தவனாயிருப்பான் - தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான் (வ.36)*

2. யூத இனத்தைச் சேர்ந்தவனாக இருப்பான் - அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாதவன் (வ 37, 38) என்று சொல்லப்பட்டிருப்பதினால்

3. ஆண்புணர்ச்சிக்காரனாக (homosexual) இருப்பான் (வ.37)

4. உலகம் முழுவதும் அவனுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கும் (வ.40-42)

5. உலகப் பொருளாதாரம், ஐசுவரியங்கள் அத்தனையையும் ஆண்டுகொண்டிருப்பான் (வ.43)

6. தேவனுடைய கோபம் வெளிப்படும்வரை அவனை யாரும் மேற்கொள்ளமுடியாது (வ.43)

7. கிறிஸ்துவின் பகிரங்க வருகையின் நாள் வரை அவனை யாரும் மேற்கொள்ளமுடியாது. (வ.36b)

8. முடிவில் தனக்கு யாரும் உதவிசெய்யமுடியாத நிலையில் அழிவைச் சந்திப்பான் (வ.45)

வேதத்தில் அந்திக்கிறிஸ்து 13 வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

1. அசீரியன் (ஏசாயா 10:5,6)
2. பாபிலோனின் ராஜா (ஏசாயா 14:4)
3. சங்கரிக்கிறவன் (ஏசாயா 16:4)
4. விடிவெள்ளி, லூசிபர் (ஏசாயா 14:12)
5. சிறிய கொம்பு (தானி 7:8, 8:9-12)
6. மூர்க்க குணமுள்ள ராஜா (தானி 8:23)
7. வரப்போகிற பிரபு (தானி 9:26)
8. தன்னிஷ்டப்படி செய்யும் ராஜா (தானி 11:36)
9. மூர்க்கமுகமும் சூதான பேச்சுமுள்ள ராஜா (தானி 8:23)

10. வடதிசை ராஜா *(தானி 11:40)*

11. பாவ மனுஷன் *(2தெச 2:3-8)*

12. கேட்டின் மகன் *(2தெச 2:3)*

13. மிருகம் *(தானி 7:11, வெளி 14:9-11; 15:2,3; 16:2,10; 17:1-18; 19:19-21; 20:2-4,10)*

நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? (2:5)

அந்திக்கிறிஸ்து பகிரங்கமாகத் தன்னை வெளிப்படுத்தியதும் தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தன்னை தேவனென்று காண்பிப்பான் என்று முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் சற்று எரிச்சலடைந்தவராய் சபையாரைப் பார்த்து ஏற்கெனவே இந்தச் சத்தியத்தை நேரில் உங்களிடம் அறிவித்ததை மறந்துபோய்விட்டீர்களா என்று கேட்கிறார். **ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு சத்தியங்களை அறிவிப்பதோடு நிறுத்திக்கொள்ளக்கூடாது. அதை திரும்பத் திரும்ப அறிவித்து அவர்கள் அதை மறந்துவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.** ஏனென்றால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் *(மத் 13:18-23)* இயேசு சொல்கிறபடி: "ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்".

கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்படும்போது விசுவாசிகள் செய்யவேண்டிய காரியங்கள் என்ன என்பதை இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு மத்தேயு *24:16-26ல்* அறிவித்திருந்தார் என்று பார்க்கிறோம். அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்களையும் மத்தேயு *24:5-15ல்* போதிக்கிறார். அந்திக்கிறிஸ்துவையும், அவனை ஏற்றுக்கொண்டவர்களையும் சங்கரிக்கும்படியாகக் கிறிஸ்துவின் பகிரங்க வருகை அமைந்திருக்கும் என்பதையும் தேவன் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.

மல்கியா *4:1*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்". "என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்" (செப்பனியா *3:8*).

அந்திக்கிறிஸ்துவை தடைசெய்கிறவன் யார்? (2:6-10)

அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடைசெய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. (2:6)

மத்திய வானத்தில் இருக்கும் அந்திக்கிறிஸ்து எந்த நிமிடத்திலும் இந்த பூமியில் இறங்கி செயல்பட ஆயத்தமாயிருக்கிறான். இவ்வாறு அவன் பூமியில் இறங்கியதும் உபத்திரவகாலம் ஆரம்பமாகிறது என்று பார்த்தோம். கிறிஸ்துவின் வருகையின்போது அவருக்குள் மரித்தவர்கள் முதலாவதாக உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்றும், அந்த வேளையில் உயிரோடு இருக்கும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மறுரூபமாக்கப்படுவார்கள் என்றும் பார்த்தோம் (*1*தெச *4:16,17*).

அந்திக்கிறிஸ்துவின் வருகையை தடைசெய்கிற காரியம் எது என்பதை வெளிப்படையாக அறிவிக்காமல், **தடைசெய்கிறது இன்னதென்று அறிந்திருக்கிறீர்களே என்று சொல்கிறார்.** முந்தின வசனத்தில் சொன்னபடி அவன் இப்பொழுது வரவிடாமல் தடுத்தி நிறுத்தப்பட்டிருக்கிறான் என்றால் அவன்

சரியான நேரத்தில் வெளிப்படும் பொருட்டுத்தான் என்கிறார். முந்தின வசனத்தில் பவுல் அறிவித்தபடி ஏற்கெனவே நான் உங்களுக்கு அறிவித்த காரியங்களை நினைவுபடுத்திக்-கொள்ளுங்கள் என்று ஆலோசனை கொடுக்கிறார்.

தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த நாட்களில் அதை அவர்களுக்குப் போதித்திருக்கவேண்டும். **அந்திக்கிறிஸ்து இந்த பூமியில் நேரடியான முறையில் செயல்பட அனுமதிக்காமல் ஏதோ ஒரு வல்லமை இந்த பூமியில் இருந்துகொண்டு செயல்படுகிறது.** அதன் விளைவாகத்தான் அந்திக்கிறிஸ்துவின் நேரடியான அரசாட்சி இன்னும் பூமியில் துவங்கவில்லை என்கிறார். பவுல் சபையாரிடம் என்ன சொல்லியிருக்கக்கூடும் என்பதை அறிந்துகொள்ளாத நிலையில் பவுல் தன் நிருபத்தில் அறிவிக்கும் காரியத்தை விளங்கிக்கொள்வது மிகவும் கடினமான காரியமே.

கர்த்தருடைய நாள் என்று வேதம் குறிப்பிடும் நாள் இந்த பூமியில் துவங்குவதற்கு முன்பாக தடைசெய்கிறவன் என்று பவுல் அறிவிக்கும் நபர் இந்த உலகத்திலிருந்து நீக்கப்பட-வேண்டும். அதற்குப் பின்புதான் அந்திக்கிறிஸ்து இந்த உலகில் நேரடியான முறையில் செயல்படமுடியும். தடைசெய்கிறவன் எப்போது நீக்கப்படுவான் என்பது அப்போஸ்தலனாகிய பவுலுக்கே மறைக்கப்பட்ட ஒரு காரியமாக இருக்கிறது. ஆனாலும் அவன் நீக்கப்பட்ட பின்புதான் அந்திக்கிறிஸ்துவின் சுயரூபம் வெளியரங்கமாகும் என்பதை திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாதே. (2:7)

“அக்கிரமத்தின் இரகசியம்” (mystery of lawlessness, power of lawlessness) என்ற வார்த்தை அந்திக்கிறிஸ்துவைக் (man of lawlessness) குறிப்பிடுகிறது. இரகசியம் என்ற

வார்த்தைக்கு மனிதர்களுக்கு மறைக்கப்பட்ட, மனித ஞானத்தால் விளங்கிக்கொள்ளமுடியாத, மனிதன் தன்னுடைய முயற்சியினாலோ, ஆராய்ச்சியினாலோ அறிந்துகொள்ள முடியாத ஒரு காரியம் என்று பொருள்கொள்ளலாம். தேவனே வெளிப்படுத்தினால் மட்டுமே அதை மனிதன் அறிந்துகொள்ள-முடியும். இத்தகைய பல இரகசியங்களை தேவன் அப்போஸ்த-லனாகிய பவுல் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ரோமர் *11:25*, *1*கொரிந்தியர் *15:51*, எபேசியர் *5:32* வாசித்துப் பாருங்கள்.

உலகத்தின் கடைசி ஏழு ஆண்டு காலத்தில் இந்த உலகில் அந்திக்கிறிஸ்து தன்னை பகிரங்கமாய் வெளிப்படுத்தி செயல்-படுவான். அதுவரை அவனுடைய செயல்பாடுகள் மறைவா-னதாக இருக்கும். "பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிற-வனே அந்திக்கிறிஸ்து (*1*யோவான் *2:22*)என்று வாசிக்கிறோம். யோவான் சொல்கிறார், "அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துகள் இருக்கிறார்கள்" (*1*யோவான் *2:18*). **அந்திக் கிறிஸ்துவின் நேரடியான வருகையும், அதைத்தொடர்ந்து அவனுடைய ஆட்சியும் உபத்திரவ காலத்து ஏழு ஆண்டு காலத்தில் மட்டும் சாத்தியமாகும். ஆனாலும் அவனுடைய ஆவி இன்றும் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.** யோவான் சொல்கிறார்: "வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (*1*யோவான் *4:3*).

"மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்-கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவு-மாயிருக்கிறான்" (*2*யோவான் *7*). ஆனாலும் அவன் உபத்திரவ காலத்தில் பகிரங்கமாக வெளிப்பட்டு ஏழு ஆண்டுகாலம் அரசாளுவான். அதில் கடைசி மூன்றரை ஆண்டுகாலம் பயங்கரமானதாக இருக்கும் என்பதை தானியேல், வெளிப்-படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்கள் அறிவிக்கின்றன. 2தெசலோனிக்கேயர் 2:9 அவனுடைய வருகை எப்படி இருக்கும் என்பதை தெளிவாக அறிவிக்கிறது.

“பாவத்தின் இரகசிய சக்தி ஏற்கெனவே உலகத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது” (பரிசுத்த பைபிள்). ஆனால் அவன் வெளிப்படையான முறையில் செயல்பட முடியவில்லை. **‘தடைசெய்கிறவன்’ என்று பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடும் ஒரு வல்லமை நடுவிலிருந்து, அதாவது இந்த உலகத்திலிருந்து நீக்கப்பட்ட பிறகுதான் அந்திக்கிறிஸ்து பகிரங்கமான முறையில் இந்த உலகத்தில் செயல்பட முடியும்** என்பதை பவுல் அறிவிக்கிறார். தடைசெய்கிறவன் யார் என்று வேதத்தில் எந்த இடத்திலும் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. ஒருவேளை பவுல் தெசலோனிக்கேயா சபையாருக்கு இது குறித்து சில காரியங்களை போதித்திருக்கலாம் என்பதை முந்தின வசனத்தில் இருந்து அறிந்துகொள்கிறோம். “நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா?” (2தெச 2:5).

பவுல் சபையாரிடம் அறிவித்த காரியம் என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் பாவமனிதனாகிய அந்திக்கிறிஸ்து இந்த பூமியை ஆட்சி செய்வதை தடை செய்யக்கூடிய வல்லமை உள்ளவர்கள் யாராயிருக்கும் என்று ஆராய்ந்து பார்ப்போம்.

1. உலக நாடுகளும், அரசாங்கங்களும்
2. தேவ தூதனாகிய மிகாவேல்
3. பரிசுத்த ஆவியானவர்
4. பரிசுத்த மணவாட்டியாகிய சபை

1. உலக நாடுகளும் அரசாங்கங்களும்

உலகத்தில் உள்ள நாடுகள் அனைத்துக்கும் தனித்தனியே ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், முதல் அமைச்சர்கள் என்று அழைக்கப்படும் தலைமை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக தேசங்கள் ஆட்சிசெய்யப்பட்டு வருகின்றன. இந்த உலக நாடுகளின் அதிகாரிகள் ஒன்றிணைந்து தங்களுடைய அதிகாரங்களை அந்திக்கிறிஸ்துவுடன் பகிர்ந்துகொள்ள விருப்-

பப்படமாட்டார்கள். அந்திக்கிறிஸ்துவின் வருகையின் நோக்கம் உலகளாவிய ஆட்சியை உலகமெங்கும் ஸ்தாபிப்பதாகத்தான் இருக்கும். எனவே உலக நாடுகளின் அதிபதிகள் எல்லாரும் தனிப்பட்ட விதத்திலும், மற்ற நாடுகளோடு தங்களை இணைத்துக்கொண்டும் இந்த உலகில் அந்திக்கிறிஸ்துவின் அரசாட்சி ஸ்தாபிக்கப்படுவதை தங்களால் முடிந்தவரை தடை செய்ய முயல்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த அதிகாரங்களுக்கு சபையார் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஆலோசனை பேதுரு மூலமாக வெளிப்படுவதைப் பாருங்கள்: "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும், நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்" (1பேதுரு 2:13,14). ரோமர் 13:1-7 வாசித்துப்பாருங்கள. இவ்விதமாக தேசத்தின் பிரஜைகள் உதவியுடன் உலக நாடுகளின் அரசாங்கங்கள் அந்திக்கிறிஸ்துவின் அரசாட்சி பூமியில் ஸ்தாபிக்கப்படுவதை தடை செய்கிறவர்களாக செயல்படுவார்கள் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

ஆனாலும் உலக அரசாங்கங்கள் அந்திக்கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக முற்றிலுமாக நீக்கப்படுவதில்லை என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் நாட்களில் பல நாடுகளில் வித்தியாசமான அரசாங்கங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கும் என்பதை வேதம் அறிவிக்கிறது.

தானியேல் 11:40ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "முடிவுகாலத்திலோவென்றால், தென்திசை ராஜா அவனோடே முட்டுக்கு நிற்பான், வடதிசை ராஜாவும் இரதங்களோடும் குதிரைவீரர்களோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக்காற்றுபோல் அவனுக்கு விரோதமாய் வருவான்". மேலும்

அந்திக்கிறிஸ்துவின் இறுதி நாட்களில் வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலிருந்தும் வெளிப்படும் தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு *(வெளி 16:14)* ஆயத்தப்படுத்தின என்று பார்க்கிறோம்.

2. மிகாவேல் தேவதூதன்

இரண்டாவதாக தேவதூதனாகிய மிகாவேல் தடைசெய்கிறவனாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். மிகாவேல் *(Michael)* என்றால் தேவனைப் போன்றவன் என்று பொருள். *"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" (தானி 12:1).*

தானியேலின் ஜெபத்துக்கான பதிலைக் கொண்டுவந்த புருஷன் மிகுந்த வல்லமையுடையவனாக இருந்தும் *(தானி 10:5,6)*, பெர்சிய ராஜ்யத்தின் அதிபதியாகிய சாத்தான் அதைத் தடைசெய்தபோது *"பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல்" (தானி 10:13)* அவனை மேற்கொள்வதைப் பார்க்கிறோம். **இந்த பூமி மிகாவேல் தூதனுடைய பாதுகாப்பு வளையத்துக்குள் இருக்கும்வரை அந்திக்கிறிஸ்து விடுதலையோடு தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக செயல்படமுடியாது.** தடைசெய்கிறவனாகிய மிகாவேல் தேவனால் உபத்திரவ காலத்துக்கு முன் எடுத்துக்கொள்ளப்படுவார் என்றும், அதற்குப்பின் அந்திக்கிறிஸ்து விடுதலையோடு பூமியில் செயல்படுவான் என்றும் கருதப்படுகிறது.

3. பரிசுத்த ஆவியானவர்

அந்திக்கிறிஸ்து தன் காலத்தில் வெளிப்படும்படிக்கு தடைசெய்கிறவர் பரிசுத்த ஆவியானவர் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில் பிதாவாகிய

தேவன் இஸ்ரவேல் சபையாரின் நாயகனாக (husband) கணவனாக இருந்தார். "உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்" (ஏசாயா 54:5) என்று வாசிக்கிறோம். "நான் உங்கள் நாயகர்" (எரே 3:14). எரேமியா 31:32ல் தேவன் சொல்கிறார், "நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே".

புதிய ஏற்பாட்டு நாட்களில் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையை ஆயத்தப்படுத்தும் பணி பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய வேண்டுதலின் அடிப்படையில் ஆவியானவர் நமக்குத் தந்தருளப்படவில்லை. "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவா 14:16) என்கிறார் இயேசு.

பெந்தெகொஸ்தே நாளில் அக்கினிமயமான நாவுகளின் ரூபத்திலே அப்போஸ்தலர்களின் மேல் வந்து இறங்கிய ஆவியானவர் இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளுக்குள்ளும் வாசமாயிருக்கிறார். அதன் விளைவாக அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் வெளியரங்கமாக வல்லமையோடு செயல்படமுடிவதில்லை. 'தடைசெய்யப்படுகிறான்' என்ற வார்த்தை ஆவியானவர் அந்திக்கிறிஸ்துவை தடைசெய்வதாகக் கருதப்படுகிறது.

ஆனால் சபை எடுத்துக்கொள்ளப்பட்டு அந்திக்கிறிஸ்து ஆட்சிக்கு வந்து உபத்திரவகாலம் துவங்கியபின்னும் ஆவியானவர் இந்த பூமியில் இருந்து செயல்படுவதின் விளைவாகவே சகலவிதமான உபத்திரவங்கள் மத்தியிலும் பலர் கிறிஸ்துவுக்கென்று உண்மையாயிருப்பதைப் பார்க்கிறோம். உபத்திரவ காலத்தில் ஐந்தாம் முத்திரை உடைக்கப்படும் வேளையில் பலர் கொலைசெய்யப்படும்போதும் அவர்கள் இரத்த சாட்சிகளாக மரிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றால் (வெளி 6:9-10) அது ஆவியானவரின் ஒத்தாசையினால்தான்.

வெளிப்படுத்தின விசேஷம் *7:14* அறிவிக்கும் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்த விசுவாசிகள் ஆவியானவரின் செயலாற்றல் இன்றி இரட்சிப்பில் நிலைத்திருக்கமுடியாது. அவர்களைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் *12:11*ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்". **ஆவியானவர் உபத்திரவ காலத்திலும் பூமியில் இருந்து செயல்படுவதின் விளைவாகவே இது சாத்தியமாகிறது.** உபத்திரவ காலத்தில் ஆவியானவர் நடப்பிக்கும் கிரியை சகரியா *12:10*ல் இவ்வாறு சொல்லப்படுகிறது: "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்". இந்த வசனங்களின் ஆதாரத்தில் அந்திக்கிறிஸ்துவை தடைசெய்கிறவர் பரிசுத்த ஆவியானவர் அல்ல என்று நிதானிக்கிறோம்.

4. பரிசுத்த மணவாட்டியாகிய சபை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறித்து 1தெசலோனிக்கேயர் *4:15-17*ல் விளக்கமாக தியானித்திருக்கிறோம். அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் நாட்களில் மணவாட்டியாகிய சபை பூமியில் இருப்பதில்லை. பிலதெல்பியா சபையைக் குறித்து கிறிஸ்து சொல்கிறார்: "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் (ஏழு ஆண்டுகால உபத்திரவ காலம்) தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" *(வெளி 3:10)*.

இந்த ஏழு ஆண்டு உபத்திரவ காலத்துக்குள் சபை பிரவேசிப்பதில்லை. ஏசாயா *57:1*ல், "தீங்குவராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுவான்" என்று வாசிக்கிறோம்.

தன்னுடைய சீஷர்களிடம் கிறிஸ்து சொல்கிறார்: "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளு-வேன்" *(யோவான் 14:2,3)*.

கிறிஸ்து தன்னுடைய இரகசிய வருகையைக் குறித்து இந்த வேத பகுதியில் பேசுகிறார். மத்திய வானத்தில் வெளிப்படும் மணவாளன் தன்னுடைய மணவாட்டியை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய சிங்காசனத்துக்கு முன்பு நிறுத்தி நியாயம் விசாரித்து அக்கினியினால் சோதித்து, அவனவனுடைய கிரியைகளை வெளிப்படுத்தி ஏற்றுக்கொள்ளும் காரியத்தை *(1கொரி 3:11-15)* ஏற்கெனவே விளக்கமாகப் பார்த்திருக்கிறோம்.

இதன் அடிப்படையில் பார்ப்போமானால், அக்கிரமத்தின் இரகசியமாகிய அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் பகிரங்கமான முறையில் வெளிப்பட்டு செயல்படுவதைத் தடைசெய்கிறது பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற மணவாட்டி சபைதான் என்பது தெளிவாகிறது. **சபை கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டபிறகுதான் அந்திக்-கிறிஸ்து இந்த பூமியில் விடுதலையோடு செயல்படமுடியும்.**

நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்-படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினால் அழித்து, தம்முடைய வருகையின் பிர-சன்னத்தினாலே நாசம் பண்ணுவார். (2:8)

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்ற திருச்சபையே அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் நேரடியான முறையில் செயல்படாதபடிக்கு தடைசெய்கிறது என்று பார்த்தோம். சபை கிறிஸ்துவின் மணவாட்டி என்றும், மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது அவளை

ஏற்றுக்கொள்கிறார், அதைத் தொடர்ந்து அந்திக்கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால அரசாட்சி பூமியில் உதயமாகிறது. சபை பூமியில் இருக்கும்வரை அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து நேரடியான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள முடியாது. பலத்த முறையில் பூமியில் எந்த ஒரு தீங்கையும் உண்டாக்க முடியாது. இதைத்தான் ஏசாயா இவ்வாறு குறிப்பிடுகிறார்: "தீங்கு வராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான்" (57:1). 1தெசலோனிக்கேயர் 4:16,17ல் பவுல் இந்த நிகழ்ச்சியை விவரித்ததைப் பார்த்தோம்.

இவ்விதமாக இரகசிய வருகையில் சபை எடுத்துக்-கொள்ளப்படுவதை கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம் 3:10ல் பிலதெல்பியா சபைக்கு இவ்வாறு அறிவிக்கிறார்: "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்-கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்-கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோத-னைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்".

தடைசெய்கிறவன் எப்போது நீக்கப்படுவான், இரகசிய வருகை எப்போது நடக்கும், அந்திக் கிறிஸ்து நேரடியான முறையில் எப்போது வெளிப்படுவான் என்பதைக் குறித்த வெளிப்பாடுகள் எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை. "கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2:3) என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். கள்ளத்திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இந்த அந்திக்கிறிஸ்து (கள்ளத்திருத்துவத்தின் முதல்நபர் சாத்தான் என்று அழைக்கப்படும் லூசிபர், இரண்டாவது நபர் அந்திக்கிறிஸ்து, மூன்றாவது நபர் கள்ளத்தீர்க்கதரிசி) வெளிப்படவிருக்கும் நாள் வேதத்தில் மறைக்கப்பட்ட ஒரு காரியமாக இருக்கிறது. அந்திக்கிறிஸ்துவின் செயலாற்றல் முற்றிலுமாக சாத்தானின் வஞ்சனையையும், ஏமாற்றும் திறனையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்பதி-னால் அவை ஒரு வினாடிப்பொழுதில் நடந்துமுடிந்துவிடும். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை பூமியில் இருக்கும்வரை

அவனுடைய செயல்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இந்த பூமியை அவனுடைய ஆளுகைக்குள் கொண்டுவரமுடியாமலே இருக்கும்.

சபை நீக்கப்படும்போது, இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போது, "அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்" என்று நாம் தியானிக்கும் வசனம் உறுதிப்படுத்துகிறது. வெளிப்பட்டு முதல் 3½ ஆண்டுகளில் அந்திக்கிறிஸ்து சற்று நிதானமாகவே செயல்படுவான். யூதர்களை பிரியப்படுத்தும் விதத்தில் எருசலேம் தேவாலயத்தைத் கட்டுவதற்கு அவர்களை அனுமதிப்பான். சாலொமோன் கட்டிய ஆலயத்தின் இடம் தற்பொழுது முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்டு அங்கு அவர்கள் வழிபாடுகள் செய்து-கொண்டிருப்பதினால் பேச்சுவார்த்தைகள் மூலம் அவர்களைச் சமாதானப்படுத்துவான். ஆலயம் கட்டிமுடித்தபின் யூதர்கள் தங்களுடைய பாரம்பரியங்களின் அடிப்படையில் பலிசெலுத்தி, ஆராதனைகள் செலுத்த அவர்களை அனுமதிப்பான்.

உலகமெங்கிலும் உள்ள பெரும்பாலான நாடுகள் அவனை மாபெரும் உலகத்தலைவனாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்-வான். யூதர்களில் பெரும்பாலோர் தாங்கள் எதிர்பார்த்துக்-கொண்டிருக்கும் மேசியா இவன்தானோ என்று சந்தேகப்-படுமளவு வஞ்சனையான முறையில் செயல்படுவான். உலகம் வானத்திலிருந்து இறங்கி வரவிருக்கும் ஒரு வல்லமையான சக்தியிடமிருந்து தப்பிக்கவேண்டும் என்றால் உலகில் உள்ள அத்தனை நாடுகளும் தன்னுடைய அதிகாரத்துக்குள் வர-வேண்டும் என்று அவர்களை நம்பும்படி செய்வான். ஆறாவது தூதன் எக்காளம் ஊதும்போது நடக்கும் காரியங்களாக இவை வெளிப்படுத்தின விசேஷம் 16:12-14ல் விளக்கப்பட்டிருக்கிறது, வாசித்துப் பாருங்கள்.

உலகநாடுகள் எல்லோரும் ஒன்றிணைந்து சர்வ வல்லமை-யுள்ள கர்த்தரை அவருடைய இரண்டாவது வருகையில் எதிர்கொள்ள ஆயத்தமாவார்கள்.

சகரியா 14:4ல் சொல்லப்பட்டபடி, "அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகாபெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்". 5-வது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி "என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள்".

இந்தப் பகிரங்க வருகையைக் குறித்து சங்கீதம் 96:13ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்". இந்த வசனம் அவருடைய வருகையைத் தொடர்ந்து அவர் இந்த பூமியில் ஸ்தாபிக்கவிருக்கும் ஆயிரவருட அரசாட்சியை நினைவு-படுத்துகிறது. ஏசாயா 11:4 சொல்கிறபடி, "நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்". நாம் தியானிக்கும் வசனத்திலும், "கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினால் அழித்து" என்று சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 19:15லும் "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவரு-டைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது".

அவருடைய இந்த இரண்டாவது வருகையைக் குறித்து யோவான் சொல்கிறார், "பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்ட-வர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்" (வெளி 19:11). "இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்தி-ருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான

மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்-மேல் ஏறி,அவருக்குப் பின் சென்றார்கள்" (வெளி *19:13,14*). மணவாட்டியாயிருந்த சபை ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்றவர்களாக அவருடன் வந்தாலும் அவர்கள் யுத்தம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. ஏனென்றால் சர்வ வல்லமை நிறைந்த தேவனுக்கு உதவியாக மணவாட்டி எதையும் செய்யவேண்டிய அவசியமில்லை.

இரண்டாவதாக அவருடைய வருகையின் பிரசன்னம் எதிரிகள் நிர்மூலமாவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டி-ருக்கிறது. இந்த அர்மகெதோன் யுத்தம் நாள்கணக்கில், மணிக்-கணக்கில் நடக்கும் ஒரு காரியம் அல்ல. இமைப்பொழுதில் நடந்துமுடியும். சில தொலைக்காட்சி ஊழியக்காரர்கள் அறிவிப்பதுபோல சபையாராகிய நாம் யுத்த வீரர்களை ஆயத்தம்பண்ண வேண்டும் என்கிற அவசியமில்லை. அவரு-டைய வருகை ஒன்றே சத்துருவை அழிக்கப் போதுமானதாக இருக்கிறது.

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானு-டைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையா-ளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், (2:9)

"சாத்தானின் சக்தியாலேயே பாவமனிதன் வருவான். அவனுக்குப் பெரும் சக்தி இருக்கும். அதனால் போலி அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வான்" (பரிசுத்த பைபிள்). கிறிஸ்துவின் வருகையைக் குறித்து (இரகசிய வருகை, பகிரங்க வருகை) பேசிவந்த பவுல் இந்த வசனத்தில் அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பேசுகிறார்.

இவற்றின் மூலமாக தேவனுடைய மகிமையை மட்டுப்-படுத்தி, தன்னுடைய மகிமையை நிலைநிறுத்த அந்திக்கிறிஸ்து-வின் பின்னணியில் செயல்படும் சாத்தானாகிய லூசிபர் முயற்சி

செய்துகொண்டிருப்பான். எகிப்து தேசத்தில் ஆரோன் பார்வோனுக்கு முன்பாக தன் கோலைப் போட்டபோது சர்ப்பமானதுபோல, எகிப்தின் சூனியக்காரரும் மந்திரவாதிகளும் அற்புதத்தை நடப்பிக்கிறார்கள். யாத்திராகமம் *7:12* சொல்கிறது: "அவர்கள் ஒவ்வொருவனாகத் தன்தன் கோலைப் போட்டபோது, அவைகள் சர்ப்பங்களாயின". இவ்வாறு கடைசிநாட்களில் நடக்கும் என்பதை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வாறு எச்சரித்திருக்கிறார்: "கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" *(மத் 24:24)*.

அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்து இந்த பூமியில் ஏழு ஆண்டுகள் கிரியை நடத்துவான் என்றாலும் அவனிடமிருந்து வல்லமை, அடையாளங்கள், பொய்யான அற்புதங்கள், வஞ்சனை வெளிப்படுவதற்குக் காரணம் அவனுடைய பின்னணியில் செயல்படும் சாத்தான் என்பது வசனத்தின் துவக்கத்திலேயே அறிவிக்கப்படுகிறது. அது எல்லா வேளைகளிலும் சாத்தானுடைய செயலின்படி இருக்கும். அதில் காணப்படும் காரியங்கள்,

1. வல்லமை(power, dunamis)
2. அடையாளம் (signs, semeia)
3. பொய்யான அற்புதம் (wonders, terata)
4. அநீதியால் உண்டாகும் வஞ்சகம்
   (deception of unrighteousness) (வசனம் 10)

இந்த அக்கிரமக்காரனுடைய செயலாற்றலை அப்போஸ்தலனாகிய பவுல் எந்த விதத்திலும் குறைத்துப் பேசவில்லை என்பதைக் கவனியுங்கள். அதே நேரத்தில் கிறிஸ்துவின் மகத்துவத்தையும் பவுல் நன்றாக அறிந்திருந்தார். சாத்தானுடைய செயல்பாடுகள் பரலோகத்திலேயே துவங்கிவிட்டன என்பதை ஏசாயா *14:12-17*, எசேக்கியேல் *28:12-18*ல் பார்த்தோம்.

அதைத் தொடர்ந்து ஏதேன் தோட்டத்தில் அவனுடைய செயல்பாடுகள் துவங்கினதை ஆதியாகமம் 3:1-6ல் வாசிக்கி-றோம். கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அவனுடைய செயல்பாடுகள் யூதாஸ் மூலமாக வெளிப்பட்ட-தைக் காணமுடியும். "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரி-யோத்து அவரைக் (கிறிஸ்துவை) காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு" (யோவான் 13:2) என்று வாசிக்கிறோம். லூக்கா 22:3ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்-தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்". வேதத்தில் பல மனிதர்களை சாத்தான் வஞ்சித்து செயல்-பட்டதை நாம் பார்க்கிறோம் என்றாலும் சாத்தான் புகுந்ததாகச் சொல்லப்படும் ஒரே மனிதன் யூதாஸ்தான்.

எனவே இந்த யூதாஸ்தான் உபத்திரவகாலத்தின் துவக்கத்-தில் சாத்தானுடைய தூதனாக, அந்திக்கிறிஸ்துவாக (கள்ளத்-திருத்துவத்தின் இரண்டாவது நபராக) சாத்தானால் எழுப்பப்-படுவான் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் எருசலேம் மேல்வீட்டறையில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்தபோது யூதாஸைக்குறித்து பேதுரு இவ்வாறு சொல்கிறார்: "அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்குபெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்து-போயிற்று" (அப் 1:17,18). **அவன் மரித்துப்போனான் என்று சொல்லாமல் "யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப்" (வ.24) போனதாகப்** பேதுரு குறிப்பிடுகிறார். அவனுக்குள் பிசாசு புகுந்தபடியால் பாதாளம் என்கிற அவனுக்குரிய இடத்தில் இருந்து மீண்டும் இந்த பூமியில் வெளிப்படக் காத்திருக்கிறான்.

சாத்தான் புகுந்ததாகக் குறிப்பிடப்படும் யூதாஸ் கடைசி நாட்களில் உபத்திரவகாலத்தின் முன்பகுதியில் (முதல் 3 ½

ஆண்டுகள்) அந்திக்கிறிஸ்துவாக செயல்படுவான் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். "பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம்" (வெளி 11:7) என்று அவன் குறிப்பிடப்படுவதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 17:8ல் யோவான் சொல்கிறார்: "நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், (கிறிஸ்துவின் நாட்களில்), இராமற்போனதும், (வயிறு-வெடித்ததின் விளைவாக), இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் (கள்ளத்திருத்துவத்தின் இரண்டாவது நபர்) பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

சாத்தானுடைய செயலின்படி அந்திக்கிறிஸ்துவின் செயல்பாட்டில் வல்லமை, அடையாளங்கள், பொய்யான அற்புதங்கள் திரளாகக் காணப்படும் என்பதை நாம் இந்த வசனத்திலிருந்து திட்டவட்டமாக அறிந்துகொள்கிறோம். வஞ்சிக்கிற ஆவிகள், பொய்யின் ஆவிகள், ஒளியின் தூதனுடைய வேஷம் தரித்த பிசாசின் ஆவிகள் வல்லமையோடு இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கள்ள உபதேசங்கள், வஞ்சனை, போலியான அற்புதங்கள், ஆன்மீக அடிமைத்-தனங்கள் ஆகியவை இந்தக் கடைசி நாட்களில் பல ஊழியங்களில் இருந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறுக்கமுடியாது. அதைத் தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்பதை பவுல் அடுத்த மூன்று வசனங்களில் வெளிப்படையாக அறிவிக்கிறார்.

கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்-சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்-கும். (2:10)

கடைசி நாட்களில் வெளிப்படும் அந்திக்கிறிஸ்துவின் வருகையைக் குறித்துப் பவுல் பேசிக்கொண்டிருக்கிறார். அது கெட்டுப்போகிறவர்களுக்குள் அநீதியினால் உண்டாகும் சகல வஞ்சகத்தோடு இருக்கும் என்கிறார். **கெட்டுப்போகிறவர்கள் என்று அழைக்கப்படும் ஒரு பெரிய கூட்டத்தார் இந்த உலகில் இருக்கிறார்கள்.** 1கொரிந்தியர் 1:18ல் பவுல் சொல்கிறார்: "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது". "எங்கள் சுவிசேஷம் மறைபொருளா-யிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளா-யிருக்கும்" *(2கொரி 4:3)*. அவர்கள் இவ்வாறு கெட்டுப்போகி-றார்கள் என்றால் அதற்குக் காரணம் தேவன் அல்ல, அவர்கள்-தான் காரணம். இரட்சிப்பு, மறுபடியும் பிறத்தல், அபிஷேகம், ஆவியானவரால் நடத்தப்படும் அனுபவம் முதலிய ஆவிக்குரிய அடித்தள உபதேசங்களை அவர்கள் அறிந்துகொள்வதில்லை. **அவர்களுடைய கவனம் எல்லாம் ஆசீர்வாதம், அற்புதம், தீர்க்கதரிசனம், புதிய வெளிப்பாடுகள் ஆகியவற்றின்மேல் மட்டுமே இருக்கிறது.** அவர்கள் கெட்டுப்போவதைத் தடை-செய்யும் சுவிசேஷம் அவர்கள் காதுகேட்க அறிவிக்கப்பட்டும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

அந்திக்கிறிஸ்துவின் வருகையின் நோக்கம் மனித இனத்தை வஞ்சிப்பதுதான். அதற்குத் தேவையான சகல ஆயத்-தத்தோடும் அவன் வருவான். அந்த முயற்சியில் மிகப் பெரிய வெற்றியைக் காண்பான் என்பதில் சந்தேகமே இல்லை. அதை பவுல் ஏற்கெனவே அறிந்திருந்தார் என்பதினால் 1தீமோத்தேயு 4:1ல் சொல்கிறார்: "பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் **வஞ்சிக்கிற ஆவிகளுக்-கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்**". அவர்கள் "தேவ-பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிற-வர்களாயும் இருப்பார்கள்" *(2தீமோ 3:5)*. வஞ்சிக்கிற ஆவி பிரபலமான ஊழியக்காரர்கள் மூலமும், தங்களை இரட்சிக்கப்-பட்டவர்களாகக் கருதும் விசுவாசிகள் மூலமும் அற்புதங்களை-யும், அடையாளங்களையும் நடப்பிக்கும் காலங்களில் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அந்திக்கிறிஸ்து இந்த பூமியில் வெளிப்படும் காரியம் 'அக்கிரமக்காரனுடைய வருகை' என்று முந்தின 9-வது வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தோம். அதற்கு முந்தின 8வது வசனத்தில் கிறிஸ்துவின் வருகையின் பிரசன்னம் குறிப்பிடப்படுகிறது. 2தெசலோனிக்கேயர் 1:8ல் கர்த்தர் வானத்திலிருந்து **வெளிப்படுவதைக் குறித்துச்** *சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தோம். 2தெசலோனிக்கேயர் 2:3,6,8ல் கேட்டின் மகனாகிய பாவமனுஷன்* **வெளிப்படும்** *காரியம் சொல்லப்பட்டிருக்கிறது.*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவர் மூலமாக பலத்த செய்கைகள், அற்புதங்கள், அடையாளங்கள் (அப் 2:22) வெளிப்பட்டதுபோல பவுல் ஊழியம் செய்தபோதும் அற்புத அடையாளங்களை கிறிஸ்து நடப்பித்தார் (ரோமர் 15:18,19). அந்திக்கிறிஸ்துவும் போலியான மாய்மாலமான அற்புதங்களையும் வஞ்சனையான முறையில் நடப்பிப்பான். பொய்யின் ஆவியினாலோ, சுய ஆவியினாலோ, வஞ்சிக்கும் ஆவியினாலோ ஏவப்பட்ட மனிதர்கள் தேவனுடைய பெயரில் மாய்மாலமான உபதேசங்களையும் தவறான திட்டங்களையும் தங்களுடைய பொருளாசையினிமித்தம் அறிவிக்கும்போது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அவற்றை நம்பி ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள்.

திரளான கூட்டம் அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வஞ்சிக்கப்படுவார்கள் என்பதையே பவுல் "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" என்று குறிப்பிடுகிறார். எகிப்து தேசத்தில் பார்வோனுடைய சாஸ்திரிகளும் மந்திரவாதிகளும் சூனியக்காரரும் தங்களுடைய மந்திர வித்தையினால் தங்களுடைய கோல்களை சர்ப்பங்களாக மாற்றிய மந்திரவித்தையை நாம் அறிவோம் (யாத் 7:11). இன்று போலியான, கபடமான ஊழியக்காரர்கள் பார்வோனின் சாஸ்திரிகளைப் போல வஞ்சனையான முறையில் செயல்பட்டு திரள்கூட்டமான ஜனங்களை இடறலடையச் செய்து வருகிறார்கள்.

உண்மையான தேவஊழியன் யார் என்பதை அவனிடமிருந்து வெளிப்படும் ஆவிக்குரிய கனிகளில் இருந்து மட்டுமே அறிந்துகொள்ளலாம். *அதனால்தான் தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து எச்சரிக்கிறார்: "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது" (மத் 7:15-18).*

இவ்வாறு அந்திக்கிறிஸ்துவின் வருகை சகலவிதமான வஞ்சனையோடும் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார். அக்கிரமக்காரனாகிய அந்திக்கிறிஸ்துவைப் பற்றி 6-வது வசனம் துவங்கி சொல்லிவந்த பவுல் இந்த அக்கிரமக்காரனைப் பின்பற்றுகிறவர்கள் யார், எதினிமித்தம் அவர்கள் வஞ்சனைக்குள்ளாகிறார்கள் என்பதை அடுத்த வசனம் வரை கூறுகிறார். அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்றால் அதற்கு மூன்று காரணங்கள் இங்கே பட்டியலிடப்படுகிறது.

1. சத்தியத்தை அவர்கள் அங்கிகரிக்கவில்லை

2. சத்தியத்தை அவர்கள் விசுவாசிக்கவில்லை (வசனம் 11)

3. அநீதியில் அவர்கள் பிரியப்படுகிறார்கள் (வசனம் 11)

சத்தியத்தை அறிந்து, அதின்மேல் அன்பு செலுத்தி, அதை அங்கிகரிப்பதில்தான் மனிதனுடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. *பிலாத்துவிடம் இயேசு சொல்கிறார்: "சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்,*

இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" (யோவான் 18:37). "சத்தியமாவது என்ன" (வ.38)என்ற பிலாத்துவின் கேள்விக்கு இயேசு எந்த பதிலும் சொல்லவில்லை. தன் எதிரில் நின்று கொண்டிருக்கும் சத்தியமாகிய இயேசு கிறிஸ்துவை கண்டுகொள்ள முடியாத பிலாத்துவுக்கு சத்தியத்தைக் குறித்து விளக்கம் தர இயேசு விரும்பவில்லை. அவர் சொல்லியிருக்கிறார்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6).

இதைக் குறித்துத்தான் எபேசியர் 4:21ல் பவுல் சொல்கிறார்: "இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே". இந்த போதனையை ஏற்றுக்கொள்ளாமல், அதை அங்கிகரிக்காமல்போன இந்த மனிதர்கள் தாங்கள் மிக எளிதாகப் பெற்றுக்கொண்டிருக்கவேண்டிய இரட்சிப்பை இழந்துபோகிறார்கள். ஏனென்றால் இவர்கள் மனப்பூர்வமாக சத்தியத்தைப் புறக்கணித்தவர்களாகிறார்கள். இது அவர்களுடைய அறியாமையினால் நடந்த ஒரு காரியம் அல்ல, அல்லது இயலாமையினால் நடந்த ஒரு காரியம் அல்ல, அல்லது தேவன் அவர்களை வேண்டுமென்றே புறக்கணித்தார் என்பதினால் நடந்த ஒரு காரியமும் அல்ல. 1தீமோத்தேயு 2:4ல் சொல்கிறபடி: "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்".

தேவன் அனுப்பும் கொடிய வஞ்சகம் (2:11-12)

ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு (2:11)

முந்தின வசனத்தின் முடிவில் துன்மார்க்கர் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கிகரிக்காமல் போனார்கள் என்று

பார்த்தோம். அதன் விளைவாக அக்கிரமக்காரனுடைய வருகை சகலவித வஞ்சத்தோடு இருக்கும். தொடர்ச்சியாக என்ன காரி-யங்கள் நடக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

1. அவர்கள் சத்தியத்தை விசுவாசியாமல் போகிறார்கள் (வ.11)
2. அவர்கள் அநீதியில் பிரியப்படுகிறவர்களாக தங்களை ஆக்கினைக்குத் தகுதிப்படுத்திக்கொள்கிறார்கள் (வ.11)
3. அவர்கள் தேவனால் கடினப்படுத்தப்பட்டு பொய்யை விசுவாசிக்கிறவர்களாகிறார்கள் (வ.12)
4. தேவனே அத்தகைய கொடிய வஞ்சகத்தை அவர்களுக்கு அனுப்புகிறார் (வ.12)
5. இதன் விளைவாக முடிவில் அவர்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்படுகிறார்கள் (வ.11)

பரிசுத்த பைபிள் சொல்கிறது: "அவர்கள் உண்மையை நேசிக்க மறுத்தார்கள். எனவே **அவர்கள் பொய்யை நம்பத்-தக்கதாய் போலி நம்பிக்கை என்னும் ஆற்றலை அவர்க-ளுக்குள் தேவன் அனுப்புகிறார்**". அதின் விளைவாகவே மேலே சொல்லப்பட்ட ஐந்து காரியங்களும் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கின்றன.

சத்தியத்தை விசுவாசியாமல் போவது அவர்கள் செய்யும் முதல் தவறாகும். அவர்களுடைய ஆவிக்குரிய பின்மாற்றம் இங்குதான் துவங்குகிறது. அவர்கள் சத்தியத்தை நேசிக்கத் தவறியதின் விளைவாக அவர்களால் சத்தியத்தை விசுவாசிக்க முடியாமல் போகிறது. சத்தியத்தின்மேல் அவர்கள் கொண்டி-ருந்த நம்பிக்கை முற்றிலுமாக இல்லாமல் போகிறது.

கிறிஸ்து சொல்கிறார்: "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிற-தில்லை" (யோவான் 8:45). அதற்குக் காரணம் என்ன என்ப-

தையும் கிறிஸ்து வெளிப்படையாக அறிவிக்கிறார்: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவு-மாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" (யோவான் 8:44).

சாத்தான் சொல்லுகிற பொய்யின்மேல் பிரியப்படுகி-றவர்கள் யாராயிருந்தாலும் சரி அவர்கள் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பது தேவநியதியாகும். ஏனென்றால் சத்தியபரராகிய தேவனை அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தவறி-விட்டார்கள். அதோடு நிறுத்திக்கொள்ளாமல் அவர்கள் அநீதி-யில் பிரியப்படுகிறவர்களாக மாறிவிட்டார்கள்.

சத்தியத்தை அறிந்தும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிற-வர்களின் முடிவு இப்படிப்பட்டதாகத்தான் இருக்கும். அவர்க-ளுடைய பாவம் அவர்களுடைய கண்களை மறைத்துப்போகச் செய்கிறது. தேவகுமாரனை மறுதலிக்கும் அளவுக்கு அவர்களுடைய புத்தி பேதலித்துப் போகிறது. எபிரெயர் 10:29 சொல்கிறபடி: "தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயி-ருப்பான்".

ரோமர் 1:24 ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்". அது மட்டுமல்ல, "தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்-களுக்கு ஒப்புக்கொடுத்தார்" (வசனம் 26). அது மட்டுமல்ல, "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்க-ளுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்-படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்-

தார்" *(வ.28)*. **இவ்விதமாக ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு தேவனால் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களின் முடிவு நித்திய நரகமே. ஒருவராலும் அவர்களைக் காப்பாற்ற-முடியாது.**

அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (2:12)

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" *(1யோவான் 4:8,16)* என்பது உண்மைதான். மனிதன் அக்கினிக்கடலாகிய நரகத்தில் தள்ளப்பட்டு நித்திய நித்தியமாக வாதிக்கப்படுவதில் அவர் பிரியமடைவதில்லை. ஆனாலும் ஆண்டவராகிய இயேசு-கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், அவரை மறுதலிக்கும் மனிதர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதை வேதத்தில் திட்டவட்டமாக எச்சரித்திருக்கிறார். வேதம் முழுவதிலும் அந்த எச்சரிக்கை காணப்படுகிறது.

அவைகளுக்குப் பின்னும் மெய்தேவனை ஏற்றுக்கொள்ள மறுத்து, சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்-படுகிறவர்களை தேவனே புறக்கணித்து, அவர்கள் மனந்திரும்பி தன்னிடம் வரமுடியாதபடிக்கு அவர்களுக்கு கிரியை நடத்த ஒரு கொடிய வஞ்சகத்தை அனுப்புவதாக இந்த வசனம் அறிவிக்-கிறது. எகிப்தின் ராஜா தன்னுடைய இருதயத்தை கடினப்-படுத்தியபோது *(யாத் 7:13; 8:15,32; 9:7)* என்ன நடக்கிறது என்று யாத்திராகமம் *9:12ல்* சொல்லப்பட்டிருக்கிறது: "கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்". இஸ்ர-வேலின் துன்மார்க்கமான ராஜாவாகிய ஆகாபை சீரியரின் கையில் ஒப்புக்கொடுத்து அவனைக் கொலைசெய்வதற்கு பொய்யின் ஆவியை அனுப்பினார் என்று 2 நாளாகமம் *18:21,22ல்* வாசிக்கிறோமல்லவா?

பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக தேவன் ஒரு வஞ்ச-கத்தை அனுப்புவார் என்று பவுல் அறிவிக்கிறார். "தேவனுடைய

சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள்" என்று ரோமர் *1:25*ல் வாசிக்கிறோம். அந்தப் பொய்யை அவர்கள் விசுவாசிக்க ஆரம்பிக்கிறார்கள். முந்தின வசனம் சொல்கிறபடி "தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" *(வ.24)*. அவர்கள் விசுவாசிக்கிற மிகப் பெரிய பொய் என்ன தெரியுமா? **அந்திக்கிறிஸ்துவாக வெளிப்படும் அக்கிரமக்காரனே மெய்தேவன் என்பதுதான் சாத்தானுடைய மிகப்பெரிய பொய்யாக இருக்கமுடியும்.**

கிறிஸ்து சொல்கிறபடி: "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் *(அந்திக்கிறிஸ்து)* தன் சுயநாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" *(யோவா 5:43)*. தேவனே ஒரு துன்மார்க்கமான மனிதனுடைய இருதயத்தைக் கடினப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளலாம். "ஒரு தீர்க்கதரிசி எத்தப்பட்டு ஒரு விசேஷத்தைச் சொன்னானாகில், அப்படிக்கொத்த தீர்க்கதரிசியைக் கர்த்தராகிய நானே எத்தப்படப் பண்ணினேன்" *(எசே 14:9)* என்கிறார் தேவன்.

முதலாவதாக மனிதர்கள் தங்களுக்கு சுவிசேஷமாகிய நற்செய்தி அறிவிக்கப்படும்போது அவர்களாகவே அதைப் புறக்கணிக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அதற்குப் பின் அவர்களால் மெய் சுவிசேஷம் என்ன என்பதைக் கண்டுகொள்ள முடியாமல் போகிறது. ஏனென்றால், ரோமர் *1:24*ல் நாம் பார்த்தபடி "தேவன் அவர்களை விட்டு விலகி, பாவ வழியிலேயே அவர்கள் தொடர்ந்து செல்ல விட்டுவிட்டார். அதனால் மக்கள் ஒவ்வொருவரும் தம் சரீரங்களை அவமானப்படுத்தி முறையற்ற வாழ்வில் தம்மைக் கெடுத்தனர்" *(பரிசுத்த பைபிள்)*.

இந்தக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார். இந்தக் கடைசி நாட்களில் அதுதான் உலகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அசரியா மூலமாக வேதனையோடு சொல்கிறார், "**இஸ்ரவேலிலே**

அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை" *(2 நாளா 15:3)*. இந்தக் கடைசி நாட்களில் இத்தகைய பரிதாபத்துக்குரிய நிலைதான் உருவாகிக்கொண்டிருக்கிறது. தேசமெங்கும் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி தவறான உபதேசங்களை பிரபலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தேவனே இந்தக் காரியத்தை அனுமதிக்கிறார். தேவன் மோசே மூலமாக ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார்: *"அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபா 13:3)*.

அந்தச் சோதனையில் தோல்வி அடைவோமானால் அதற்கான தன்னுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தும் விதத்தில் கொடிய வஞ்சகத்தை அவர்களுக்கு தேவனே அனுப்புவார். தங்களுடைய தவறுகளை அறிந்துகொள்ளக்கூடாதபடிக்கு அவர்களுடைய கண்கள் குருடாக்கப்படும். தங்களுடைய வீழ்ச்சி எங்கே துவங்கியது என்பதை அவர்களால் அறிந்துகொள்ளமுடியாமல் போய்விடும். தேவன் தன்னை முற்றிலுமாக மறைத்துக்கொள்வார்.

மனிதனுடைய வாழ்நாள் தேவனுடைய கரத்தில் இருக்கிறது. அவன் தன்னுடைய விருப்பங்களின்படியெல்லாம் நடந்து, தேவன் அதைக் குறித்து கரிசனை இல்லாதவராக, சிங்காசனத்தில் உட்கார்ந்துகொண்டு பார்த்துக்கொண்டே இருப்பார் என்று நினைப்பானேயாகில் தவறு அவனுடையது. பூமியில் மனிதன் நடப்பிக்கும் ஒவ்வொரு காரியத்தையும் அவர் அறிவார். அந்தக் காரியங்கள், செயல்பாடுகள் மூலமாக தேவன் தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றுவார். வானத்தையும், பூமியையும், அதில் உள்ள சகல சிருஷ்டிகளையும் தன்னுடைய வார்த்தையினாலே சிருஷ்டித்தவர், பூமியின் மண்ணில் இருந்து உருவாக்கிய மனிதனையும் அவனுடைய செயல்பாடுகளையும் நன்றாகவே அறிவார்.

தன்னுடைய விருப்பத்தின்படி மனிதனை நடத்தும் அதிகாரம் அவருக்கு உண்டு. மோசேயிடம் அவர் சொல்கிறார்: “எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன்” *(யாத் 33:19)*. இந்த வசனத்தின்படி கொடிய வஞ்சகத்தை தேவன் துன்மார்க்கர் மேல் அனுப்புகிறார் என்றால் அவருக்கு எதிராக அநீதியில் பிரியப்பட்டு, தேவ கோபாக்கினைக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்கிறவர்களை தேவன் நியாயந்தீர்க்கிறார் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. தங்களைத் திருத்திக்கொள்ள, மனந்திரும்ப, தேவனோடு ஒப்புரவாக மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்காத மனிதர்கள் நிச்சயமாகவே தண்டிக்கப்படுவார்கள். தேவ கோபாக்கினையைச் சந்திப்பார்கள்.

தேவனை ஸ்தோத்திரிக்கும் பவுல் (2:13-17)

கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (2:13)

நிருபத்தின் துவக்கத்திலேயே “நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்” *(1:3)* என்று அறிவித்ததைப் பார்த்தோம். “சபையாரின் **விசுவாசம்** மிகவும் பெருகுகிறபடியினாலும், சபையார் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற **அன்பு** அதிகரிக்கிற-

படியினாலும்" ஸ்தோத்திரிப்பதாக பவுல் அந்த வசனத்தில் அறிவித்தார். இந்த வசனத்தில் பவுல் தேவனை ஸ்தோத்திரிப்பதற்கு வேறு சில காரணங்களை அறிவிக்கிறார்.

1. சபையார் ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுவதினால்
2. சபையார் சத்தியத்தை விசுவாசிக்கிறபடியினால்
3. இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் அவர்களை தேவன் தெரிந்துகொண்டபடியினால்

முந்தின வேதபகுதியில், கேட்டின் மகனாகிய பாவ மனிதனின் வருகையைக் குறித்தும், எருசலேம் தேவாலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து தேவனாகக் காண்பித்து பல மனிதர்களை வஞ்சிப்பான் என்றும், அதன் விளைவாக தேவன் அனுப்பும் கொடிய வஞ்சகத்தினால் திரள் கூட்டமான ஜனங்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவார்கள் என்பதை பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

ஆனாலும் சாத்தானுடைய வஞ்சனையான கிரியைகளின் விளைவாக தெசலோனிக்கேயா சபையார் எவ்விதத்திலும் பாதிப்படையப்போவதில்லை என்ற சத்தியம் இங்கே அறிவிக்கப்படுகிறது. ஏனென்றால் ஆதிமுதல் தேவன் அவர்களை இரட்சிப்படைவதற்கென்று தெரிந்துகொண்டிருக்கிறார். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" (யோவான் 15:16) என்பது அவருடைய திட்டவட்டமான அறிவிப்பு.

ஆதிமுதல் from the beginning, ap archies என்ற வார்த்தை நம்முடைய இரட்சிப்பு நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு காரியம் என்பதை உறுதிப்படுத்துகிறது. அது, நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் சமீபத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு காரியம் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் பவுல் சொல்கிறார்: "உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும்,

மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானம்" *(1கொரி 2:7)*. 2தீமோத்தேயு *1:9*ல் பவுல் இதை இவ்விதமாக உறுதிப்படுத்துகிறார்: "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், **ஆதிகாலமுதல்** கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியேயும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்".

நம்முடைய இரட்சிப்பு நம்முடைய முயற்சியை, திறமையை, நற்கிரியைகளை ஆதாரமாகக் கொண்டதல்ல, அல்லது தேவன் அவ்வப்போது யோசித்து முடிவுசெய்யும் ஒரு காரியமும் அல்ல. இரட்சிப்பு அவருடைய புதிய கண்டுபிடிப்பு அல்ல. **தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எவரையும் இரட்சிப்படையாமல் செய்வதற்கு சாத்தானால் ஒருபோதும் முடியாது.** நம்முடைய இரட்சிப்பு உலகத்தோற்றத்துக்கு முன்பாகவே தேவனால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு காரியம். எபேசியர் *2:5-7* சொல்கிறபடி, "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே உட்காரவும் செய்தார்".

அவர்கள் ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுகிறார்கள், சத்தியத்தை விசுவாசிக்கிறார்கள், இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தெரிந்துகொள்ளப்பட்டார்கள் என்பதினால் கர்த்தருக்குப் பிரியமானவர்களாகிறார்கள். கர்த்தர் என்ற வார்த்தை பொதுவாக ஆண்டவராகிய இயேசுவைக் குறிப்பிடுவதாக இருக்கிறது.

நாமும் அவரை நேசிக்கிறோம் என்பது உண்மைதான். ஆனால் *1*யோவான் *4:19* சொல்கிறபடி: "**அவர் முந்தி**

நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்". *"சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை" (உபா 7:7).* தெசலோனிக்கேயா சபையார் எந்த விதத்திலும் திரட்சியான ஜனம் என்று கருதப்படமுடியாது. பவுலின் ஊழியம் அங்கே மிகவும் குறைவான நாட்களே நிறைவேறியதால் மிகவும் குறைவான நபர்களே அங்கே இரட்சிக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் அடுத்த வசனத்தில் பவுல் சொல்கிறபடி: ***"எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2தெச 2:14).***

ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது பரிசுத்தப்படுதல் பரிசுத்த ஆவியானவரின் செயலாற்றல் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. *"எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14).*

பிதாவாகிய தேவனுக்கும் அதில் பங்கு உண்டு என்பதினால் பவுல் இவ்வாறு சொல்கிறார்: *"சமாதானத்தின் தேவன்தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1தெச 5:23). "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி 12:14)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. *"நான் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவி 21:15, 22:9,32)* என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

தெசலோனிக்கேயா சபையார் சத்தியத்தை விசுவாசித்தார்கள் என்பது இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது. *சத்தியத்தின்மேலுள்ள அன்பை அங்கிகரியாதவர்களும் சத்தியத்தை விசுவாசியாதவர்களும் (2தெச 2:10,11)* ஆக்கினைத் தீர்ப்பை அடைவார்கள் என்பதை பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

தேவன் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். எனவே நாம் நம்முடைய விருப்பப்படியெல்லாம் நடக்கலாம் என்போமானால் தேவனால் தெரிந்துகொள்ளப்படவில்லை என்றுதான் பொருள். சத்தியம் என்ற வார்த்தை ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கிறது என்று பார்த்தோம். சத்தியத்தை விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். பவுல் அறிவித்த சுவிசேஷம் தெசலோனிக்கேயா பட்டணத்தில் பலரை இரட்சிப்புக்கு வழிநடத்தியதினிமித்தம் பவுல் தான் தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்ல, தன்னுடைய நன்றியறிதலை அறிவிக்கக் கடனாளியாயிருப்பதாக அறிவிக்கிறார்.

"ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டார்" என்று பவுல் இந்த வசனத்தில் அறிவிப்பதைக் கவனியுங்கள். தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் நித்தியத்தில் நடந்த ஒரு காரியம். இவ்வாறு தேவனால் முன்னறியப்பட்டவர்கள் அதின் தொடர்ச்சியாக முன்குறிக்கப்பட்டவர்களாய் இரட்சிக்கப்படுகிறார்கள். அவர்களால் மட்டுமே ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படமுடியும். அவர்களால் மட்டுமே சத்தியத்தை விசுவாசிக்கமுடியும். பவுல் சொல்கிறபடி: "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ, அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" *(ரோமர் 8:29,30)*.

நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். (2:14)

எங்கள் சுவிசேஷம் என்று தான் அறிவிக்கும் சுவிசேஷத்தை பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். கலாத்தியர் *1:11,12*ல்

சொல்கிறார்: “என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்”. “எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும் வந்தது” *(1தெச 1:5)*.

“நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” *(கலா 1:8,9)*. பவுல் அறிவிக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷமே ஒரு மனிதனை இரட்சிப்புக்குள் வழிநடத்தி பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கத் தகுதிப்படுத்துகிறது. “கிறிஸ்துவின் சுவிஷேசத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது” *(ரோமர் 1:16)*.

பவுல் அறிவிக்கும் சுவிசேஷமே ஒருவனுக்கு இரட்சிப்பை வழங்குகிறது. *1கொரிந்தியர் 15:1-5*ல் சொல்கிறார், “நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். . . . நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் . . . . நான் அடைந்ததும், உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும்

தரிசனமானார்". இந்த இரட்சிப்பை மனிதர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே தன்னுடைய ஊழியக்காரர்களை தேவன் தெரிந்துகொண்டு அவர்களிடம் அனுப்புகிறார். பவுல் ரோம சபைக்கு தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் என்பதைப் பாருங்கள்: "இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்" *(ரோமர் 1:1).*

மரித்து உயிர்த்தெழுந்த இயேசு பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு தன்னுடைய அப்போஸ்தலர்களிடம் இவ்வாறு கட்டளையிடுகிறார்: "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" *(மாற்கு 16:15).*

மனித இரட்சிப்பு இரண்டு காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

1. சுவிசேஷத்தைக் கேட்பது, கீழ்ப்படிவது

2. அதன்பின் ஞானஸ்நானம் பெறுவது

இரட்சிக்கப்படும்படியான சுவிசேஷ அழைப்பை ஏற்றுக்கொள்வதினால் என்ன சம்பவிக்கிறது என்பதை பவுல் வசனத்தின் துவக்கத்திலேயே அறிவிக்கிறார் - கிறிஸ்துவின் மகிமையை அடையும்படியாக என்கிறார். இந்த வசனத்தை பரிசுத்த பைபிள் இவ்விதமாக அறிவிக்கிறது: "அந்த இரட்சிப்பை அடைய உங்களைத் தேவன்அழைத்தார். நாங்கள் பரப்புகிற நற்செய்தியைப் பயன்படுத்தி நீங்கள் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டு தேவன் உங்களை அழைத்தார்".

நாம் பெற்றுக்கொள்ளப்போவது சாதாரண மகிமை அல்ல, மனிதர்களின் மகிமை அல்ல, ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்துவின் மகிமை. ஏசாயா 60:2 சொல்கிறது: "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்". "சீனாய் மலையில் வெளிப்பட்ட கர்த்தருடைய மகிமை" *(யாத் 16:7,10, 24:16,17).* "எருசலேம் தேவாலயத்தில் வெளிப்பட்ட கர்த்தருடைய மகிமை" *(1இராஜா 3:11, 2 நாளா 5:14; 7:13)* இந்த மகிமையை தேவன் நம்மைத் தன்னுடைய சுவிசேஷத்தினால் இரட்சிப்புக்கு அழைக்கும்போது நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

சுவிசேஷமாகிய நற்செய்தியை பிறருக்கு அறிவிப்பது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவருடைய ஊழியக்காரர்கள் மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டாலும் அதின் பின்னணியில் தேவன் கிரியை நடத்திக்கொண்டு இருக்கிறார். ஏனென்றால் அறிவிக்கப்படுவது தேவனுடைய வார்த்தை. "அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" *(ஏசாயா 55:11)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள். (2:15)

"எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் (தேவன்) உங்களை அழைத்தார்" என்று முந்தின வசனத்தை முடித்த பவுல் அதினிமித்தம் சபையார் இரண்டு வித்தியாசமான காரியங்களைச் செய்யும்படியாகச் சொல்கிறார்.

1. பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைகொண்டிருங்கள் (stand firm)
2. உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள் (hold to)

இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனை எப்படியாவது விழத்-தட்டவேண்டும் என்று சாத்தான் பல சோதனைகளை, குழப்பங்களை, போராட்டங்களைக் கொண்டுவருவான் என்பதை பவுல் அறிந்திருந்தார். சொல்லப்போனால் அவன் ஒரு பெரிய புயலையே எதிர்கொள்ளவேண்டியதிருக்கும். ஒரு தொடர்போராட்டத்தையே அவன் சந்திக்கவேண்டியதிருக்கும். தேவனை அறிந்து ஏற்றுக்கொண்ட விசுவாசிகளுக்கு எதிராக நாள்கணக்கில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் சத்துரு ஒரு யுத்தத்தையே நடத்திக்கொண்டிருப்பான்.

எனவேதான் இரட்சிப்பில் நிலைகொண்டு, பவுலினால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட உபதேசங்களைக் கைக்கொள்-ளுங்கள் என்ற ஆலோசனை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. 1தெசலோனிக்கேயர் 2:13ல் பவுல் அறிவித்த காரியத்தை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். "நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்-கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்". தேவனுடைய வசனமே சுவிசேஷம்.

இந்த தேவ வசனங்கள், தெசலோனிக்கேய சபையாரை இரட்சிப்பில் நிலைகொள்ளச்செய்த வசனங்கள். வார்த்தை மூலமாகவும் (பிரசங்கங்கள், வேதபாடவகுப்புகள் மூலமாக), நிருபங்கள் (பவுல் வெளியூர்களில் ஊழியம் செய்துகொண்டி-ருந்தபோது அவர் எழுதிய கடிதங்கள் மூலமாக) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இவைகளை சபையார் நூற்றுக்கு நூறு கைக்கொள்ளவேண்டும். இன்று நம்முடைய கைகளில் 27 புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் இருக்கின்றன. புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட முதல் புத்தகம் 1தெசலோனிக்கேயர் என்பதை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். எனவே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களும் அதற்குப் பின்வரும் நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களும் அதில் சொல்லப்பட்ட சத்தியங்களை அறிந்து, ஏற்றுக்கொண்டால் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைகொண்டிருக்கமுடியும். பிலிப்பியர் 4:1ல் பவுல் சொல்கிறார்: "கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்". ரோமர்

*14:4*ல் பவுல் சொல்கிறார், "அவன் நிலைநிறுத்தப்படுவான். தேவன் அவனை நிலைநிறுத்தவல்லவராயிருக்கிறார்". நாம் நிலைத்திருக்கக்கூடிய பெலனை அவரே நமக்குத் தருகிறார்.

வேத பண்டிதராகிய கால்வின் இது குறித்து இவ்வாறு சொல்கிறார்: "பிதாவாகிய தேவன் தன்னுடைய கரத்தை நமக்கு நேராக நீட்டி இரட்சிப்படையும்படியாக நம்மை அழைக்கும்போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தை நமக்கு அறிவித்து தன்னைத்தானே சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கும்போது, நமக்கு நித்திய ஜீவன் அருளப்பட்டாயிற்று என்பதை உறுதிப்படுத்தும்படிக்கு ஆவியென்னும் அச்சாரத்தைக் (2கொரி *1:22; 5:5*) கொடுத்திருக்கிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது". வானமே இடிந்து கீழே விழுந்தாலும் நாம் பயப்படத்தேவையில்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருக்கிறார் (யோவான் *14:16,17*).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் (2:16)

இந்த அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களில் மீண்டுமாக பவுல் சபையாருக்காக ஜெபிக்கிறார். இந்த வசனத்திலும் கலாத்தியர் *1:1*, 2கொரிந்தியர் *13:14*லும் பிதாவாகிய தேவனுடைய பெயருக்கு முன்பாகவே கிறிஸ்துவின் பெயர் குறிப்பிடப்படுகிறது. 1தெசலோனிக்கேயர் *1:1*, மற்றும் *3:11*ல் பிதாவின் பெயரையும் குமாரனுடைய பெயரையும் இணைத்து பவுல் பேசுகிறார். நாம் தியானிக்கும் வசனத்தில் குமாரனுடைய பெயர் முதலிடம் வகிக்கிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்து இருபது ஆண்டுகளுக்குள் குமாரனை பிதாவுடன் இணைத்து பவுல் குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம்.

நம்மில் அன்பு கூர்ந்து, நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் பிதாவாகிய தேவன் நமக்குக் கிருபையாய்

கொடுத்திருப்பதாக பவுல் அறிவிக்கிறார். தேவனுடைய அன்பு எவ்வளவு மேன்மையானது என்றால் தன்னுடைய ஒரே பேரான குமாரனை கல்வாரி சிலுவையில் வேதனை நிறைந்த சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். குமாரனுடைய அன்பு எவ்வளவு மேன்மையானது என்றால் மனித இனத்தின் பாவங்களை எல்லாம் தன்மேல் ஏற்றுக்கொண்டு பாவமனிதன் பெறவேண்டிய மரணதண்டனையை தன்மேல் ஏற்றுக்-கொண்டார். அதின் விளைவாகவே நாம் நித்திய ஆறுதலையும், நம்பிக்கையையும் கிருபையாய் பெற்றுக்கொள்கிறோம். பவுல் ஜெபிக்கிறார்: "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்" *(2கொரி 1:3).*

"கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன்" *(சங் 7:1, 11:1, 25:2, 31:6, 55:23, 143:8)* என்று சங்கீதப் புத்தகத்தில் வாசிக்கிறோம். "கர்த்தரை நம்புகிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்" *(சங் 32:10)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" *(நீதி 16:20, எரே 17:7).*

நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் பிதாவாகிய தேவன் நமக்குக் கிருபையாய் கொடுத்திருப்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். மனித இனத்தை ஆசீர்வதிப்பதில் பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் இணைந்தே செயல்படுகிறார்கள். அதனால்தான் கிறிஸ்து சொல்கிறார்: "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" *(யோவான் 10:30).* யோவான் 12:44, 45ல் கிறிஸ்து சொல்கிறார்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான். என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்". பிலிப்புவிடம் இயேசு சொல்கிறார்: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" *(யோவான் 14:9).* என்னைக் காண்பவன் பிதாவைக் காண்பான் என்று இயேசு சொல்ல-வில்லை என்பதைக் கவனியுங்கள். ஏற்கெனவே, அவரைக் காணும் வேளையிலேயே கண்டுவிட்டான் என்கிறார்.

உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக. (2:17)

தெசலோனிக்கேயா சபையாரின் இருதயம் தேற்றப்படவேண்டும் என்பது பவுலின் ஜெபக்குறிப்புகளில் ஒன்றாக அமைகிறது. இருதயங்கள் தேற்றப்படுவதின் நோக்கம் என்ன என்பதை கொலோசெயர் 2:2ல் பவுல் இவ்வாறு அறிவிக்கிறார்: "அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாகவேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்".

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவான் 14:1) என்ற கிறிஸ்துவின் ஆலோசனையை அறியாத கிறிஸ்தவர்கள் உலகில் இருந்திருக்கமுடியாது. அந்தத் தலைப்பில் ஒரு புத்தகத்தையே நான் எழுத தேவன் உதவி செய்தார். இருதயம் என்ற வார்த்தை நம்முடைய மார்பில் இருந்துகொண்டு நிமிடத்துக்கு 72 முறை துடித்துக்கொண்டு நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் இரத்தத்தை அனுப்பிக்கொண்டிருக்கும் சரீர உறுப்பைக் குறிப்பிடுவதில்லை. ஒரு மனிதனுடைய உள்ளான ஆள்தத்துவத்தை இருதயம் என்று வேதம் குறிப்பிடுகிறது. அதனால் தான் கிறிஸ்து இயேசு "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத் 5:8) என்கிறார். "தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்திய பார்வோன்" (யாத் 7:13, 8:15, 9:34, 10:2) தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பை சந்திக்கவேண்டியதிருந்தது.

"தேவனுடைய வார்த்தையாகிய நல்வசனத்திலும், நற்கிரியையிலும் ஸ்திரப்படுத்துவாராக" என்ற ஜெபக்குறிப்புடன் இந்த அதிகாரம் முடிவடைகிறது. சபையார் இந்த வசனத்தில் தேர்ச்சிபெற்றால் மட்டும் போதாது, இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரிடத்திலிருந்தும் நற்கிரியைகள் வெளிப்படவேண்டும்.

அதிகாரம் – 3

சமாதானத்தின் கர்த்தர்தாமே
எப்பொழுதும் சகல விதத்திலும்
உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக.
கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக.

2 தெசலோனிக்கேயர் 3:16

பவுலின் ஜெபக்குறிப்பு (3:1-2)

கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும் (3:1)

கடைசியாக *(2கொரி 13:11, பிலிப் 4:8)* என்று இந்த அதிகாரம் துவங்குவது, அப்போஸ்தலனாகிய பவுல் இந்த நிருபத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிவுசெய்துவிட்டார் என்பதைக் காட்டுகிறது. முதல் இரண்டு அதிகாரங்களை எழுதிய பவுல் அவற்றை ஒருமுறை வாசித்துவிட்டு, அதில் விடப்பட்ட சில காரியங்களை இறுதியாக இந்த அதிகாரத்தில் அறிவிக்க விரும்புகிறார்.

முதலாவதாக பவுல் சபையார் ஊழியக்காரர்களுக்காக ஜெபிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். அதே சமயத்தில் தன்னுடைய ஜெபக்குறிப்பு என்ன என்பதையும் அறிவிக்கிறார். பவுலுடைய ஆத்தும பாரம் எப்படிப்பட்ட து என்பதை இந்த வசனம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

இரண்டு காரியங்களுக்காக சபையார் ஜெபிக்கவேண்டுமென்று பவுல் கேட்டுக்கொள்கிறார்.

1. கர்த்தருடைய வசனம் எல்லா இடங்களிலும் பரம்பி மகிமைப்படவேண்டும்

2. பவுல் மற்றும் உடன் ஊழியர்கள் பொல்லாத மனிதர்களிடமிருந்து விடுவிக்கப்படவேண்டும் *(வசனம் 2)*

தெசலோனிக்கேயாவில் பவுல் மூலமாக வெளிப்பட்ட கர்த்தருடைய வசனம் *(1தெச 1:8)* தொடர்ந்து, வேகமாகப் பரவவேண்டும் என்பது பவுலின் முதலாவது ஜெபக்குறிப்பு. “எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும்

உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை" (1தெச 2:3) என்று அறிவித்ததைப் பார்த்தோம். பவுல் அறிவிக்கும் தேவ வசனத்திலும் எந்தவிதமான சுயநலமும் இல்லை. எனவே அது தெசலோனிக்கேயாவில் பரம்பி, மகிமைப்பட்டது என்கிறார் பவுல்.

பவுல் அறிவித்த சுவிசேஷம் தெசலோனிக்கேயாவுடன் நின்றுவிடவில்லை. 1தெசலோனிக்கேயர் 1:8ல் பவுல் சொல்கிறபடி: "உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக் குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராத படிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று". பரம்புதல் என்றால் வேகமாக ஒரு இடத்தி-லிருந்து இன்னொரு இடத்துக்குப் புறப்பட்டுப் பரவுதல் என்று பொருள்.

அப்போஸ்தலர் நடபடிகள் 13:49ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று". சங்கீதம் 147:15ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார்; அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது". சபை மூலமாக கர்த்தருடைய வசனம் உலக முழுவதும் பரவிச் செல்லவேண்டும் என்பதுதான் பவுலின் வாஞ்சை.

*கர்த்தருடைய வசனம் பரம்பிச் சென்றது என்பது மட்டுமல்ல எல்லா இடங்களிலும் மகிமைப்பட்டது என்பதை பவுல் அறிவித்து, அதையும் ஒரு ஜெபக்குறிப்பாக சபையார் முன் சமர்ப்பிக்கிறார். **அறிவிக்கப்பட்ட வசனம் எப்போது மகிமைப்படும்? வசனத்தைக் கேட்பவர்கள் அதைத் தேவனு-டைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியும்போது.** தெசலோனிக்கேயாவில் இதுதான் நடந்தது என்பதினால்தான் உங்களிடம் மகிமைப்பட்டதுபோல் என்று பவுல் சுட்டிக்-காட்டுகிறார். சுமார் மூன்று மாதகாலம்தான் பவுல் தெசலோனிக்கேயா பட்டணத்தில் ஊழியம் செய்திருந்தார்*

என்றாலும் அதைக்குறித்து மிகவும் பெருமையோடு பேசுவதைக் கவனியுங்கள். "சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணியபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" என்று 1தெசலோனிக்கேயர் 2:4ல் எழுதியிருப்பதைப் பார்த்தோம்.

துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே. (3:2)

தெசலோனிக்கேயா சபையார் தங்களுக்காக (ஊழியக்காரர்களுக்காக) ஜெபிக்கவேண்டும் என்று பவுல் கேட்டுக்கொள்கிறார். துர்க்குணராகிய பொல்லாத மனிதர்கள் மூலமாக வெளிப்படும் ஆபத்துக்களிலிருந்து தாங்கள் தப்புவிக்கப்படவேண்டுமானால் சபையாரின் ஜெபஉதவி அவருக்குத் தேவைப்படுகிறது. ரோமாபுரி சபையாரிடமும் இத்தகைய வேண்டுகோளை பவுல் கொடுப்பதைப் பார்க்கிறோம்: "யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும், நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கும், நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர் 15:31,32).

2கொரிந்தியர் 1:11ல் சொல்கிறார், "அநேகர் மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள்".

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" *(கொலோ 4:2).*

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்து ஊழியம் செய்துகொண்டிருக்கும் வேளையில் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது வேத பண்டிதர்களின் முடிவு. தெசலோனிக்கேயா பட்டணத்து யூதர்கள் பவுலின் ஊழியத்துக்கு விரோதமாக எழும்பியதினிமித்தம் பவுலும் சீலாவும் பெரோயா பட்டணத்துக்கு தப்பி வருகிறார்கள் (அப் 17:10). தெசலோனிக்கேயரான யூதர்கள் அங்கும் வந்து பவுலுக்கு விரோதமாக ஜனங்களை கிளப்பிவிட்டதினிமித்தம் (அப் 17:13), சீலாவுடன் பவுல் அத்தேனே பட்டணம் வருகிறார் (அப் 17:16). அங்கேயும் எதிர்ப்பு வந்தபடியால் கொரிந்துபட்டணம் வந்து ஊழியம் செய்யும் வேளையில் 2தெசலோனிக்கேயர் நிருபம் எழுதுகிறார். கொரிந்து பட்டணத்திலும் யூத இனத்தைச் சேர்ந்த பொல்லாத மனிதர்கள் பவுலுக்கு விரோதமாய் எழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாக (அப் 18:12) கொண்டு போனார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் 20:23, 24ல் பவுல் சொல்கிறார்: "கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்".

1தெசலோனிக்கேயர் 5:25ல் பவுல்: "சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று நிருபத்தின் முடிவில் விண்ணப்பிப்பதைப் பார்த்தோம். புதிய ஏற்பாட்டு நாட்களில் தேவனால் மிகவும் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு ஊழியர் உண்டென்றால் அவர் பவுலாகத்தான்

இருக்கமுடியும். வேதத்தில் மிகச் சிறந்த ஞானவான், கல்விமான் என்று பவுலைத்தான் சொல்லமுடியும். அவருடைய பெற்றோர் செல்வந்தர்களாயிருந்தபடியால் பவுலை எருசலேமில் உள்ள கமாலியேல் என்ற பண்டிதரிடம் கல்வி கற்று, மார்க்க அனுஷ்-டானங்களில் பரிசேயப் பயிற்சியை பெற்றுக்கொண்டவர்.

ஆனாலும் தேவனுடைய ஒத்தாசை இன்றி தன்னால் எதையுமே செய்துகொள்ள முடியாது என்பதை அறிந்தவர். தெசலோனிக்கேயா சபையாரை தனக்காக வேண்டுதல் செய்யும்படியாகத் தன்னைத் தாழ்த்தி வேண்டிக்கொள்கிறார். பலமுறை தேவனிடமிருந்து தரிசனங்களையும், வெளிப்பாடு-களையும் ஆலோசனைகளையும் நேரடியாகப் பெற்றுக்கொண்ட அனுபவம் பவுலுக்கு இருந்தாலும் சபையாரின் ஜெபம் தனக்குத் தேவை என்பதை பவுல் உணர்ந்தவராய் அவர்களை ஜெபிக்கும்படியாக வேண்டிக்கொள்கிறார்.

"விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே" என்று சற்று வேதனையோடு பவுல் சொல்லுவதை உணரமுடிகிறது. விசுவாசம் இல்லாத நிலையில் அவிசுவாசம் மனிதர்களை ஆட்கொள்ள ஆரம்பிக்கிறது. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆப 2:4, ரோமர் 1:17, கலா 3:11, எபி 10:38) என்பது வேதம் அறிவிக்கும் மிக முக்கியமான சத்தியமாகும். "மனுஷன் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறான்" என்று ரோமர் 3:28, கலாத்தியர் 2:15ல் வாசிக்கிறோம். "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவான் 11:25,26) என்கிறார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

நாம் சுதந்தரிக்கும் நித்திய ஜீவன் நம்முடைய விசுவாசத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. யோவான் 3:16ல் கிறிஸ்து சொல்கிறார், "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு,

அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்". 18-வது வசனத்தில் சொல்கிறார், "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று".

மத்தேயு 21:22ல் கிறிஸ்து திட்டவட்டமாய் அறிவிக்கிறார்: "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்". விசுவாசத்தின் மேன்மையைக் குறித்து நூற்றுக்கணக்கான வசனங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. ஆனாலும் லூக்கா 18:8ல் ஆண்டவர் சொல்கிறார்: ***"மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ". விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் எல்லாரும் விசுவாசிகள் அல்ல என்பதை அறிந்துகொள்ளுங்கள்.*** *யோவான் 2:23-24ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை". அந்த விசுவாசம் கிறிஸ்துவின் அங்கிகாரத்தைப் பெறவில்லை.*

உண்மையுள்ள கர்த்தர் உங்களை நடத்துவாராக (3:3-5)

கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார். (3:3)

விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே என்று முந்தின வசனத்தின் கடைசியில் அறிவித்த பவுல் இந்த வசனத்தின்

துவக்கத்தில் கர்த்தரோ உண்மையுள்ளவர் என்று ஆரம்பிக்கிறார். "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1கொரி 1:9). 1கொரிந்தியர் 10:13ல் பவுல் சொல்கிறார்: "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்".

சங்கீதம் 100:5 சொல்கிறது: "அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது". "அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்" (சங் 146:6). "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1யோவா 1:9).

உண்மையுள்ளவராயிருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டு காரியங்களை தெசலோனிக்கேயர் சபைக்காக செய்வார் என்று பவுல் உறுதிகூறுகிறார்

1. *உங்களை ஸ்திரப்படுத்துவார்*
   Strengthen you / establish you

2. *தீமையினின்று விலக்கி காத்துக்கொள்ளுவார்*
   Guard you from the evil one.

உண்மையுள்ளவராகிய கர்த்தர் சபையாருக்குப் பல நன்மைகளைச் செய்வார் என்று பவுல் சொல்லவில்லை, அவர்களை ஸ்திரப்படுத்துவார் என்று **முதலாவதாகச்** *சொல்லுகிறார். சபையை விசாரிக்க பவுல் சபையாரைத் திடப்படுத்தும்படியாக தீமோத்தேயுவை அனுப்புவதாகச் சொல்கிறார். "இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி*

உங்களுக்குப் புத்தி சொல்லவும்" *(1தெச 3:2)* அனுப்புவதாகச் சொல்லுகிறார். 2தெசலோனிக்கேயர் 2:17ல் "உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக" என்று பவுல் எழுதியதை சற்றுமுன் தியானித்தோம். தேவன் விரும்பும் அளவு அன்பு, விசுவாசம் நம்மிடம் இல்லாதிருக்கலாம், ஆனாலும் கடுகளவு விசுவாசம் இருந்தாலும் அதையும் கனம் பண்ணி, ஸ்திரப்படுத்த தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

தீமையிலிருந்து விலக்கி சபையாரை தேவன் காத்துக்கொள்ளுவார் என்பது பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கும் **இரண்டாவது** காரியம். தன்னுடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்போது கடைசி ஜெபக்குறிப்பு இவ்வாறு அமைகிறது: "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" *(மத் 6:13)*. தீமை என்ற வார்த்தை தீமையைக் கொண்டு வரும் சாத்தானைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம் *(1தெச 2:18, 3:5, 2 தெச 2:9, எபே 6:16, மத் 6:13, 13:19, 38)*.

தீமையிலிருந்து விலக்குவதோடு தேவன் நிறுத்திக்கொள்ளுவதில்லை. அதற்குப்பின் நம்மைக் காத்துக்கொள்ளும் (guard) காரியத்தையும் செய்கிறார். யாரிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ளுவார்? தீமையை விசுவாசிகளிடம் கொண்டுவரும் சாத்தானிடமிருந்து என்று வேதபண்டிதர் கால்வின் விளக்கம் தருகிறார்.

ஒரு நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு ஏற்ற நேரத்தில் உணவு கொடுப்பதோடு தன்னுடைய பொறுப்புகளை முடித்துக்கொள்வதில்லை. கடைசிவரை நாம் பெற்றிருக்கும் இரட்சிப்பில் நிலைத்திருக்கும்படியாக நம்மைக் காத்துக்கொள்கிறார். அதனால்தான் தாவீது சங்கீதம் 23ல் சொல்கிறார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்".

மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம். (3:4)

நாம் முந்தின வசனத்தில் பார்த்தபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உண்மையுள்ளவர்தான். தன்னுடைய ஜனங்களை ஸ்திரப்படுத்தி தீமையிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்வார் என்பதும் உண்மைதான். அதினிமித்தம் சபையார் தங்களுடைய மனவிருப்பத்தின்படியெல்லாம் நடந்துகொள்ளலாம் என்று நினைத்துக்கொள்ளக் கூடாது என்பதை அடுத்த வசனத்திலேயே இவ்விதமாக அறிவிக்கிறார்: "நாங்கள் வழிகாட்டியபடியே நீங்கள் நடந்துகொள்கிறீர்கள் என்றும், இனிமேலும் நடந்துகொள்வீர்கள் என்றும் உங்களைக் குறித்து கர்த்தருக்குள் நம்பிக்கை வைத்திருக்கிறோம்" *(பரிசுத்த பைபிள்).*

திருச்சபைகளில் ஒழுக்கம் தேவை என்பதையும், ஒழுக்கமின்மை முற்றிலுமாக விலக்கப்படவேண்டும் என்பதையும் பவுல் இந்த வசனம் துவங்கி 15வது வசனம் வரையும் வலியுறுத்திப் பேசுகிறார். சபையில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் குறித்து ஐந்து காரியங்களை பவுல் படிப்படியாக அறிவிக்கிறதைக் கவனியுங்கள்.

1. சபையின் செயல்பாடுகள் திருப்தியாக இருப்பதாக பவுல் துவக்கத்தில் அறிவிக்கிறார் (வசனம் 4,5)

2. ஒழுங்கற்று நடக்கிறவர்கள் உடனடியாக சபையிலிருந்து அகற்றப்படவேண்டும் (வசனம் 6-9) என்கிறார்.

3. வேலை செய்ய மனதில்லாதவர்களுக்கு சபையார் ஆகாரம் கொடுத்து உதவிசெய்யக்கூடாது என்ற தன்னுடைய ஆலோசனையை சபைக்கு நினைவுபடுத்துகிறார் (வசனம் 10).

4. இப்படியாக ஒழுங்கற்றுத் திரியும் விசுவாசிகளை நேரடியாக பவுல் கடிந்துகொள்கிறார் (வசனம் 11-13)

5. தன்னுடைய ஆலோசனைகளையும், போதனைகளையும் ஏற்றுக்கொள்ளாதவர்களுடன் கலவாதிருக்கும்படியாகச் சொன்னாலும் சகோதரன் என்ற முறையில் அவர்களுக்குப் புத்திசொல்லும்படியாக சொல்கிறார் (வசனம் 14,15).

நாம் தியானிக்கும் 4-வது வசனத்தில் "நாங்கள் கட்டளை-யிடுகிறவைகள்" என்று பவுல் பேசுவது அப்போஸ்தலன் என்ற முறையில் பவுலின் அதிகாரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதேசமயம் பவுல் இந்த நிருபத்தை எழுதுகிற-வர்களாக சில்வானையும், தீமோத்தேயுவையும் இணைத்துக் கொள்வதினிமித்தம் நாங்கள் கட்டளையிடுகிறோம் என்று பேசுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். எதுவானாலும் பவுலின் நம்பிக்கை, அவர்கள் வழிகாட்டியபடி சபையார் நடந்து-கொள்கிறார்கள், இனி வரும் நாட்களிலும் நடந்துகொள்வார்கள் என்பதே. இது கர்த்தருக்குள் தான் கொண்டிருக்கும் நம்பிக்கை என்று பவுல் குறிப்பிடுவதையும் கவனியுங்கள்.

கலாத்தியர் 5:10லும் பவுல் சொல்கிறார்: "நான், கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்". அவருடைய நம்பிக்கை என்ன? "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் (கர்த்தரின் நாள்) நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்-கிறேன்" (பிலிப் 1:5,6).

பவுல் மூலமாக வெளிப்பட்ட தேவ ஆலோசனை-களுக்கும், கற்பனைகளுக்கும், கீழ்ப்படிந்து முடித்துவிட்டோம் என்ற சுயதிருப்தி சபையாரிடம் உண்டாகிவிடக்கூடாது என்று

பவுல் விரும்புகிறார். இனிமேலும்செய்வார்கள் என்று அவர்களைக் குறித்த நம்பிக்கை பவுலிடம் காணப்படுகிறது. அவருடைய நம்பிக்கை மனிதர்கள்மேல் வைக்கப்பட்ட ஒரு காரியம் அல்ல என்பதைக் கவனியுங்கள். கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம் என்கிறார்.

நம்முடைய நம்பிக்கை தேவன் ஒருவரையே ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும். "கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்" என்கிறார் சங்கீதக்காரன் (சங் *7:1; 11:1; 25:2; 31:6; 55:23; 143:8*). "கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" (நீதி *16:20*, எரே *17:7*). யோபுவின் நம்பிக்கை எப்படிப்பட்டது என்று பாருங்கள். அவர் சொல்கிறார்: "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு *13:15*).

கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. (3:5)

சபையாரின் இருதயம் யாருக்கு நேராய் வழிநடத்தப்படவேண்டும் என்று பவுல் பிரார்த்தனை செய்கிறார் என்பதைக் கவனியுங்கள்.

1. தேவனுடைய (பிதா) அன்புக்கு நேராய்

2. கிறிஸ்துவின் (குமாரன்) பொறுமைக்கு நேராய்

பவுலும், சக ஊழியர்களும் தெசலோனிக்கேயா சபையாரைக் குறித்து மிகுந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும் தேவனுடைய ஒத்தாசையின்றி அவரைப் பிரியப்படுத்தும் விதத்தில் அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய யாராலும் முடியாது என்பதையும் அறிந்திருந்தார்கள். எனவேதான், தேவனுடைய அன்புக்கும் குமாரனுடைய பொறுமைக்கும் நேராக அவர்கள் வழிநடத்தப்படவேண்டும் என்று ஜெபிக்கிறார்.

இந்த ஜெபம் வசனத்துக்கு முன்பாக சொல்லப்பட்ட காரியங்களுக்கும், வசனத்துக்கு அடுத்ததாகச் சொல்லப்படும் காரியங்களுக்கும் இடையே ஒரு தொடர்பை உண்டாக்குவதாக இருக்கிறது. சபைகளில் சில தவறுகள் இருக்கலாம், பவுல் விரும்பாத சில காரியங்கள் காணப்படலாம். ஆனாலும் பவுலின் விண்ணப்பம், தேவன் அவர்களுடைய இருதயங்களை தேவனு-டைய அன்புக்கும் கிறிஸ்துவினுடைய பொறுமைக்கும் நேராக நடத்தி காரியங்களை சரிசெய்துகொள்ள வேண்டும் என்பதுதான்.

தேவனைப் பற்றும் அன்பு என்ற வார்த்தை தேவன் மனித இனத்தின்மேல் கொண்டிருக்கும் அன்பைக் குறிப்பிடவில்லை. அவருடைய அன்பு யோவான் *3:16*ன்படி இருக்கிறது என்பதை ஏற்கெனவே இந்த விளக்கவுரையில் பார்த்திருக்கிறோம். இதன் விளைவாக பாவமனிதன் தேவன்மேல் அன்பு செலுத்த ஆரம்பிக்கிறான். அதன் விளைவாகவே அவனிடத்தில் கீழ்ப்படிதல் உருவாகிறது.

அடுத்ததாக கிறிஸ்துவின் பொறுமைக்கு நேராக தேவன் சபையாரின் இருதயங்களைத் திருப்பவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். கிறிஸ்துவின் வருகையின்போது, "நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" *(1தெச 3:13)*. "உங்கள் இருதயங்களைத்-தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக" *(2தெச 2:17)*. நம்முடைய இருதயங்கள் கிறிஸ்துவுக்கு நேராகத் திருப்பப்படும்போது உடனடியாக அங்கே கீழ்ப்படிதல் உருவாகிறது.

கிறிஸ்துவின் பொறுமை என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவன் பொறுமையுள்ளவர். ஏசாயா *48:9*ல் அவர் சொல்கிறார்: "என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்தி வைத்தேன்; உன்னைச் சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன்மேல் பொறுமையாயிருப்பேன்". ஆனால் அவருடைய

பொறுமைக்கு ஒரு எல்லை உண்டு. லூக்கா 9:41ல் அவர் தன்னுடைய சீஷர்களைப் பார்த்துக் கேட்கிறார்: "எதுவரைக்கும் நான் உங்களோடிருந்து, உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்?"

சபையார் தேவனைப் பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராக நடத்தப்படவேண்டும் என்பதே பவுலின் ஜெபக்குறிப்பு. இவ்வாறு நடத்தப்படும்போது ஏற்படக்கூடிய தடைகளை தேவன் அகற்றிப்போடவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார். இவ்வாறு வழிநடத்தப்பட-வேண்டுமானால் அந்தப் பாதையில் காணப்படும் தடைகள் நீக்கப்படவேண்டும். 1தெசலோனிக்கேயர் 3:11ல் இவ்வாறு வாசித்தோம்: "நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக".

கிறிஸ்துவின் பொறுமை என்ற வார்த்தை கிறிஸ்து இந்த பூமியில் வாசம் பண்ணின நாட்களில் அவரிடமிருந்து வெளிப்-பட்ட பொறுமை என சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். மரித்து உயிர்த்தெழுந்த பின் மூன்றாவது முறையாக தன்னை வெளிப்படுத்தியபோது மூன்று முறை மறுதலித்த பேதுருவைப் பார்த்து: "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயி-ருக்கிறாயா?" (யோவான் 21:15) என்று மூன்றுமுறை கேட்பது அவருடைய பொறுமையைத்தான் வெளிப்படுத்துகிறது.

சபையில் ஒழுக்கம் தேவை (3:6-15)

மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்-கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக-வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு-கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளை-யிடுகிறோம். (3:6)

இந்த வசனம் துவங்கி 15-வது வசனம் வரை சபையில் தங்களை இணைத்துக்கொண்டு வேலைசெய்யாமல் சோம்பே-றிகளாய் இருந்துகொண்டிருக்கும் விசுவாசிகளைக் குறித்து பவுல் பேசுகிறார். இப்படிப்பட்டவர்களை சபையில் ஏற்றுக்-கொள்ளக்கூடாது என்கிறார். அவர்களை விட்டு விலகவேண்-டும் என்றும் கட்டளையிடுகிறார். இயேசுவின் நாமத்தில் கட்டளையிடுகிறோம் என்று சொல்லும்போது தேவனுடைய ஊழியக்காரரர் என்ற முறையில், அவரிடமிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட அதிகாரத்தின் அடிப்படையில் பவுல் பேசுகிறார் என்பது தெளிவாகிறது.

தங்களுடைய போதனைகளின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிறவர்கள் தவறு செய்கிறார்கள் என்பது வெளிப்படையாக அறிவிக்கப்படுகிறது. 11-வது வசனத்தில் வெளிப்படையாகச் சொல்கிறார்: "உங்கள் கூட்டத்தில் உள்ள சிலர் உழைக்க மறுப்பதாகக் கேள்விப்படுகிறோம். அவர்கள் எதுவும் செய்வ┬ தில்லை. அவர்கள் ஏனைய மக்களின் வாழ்வில் குறுக்கிடு-பவர்களாக இருக்கிறார்கள்" (பரிசுத்த பைபிள்).

இப்படிப்பட்ட சபையாரிடம் பவுல் கண்டுபிடித்த குறைகள் என்ன என்பதைப் பட்டியலிட்டுப் பார்க்கலாம்.

1. ஒழுங்கற்றுத் திரிதல் (வசனம் 12)
2. கிறிஸ்துவின் வருகையின் நாள் சமீபித்துவிட்டது என்று பிரசாரம் பண்ணுவது (வசனம் 2)
3. வேலை செய்து சொந்த சாப்பாட்டை உண்பதற்குப் பதிலாக சபை தங்களை போஷிக்கவேண்டும் என எதிர்பார்ப்பது (வசனம் 12)
4. யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராக காலத்தையும் நேரத்தையும் வீணடிப்பது

இப்படிப்பட்ட மனிதர்களோடு சபையார் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்றும், அவர்களை விட்டு முற்றிலுமாக

விலகவேண்டும் என்றும் பவுல் கட்டளையிடுவதில் இருந்து இந்தக் காரியத்துக்கு பவுல் கொடுக்கும் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளலாம். 1தெசலோனிக்கேயர் 5:14ல் "ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" என்று ஆலோசனை கொடுத்த பவுல் இந்த வசனத்தில் சற்று கடினமாகவே பேசி, இப்படிப்பட்டவர்களை விட்டு விலகவேண்டும் என்று கர்த்தருடைய நாமத்திலே கட்டளையிடுவதைப் பார்க்கிறோம்.

கொரிந்து சபையாரில் ஒரு மனிதனில் "அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத விபசாரம்" (1கொரி 5:1) காணப்பட்டதை பவுல் அறிந்தபோது "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று தீர்ப்புசெய்கிறேன்" (1கொரி 5:5) என்று அறிவித்தார் என்று பார்க்கிறோம்.

ஆனால் இந்த வேதபகுதியில் குறிப்பிடப்படும் விசுவாசிகளை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கும்படி பவுல் சொல்லவில்லை. அவர்களை விட்டு விலகு என்று சொல்லும்போது அவர்களுடன் நெருக்கமான உறவு வைத்திருக்கவேண்டாம் என்றும், கர்த்தருடைய பந்தியில் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது என்றும் பவுல் சொல்லுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

இன்னவிதமாய் எங்களைப் பின்பற்றவேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும் (3:7)

ஒழுங்கற்று நடக்கிற விசுவாசிகளை விட்டு விலகவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறோம் என்று அறிவித்த பவுல், தெசலோனிக்கேயாவில் ஊழியம் செய்த பவுல், சில்வான், தீமோத்தேயு ஆகிய மூன்றுபேரும் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் குற்றமற்றவர்களாக, சபையாருக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார்கள் என்பதை அவர்களுக்கு

அறிவிக்கிறார். அந்த முன்மாதிரியை தெசலோனிக்கேயர் பின்பற்றினால் போதுமானது, அதற்கு மேலாக அவர்கள் ஒன்றும் செய்யத்தேவையில்லை என்பதை பவுல் சுட்டிக்காட்டு-கிறார். அவர்களுடைய நடத்தை எப்படி இருந்தது?

1. *அவர்கள் ஒருபோதும் ஒழுங்கற்று நடக்கவில்லை*
2. *அவர்கள் யாரிடமும் இலவசமாகச் சாப்பிடவில்லை (வசனம் 8)*
3. *அவர்கள் ஒருவருக்கும் பாரமாய் இருந்ததில்லை (வசனம் 8)*
4. *அவர்கள் இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டார்கள் (வசனம் 8)*

1தெசலோனிக்கேயர் 1:5ல் பவுல் சொல்கிறார், "நாங்க-ளும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்-பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே". ஊழியக் காரர்களின் நடத்தை, மற்றும் சகல செயல்பாடுகளும் வெளிய-ரங்கமாக இருக்கவேண்டும். முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

எபிரெயர் 13:7ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்-றுங்கள்". பிலிப்பியர் 3:17ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்-களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்-களை மாதிரியாக நோக்குங்கள்".

பவுல் சொல்கிற காரியம் இதுதான், நாங்கள் உங்களோடு ஊழியம் செய்தபோது மறைவான கிரியைகள் எதையும் நடப்பிக்கவில்லை, எதையெல்லாம் உங்களுக்கு நாங்கள்

போதித்தோமோ, அவைகளை நாங்கள் எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கடைபிடித்தோம். இவை சபையாராகிய நீங்கள் காணக்கூடிய விதத்தில் வெளியரங்கமாக இருந்தபடியினால், "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்" *(1தெச 1:6).*

சபையார் நான்கு காரியங்களில் இந்த ஊழியக்காரர்களைப் பின்பற்ற வேண்டும் என்று பவுல் அறிவிக்கிறார். முதலாவதாக அவர்கள் ஒருபோதும் ஒழுங்கற்று நடக்கவில்லை என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். அவர்கள் சபையாருக்கு எதைப் போதித்தார்களோ அதை தங்களுடைய வாழ்க்கையில் கைக்கொண்டார்கள். இப்படிப்பட்ட சாட்சியை உடைய ஊழியங்களே தேவனால் ஆசீர்வதிக்கப்படும். கொலோசெயர் 2:5ல், அந்த சபையில் காணப்பட்ட ஒழுங்கைக் குறித்து பவுல் பாராட்டிப் பேசுகிறார்: "சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனேகூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்".

ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். (3:8)

தெசலோனிக்கேயா பட்டணத்துக்கு ஊழியம் செய்யும்படியாக பிலிப்பி பட்டணத்திலிருந்து வந்து சேர்ந்ததும் உடனடியாக அங்கிருந்த யூதர்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பை சந்திக்கவேண்டிதிருந்தது. அங்கிருந்த ஜெப ஆலயத்தில் அவர்கள் ஊழியம் செய்ய முடியாத நிலையில்

யாசோன் என்ற மனிதன் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார் *(அப் 17:5-9)*. பவுலுக்கும், உடன் ஊழியர்களுக்கும் யாசோன் அடைக்கலம் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருந்தாலும் அவருக்குப் பாரமாக இருக்க விரும்பாத பவுல் அங்கு தங்கியிருந்த நாட்களில் வேலைசெய்து, அந்த வருமானத்தில் ஒரு பகுதியை யாசோனிடம் கொடுத்திருக்கவேண்டும்.

2கொரிந்தியர் 11:9ல் பவுல் சொல்கிறார், "நான் உங்களோடிருந்து குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள். எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாயிராதபடிக்கு ஜாக்கிரதையாயிருந்தேன்; இனிமேலும் ஜாக்கிரதையாயிருப்பேன்".

1தெசலோனிக்கேயர் 2:9லும் பவுல் சபையாரிடம் சொல்கிறார்: "உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். "வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" *(மத் 10:10, 1தீமோ 5:18)*. ஒரு புதிய ஊருக்கு வந்து, அங்கு முதல் முறையாக சுவிசேஷத்தை அறிவித்து, சபையை ஸ்தாபிப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை நாம் அறிவோம்.

ஆனாலும் சபையாருக்கோ, புதிதாக சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு சபையில் தங்களை இணைத்துக்கொள்பவர்களுக்கோ எந்த விதத்திலும் பாரமாயிருக்க பவுல் விரும்பவில்லை. வேலை செய்து அந்த வருமானத்தில் சாப்பிட விரும்பியும் வயோதிகர்கள், சரீர பெலவீனமுள்வர்கள், நோயுற்றோர் வேலை செய்யாமல் இருப்பதில் ஒன்றும் பிரச்சினை இல்லை, வேண்டுமென்றே, சோம்பேறிகளாக வீட்டில் இருந்துகொண்டு, மற்றவர்களுடைய உழைப்பில் சாப்பிடுவது தவறு என்கிறார் பவுல்.

உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச்செய்தோம். (3:9)

இந்த ஊழியக்காரர்கள் தெசலோனிக்கேயா சபையாரிடம் இலவசமாகச் சாப்பிடாமல், அவர்களில் எவருக்கும் பாரமாயிருக்கவில்லை என்பதினால் அவர்களுக்கு சபையார்மேல் எந்த அதிகாரமும் இல்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்று வசனத்தின் முன்பகுதியில் பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். நிச்சயமாகவே தனக்கு அந்த அதிகாரம் உண்டு என்பதை உறுதிப்படுத்துகிறார். 1கொரிந்தியர் 9:13-15ல் பவுல் சொல்கிறபடி: "ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்".

1கொரிந்தியர் 9:4ல் சபையாரிடம் பவுல் கேட்கிறார், "புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?" 1கொரிந்தியர் 9:6,7ல் சபையாரிடம், "கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை? எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?" என்று பவுல் கேட்கிறார்.

1கொரிந்தியர் 9:1ல் பவுல் கேட்கிறார்: "நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா?" எனவே தெசலோனிக்கேயா சபையாரிடமிருந்து காணிக்கை வாங்குவதற்கு, அவர்களால் போஷிக்கப்படுவதற்கு தனக்கு நிச்சயமாகவே அதிகாரமும் உரிமையும் உண்டு என்பதை இங்கே உறுதிப்படுத்துகிறார். 9-வது வசனத்தில் சொல்கிறார், "போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ".

அப்படி இருக்கையில் தெசலோனிக்கேயா சபையாரிடம் இலவசமாகச் சாப்பிட்டு, அவர்கள்மேல் பாரத்தை வைக்க தனக்கு அதிகாரம் உண்டு என்பதை அவர்களிடம் உறுதிப்படுத்துகிறார்.

ஆனால் பவுல் அப்படிச் செய்வதற்கு சம்மதிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை வசனத்தின் பின்பகுதியில் அறிவிக்கிறார். சபையார் இந்த ஊழியக்காரர்களைப் பின்பற்றி அவர்களும் மற்றவர்களுக்கு பாரமாயிருப்பதை தவிர்க்கவேண்டும் என்கிறார். இந்த வகையில் நாங்கள் உங்களுக்கு முன்மாதிரியாக இருந்தோம். இதனை உங்கள் வாழ்க்கையில் பின்பற்றவேண்டும் என்கிறார். அப்படி தாராள மனதுடன் செயல்படுவது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்கிறார்.

பவுல் தெசலோனிக்கேயர் சபையின் மேல் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார் என்றால் 1தெசலோனிக்கேயர் 2:8ல் சொல்கிறார்: "நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்". இப்படி அறிவிக்கக்கூடிய ஊழியர்கள் இன்று இருக்கிறார்களா?

தெசலோனிக்கேயர் சபையிலிருந்து பவுல் எந்த உதவியும் எதிர்பார்க்கவில்லை என்றாலும் மற்ற சபைகளிலிருந்து காணிக்கைகள் மற்றும் பொருள் உதவியை ஏற்றுக்கொண்டார் என்பதைப் பார்க்கிறோம். "தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ? உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன். நான் உங்களோடிருந்து, குறைவுபட்டபோதும், ஒருவரையும் நான் வருத்தப்படுத்தவில்லை; மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நிறைவாக்கினார்கள்" என்று 2கொரிந்தியர் 11:8,9ல் பவுல் குறிப்பிடுகிறார்.

அதேசமயம் பணத்துக்காகவும், காணிக்கைக்காகவும் ஊழியம் செய்த மனிதர்கள் ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலேயே இருந்திருக்கிறார்கள். அவர்களைக் குறித்து மிகுந்த வேதனையோடு பவுல் சொல்கிறார், "அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலிப் 3:18,19). இந்தக் கடைசிநாட்களில் இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் உலகமெங்கும் பெருகிவருவதை நாம் பார்க்கிறோம்.

ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. (3:10)

"இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம்" என்று 8-வது வசனத்தில் பவுல்

அறிவித்ததைப் பார்த்தோம். ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பே ஆதியாகமம் *2:15* சொல்கிறது: "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்". தேவனுடைய கற்பனையை மீறியதினிமித்தம் ஆதாமை தேவன் இவ்வாறு சபிக்கிறார்: "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" (ஆதி *3:19*). ஒருவன் கடினமாக உழைத்து, வேலை செய்து சாப்பிடவேண்டும் என்பது தேவனுடைய நியதிகளில் ஒன்று. ஆரோகண சங்கீதம் *128:2* அறிவிக்கிறது: "உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்". சாலொமோன் சொல்கிறார்: "சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறு-சுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" (நீதி *10:4*).

தெசலோனிக்கேயாவில் இந்த மூன்று ஊழியக்காரர்களும் ஊழியம் செய்துகொண்டிருந்த நாட்களிலேயே ஒரு மனிதன் வேலை செய்யாவிடில் அவன் உண்ணக்கூடாது என்று கட்டளையிட்டிருந்ததை பவுல் சபையாரின் கவனத்துக்குக் கொண்டுவருகிறார். அவன் பசியோடிருப்பதைக் குறித்து சபையார் கவலைப்படவேண்டியதில்லை என்கிறார். தரித்திரரை நினைத்துக் கொள்ளுவது (கலா *2:10*) நல்லதுதான் (ரோமர் *15:26-29*). ஆனால் ஒருவன் தன்னுடைய சோம்பேறித்தனத்தின் நிமித்தம் தரித்திரனாய், பட்டினியோடு இருப்பானேயானால் அவனைப் பற்றிக் கவலைப்படாதிருங்கள் என்கிறார் பவுல். நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து அவனைப் போஷிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறார். "சோம்பல் தூங்கிவிழப்பண்ணும்; அசதியானவன் பட்டினியாயிருப்பான்" என்று நீதிமொழிகள் *19:15*ல் வாசிக்கிறோம். "சோம்பேறி தன் கையைக் கலத்திலே வைத்து அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான்" (நீதி *26:15*). இப்படிப்பட்டவர்-களுக்கு சபையார் எந்த நன்மையும் செய்யவேண்டியதில்லை என்பதுதான் பவுல் அறிவிக்கும் காரியம்.

உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். (3:11)

8-வது வசனத்தில் பவுல் தான் ஊழியம் செய்த நாட்களில் ஒருவனுக்கும் பாரமாயிருந்ததில்லை என்று அறிவித்ததைப் பார்த்தோம். தெசலோனிக்கேயா விசவாசிகள் எல்லாருமே மற்றவர்களுக்குப் பாரமாயிருந்ததாக பவுல் குற்றஞ்சாட்டாமல் "உங்களில் சிலர்" மற்றவர்களுக்குப் பாரமாயிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் வேலை செய்யாமல் இருந்தார்கள் என்பது மட்டுமல்ல, வீண் அலுவற்காரராக இருக்கிறார்கள். தாங்கள் ஏதோ ஒருவேலையில் இருப்பவர்களைப் போல காட்டிக்கொள்கிறார்கள் என்கிறார்.

அவர்கள் எதையோ செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அதனால் அவர்களுக்கும் எந்த நன்மையும் இல்லை மற்றவர்களுக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. சொல்லப்போனால் அவர்கள் மக்களின் வாழ்வில் குறுக்கிடுபவர்களாக இருக்கிறார்கள். இதன் விளைவாக சபைகளில் பிரிவினைகள் உண்டாகிறது. கொரிந்து சபையிலும் இத்தகைய பிரச்சினை இருந்தபடியால் அவர்களிடம் பவுல் சொல்கிறார், "நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்" *(1கொரி 11:18)*.

தெசலோனிக்கேயா சபையாரில் சிலர் ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுவதாக பவுல் அறிவிக்கிறார். ஒழுங்கற்றவர்களாய் அவர்கள் செய்கிற காரியம் என்ன? வீடுவீடாகச் சென்று கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறது *(2தெச 2:2)* என்கிறார்கள், அல்லது இன்னும் ஒரு சில மாதங்களில் கர்த்தருடைய வருகை இருக்கும். எனவே கடினமான முறையில் வேலைசெய்து சாப்பிடாமல் ஓய்ந்திருங்கள் என்று பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் பவுலுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்த ஊழியக்காரர்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய பெயரை வெளிப்படையாக அறிவிக்க பவுல் விரும்பவில்லை என்று பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலை செய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டு-மென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து-வினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்-லுகிறோம். (3:12)

சபையாரில் சிலர் உழைப்பதில்லை, எந்த வேலையும் செய்வதில்லை, மற்றவர்களின் வாழ்வில் குறுக்கிடுகிறார்கள், வருகையைக் குறித்து தவறாகப் போதிக்கிறார்கள். இப்படி ஒழுங்கற்றுத் திரியும் விசுவாசிகளுக்கு பவுல் கொடுக்கும் ஆலோசனை என்ன?

1. அமைதலோடு இருங்கள் (மற்றவர்களுக்குத் தொந்தரவு தரவேண்டாம்)

2. வேலை செய்யுங்கள் (உழைப்பின் மேன்மையை அறிந்து நடந்துகொள்ளுங்கள்)

3. சொந்தச் சாப்பாட்டை சாப்பிடுங்கள் (உழைத்து உங்கள் உணவை சம்பாதித்துக் கொள்ளுங்கள்)

முந்தின வசனத்தில் வேலைசெய்யாமல் ஒழுங்கற்றுத் திரியும் விசுவாசிகளை பவுல் குற்றப்படுத்திப் பேசினாலும் அவர்களுக்கும் தன்னுடைய சகோதர அன்பை வெளிப்படுத்தி சற்றுப் பொறுமையோடு பவுல் பேசுவதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு அப்போஸ்தலர் என்ற முறையில் கட்டளையிட்டு புத்திசொன்னாலும் சபையார் தங்கள் அழைப்பை உணர்ந்த-வர்களாய் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்.

வேலைசெய்தால் மட்டும் போதாது, அதை அமைதலோடு (with quiteness) செய்யுங்கள் என்கிறார். அதைக்குறித்து பெருமை பாராட்டி உங்களை நீங்களே மகிமைப்படுத்திக்கொண்டிராதிருங்கள் என்கிறார். **ஆதாமுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களையும் தேவன் ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டித்திருந்தார். இருந்தாலும் அவனையும் வேலைசெய்யும்படியாகக் கட்டளையிடுகிறார்.** ஆதியாகமம் 2:15ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்". தேவன் தரும் நன்மையான ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துவதும், அதை இழந்துபோகாமல் பாதுகாப்பதும் நம்முடைய பொறுப்பு.

சபையார் தங்கள் சொந்த சாப்பாட்டைச் சாப்பிடும்படியாக மூன்றாவதாக பவுல் கட்டளையிடுகிறார். "உன் கிணற்றிலுள்ள தண்ணீரையும், உன் துரவில் ஊறுகிற ஜலத்தையும் பானம் பண்ணு" (நீதி 5:15). 8-வது வசனத்தில் ஒருவனிடத்திலும் இலவசமாக சாப்பிடாதிருங்கள் என்று பவுல் கட்டளையிட்டதைப் பார்த்தோம். அடுத்தவர்கள் உணவை உண்டபோது அதற்குரிய பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டோம் என்றார். சபையாரில் பலர் ஊழியம் செய்கிறவர்களாக இருக்கலாம். அதினிமித்தம் மற்றவர்கள் தங்களைப் போஷிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

சகோதரரே, நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள். (3:13)

சபையில் பவுல் கண்ட காரியங்கள் திருப்திகரமாக இல்லாத நிலையிலும் "சகோதரரே" என்று பாசத்தோடு பவுல் சபையாரை அழைப்பதைக் கவனியுங்கள் (வசனம் 1, 6, 13, 15). அவருடைய ஆலோசனைகள் கர்த்தருடைய நாமத்தினாலே வழங்கப்பட்டவை என்று முந்தின வசனத்தில் அறிவித்ததைப்

பார்த்தோம். எனவே தனிப்பட்ட விதத்தில் சபையார்மேல் பவுலுக்கு எந்த எரிச்சலும், வருத்தமும், கோபமும் இல்லை. கலாத்தியர் சபையாரிடம் அவர் சொல்கிறார், "தேவதூதனைப்-போலவும், கிறிஸ்து இயேசுவைப் போலவும் என்னை ஏற்றுக்-கொண்டீர்கள்" *(4:14)*.

சத்தியத்தை சத்தியமாக அறிவிக்கும் பவுல் சபையார் தன்னைப் பாராட்டவேண்டும், தன்னை கௌரவிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு நிருபத்தை எழுதவில்லை. இந்தக் கடைசி நாட்களில் இப்படிப்பட்ட தேவ ஊழியர்கள் எழும்பவேண்டும் என்று ஜெபியுங்கள். நன்மை செய்து-கொண்டே இருங்கள். அதைக் குறித்து மற்றவர்கள் தவறான முறையில் விமர்சனம் பண்ணலாம். அதைக் குறித்து கவலைப்-படாதிருங்கள் என்கிறார்.

இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான், "நல்லவற்றைச் செய்வதில் சோர்வு அடையாதீர்கள்" (பரிசுத்த பைபிள்). 2கொரிந்தியர் *13:7*ல் சொல்கிறார்: "நீங்கள் நலமானதைச் செய்யும் பொருட்டே விண்ணப்பம் பண்ணுகிறேன்". இன்னும் விளக்கமாக கலாத்தியர் *6:9,10*ல் சொல்கிறார், "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்-தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசவாச குடும்பத்தார்-களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்".

ரோமாபுரியில் உள்ள சபையாரிடம் பவுல் சொல்கிறார்: "நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்தி-லிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது" (ரோமர் *7:18-20*). இந்தப் பாவம்

நம்முடைய மனதைச் சோர்வடையச் செய்கிறது. சோர்வை நம்முடைய வாழ்க்கையில் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. பவுலைப்போல் நாம் செயல்படவேண்டும். "இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம்பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை" *(2கொரி 4:1)*. "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை" *(2கொரி 4:16)*. **மனதில் உண்டாகும் சோர்வு விரைவில் நம்மை பின்மார்க்கத்துக்குக் கொண்டுபோய்விடும்.**

பவுல் அறிவிக்கும் ஆலோசனை மற்றவர்களுக்கு நன்மை செய்வதை நம்முடைய வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழவேண்டும் என்பதுதான். ஒவ்வொரு நாளும் இரவு ஜெபவேளையில் இன்று நாம் மற்றவர்களுக்குச் செய்த நன்மை என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்காக தேவனுக்கு நன்றி சொல்ல பழகிக்கொள்ளவேண்டும். நம்மிடமிருந்து நன்மை பெறுகிறவர்கள் அதற்குத் தகுதி இல்லாத்வர்களாக இருக்கலாம். அதைக் குறித்து நாம் கவலைப்படவேண்டியதில்லை. **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக இரத்தம் சிந்தி நம்முடைய இரட்சிப்பை உறுதிப்படுத்தியது நம்முடைய தகுதியின் அடிப்படையில் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.**

சோர்ந்துபோவது நம்முடைய ஆவிக்குரிய பெலவீனத்தை வெளிப்படுத்துகிறது. 2கொரிந்தியர் 4:1ல் பவுல் சொல்கிறார்: "இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை". ஊழியப்பாதையில் பவுல் எதிர்கொள்ளும் உபத்திரவங்கள் நிமித்தம் சபையார் சோர்ந்துபோகக்கூடாது என்பதை எபேசியர் 3:13ல் இவ்வாறு அறிவிக்கிறார்: "உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே". எங்களுடைய பாடுகள் உங்களுக்கு மகிமையைக் கொண்டுவருகிறது என்கிறார்.

கீழ்ப்படியாமையின் விளைவு (3:14-15)

மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும் படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். (3:14)

இந்த நிருபத்தில் "எங்கள் வசனம்" என்று பவுல் சொல்லும்போது 10முதல் 12 வரையுள்ள வசனங்களைக் குறிப்பிடுகிறார். வேலை செய்ய மனதில்லாதவர்கள் சாப்பிடக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் ஒழுங்கற்றுத் திரிவதை நிறுத்திவிட்டு, அமைதலோடு வேலைசெய்து தங்கள் சொந்த சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும் என்று பவுல் இந்த வசனங்களில் கட்டளையிட்டு புத்தி சொன்னதைப் பார்த்தோம். இந்த எச்சரிக்கையை சில விசுவாசிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை அறிந்தவராய் இவ்வாறு சொல்கிறார், "இந்த நிருபத்தில் சொல்லப்பட்டவற்றிற்கு எவனொருவன் பணிய மறுக்கிறானோ அவன் யாரென்று அறிந்துகொள்ளுங்கள். அவனோடு சேராதீர்கள். பிறகு அதற்காக அவன் வெட்கப்படுவான்"(பரிசுத்த பைபிள்).

தான் அறிவிக்கும் ஆலோசனைகளும் எச்சரிக்கைகளையும் எங்கள் வசனம் என்று அறிவிப்பதற்குக் காரணம் அவை தேவனால் அருளப்பட்டவை என்பதை சபையார் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே. தெசலோனிக்கேயாவில் தங்கியிருந்த நாட்களிலும் பவுல் அதை அவர்களுக்கு அறிவித்தார் (2தெச 3:10). தீமோத்தேயு சபையாரை சந்திக்கப் போயிருந்தபோதும் இந்த எச்சரிக்கை அவர்களுக்கு வழங்கப்பட்டது (1தெச 2:9, 5:14, 1தெச 4:11,12). அதற்குப்பின் 2தெசலோனிக்கேயர் நிருபத்திலும் சற்றுக் கடினமான வார்த்தைகளோடு இந்த எச்சரிக்கை சபையாருக்குக் கொடுக்கப்பட்டது (2தெச 3:6-12). அப்படியிருந்தும் பவுல் பொறுமை இழந்தவராக இப்படிப்பட்ட விசுவாசிகளை சபையில் இருந்து விலக்கிவிடவேண்டும் என்று அறிவிக்காமல் கிறிஸ்துவுக்குள்

தன்னுடைய சகோதரர்களாகவே நினைக்கிறார் (வசனம் 15). அதே சமயத்தில் அவர்கள் மனந்திரும்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். வேதத்தின்படி நடக்காத கிறிஸ்தவர்களோடு கலவாதிருங்கள். ஆனால் அவர்களை வெறுத்துப் புறக்கணி-யாமல் புத்தி சொல்லுங்கள் என்கிறார்.

பவுல் தரும் ஆலோசனை இதுதான். இந்த மனிதர்கள் ஊழியக்காரர்களிடமிருந்து வெளிப்பட்ட கற்பனைகளை அல்ல, தேவனுடைய கற்பனைகளையே மீறினார்கள். எனவே அவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனையே எதிர்த்து நிற்கிறவர்க-ளாகிறார்கள். “அவனைக் குறித்துக் கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள்” என்கிறார் பவுல். இதுவரை ஒரு கூட்டத்தார் இவ்விதமாகச் செயல்-படுவதாக பன்மையில் சொல்லிக்கொண்டு வந்த பவுல் இந்த வசனத்தில் “அவன்” என்று ஒருமையில் பேசுவதால் ஒரு தனிப்பட்ட மனிதன் இந்தக் கூட்டத்தின் தலைவனாக செயல்பட்டுக்கொண்டிருக்கலாம் என்று நிதானிக்கிறோம்.

அவனைக் குறித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும் பவுல் அவன் வெட்கப்படும்படிக்கு அவனோடே கலவாதிருங்கள் என்கிறார். இப்படிப்பட்டவர்களோடு எந்தவிதமான தொடர்-பும் உங்களுக்கு இருக்கக்கூடாது என்று கட்டளையிடுகிறார். துன்மார்க்கமான மனிதர்களோடு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையோடு இணைத்துக்கொண்டவர்கள் ஐக்கியம் கொள்ளக்-கூடாது. 1கொரிந்தியர் 5:11ல் இவ்வாறு சொல்கிறார்: “சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயா-வது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்-காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது”. இந்தப் பட்டியலில் பொருளாசைக்காரர் சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

தன்னுடைய மலைப்பிரசங்கப் போதனைகளில் ஒன்றான “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிற-

வர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்-களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்-காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" *(மத் 5:44)* என்பது சொல்லப்பட்டிருக்கிறது. "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கி-றவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்-பண்ணுங்கள் *(லூக்கா 6:27,18)*.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் *12:20, 21*ல் சொல்கிறார், "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்கு பானங் கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படா-மல், தீமையை நன்மையினாலே வெல்லு". இந்த வசனத்தில் சபைக்கு எதிராக செயல்படுபவர்களைக் குறித்து பவுல் சொல்லும் காரியம் முற்றிலுமாக வித்தியாசமாக இருப்பது-போலத் தோன்றினாலும், அடுத்த வசனம் இந்த ஆலோசனை-யின் நோக்கம் அவர்கள் தங்களுடைய தவறுகளை, குறைகளை அறிந்துகொண்டு சத்தியத்தின் பாதைக்குள் வழிநடத்தும்படி-யாகத்தான் என்பதை அறிந்துகொள்கிறோம். அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டும் என்பது பவுலின் நோக்கம் அல்ல.

இவ்வாறெல்லாம் கரிசனையோடு, கவனத்தோடு செயல்-பட்டாலும் இந்த துன்மார்க்கமான மனிதனும், அல்லது அவனைப் பின்பற்றும் சிலரும் மனந்திரும்பாமல் போகலாம். அப்பொழுது சபையார் செய்யவேண்டிய காரியம் என்ன என்பதை தீத்துவுக்குப் பவுல் இவ்வாறு அறிவிக்கிறார்: "வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனை விட்டு விலகு. அப்படிப்-பட்டவன் நிலைதவறி, தன்னிலேதானே ஆக்கினைத் தீர்ப்-புடையவனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கி-றாயே" *(தீத்து 3:10,11)*.

மத்தேயு 18:15-17ல் இதுகுறித்த கிறிஸ்துவின் ஆலோசனை என்ன என்பதைக் கவனியுங்கள்: "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவி-கொடாமற்போனால், இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்-டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்-படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக" (மத் 18:15-17).

ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள். (3:15)

முந்தின வசனத்தில் பவுல் மற்றும் சக ஊழியர்கள் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்களோடு கலவாதிருங்கள் என்று அறிவித்த பவுல், இந்த வசனத்தில் அவர்களைத் தங்களுடைய விரோதிகளாகக் கருதாமல், சொந்தச் சகோதரனாக எண்ணி, அவனுக்கு புத்தி சொல்லுங்கள் என்று கட்டளையிடுகிறார். பகைவனைப் போலக் கருதக்கூடாது என்கிறார்.

இந்தச் சத்தியம் ரோமர் 11:28ல் இவ்விதமாகச் சொல்லப்-படுகிறது: "சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; (அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்-கொள்ளவில்லை என்பதினால் தேவனுடைய எதிரிகளா-கிறார்கள்). தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்பு கூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள்". எனவே அவர்கள் உங்கள் சொந்த சகோதரனாகக் கருதப்பட-வேண்டும்.

"ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" (கலா 6:1) என்ற ஆலோசனையை பவுல் கொடுக்கிறார். அப்படிப்பட்டவர்களை விரோதிகளாக எண்ணாமல் சகோதரனாகக் கருதினால்தான் நாம் அவர்களுக்குப் புத்திசொல்லமுடியும். அவர்களை சீர்பொருந்தப் பண்ணும்படியாக வழிநடத்தமுடியும். அவர்களுக்காக ஜெபிக்கமுடியும்.

தெசலோனிக்கேயாவில் மட்டுமல்ல, கொரிந்து சபையிலும் பவுலை மிகவும் துக்கமுண்டாக்கிய ஒரு ஊழியர் இருந்திருக்கிறார் என்பதை 2கொரிந்தியர் 2:5-8ல் பவுல் அறிவிக்கிறார். அவனையும் பவுல் மன்னித்து ஏற்றுக்கொண்டார் என்பதை அந்த வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. "துக்கமுண்டாக்கினவன் எனக்குமாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்; நான் உங்கள் எல்லார்மேலும் அதிக பாரஞ்சுமத்தாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன். அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும். அந்தப்படி, உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்".

நம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்கும்படியாகத்தான் இயேசு சொல்லிக்கொடுத்திருக்கிறார் (மத் 5:44, லூக்கா 6:27). தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் இயேசு சொல்கிறார்: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" (மத் 5:44,45). தேவனுக்குப் புத்திரராகும் சிலாக்கியம் எப்படி உண்டாகிறது என்பதைக் கவனியுங்கள்.

சபையை வாழ்த்தும் பவுல் (3:16-18)

சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகல விதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக. (3:16)

தேவனாகிய கர்த்தரை பவுல் சமாதானத்தின் கர்த்தர் என்று அழைப்பதைக் கவனியுங்கள். "**கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்**" என்று சங்கீதம் *29:11*ல் வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் இருந்த கடைசி நாட்களில் தன்னுடைய சீஷர்களிடம் இவ்வாறு அறிவிக்கிறார்: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் *14:27*). பலவிதமான குழப்பங்களுக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் சபையாரை பவுல் ஆசீர்வதித்து அறிவிக்கும் காரியங்கள் இந்த வேதபகுதியில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

1. தேவன் சமாதானத்தைத் தந்தருளுவாராக

2. தேவன் உங்கள் அனைவரோடும் இருப்பாராக

3. இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக (வசனம் *18*)

நாம் ஆராதிக்கும் தேவன் சமாதானத்தின் தேவன் என்று வேதத்தில் பல இடங்களில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிருபத்தின் முதல் வசனத்திலேயே பவுல் சபையாரை இவ்வாறு வாழ்த்துகிறார்: "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (*1*தெச *1:1*).

எப்பொழுதும், சகல விதத்திலும் உங்களுக்கு சமாதானத்-

தைத் தந்தருளுவாராக என்று பவுல் ஜெபிப்பதைக் கவனி-யுங்கள். ஏற்கெனவே இந்த நிருபத்தில் பலமுறை பவுல் சபையாருக்காக ஜெபித்ததை தியானித்திருக்கிறோம். பொது-வாக பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களையுமே ஜெபத்-தோடு நிறைவுசெய்வதைப் பார்க்கமுடியும்.

கர்த்தர் உங்களோடு இருப்பாராக என்பது பவுலின் இரண்டாவது ஜெபக்குறிப்பு. தேவன் ஒருவனிடம் இல்லாத நிலையில் அவனிடம் மெய்யான சமாதானம் இருப்பதில்லை. சமாதானம் என்பது தேவன் தரும் பிரதானமான ஈவாகக் கருதப்படவேண்டும். அவரின்றி சமாதானம் இல்லை. "அவரே நம்முடைய சமாதான காரணர்" (எபே *2:14*). கல்வாரி சிலுவையிலே "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா *53:5*). எனவே பவுல் "கர்த்தர் உங்களனைவரோடும் இருப்பாராக" என்று அறிவித்து இந்த வசனத்தை முடிக்கிறார். பவுலுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்த சில நபர்களைக் குறித்து *11, 12* ஆகிய வசனங்களிலே பவுல் பேசினார் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்களோடும் கர்த்தர் இருக்கவேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார்.

பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையா-ளம்; இப்படியே எழுதுகிறேன். (3:17)

அந்த நாட்களில் கடிதங்கள், நிருபங்களை எழுதுகி-றவர்கள் முழுவதையும் தங்கள் கையினால் எழுதவில்லை என்றாலும், அவற்றைத் தாங்களே எழுதினார்கள் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் கடைசி சில வசனங்களை தங்கள் கையினாலேயே எழுதி, அது போலியானது அல்ல என்பதை உறுதிப்படுத்துவது வழக்கமானதாக இருந்தது. *1*கொரிந்தியர் *16:21*ல் பவுல் சொல்கிறார், "பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன்". கொலோசெயர்

*4:18*ல் பவுல் சொல்கிறார், "பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன்". பிலேமோன் 19-வது வசனத்தில் இவ்வாறு எழுதுகிறார்: "பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன்".

பவுலின் நாட்களிலேயே அவருடைய பெயரைப் பயன்படுத்தி தவறான போதனைகள் அடங்கிய நிருபங்கள் சபைகளில் வாசிக்கப்பட்டு வந்தன என்பதினால் பவுல் சில கடைசி வசனங்களை தன் கைப்பட எழுத ஆரம்பித்தார் என்று பார்க்கிறோம். கர்த்தருடைய வருகையைக் குறித்த தவறான உபதேசங்கள் பவுலின் நாட்களிலேயே பரவலாகக் காணப்பட்டபடியால் 2தெசலோனிக்கேயர் *2:2*ல் பவுல் இவ்வாறு எச்சரித்ததைப் பார்த்தோம்: "ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்".

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். (3:18)

இந்த வசனம் 1தெசலோனிக்கேயர் நிருபத்திலும் கடைசி வசனமாக அமைகிறது (*1தெச 5:28*). இந்த வசனத்தில் சொல்லப்பட்ட "உங்களனைவரோடுங்கூட" என்பதற்குப் பதிலாக அதில் "உங்களுடனே" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. உங்களனைவரோடும் என்று இந்த நிருபத்தில் 3ம் அதிகாரம் 6-முதல் 16-வரையுள்ள வசனங்களில் குறிப்பிடும் ஒழுங்கற்ற விசுவாசிகளுக்கும் இயேசு கிறிஸ்துவின் கிருபையை ஆசீர்வாதமாக அறிவிப்பதாக இருக்கிறது.

முடிவுரை

புதிய ஏற்பாட்டு நாட்களில் எழுதப்பட்ட முதல் வேதப்புத்தகம் தெசலோனிக்கேய சபைக்கு பவுல் எழுதிய நிருபங்கள் என்பதைப் பார்த்தோம். நான்கு சுவிசேஷ புத்தகங்களும் பவுல் எழுதிய ரோமர், கொரிந்தியர் முதலான நிருபங்களும் தெசலோனிக்கேயருக்கு இரண்டு நிருபங்களும் எழுதப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்புதான் எழுதப்பட்டன.

ஏற்கெனவே தெசலோனிக்கேயாவில் தான் அறிவித்த சத்தியங்களை உறுதிப்படுத்தவும், சபையார் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்து கனிகொடுக்கிறவர்களாகவும், சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும் என்பதற்காகவும் பவுல் இந்த நிருபங்களை எழுதுகிறார். சபையாரில் பெரும்பான்மையினர் புறஜாதியாராய் இருந்தபடியினால் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையைக் குறித்த இரகசியங்களை அவர்களுக்கு அறிவிக்கிறார்.

கிறிஸ்து இந்த உலகில் இருந்த நாட்களிலேயே தன்னுடைய சீஷர்களிடம் தன்னுடைய வருகையைக் குறித்து இவ்வாறு சொல்கிறார், "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும்

இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3).

கிறிஸ்துவின் இரகசிய வருகை, அவருடைய பகிரங்க வருகை, கேட்டின் மகனாகிய பாவ மனிதனின் வருகை, கிறிஸ்து தன்னுடைய நாசியின் சுவாசத்தால் அக்கிரமக்காரனாகிய சாத்தானை அழிக்கும் காரியம் ஆகியவற்றை விளக்கமான முறையில் இந்த நிருபங்களில் பவுல் அறிவிப்பதினால் சபையார் அதை அறிந்துகொள்வது நிச்சயமாகவே அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

2தெசலோனிக்கேயர் 2:11,12ல் பவுல் எச்சரிக்கிறார்: "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்". வேத வசனங்கள் அறிவிக்கும் சத்தியத்தை விசுவாசிக்கத் தவறும்போது தேவனே கொடிய வஞ்சகத்தை அனுப்பி பொய்யை விசுவாசிக்கும்படி அனுப்புவார் என்கிறார் பவுல். இப்படியான வஞ்சக நாட்களில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

கிறிஸ்து சொல்கிறார், "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:31,32). ஏதோ ஒரு கடமை உணர்வோடு வேதத்தை வாசிப்பதோடு திருப்தியடையாதிருங்கள். பெரோயா பட்டணத்தாரைப்போலத் தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் (அப் 17:11). ஏசாயா சொல்கிறார், "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது. இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்" (34:16).

மணவாளனாகிய இயேசு கிறிஸ்து தன் மணவாட்டியாகிய சபையை சேர்த்துக்கொள்ளும் நாள்தான் இரகசிய வருகை. இதற்கு தங்களை ஆயத்தப்படுத்தியவர்கள் இவ்வுலக துக்கம், வேதனை, சஞ்சலம் ஒழிந்து, உன்னதத்தில் அவருடன் சேர்க்கப்படுவர். அந்த நாள் மகிமையும், மகிழ்ச்சியும் நிறைந்த நாள். "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்புவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" (ஏசா 51:11). தேவனுடைய சாயலாக உருவாக்கப்பட்டவர்கள் அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைத் தரிசிக்கும் நாள் எத்தனை பாக்கியமுள்ளது. இந்த நாளை சந்திக்க விரும்பாமலும், எதிர்பார்க்காதவர்கள் யாரும் உண்டோ?

இயேசுவின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு இல்லாமல், தங்கள் பாவத்திலும் இச்சைகளிலும், துன்மார்க்கத்திலும் தங்கள் சுயவிருப்பத்தின்படியேயும் வாழும் ஆத்துமாக்களுக்குக் கிடைக்கும் பலன் அழுகையும், புலம்பலும், வேதனையும் நிறைந்த நித்திய நரகமே.

கர்த்தரின் வருகையைக் குறித்த எச்சரிப்பின் செய்தியை அறிவிக்கும் காலம் குறுகிப்போவதாலும் தந்திரமும், சூழ்ச்சியும் நிறைந்த சாத்தான் தான் அழியும் காலம் விரைவில் வருகிறது என்பதினால், ஜனங்களின் இருதயத்தையும், செவியையும் அடைத்து, திறக்கக்கூடாதபடி மனக்கண்களை குருடாக்கிப் போடுவதாலும், தேவன்மேல் உள்ள விசுவாசத்தை நீக்கிவிடுவதாலும் ஜனங்கள் உணர்வற்று இருக்கிறார்கள்.

விசுவாசிகளே, தேவனுடைய நாமம் தரிக்கப்பட்டவர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். நித்திய மகிழ்ச்சியா? நித்திய வேதனையா? எது வேண்டும்? தேவனுடைய மணவாட்டியாக இருக்க விரும்பினால், அசதியாய் இருக்காமல், விழிப்பாய் இரு, ஆயத்தப்படு. மணவாளன் வரும்வேளை அறியாதபடியால் எதிர்பார்ப்போடு காத்திரு.

பிசாசானவன் தன்னுடைய வீழ்ச்சி-அழிவு-தோல்வியைக் குறித்த காரியங்களை ஜனங்கள் அறிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக வெகுவாய்ப் பாடுபடுகிறான். இந்தப் புத்தகம் வெளியிடமுடியாதபடி பலவிதத்தில் போராடினான். ஜெயகிறிஸ்துவோ ஜெயமாக்கி வெளியிடச் செய்தார். மணவாளனாகிய இயேசுவை எப்போது சந்திப்போம் என்ற ஏக்கமும் தாகமும் நமக்கு இருக்கட்டும்.

கடைசிக் காலமல்ல, இறுதி நிமிடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் விழிப்புடன் மணவாளனைச் சந்திக்க ஆயத்தமாக இருக்க, உற்சாகப்படுத்தவே இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. "நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்றவரை "ஆமேன், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்போம். கர்த்தராகிய இயேசுவின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்
பிரிஸில்லா தியாகராஜ்

துணைசெய்த நூல்களின் பட்டியல்

1. Herman Ridderbos - Paul, An outline of His Theology
2. Joseph A. Fitzmyer - Spiritual Exercise
3. Pink A.W. - Gleanings from Paul
4. Pink A.W. - The Doctrine of Salvation
5. Watchman Nee - The Glorious Church
6. Louis Berkhof - Systematic Theology
7. William Hendriksen - New Testament Commentary
8. Anderson Robert - The Coming Prince
9. Betzer Dan - Count Down
10. Detann Richard W. - The Anti-Christ and Armageddon
11. Duncan Homer - The King is coming
12. Hagee John - The Beginner of the End
13. Kampen Robert Van - The Rapture Question Answered
14. Larkin Clarence Rev. - The Second coming of Christ
15. Mac Arthur John Jr. - The Second coming of Lord Jesus Christ
16. Taylor R. Charles - Jesus is coming soon
17. Smith Oswald J. - Is the antichrist at Hand?
18. A.T. Robertson - Epistles of Paul
19. R. Mackenzie - Calvin Commentaries
20. Leon Morris - The 1st and 2nd Epistles of Thessalonians
21. Lensky - St. Paul's Epistles
22. Dake - Annotated Reference Bible
23. Mathew Henry - Commentaries of the Bible
24. Leon Morris - Epistles to Thessalonians
25. Robertson A.T. - Word Pictures of New Testament
26. RCH Lensky - St. Paul's Epistles
27. William T. James - The true shocks of anti-christ
28. Peter & Patti Lalonde - Left Behind
29. Philipose K - The imminent Return of Jesus Christ
30. R. Mackenzie - Calvin's New Testament Commentaries

அறிவிக்கும் சத்தியங்கள்

- இரகசிய வருகை
- பகிரங்க வருகை
- வருகையின் பிரசன்னம்
- அக்கிரமக்காரன் வருகை

- கர்த்தரின் நாள்
- கேட்டின் மகன்
- பொய்யான அற்புதங்கள்

- விசுவாச துரோகம்
- கொடிய வஞ்சகம்
- அக்கிரமத்தின் இரகசியம்
- தடைசெய்கிறவன்



Dr. P. V. THIAGARAJ

I & II
தெசலோனிக்கேயர்

இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்யவேண்டுமென்று கர்த்தர் பேரில் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன் [1 தெச 5:27] என்கிறார் பவுல் வேதத்தில் ஆணையிட்டு அனுப்பப்பட்ட ஒரே நிருபம் இதுதான்.

புதிய ஏற்பாட்டு நாட்களில் எழுதப்பட்ட முதல் இரண்டு புத்தகங்கள் இவைகளே

1 தெசலோனிக்கேயரில் ஒவ்வொரு அதிகாரத்திலும் கிறிஸ்துவின் இரகசிய வருகையைக் குறித்து பேசும் பவுல், 2 தெசலோனிக்கேயரில் அவருடைய பகிரங்க வருகையை குறித்து விவரிக்கிறார்.

அக்கிரமக்காரன் என்று அழைக்கப்படும் அந்திக்கிறிஸ்துவின் வருகையை தடைசெய்கிறவன் யார் என்ற வெளிப்பாடு இந்த புத்தகத்தில் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது.

வருகையைக் குறித்த ஆழமான சத்தியங்களை அறிந்துகொள்ள. அதற்கு ஆயத்தப்பட, இந்த விளக்கவுரை உதவிசெய்யும்

EPHRATH
PUBLICATIONS

54/A, Lakshmi Apartments, Sangam Colony,
Kottivakkam, Chennai - 600 041.
Phone : 044-24925464, Mobile : 0-98415 85547
E-mail : pv_thiagaraj@yahoo.com www.pvthiagaraj.com